# ஈழத்துத் திருக்கோயில்கள்

- வரலாறும் மரபும்



பாகம்-2

JPL
C11747

...தா நடராஜன் B.A.

# ஈழத்துத் திருக்கோயில்கள்

## வரலாறும் மரபும்

பகுதி-2

ஆசிரியர்


திருமதி. வசந்தா நடராசன் B.A.,



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

250167

விசேட சேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447
7 [ப.எண்4], தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
தொலைபேசி : 24342926,24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம்: www.tamilvanan.com

PHP 294.535 2



## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் (பகுதி-2) |
| ஆசிரியர் | : | திருமதி. வசந்தா நடராசன் B.A., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2008 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12½ X 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | xviii + 194 = 212 |
| நூலின் விலை | : | ரூ. 65.00/– |
| அட்டைப்பட ஓவியம் | : | ஓவியர் ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | : | *பான்ராஜா கிராபிக்ஸ்* சென்னை–24. cell : 99627 82621 |
| அச்சிட்டோர் | : | பி.வி.ஆர்.ஆப்ஸெட் சென்னை–94. |
| நூல் கட்டுமானம் | : | தையல் |


250167 cc

# பொருளடக்கம்


முன்னுரை

இந்நூலாசிரியரைப்பற்றி

வசந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும்

1. கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் -புங்குடுதீவு யாழ்ப்பாணம் 1

2. பெரியபுலம் சங்கரநாதர் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம் -அனலைதீவு யாழ்ப்பாணம் 20

3. மாணிக்கப்பிள்ளையார் கோவில் -அட்டன், மலையகம் 29

4. கோட்டைமுனை வீரகத்திப்பிள்ளையார் கோவில் -மட்டக்களப்பு 39

5. பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயம் -மூதூர், திருகோணமலை 49

6. சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயம் -சுழிபுரம், யாழ்ப்பாணம் 61

7. கந்தளாய் சிவன் கோவில் -திருகோணமலை 79

| | |
|---|---|
| 8. முத்துமாரி அம்பாள் ஆலயம் | |
| -திருநெல்வேலி, யாழ்ப்பாணம் | 89 |
| 9. இணுவில் சிவகாமி அம்மை ஆலயம் | |
| -யாழ்ப்பாணம் | 97 |
| 10. பண்டாரபுலம் மனோன்மணி அம்பாள் ஆலயம் | |
| -யாழ்ப்பாணம் | 104 |
| 11. சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம் | |
| -திருகோணமலை | 116 |
| 12. ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலயம் | |
| -வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் | 126 |
| 13. உகந்தைமலை முருகன் கோவில் | |
| -மட்டக்களப்பு | 136 |
| 14. தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி திருக்கோவில் | |
| -சரவணை, யாழ்ப்பாணம் | 150 |
| 15. சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் | |
| -உடுப்பிட்டி | 161 |
| 16. தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயம் | |
| -கொழும்பு | 176 |

# முன்னுரை

ஈழமெங்கும் செறிந்து காணப்படும் திருக்கோயில்கள், ஈழத்தமிழரின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை எடுத்தியம்பும் கலாச்சாரச் சின்னங்களாக விளங்குகின்றன. ஈழத் தமிழரின் புராதன வரலாற்றோடும், தமிழ் மன்னர்களின் ஆக்கப்பணிகளோடும் ஈழத்தின் புராதன ஆலயங்களின் வரலாறு தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. இவற்றை அறிவதன்மூலம் தமிழ்ஈழ மண்ணின் சிறப்புப் புலப்படும். ஆனால் ஈழத்தமிழரின் கலாச்சார விழுமியங்களான இந்துக் கோயில்கள், கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இனப்பிரச்சினைகளாலும், முடிவுறாத போரினாலும் காலத்திற்குக் காலம் அழிவை எதிர்நோக்கி வந்துள்ளது.

ஈழத்தின் ஆதிக்குடிகளாக, நாகர், இயக்கர் என்னும் திராவிட இனத்தவர்கள் காணப்பட்டுள்ளனர். இம்மக்கள் சிவ வழிபாடு, நாகவழிபாடு, இயற்கை வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ்ந்தனர். இம்மக்களைப் பற்றிய குறிப்புகளை ஈழ வரலாற்றுக் குறிப்புகளின் மூலமும், புராண வரலாறுகளின் மூலமும் அறியலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே ஈழத்திலே சைவசமயம், எழுச்சி பெற்றுக் காணப்பட்டதென்பதை மகாவம்சக் கூற்றுகள் தெரிவித்துள்ளன. ஈழத்திலே வாழும் சிங்கள இனத்தவர் களுடைய வரலாறு, கி.மு. 543 ஆம் ஆண்டிலே கலிங்கதேசத்தி லிருந்து நாடுகடத்தப்பட்ட விஜயனுடன் ஆரம்பமாகின்றது. இக்கூற்றினை சிங்கள இனத்தவர்களின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சம் வெளிப்படுத்தியுள்ளது.

விஜயனின் வருகையின்போது ஈழத்திலே, முன்னேசுவரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேசுவரம், தொண்டீசு வரம் என ஐந்து ஈசுவரங்கள் காணப்பட்டுள்ளன. இக்குறிப்பு களிலிருந்து ஈழத்திலே சைவ வழிபாட்டை மேற்கொண்ட திராவிட இனம், பண்டுதொட்டு வாழ்ந்த செய்தி புலப்படுத்தப்பட்டுள்ளது.

விஜயன் இவ்வாலயங்களைத் திருத்திப் புனரமைத்ததோடு, வேறு பல ஆலயங்களையும் கட்டினான் எனவும் வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது. விஜயனின் வருகையின்போது காணப்பட்ட ஐந்து ஈஸ்வரங்களுள், தொண்டீஸ்வரம் என்னும் சிவாலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அறிய முடியாதுள்ளது. ஏனைய நான்கு சிவாலயங்களும் தற்காலத்திலும் ஈழத்திலுள்ள புகழ்மிக்க சிவாலயங்களாகக் காணப்படுகின்றன. இவற்றிலே முன்னேசுவரம் இராமபிரானோடும், திருக்கேதீச்சுரம் சூரபன்மனின் மனைவியாகிய பதுமகோமளை என்பவளுடைய, பாட்டனாராகிய மகாதுவட்டா என்பவருடனும், திருக்கோணேஸ்வரம் இராவணனுடனும், நகுலேஸ்வரம் அருச்சுனனுடனும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. இவற்றின்மூலம் ஈழத்திலே சைவசமயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே காணப்பட்டுள்ளதென்பது புலனாகின்றது.

இவ்வாறான புராதனச் சிறப்புமிக்க சைவசமயத்தின் ஆணிவேராகக் காணப்பட்ட திருக்கோயில்கள், காலத்திற்குக் காலம் சூறையாடப்பட்டும், அழிக்கப்பட்டும் வந்துள்ளதை வரலாறு எடுத்தியம்பியுள்ளது. ஈழத்தை ஆட்சி செய்த தேவநம்பிய தீசனுடைய ஆட்சிக்காலம், கி.மு. 247 - 207 வரையான காலப் பகுதியாகும். இக்காலப்பகுதியில் இந்தியாவில் கலிங்கத்தில் அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சி நடைபெற்றுள்ளது. தேவநம்பியதீசன் காலத்திலேயே, முதன்முதலாகப் பௌத்தமதம் இலங்கைக்கு அறிமுகமானது. தேவநம்பியதீசன் பௌத்த மதத்தைத் தழுவ, நாட்டிலுள்ள குடிமக்களும் அவ்வாறே மதம் மாறினர். சைவக் கோயில்கள் பலவும் பௌத்த கோயில்களாக மாற்றம் பெற்றன. அபயகிரி, இசுருமுனிய விகாரைகள், இவ்வாறு மாற்றம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. ஆயினும் சோழர் ஆட்சியில் மீண்டும் ஈழத்தில் இந்துமதம் உன்னத நிலையை அடைந்தது.

கி.பி. 1505 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டுவரை இலங்கை, போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அன்னியரின் ஆளுகைக்குட்பட்டது. குறிப்பாக போத்துக்கேயர்

ஆட்சியில் இந்துக்கள் மதமாற்றம் செய்யப்பட்டதோடு, இந்துக் கோயில்கள் சூறையாடப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதை ஈழவரலாற்றிலே காணலாம். எனினும், ஆறுமுகநாவலரின் சமய மறுமலர்ச்சி காரணமாகப் பல கோயில்கள் மீண்டும் பழைய நிலையைப் பெற்றன. 1948 ஆம் ஆண்டின் பின் ஈழத்திலே மீண்டும் இந்துக் கோயில்கள் பாதிக்கப்பட்டது. அடிக்கடி ஏற்படும் இனக் கலவரங்களின்போது, நாடெங்கும் காணப்பட்ட இந்துக்கோயில்கள் தீயிடப்பட்டதோடு, இந்துக்குருமாரும் கொலை செய்யப்பட்டனர். அண்மைக்கால யுத்தத்தினால் இந்துக் கோயில்கள் குண்டு வீச்சுகளுக்கும், எறிகணை வீச்சுகளுக்கும் உள்ளாகியதோடு, தீயிட்டும் அழிக்கப்படுகின்றது. தீராத யுத்தத்தினால் மக்கள் அடிக்கடி இடம்பெயர நேர்ந்துள்ளது. இந்நிலையில் இந்து ஆலயங்கள் பராமரிப்பின்றி அழியும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஈழத்திலே சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, கணபதி வழிபாடு, முருக வழிபாடு, விஷ்ணு வழிபாடு, நாகதம்பிரான் வழிபாடு, கண்ணகை வழிபாடு, நாச்சிமார் வழிபாடு, ஐயனார் வழிபாடு என, பல தெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன. ஈழத்திலுள்ள கோயில் களின் வரலாற்றையும், மரபுகளையும் ஒரு சிறு நூலில் அடக்குவ தென்பது மிகவும் கடினம். எனவே ஈழத்துத் திருக்கோயில்களின் வரலாறும் மரபும் பல பகுதிகளாக அவ்வப்போது வெளிவரும். பகுதி-1 பெற்ற வரவேற்பின் காரணமாக, மேலும் பல ஆலய வரலாறுகளைக் கொண்ட இந்நூல் பகுதி-2 ஆக வெளிவருகின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழுகின்ற தமிழ்மக்கள் தொடர்ந்தும், தாம் வழிபாடியற்றிய கோயில்களின் திருநாள்களிலும், மகோற்சவ காலங்களிலும் விரதமிருந்து வழிபாடியற்றி வருகின்றனர். இம்மக்கள் தாம் வணங்கி வழிபட்ட கோயில்களின் வரலாறுகளையும், மரபுகளையும் அறியவேண்டும் என்ற நோக்கிலேயே இந்நூல் வெளிவருகின்றது. அத்தோடு எதிர்காலச் சந்ததியினரும் ஈழத்துத் திருக்கோயில்களைப் பற்றி அறிவதற்காக ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-1 ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு கோயில்களும் தமக்குரிய மரபுகளைப் பின்பற்றுவனவாகக் காணப்படுகின்றன. இவற்றை வாய்மொழியாகப் பெற்றும், நேரில் சென்று அறிந்தும், கோயிலோடு தொடர்புடையவர்களின் உதவிகளைப் பெற்றும் ஒவ்வொரு ஆலயங்களின் வரலாறும், மரபுகளும் எழுதப்பட்டுள்ளது. இந்நூலிலே கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் வரலாற்று நூல்களிலிருந்தும், தலபுராணங்களிலிருந்தும், ஆலயத்தோடு தொடர்புகொண்டோருடன் தொடர்புகொண்டும், வாய்மொழியாகக் கேட்டும் எழுதப்பட்டுள்ளது. அத்தோடு அறிஞர்களின் ஆலோசனையும், அவர்களுடைய கருத்துகளும் நுணுகி ஆராயப்பட்டுள்ளது. இவற்றோடு இலக்கியங்கள், கல்வெட்டுகள், கர்ண பரம்பரைக் கதைகள் என்பவையும், கோயில் வரலாறுகளையும் அவற்றோடு தொடர்புடைய விடயங்களையும் எழுதத் துணைபுரிந்துள்ளன. வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காலமும், குறிப்புகளுமே இந்நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-2 வெளிவர, பலரின் பங்களிப்பு உதவியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக ரொறன்ரோ, கனடாவிலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில், ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் என்ற தொடர், தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. நீண்ட காலமாக உதயன் பத்திரிகையில் எழுதுவதற்கு வாய்ப்பளித்த, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் நிறுவனருமாகிய திரு.ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும், அவர்களுடைய பாரியார் திருமதி. லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும், மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈழத்துத்திருக்கோயில்கள் வரலாறும் மரபும் என்ற தொடரை எழுதுவதற்கு, பலவழிகளிலும் தகவல்களைத் தந்து உதவியோருக்கும், வாராவாரம் உதயன் பத்திரிகையில் வாசித்த ஈழத்துத்திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-2, விரைவில் வெளியிட வேண்டும் என்று என்னை ஊக்குவித்த நண்பர்களுக்கும், எனது ஆக்கங்களை ஆர்வத்தோடு வாசித்து, தொலைபேசிமூலம்

கருத்துகளைப் பரிமாறி, என்னை ஊக்கப்படுத்தும் எனதினிய தமிழ் மக்களுக்கும்,

ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-1 என்ற நூல் ஆங்கிலத்தில் வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ததோடு, எனது வெளியீடுகளுக்குத் தொடர்ந்தும் பல வழிகளிலும் உதவி வருபவர், அமெரிக்காவிலுள்ள றொச்செஸ்டர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பீட நிறுவனர், வணக்கத்திற்குரிய சைத்தன்யானந்தநாத சரஸ்வதி (ஹரன் ஐயா) அவர்களுக்கும், எனது பணிவன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது எழுத்துப்பணிக்கு ஊக்கங்கொடுத்து, கட்டுரைகளைப் பலதடவைகள் வாசித்து, எழுத்துப்பிழை, கருத்துப்பிழை ஆகியவற்றைத் திருத்தி உதவும், எனது அன்புக்கணவர் திரு. அம்பலவாணர் நடராசன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-1 2003ஆம் ஆண்டு மணிமேலைப் பிரசுரத்தால் அச்சிட்டு வெளியிடப் பட்டது. ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி-2ஐ அச்சிட்டு வெளியிடுவதற்கு மகிழ்வோடு இசைந்து, வேண்டிய உதவிகளை மனமுவந்து செய்த, மதிப்பிற்குரிய சகோதரர் திரு.ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும், சென்னை மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும் எனது நன்றிகள். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும், எமது எதிர்காலச் சந்ததியினரும், ஏனையோரும் ஈழத்துத்திருக் கோயில்களின் வரலாற்றையும், அவற்றோடு பின்னிப்பிணைந்துள்ள மரபுகளையும், தமிழர்களின் வரலாற்றையும் அறிய இந்நூல் உதவவேண்டும் என, எல்லாம் வல்ல இறைவனது பாதக்கமலங்களைப் பணிந்து இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

**திருமதி வசந்தா நடராசன்** B.A.,

**வசந்தம் பதிப்பகம் றொறன்ரோ, கனடா**

**2008 (416-332-0269)**

**vasantha@rogers.com**

# இந்நூலாசிரியரைப் பற்றி

திருமதி. வசந்தா நடராசன் அவர்கள் ஈழத்தமிழர்களின் பாரம்பரியம், வரலாறு இவற்றை அறிவதில் ஆர்வங் கொண்டவர். இலங்கை, இந்திய வரலாறுகளை நன்கு கற்றறிந்தவர். இலங்கையில் வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் M.A. பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் தமிழ், சாசனம், கல்வெட்டு, சுவடிகள் பற்றிய ஆய்வு, திராவிடர் வரலாறு போன்ற பல துறைகளைக் கற்றவர்.

இலங்கை வானொலியில் சமய, தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், ஆலயவிழாக்களை நேர்முக வர்ணனை செய்த முதற் தமிழ்பெண்ணாகவும் திகழ்பவர். தமிழ்நாட்டில் பத்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தவர். அக்காலத்தில் தென்னிந்திய தொலைக்காட்சி நிறுவனமான தூர்தர்ஷன் கேந்திராவில் தயாரிப்பு உதவியாளராகப் பல துறைகளிலும் பணியாற்றியவர். சென்னையிலுள்ள சாந்தோம் தொடர்புநிலையத்தின் சார்பில், வெரிதாஸ் வானொலிக்காக சமூக, வரலாற்று நாடகங்களை எழுதித் தயாரித்தளித்தவர். இலங்கையிலிருந்து வந்த வசந்தம் எனத் தமிழகப் பத்திரிகைகளால் பாராட்டப்பட்டவர்.

ரொறன்ரோவில் 5.30A.M. அலைவரிசையில், தமிழ் ஒலி என்ற ஜனரஞ்சக வானொலி நிகழ்ச்சியை, 1993-1997 வரை நடத்தியவர். தமிழ்ஒலி வானொலியில் ஒலிபரப்பாகிய, ஈழத்தின் ஆலய வரலாறுகள் சிலவற்றை, இசைச்சித்திரமாகத் தொகுத்து, ஈழத்துத் திருத்தலங்கள் என்ற பெயரில், இரு ஒலித்தட்டுக்களை (CD) வெளியிட்டவர்.

தமிழரும் இந்து மரபுகளும், ஈழத்தமிழர் வரலாறு மற்றும் ஈழத்துத்திருக்கோயில்கள் - வரலாறும் மரபும் பகுதி-1, ஆகிய நூல்களைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வெளியிட்டவர். புலம்பெயர்ந்து வாழும் எதிர்காலச் சந்ததியினர் ஆங்கிலம்மூலம் தமிழைக்கற்க, Tamil Learning Resources Through English) Level-1, Level-11 & Level-111 என, ஆங்கில உச்சரிப்புக்களுடன் கூடிய மூன்று நூல்களை வெளியிட்டவர்.

செந்திரு, வீயென் என்ற புனைபெயர்களில் சிறு கதை, நாவல், உருவகக்கதை, கவிதை, கட்டுரை போன்ற வற்றை இலங்கை வானொலி வெளியீடான வானொலி மஞ்சரியிலும், இலங்கைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதியவர்.

கனடாவில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற, ஆறாவது உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கவிழாவில், திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து, அறிஞர்களால் பாராட்டப்பட்டவர். 1998ஆம் ஆண்டு பிரான்சின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மகாநாட்டில் பங்குகொண்டு, கலாச் சாரப் பேணலில் இந்துமதத்தின் பணி பற்றிய ஆய்வுக் கட்டுரையை வாசித்து, பல நாட்டறிஞர்களின் பாராட்டையும் பெற்றவர்.

ரொறன்ரோவில் ஒலிபரப்பாகும் வானொலிகளில் ஐயப்பதரிசனம் என்ற நிகழ்ச்சியை, கனடா அருள்மிகு ஐயப்பன் ஆலயத்தின் சார்பில், வாரத்தில் மூன்று நாட்கள் கனடியதமிழ் வானொலி (CTR), கீதவாணி மற்றும் கனேடிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் (CTBC) ஆகிய வானொலிகளில் நேரடி அஞ்சலோடு தொகுத்தளிப்பவர்.

சொல்லின் செல்வி, ஆன்மீகச்சாதகி, சிவத்தமிழ் வித்தகி, சைவநெறிச்செல்வி எனப் பலவாறாகக் கௌரவிக்கப்பட்டவர். சிறந்த விமர்சகர், ஆய்வாளர், பேச்சாளர், எழுத்தாளர் என அறிஞர்களால் விதந்துரைக்கப்பட்டு, ஊடகம், தமிழ், சமயப் பணிகளுக்காகப் பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்றவர்.

ஈழத்திலே பல தசாப்தங்களாகத் தொடரும் யுத்தத்தின் காரணமாக, ஈழத்தின் ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவை மீண்டும் புனரமைக்கப் படவேண்டும் என்ற நோக்கில் ஆலய வரலாறுகளையும், அவற்றின் இன்றைய நிலையையும் தமிழ்மக்களுக்குச் சுட்டிக்காட்டி, ஈழத்தின் ஆலயவரலாறுகளை, ரொறன்ரோ, கனடாவிலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில், கடந்த ஐந்து வருடங்களாகத் தொடர்ந்து எழுதி, மக்களை விழிப்படையச் செய்தவர்.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஈழத்திலுள்ள ஆலயங்களின் வரலாறுகளுக்கும் மரபுகளுக்கும் நூல் வடிவம் கொடுத்துள்ளார். புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழுகின்ற இன்றைய தலைமுறையினரோடு, தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலச் சந்ததியினரும், ஈழத்திலுள்ள ஆலயங்களின் சிறப்புக்களையும், புராதன வரலாற்றுச் சுவடுகளையும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற பேரார்வத்தின் வெளிப்பாடாக, ஈழத்துத் திருக்கோயில்கள் வரலாறும் மரபும் பகுதி -2 வெளிவருகின்றது. இவரது பணி தொடரட்டும்.

**வாழ்த்துக்கள்**

# வசந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

1. தமிழரும் இந்துமரபுகளும் (தமிழ் / ஆங்கிலம்).
   திருமதி. வசந்தா நடராசன்
   முதற்பதிப்பு : 1997 - இரண்டாம் பதிப்பு : 1999
2. ஈழத்தமிழர் வரலாறு (தமிழ் / ஆங்கிலம் ).
   திருமதி. வசந்தா நடராசன் முதற்பதிப்பு: 1999
3. ஈழத்துத் திருக்கோயில்கள்-வரலாறும் மரபும் பகுதி-1
   திருமதி. வசந்தா நடராசன் முதற் பதிப்பு : தமிழ் 2003
4. **Tamil Learning Resources ( Through English)**
   **Basic Level -I (Mrs. Vasantha Nadarajan)**
   **First Edition - (English) -2004**
5. **Tamil Learning Resources ( Through English)**
   **Level -II (Mrs. Vasantha Nadarajan)**
   **First Edition - (English) -2004**
6. **Tamil Learning Resources ( Through English)**
   **Level -III (Mrs. Vasantha Nadarajan)**
   **First Edition - (English) -2004**
7. **Holy Shrines of Eazham –History and Traditions**
   **(Mrs. Vasantha Nadarajan) First Edition - (English) -2005**
8. ஈழத்துத் திருக்கோயில்கள்-வரலாறும் மரபும் பகுதி-2
   திருமதி. வசந்தா நடராசன் - 2008

வசந்தம் தயாரிப்புக்கள்

1. ஈழத்துத் திருத்தலங்கள் (ஆலய வரலாறுகள்-இசைச்சித்திரம்) CD 1& CD 11. திருமதி.வசந்தா நடராசன் முதல்வெளியீடு:1995
2. 5.30 **A.M.** அலைவரிசையில் ஒலிபரப்பாகிய **'தமிழ்ஒலி'** வானொலி நிகழ்ச்சி 1993- 1997 சனி, ஞாயிறு தினங்களில் ஒலி பரப்பப்பட்டது. (இந்நிகழ்ச்சியில் ஒலிபரப்பான ஈழத்து ஆலய வரலாறுகள் என்ற தொடர் C.D. ஒலித்தட்டில் இசைச்சித்திரமாகவும், இந்து மரபுகள், தமிழீழத்தாயகம் போன்ற தொடர்கள் நூல் வடிவமாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

தொலைபேசி& தொலைநகல்: (416)332-0269
இணையதள முகவரி: **vasantha@rogers.com**
ரொறன்ரோ, கனடா 2008

# ஈழத்துத் திருக்கோயில்கள்
## வரலாறும் மரபும்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதைப் போற்றி வாழ்வது மானிட தர்மமாகும். எனினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வுமுறை, சமுதாய அமைப்பு, பூகோள அமைப்பு இவற்றிற்கிணங்க, தமக்கேற்ற முறையில் இறை வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். தாம் போற்றி வணங்கும் தெய்வீக வடிவங்களுக்கு, அவரவர் பின்பற்றும் வழியில் கோவில்கள் அமைத்து வழிபாடியற்றி வருவது, பண்டு தொட்டு இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்ற மரபாகும்.

இக்கோவில்கள் ஒரு இனத்தின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை எடுத்தியம்பும் முக்கிய கூறாகக் காணப்படுகின் றது. இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும், கோவிலிலுள்ள திருவுருவங்கள் மூலமாகத் திருவருளை இலகுவில் பெற முடியும் என்ற நம்பிக்கை, காலங்காலமாக மக்கள் மனதில் வேர்விட்டு வளர்ந்துள்ளது.

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்" என்ற தத்துவத்தின் வெளிப்பாடாகக் காணப்படுபவை கோவில்கள். கோவில் என்றால் (கோ - இறைவன், இல் - இல்லம் ) இறை வன் உறையும் இல்லம் எனவும், ஆலயம் என்றால் (ஆ-ஆன்மா, லயம்-லயித்தல்) ஆன்மாக்கள் லயிக்கும் இடம் என்றும் பொருள்படும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பவை மனித மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு எழுந்த முதுமொழிகள்.

கோவில்வழிபாடும், பிரார்த்தனைகளும் தேச அமைதியை யும், மன அமைதியையும் ஏற்படுத்தவல்லவை. தெய்வசக்தி நிறைந்த ஆலயவழிபாட்டிலே, பூசைகள் தடைப்படின்,

*"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்குத் தீங்குள மாரி வளங்குன்றும்*
*கன்னங் களவு மிகுந்திடும் காசினி*
*எண்ணரு நந்தி எடுத்துரைத் தானே"*

என்று திருமூலநாயனார் கூறியுள்ளது எந்நாட்டிற்கும் பொருந்தும். கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற இனஅழிப்புப் போரினால், ஈழத் தமிழ் மக்கள் நாட்டுக்குள் இடம்பெயர்ந்து, நாடுவிட்டுப் புலம்பெயர்ந்து தமது பண்பாட்டு நாகரிக சின்னங்களைப் பேணமுடியாத பின்னடைவு காணப்பட்டது.

இனஅழிப்புப் போரினால் மனிதநேயம் குன்றியது. இந்துக்கோவில்கள் சிதைக்கப்பட்டன. இந்துக்குருமார்கள் துன்புறுத்தலுக்குள்ளாகினர். இந்துக்கோவில்கள் சிறைக் கூடமாகவும், இராணுவ தளமாகவும் மாற்றப்பட்டன. புனிதமாகப் போற்றப்பட்ட ஆலயங்கள் சிதைவுற்றுத் திருவுருவங்களும், பெறுமதியான கலைச் செல்வங்களும் சூறையாடப்பட்டன. இதனால் 1800க்கும் மேற்பட்ட இந்துக்கோவில்கள் பாதிக்கப்பட்டன.

இனஅழிப்புப் போரினால், யாழ்ப்பாணமாவட்டம் வலிகாமம் பகுதியில், நல்லூர்க் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம், தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கைஅம்மன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உட்பட 800க்கும் மேற்பட்ட கோவில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தீவுப்பகுதிகளில் நயினை ஸ்ரீநாகபூசணிஅம்மன் கோவில், காரைநகர் சிவன்கோவில் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கோவில்கள் சிதைவுக்குள்ளாகின.

வடமராட்சிப்பகுதியில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி, வல்வை முத்துமாரி அம்மன், வல்லிபுரக்கோவில் உட்பட நூற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட கோவில்களும், தென்மராட்சியில் முந்நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கோவில்களும் இராணுவ

நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டன. இவ்வாறே மன்னார்ப் பகுதியில் திருக்கேதீச்சரம் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட கோவில்களும், வவுனியா மாவட்டத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கோவில்களும், சீரழிவை எய்தின. முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் தேர் எரிக்கப்பட்டு, கோவிலும் அழிக்கப்பட்டது. இப்பகுதியில் எண்பதுக்கும் மேற்பட்ட கோவில்களும் அழிவை எட்டின.

கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கோவில்கள் பாதிக்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் திருக்கோணேஸ்வரம், தம்பலகமம் சிவன்கோவில், வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் உட்பட நூற்றி இருபதுக்கும் மேற்பட்ட கோவில்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாமாங்கப் பிள்ளையார் கோவில், கொக்கடிச்சோலை சிவன் கோவில் உட்பட நூற்றி நாற்பதுக்கும் மேற்பட்ட கோவில்களும், அம்பாறை மாவட்டத்தில் கோரதீவு கண்ணகை அம்மன் கோவில், மண்டூர் கந்தசுவாமி கோவில் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட கோவில்களும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டன. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதால், 95.000 க்கும் மேற்பட்ட பழமையான இந்து கலாச்சாரத்தை எடுத்தியம்பும் நூல்கள் எரிந்து சாம்பலாயின.

புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மக்கள், ஈழத்திலே அழிந்துகொண்டிருக்கும் இந்து ஆலயங்களை, தமது பண்பாட்டு விழுமியங்களை, கலாச்சாரச் சின்னங்களை மீளமைக்க உதவுவது காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. குறிப்பாக எமது வாழ்வின் மூலாதாரமாக, எமது வாழ்வியலை வளம்படுத்தவல்ல கோவில்களைப் புனரமைப்பதும், இவற்றைப்பற்றி அறிவதும் காலத்தின் கட்டாயமாகும்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவை போலச் சமயப்பற்றும் இன்றியமையாதது. சமய உணர்வு நன்றியுணர்வாகத் தென்பட்டாலும், பரம் பொருளை உணர்வது, உணரமுற்படுவது, உணர்த்த முற்படுவது, நெறிகளை வரையறுப்பது என்ற நிலைகளில் பல்வேறு சமயங்களும் வாழ்க்கை நெறியாகவே காணப்படுகின்றன.

இந்துக்கோவில்களைப் பற்றி அறியுமுன், இந்து சமயத் தைப் பற்றி அறிவதும் அவசியமாகும். இந்துசமயம் என்ற பெயர் புதியது. வேதத்திலோ, இதிகாசத்திலோ இந்து என்ற பெயர் இடம்பெறவில்லை. கிரேக்கர்கள் சிந்து நதியை யொட்டி வாழ்ந்த மக்களை இந்து என்றழைத்தனர். சிந்து நதியையொட்டி வாழ்ந்த மக்கள் பின்பற்றிய வழிபாட்டுமுறை இந்துமதம் எனப்பட்டது. சிந்து என்ற சொல் இந்து என் றொலிக்க, மேனாட்டவரும் அவ்வாறே அழைக்க ஆரம்பித்தனர். இவ்வாறுதான் இந்தியா, இந்து நாகரிகம், இந்துமதம் என்ற பதங்கள் பரவின. இந்து மதம் சனாதனதர்மம் என்றே ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ளது. இயற்றை வழிபாடோடு இணைந்த மதமாக இந்து மதம் காணப்பட்டதென்பதற்கு சிந்துவெளிப் புதைபொருளாய்வு சான்று பகருகின்றது.

உலகிலே தோன்றிய பல மதங்களின் காலம் இன்ன தெனவும் யாரால் ஸ்தாபிக்கப்பட்டதெனவும் வரையறுத்துக் கூறமுடியும். சமணம் (கி.மு 600), பௌத்தம் ( கி.மு 560), கிறிஸ்தவம் (கி.பி), இஸ்லாம் (கி.பி 570), சீக்கியம் (கி.பி 1460). ஆனால் சனாதனதர்மமாகிய இந்துமதத்தின் காலத்தையோ அன்றி யாரால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற வரையறையையோ கூறமுடியாத நிலையில், மனிதன் வாழ்வுநெறியை ஆரம்பித்தபோது இயற்கையாக மலர்ந்த வாழ்வுநெறியாக இந்துமதத்தைக் கொள்ள முடியும்.

பிற்காலத்தில் இந்துமதம் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டுக் காணப்பட்டது. இதனை நீக்கி இந்துமதத்தை சைவம், சாக்தம், வைணவம், காணாபதியம், கௌமாரம், சௌரம் என அறுவகைச் சமயங்களாக்கி மாற்றத்தை ஏற்படுத்தியவர் ஸ்ரீ சங்கரர். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவம் என்றும், சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சாக்தம் என்றும், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் என்றும், கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் காணாபதியம் என்றும், முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் கௌமாரம் என்றும், சூரியபகவானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சௌரம் என்றும் அறுவகைச் சமயங்களும் அழைக்கப்பட்டன. இவை அனைத்தும் சேர்ந்து இந்துமதம் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றது. வேதங்களைப் பிரமாண நூலாகக் கொண்டமையால் இவை வைதீக சமயங்களென்றும் அழைக்கப்படும்.

இவ்வாறான பெருமைகளைக் கொண்ட இந்துமதம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்தில் காணப்பட்டுள்ளது. இயற்கை வழிபாடு பின்னர் உருவ வழிபாடாக மாற்றம் பெற்றபோது, தாம் வணங்கும் தெய்வங்களுக்கு கோயில் கட்டி, விழாவெடுக்கும் பண்பும் உருவாயிற்று. இதனால் ஈழமெங்கும் ஆயிரக்கணக்கான திருக்கோவில்கள் எழுச்சிபெற்றன. இடைக்காலங்களில் அழிவுகள், பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும், இத்திருக் கோவில்கள் மீண்டும் எழுச்சிபெறும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இவ்வேளையில் ஈழத்திருக்கோயில்கள் பற்றிய விடயங்களை நினைவுகூருவது காலத்தின் தேவையாகும்.

# கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம்

## புங்குடுதீவு யாழ்ப்பாணம்

புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள புங்குடுதீவு, சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பூமியாகக் காணப்படுகின்றது. இங்கு அறுபதுக்கும் மேற்பட்ட சைவ ஆலயங்கள் உண்டு. இக் கோவில்களுள் ஒன்பது கோவில்கள், பிள்ளையார் கோவில் களாக்க் காணப்படுகின்றன. இவற்றுள் புங்குடுதீவு கிழக்கிலே கலட்டியம்பதியிலே கோவில் கொண்டுள்ள வரசித்தி விநாயகர் ஆலயம் அருளும் புகழும் கொண்டதாக விளங்குகின்றது.

விநாயகர், மக்கள் கேட்கும் வரங்களை அள்ளிக் கொடுப்பவராகவும், சகல சித்திகளையும் பக்தர்களுக்கு வழங்குபவராகவும் விளங்குவதால், வரசித்தி விநாயகர் என்று காரணப்பெயர் பெற்றுள்ளார். அருளோடும் புகழோடும், புங்குடுதீவு மக்களின் வாழ்வோடும் இரண்டறக் கலந்து

காணப்பட்ட இவ்வாலயம், நாட்டு நிலைமை காரணமாக, 1991ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டுவரை பூசை வழிபாடுகளின்றி அழிவுற்றுக் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது தந்தையாரான சிவஸ்ரீ. சொ. பஞ்சாட்சர ஐயர் (பஞ்சனத ஐயா) அவர்களோடு, தாமும் வணங்கி வழிபட்டு, பூசை, விழாக்களை நடத்திய தமிழீழ மண்ணிலுள்ள புங்குடுதீவு, கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தை, பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஆவலோடு, அவ்வூர் மக்களின் ஆதரவையும் பெற்று, கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி, தொடர்ந்து ஆலய வருடாந்த மகோற்சவத்தையும் 2005 ஆம் ஆண்டு சிறப்பாக நடத்திய பெருமை, ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகரும், ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்களையே சாரும்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் என்ற நோக்கில், சைவர்கள் உள்ளத்தில் விநாயகப் பெருமான் முதன்மைத் தெய்வமாக விளங்குகின்றார். மக்கள் தமது செயல்களைத் தொடங்குமுன் முதலில் மனதில் தியானித்துக் கொள்ளும் மங்கலமான தெய்வமாகவும் ஞானத்தை அருளும் தெய்வமாகவும் விநாயகர் போற்றப்படுகின்றார். எச் செயலாயினும், பிரணவ வடிவமான மகா கணபதிக்கு முதல் வணக்கம் தெரிவித்துத் தொடங்காவிடில், அக்கருமம், இனிது நிறைவேறாது என்றும், கணபதியின் திருவருளைத் துணை கொண்டுவிட்டால், எவ்வித இடரும் நேராதென்பதும் தொன்றுதொட்டுக் காணப்படும் நம்பிக்கையாக இருந்து வருகின்றது.

விநாயகர் உலகின் ஆதார சக்தியாகக் காணப்படுகின்றார், இதனை அடிப்படையாகக் கொண்டு அவருடைய தோற்றம் காணப்படுகின்றது. பிள்ளையார் என்று மக்களால் போற்றப்படும் விநாயகருக்கு, கணபதி, ஆனைமுகன், பிரணவன், வக்ரதுண்டர், இலம்போதரர், மூஷிகவாகனர், விக்கினேசுவரர், மூத்தநாயனார்,

ஐங்கரன் போன்ற பல பெயர்கள் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் காணப்படுகின்றது.

விநாயகர் பிரணவ வடிவானவர். பிரணவம் என்ற மூல ஒலியிலிருந்தே உலக கிருத்தியங்கள் தொடங்கப் பெற்றதென ஆன்றோர் கூறியுள்ளனர். இக்காரணத்தினாலேயே பிரணவ வடிவான விநாயகப் பெருமானுக்கு முதல் வணக்கம் செய்யப்படுகின்றது. விநாயகருடைய திருவவதாரம் பற்றிப் பல கதைகளும், தத்துவங்களும் வழக்கிலே காணப்படுகின்றன. ஆண், பெண் யானை வடிவில் அகரமாகிய சிவமும், உகரமாகிய சக்தியும் கூடியதனால் சுத்த மாயாகாரியமாகிய நாதப் பிரணவம் ஓம் வடிவில் தோன்றிற்றென்பர்.

விநாயகருடைய யானை முகம், இவர் ஓம் என்னும் பிரணவ வடிவினர் என்பதையும், விநாயகருடைய ஐந்து கரங்களும் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் செய்பவர் என்பதையும், விசாலமான இரண்டு திருச்செவிகளும், மும்மலங்களும் ஆன்மாக்களைத் தாக்காது காத்து, வினை போக்கி அருள வல்லன என்பதையும், விநாயகருடைய மூன்று கண்களும், சூரியர், சந்திரர், அக்கினியாகிய முச்சுடர்களையும் குறிப்பதாயும், பெருவயிறு எல்லா அண்டங்களும், சராசரங்களும், தன்னுள்ளே அடக்கம் என்ற தத்துவத்தைக் குறிப்பதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறாக உலக இயக்கத்தினை ஆதாரமாகக் கொண்ட ஆதார சக்தியாக விளங்கும் விநாயகப் பெருமானை முதன்மைத் தெய்வமாக வணங்க, எமது ஆன்றோர் வழிவகுத்துச் சென்றுள்ளனர்.

விநாயகர் தொடர்பாக நிலவும் புராணக்கதைகள் தற்கால அறிவியல் சிந்தனைக்கு அப்பாற்பட்டவையாகக் காணப்பட்ட போதிலும், புராணக்கதைகளின் அடிப்படையான குறிக்கோள் யாதென விளங்குவதன் மூலம், உண்மையான தத்துவத்தை அறிய முடியும். கல்வி வளர்ச்சியடையாத காலத்திலே பாமரமக்க

ளிடையே சமய உணர்வினையும், கடவுள் நம்பிக்கையையும் ஏற் படுத்த எழுந்தவையே புராணக் கதைகள் எனக் கொள்ள முடியும். எனினும் புராணக்கதைகளிலே காணப்படுகின்ற ஆக்கபூர்வமான கருத்துகள் மனிதனின் வாழ்வியலுக்கு உறுதி சேர்ப்பதாகக் காணப்படுகின்றது. இந்த ரீதியில் விநாயகர் தொடர்பான புராணக் கதைகள் யாவும், தத்துவங்களைப் புரிந்து கொள்ள முடியாத பாமரமக்களுக்குப் புரிய வைக்க எழுந்தவைகளாகவே கருதவேண்டும். அறிவுபூர்வமாகச் சிந்திக்கின்ற தற்காலத்தில், புராணக் கதைகளின் சாரம் என்னவென்பதைப் புரிந்து, விநாயகத் தத்துவத்தை விளங்கி, அறிவுபூர்வமான விநாயக வழிபாட்டை மேற்கொண்டால், சகல சித்திகளையும், வரங்களையும் வரசித்தி விநாயகர் அருளுவார் என்பதில் ஐயமில்லை.

ஈழத்திலே விநாயக வழிபாடு முதன்மையான வழிபாடாகக் காணப்படுகின்றது. ப.்.றுளி ஆறும் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள, எஞ்சிய நிலப்பரப்பிலே காணப்படும் ஏழு தீவுகள் யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்து காணப்படுகின்றன. இத் தீவுகளை சப்ததீவுகள் என்று அழைப்பர். இவற்றுள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே 18 மைல் தூரத்தில் உள்ளது புங்குடுதீவு. இத்தீவு மிகவும் தொன்மை வாய்ந்தது. யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள தீவுகளிலே நடுநாயகமாக புங்குடுதீவு விளங்குகின்றது.

தீவு என்ற சொல் நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த நிலப்பரப் பைக் குறிக்கின்றபோதிலும், ஆதியில் தீவாகக் காணப்பட்ட புங் குடுதீவு தற்காலத்தில் யாழ் நகரிலிருந்து செல்லும் பதினெட்டு மைல் நீளமுள்ள நெடுஞ்சாலையின் மூலம் யாழ்நகரோடு இணைக் கப்பட்டுள்ளது. எனினும் இன்றுவரை புங்குடுதீவு என்ற தொன்மை மிகு பெயராலேயே இப்பிரதேசம் அழைக்கப்பட்டு வருகின்றது. இருபத்தியொரு மைல் சுற்றளவு கொண்ட புங்குடுதீவு, கிழக்கு மேற்காக 5.5 நீளமும், வடக்குத் தெற்காக 3 மைல் அகலமும் உடையது.

இத்தீவின் பெயர்க் காரணத்தைப் பற்றிப் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. தமிழகத்திலுள்ள பூங்குடிக் கிராமமக்கள் குடியேறியமையால் பூங்குடி, திருப்பூங்குடி என்றும், செல்வம் கொழிக்கும் பிரதேசமாக விளங்கியமையால் பொன்கையூர் என்றும், புங்கைமரம் நிறைந்த காடாக இருந்தமையால் புங்குடுதீவு என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பியங்குதீவு, பொங்கர்தீவு, கொங்கர்தீவு என்று வேறு பல பெயர்களும் புங்குடுதீவைக் குறிப்பதாகக் காணப்படுகின்றது.

இத்தீவு இந்து சமுத்திர வர்த்தகத்தின் மையமாக ஆதியில் விளங்கியுள்ளது. ஈழத்தைக் கைப்பற்றி ஆண்ட ஒல்லாந்தர் தமது தேசத்திலுள்ள நில அமைவோடு காணப்பட்ட சப்த தீவுகளுக்கும் தமது நாட்டுப் பெயர்களைச் சூட்டினர். புங்குடுதீவை மிடில்பேர்க் எனக் குறிப்பிட்டுள்ளனர். இப் பெயர் வழக்கில் இல்லாது காணப்பட்டாலும் ஈழ வரலாற்றிலே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கந்தப்புராணத்திலே கூறப்படுகின்ற கிரவுஞ்சம் என்பது புங்குடுதீவைக் குறிக்குமெனக் கந்தப்புராண விளக்கம் எழுதிய டானியல் ஜோண் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

புங்குடுதீவிலே, எழுந்தருளியுள்ள கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் வரலாறு கர்ண பரம்பரைக் கதையோடு தொடர்புடைய தாகக் காணப்படுகின்றது. புங்குடுதீவிலே பிறந்த துளசியம்மா என்னும் பெண்மணி, யாழ்ப்பாணம் அரியாலைப் பிரதேசத்திலே குடியேறி வாழ்ந்து வந்தார். இக் கிராமத்தில் காணப்பட்ட சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பனைமரத் தோப்புக் குள்ளே சிறு குடிசையமைத்துத் தனியாக வாழ்ந்து வந்தார். பனந்தோப்பிலிருந்து கிடைத்த ஓலை மற்றும் பனம் பொருட்களை விற்று, அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தானும் சீவித்து, சித்திவிநாயகருக்கும் தொண்டு புரிந்து வந்தார். பல வருடங்களின் பின்னர் வயது முதிர்ந்து முதுமை ஏற்பட்டபோது, புங்குடுதீவிலுள்ள தனது உறவினர்களோடு சேர்ந்து வாழ்வதற்காக ஆயத்தங்களைச் செய்தார். எனினும் தான் போற்றி வணங்கிய

சித்தி விநாயகரை விட்டுப்பிரிய மனமின்றிப் பெரிதும் வருந்தினார். இந்நிலையில் அவரது கனவிலே தோன்றிய சித்திவிநாயகர், "நான் அங்கு வந்து காட்சி கொடுப்பேன் கவலைப்படாமல் போ" என்று அருளியுள்ளார். புங்குடுதீவு வந்த அந்த மூதாட்டி இரவு முழுவதும் சித்திவிநாயகரை எண்ணியவாறு இருந்துள்ளார். அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களைக் கழிக்கப் பனந்தோப்பிற்குச் சென்றார். அங்கு மின்னல்போல ஓர் ஒளி தோன்றி துளசியம்மாவிற்குக் காட்சியளித்தது. உடனே அந்த இடத்திலே அடையாளமாக ஒரு கல்லை வைத்துவிட்டு வீடு திரும்பிய துளசியம்மா, பொழுது விடியும்வரை காத்திருந்தார். பொழுது விடிந்ததும் தான் கண்ட காட்சியை அயலாருக்கு விபரித்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு, ஒளியைக் கண்ட இடத்திற்குச் சென்று பார்த்தபோது, வெறுந் தரையாக இருந்த அவ்விடத்திலே ஒரு கொன்றைமரம் வளர்ந்து நிற்பதைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். மட்டில்லா மகிழ்ச்சியடைந்த மூதாட்டி, கனவிலே சித்திவிநாயகர் தனக்குக் கூறியவாறு வந்துவிட்டார் என்பதை உணர்ந்தார். கொன்றைமரத்தின்கீழ் ஒளிகண்ட இடத்திலே அடையாளமாக வைத்த கல்லுடன் ஒரு சூலத்தையும் நாட்டி, பொங்கல் படைத்து வழிபட ஆரம்பித்தார். துளசிஅம்மையாருடன் இவ்வூர் மக்களும் கொன்றைமரத்தடிக்குச் சென்று வழிபாடியற்றி வந்துள்ளனர். இக்கதை கர்ணபரம்பரையாக வழக்கிலே காணப்படுகின்றது.

இக்கதை தவிர மற்றுமொரு குறிப்பும் கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆரம்பத்திலே இக் கோவில் ஒரு கொன்றைமரத்தோடு காணப்பட்டுள்ளது. வெள்ளச்சி என்றழைக்கப்படும் ஒரு மூதாட்டி, விநாயகரையும், வைரவரையும் வணங்கி, இத் தெய்வங்களின் அருளைப் பெற்றவராகக் காணப்பட்டு, விநாயகரின் அருளால் மக்களுக்கு அருள்வாக்குக் கூறுவாராம். துளசியம்மாவின் பின்னர் இப் பெண்மணி வாழ்ந்திருக்கலாம் என்றும் கூறுவர். இவ்வாறான கர்ண பரம்பரைக்கதைகளை கலட்டி வரசித்தி

விநாயகர் ஆலயத்தின் பரம்பரைப் பூசகராக விளங்கிய ஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் மற்றும் இப்பிரதேசத்திலே வாழுகின்ற முதியோர்களும் கூறியுள்ளனர்.

இவ்வாலயத்தின் பரம்பரைப் பூசகர்களாக சொக்கலிங்க ஐயரின் பரம்பரையினர் இருந்து வருகின்றனர். சொக்கலிங்க ஐயரின் மகனான ஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் அவர்கள் இவ்வாலயத்தின் பூசகராக நெடுங்காலம் இருந்துள்ளார். இவரை இவ்வூர் மக்கள் பஞ்சனத ஐயா என்று அன்புடன் அழைப்பர். ஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் அவர்கள், தன் கையால் பசும்பால் கறந்து, அப்பாலினால் கலட்டி வரசித்தி விநாயகருக்கு அபிஷேகம் பண்ணி, தானே திருவமுது பொங்கிப் படைத்து, காலை முதல் மாலைவரை விநாயகருடனேயே இருந்து, தனது வாழ்நாளைக் கழித்தவர்.

இவருடைய புத்திரர்களும் புலம்பெயர்ந்த நாடுகளில் சமயப்பணியில் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்து வருகின்றனர். கனடாவில் வசிக்கும் ஸ்ரீ விஜயலட்சுமி வாசா அதிபரும், மிஸிஸாகா ஸ்ரீகணேஷ துர்க்கா தேவஸ்தான ஸ்தாபகரும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ. பஞ்சாட்சர.கிருஷ்ணராஜக் குருக்கள் ( விஜயன் ஐயா), தந்தையாரான ஸ்ரீ பஞ்சாட்சர ஐயருக்கு உறுதுணையாகவிருந்து, கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பூசை மற்றும் செயற்பாடுகளில் உதவியுள்ளார். இவர்களது முயற்சியினால் விநாயருக்கு உகந்த, பிள்ளையார் கதை படிப்பும் மற்றும் அபிஷேகமும் மிகச் சிறப்பாக இவ்வாலயத்திலே இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீ பஞ்சாட்சர ஐயர் பூசகராக இருந்த காலத்தில், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலே நித்திய, நைமித்திய பூசைகள் மிகச் சிறப்பாகவும் கிரமமாகவும் நடைபெற்றுள்ளது. அக்காலத்திலே இவ்வாலயத்திலே நடைபெற்ற விநாயக விரதம் குறிப்பிடத்தக்கது. விநாயக விரத பூர்த்திநாளில், பிரதிஷ்டாபூஷணம் நயினை சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்களின் தலைமையில், புங்குடுதீவிலேயே முதன் முதலாக கஜமுக சம்ஹார உற்சவம் மிகச் சிறப்பாக

நடைபெற்றுள்ளது. இவற்றோடு மாதந்தோறும் சதுர்த்தியும், கார்த்திகைத் திருநாட்களில் அபிஷேகமும் திருவிழாக்களும் சிறப்பாக நிகழ்ந்துள்ளது.

கலட்டி வரசித்தி விநாயகர், இவ்வூர் மக்களோடு மக்களாக நின்று பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இரவு நேரங்களில் பிள்ளையாரும், வைரவரும் சலங்கைச் சத்தத்தோடு ஊரைச் சுற்றிவந்து காவல்காப்பதாக, அனுபவபூர்வமாக அனுபவித்து உணர்ந்தவர்கள், தங்கள் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து மகிழ்வது வழக்கமான நிகழ்ச்சியாகக் காணப்பட்டுள்ளது. வீடுகளிலே தனியாக இருக்க நேரிடும்போது விநாயரை வணங்கி, 'கலட்டியானே நீதான் துணை' என்று கூறி உறங்கிவிடுவார்கள். நடுச்சாமத்திலே வீட்டைச்சுற்றிச் சலங்கை ஒலியுடன் யாரோ நடமாடுவதுபோன்று சத்தம் கேட்கும். மறுநாள் வீட்டைச்சுற்றிப் பெரிய காலடிச் சுவடுகள் காணப்படும். அச் சுவடுகள் வீட்டிலிருந்து ஆரம்பித்து கலட்டி சித்திவிநாயகர் ஆலயம் வரை காணப்படுவது பெரும் வியப்புக்குரியதாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான பல சம்பவங்களை விநாயகர் நிகழ்த்தித் தனது பக்தர்களைக் காப்பாற்றி வருகின்றார். பக்தர்களும் கலட்டியானின் கருணையைப் போற்றி மகிழ்வர். இக்கோவிலிலுள்ள கொன்றைமரம் மற்றுமொரு அதிசயமாகக் காலங் காலமாக விளங்கி வருகின்றது. இம்மரம் கொத்துக் கொத்தாக பூக்களை மட்டுமே பூத்துச் சொரியுமே தவிர, எக்காலத்திலும் ஒரு காயாவது காய்த்தில்லை என்பதை பலரும் அனுபவத்திலே கண்டுள்ளார்கள்.

இவ்வாலயத்தில், காலத்திற்குக் காலம் பல திருப்பணி வேலைகள் இடம்பெற்றுள்ளது. இவ்வூரிலே கலட்டி வரசித்தி விநாயகரின் கோவிலுக்கு அண்மையில் சிவதரும சீலர் பொறளை நாகலிங்கம் என்னும் பிரபல வர்த்தகர் வாழ்ந்துள்ளார். இப் பெரு மகனார் இக்கோவிலுக்குப் பல வழிகளிலும் நல்லாதரவு வழங்கி வந்துள்ளார். இவரது உதவியால் இவ்வாலயத்திலே பல

திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1925 ஆம் ஆண்டளவில் அசையாமணி அமைத்து சிறுகோவிலிலேயே வழிபாடு நிகழ்த்தப்பட்டது. பின்னர் 1944 ஆம் ஆண்டு இக்கோவிலிலே பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகமும் சிறப்பாக நிறைவேறியுள்ளது.

இது நிகழ்ந்து பல வருடங்களின் பின்னர், திரு. நாகலிங்கம் தனது குடும்பத்தினர் உறவினருடன் பிரயாணம் செய்த படகு நடுக்கடலில் மூழ்கியதால், குடும்பத்தினர் அனைவரும் உயிரிழந்து, திரு. நாகலிங்கம் மட்டும் உயிர்தப்பிக் கரையேறினார். இந்த இழப்பின் காரணமாகத் தீராத கவலையுடன் வாழ்ந்தவரை, கலட்டி வரசித்தி விநாயகர் ஆட்கொண்டு, அவர் கனவிலே தோன்றி, நடப்பவை யாவும் விதிப்படி நடக்கும் என்றும், தருமம் மட்டுமே கூடவரும் என்பதையும் உணர்த்தினார்.

இச்சம்பவத்தின் பின்னர் திரு. நாகலிங்கம் அவர்கள் தெளிவு பெற்றுத் தன்னிடமிருந்த பெருஞ் செல்வத்தைச் செலவிட்டு, கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தைப் புனரமைக்க முடிவு செய்தார். சாத்திர விதிப்படி நிலையம் எடுத்து, சிற்பவிதிப்படி சுண்ணாம்புக் கல்லினால் திருக்கோவிலில் திருப்பணிகளைச் செய்தார். சிவாகம விதிப்படி விநாயகர், முருகன் ஆகியோருக்கும் பரிவார ஆலயங் களை அமைத்தார். கொன்றை மரத்தடி வைரவப் பெருமானுக்கு அவரது உத்தரவுப்படியே, கொன்றை மரத்தடியிலேயே கும் பாபிஷேகம் நிகழ்த்தினார். அத்தோடு நித்திய பூசைகள் எவ்வித தடையுமின்றி நடைபெற, நிரந்தரவருமானம் தரத்தக்க வகையிலான ஏற்பாடுகளையும் செய்தார். திரு.நாகலிங்கம் அவர்களுடைய பரிபாலன காலத்திலேயே கொடித்தம்பம், தேர் ஆகியன அமைக்கப்பட்டு, பங்குனி உத்தர நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்டு, ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பிக்கப்பட்டது.

இவரின் பின்னர் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வர்த்தகரும் சமாதானநீதவானுமான திரு. மதியாபரணம், திரு.

திருநாவுக்கரசு, திருமதி. இராஜேஸ்வரி திருநாவுக்கரசு ஆகியோர், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் மேலும் பல திருப்பணிகளை மேற்கொண்டனர். அராலியிலிருந்து ஆட்களை வரவழைத்து, சுண்ணாம்புக் கல்லினால் கட்டப்பட்டிருந்த கோவில் முழுவதையும் உடைத்து, வெள்ளை வைரக்கல்லினால் கோவிலை அமைத்து, மகா கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தனர். இதனைத் தொடர்ந்து வரசித்தி விநாயகரின் ஆலயத்திலே காலத்திற்குக் காலம் பல திருப்பணி வேலைகள் இடம் பெற்றுள்ளது.

கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலே சூரசம்ஹாரத் திருவிழாவும், கந்தசஷ்டிப் பெருவிழாவும் வருடாவருடம் மிகச் சிறப்பாக நடைபெறும். புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் பூசகராக விளங்கிய, இரத்தினஐயர் என்றழைக்கப்பட்ட இரத்தினசபாபதிக் குருக்களின் ஆலோசனைப்படி, கந்தசஷ்டி நாட்களிலே ஆறு அந்தணப் பெருமக்கள் சுற்றிலும் நின்று சண்முகார்ச்சனை செய்வது, வருடந்தோறும் சிறப்பாக நடைபெறும்.

இவ்வாலயத்திலே, சைவத்திருமுறைகளை அருளிய நாயன்மார் நால்வருக்கும் திருக்கோவில் அமைக்கப்பட்டு, தினமும் பூசையும், புராணப் படிப்பும் இடம்பெற்று வந்துள்ளது. இத்திருப்பணியை சரவணமுத்து சுவாமியாரும், அவரது சகோதரியர் குடும்பங்களும் செய்தமை குறிப்பிடத்தக்கது. கோவில் மண்டபத்திலும், நால்வர் மடத்திலும் திருவாதவூரர் புராணம், பெரியபுராணம் ஆகியன படித்துப் பயனுரை சொல்லும் வழக்கும் காணப்பட்டுள்ளது.

புங்குடுதீவின் தலைசிறந்த கல்விமானாக விளங்கிய சின்னத்தம்பி வைத்தியர் என்றழைக்கப்பட்ட, சித்தாந்தச்செம்மல் திரு. கணபதிப்பிள்ளை, திரு. இளையப்பா வாத்தியார், வித்துவான் பொன். கனகசபை, வித்துவான் அம்பலவாணர், வித்துவான் ஆறுமுகம், திரு. சின்னத்துரை வாத்தியார், திரு. நாகலிங்க

வாத்தியார், திரு விசுவலிங்கம் போன்றோருடன், சிவஸ்ரீ கைலாச நாதக் குருக்கள், சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் போன்றோரும் அவ்வப்போது வந்து புராணப் படிப்பிலே கலந்து சிறப்பித்துள்ளனர்.

இவ்வாலயத்திலே 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற மகா யாகம், ஏனைய ஆலயங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கி யுள்ளது. 1958 ஆம் ஆண்டின் பின்னர் ஈழத் தமிழர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமிழருக்கும், தமிழுக்கும் ஏற்பட்ட இன்னல்கள் மறைய, அகில இலங்கைக் குருமார்களின் நல்லாதரவுடன், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய முன்றலின் திருவீதியில் மகா யாகம் ஒன்றை அமைத்து, ஸ்ரீ முருகப்பெருமானுக்கு மிகப் பெரிய யாக குண்டம் அமைத்தனர். ஸ்ரீ முருகப் பெருமானை பிரதான வேதிகையில் அமர்த்தி, 600 க்கும் மேற்பட்ட அகில இலங்கை வாழ் அந்தணப் பெருமக்கள், மற்றும் சிவாச்சாரியார்களும் ஒன்றிணைந்து மகா யாகத்தைச் செய்தனர்.

இந்த மகா யாகத்திலே பிரதிஷ்டாபூஷணம் நயினை சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள், சிவாகமபூஷணம் சித்தங்கேணி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், கிரியா கலாபமணி சுன்னாகம் சோமாஸ்கந்தக் குருக்கள், சிவாகமஞானபானு நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், ஈழத்துச் சிதம்பரம் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள், சுழிபுரம் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள், போன்ற சிவாச்சாரியர்களின் வழிகாட்டலில், கோடி அர்ச்சனை மஹாயாகம் என்பன இரவு பகலாக மூன்று தினங்கள் நடைபெற்றது. மஹா யாகம் நிறைவுபெற்ற மறுதினம் அந்தணப் பெருமக்களும், அடியார் களும் ஒன்றிணைந்து, கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, யாழ்நகரிலுள்ள கச்சேரி காரியாலயம்வரை கால்நடையாக ஊர்வலமாகச் சென்று, தமது கோரிக்கையை முன்வைத்தனர். இவ்வாறான செயற்பாடுகள் பலராலும் போற்றப்பட்டதோடு, ஏனைய ஆலயங்களும் சமயப் பணியோடு சமூகப் பணிகளிலும் ஈடுபாடுகொள்ள வழிகாட்டியுள்ளது.

ஈழத்திற்கு வருகைதரும் அறிஞர்களும், சமயப் பெரியார்களும் கலட்டி வரசித்தி விநாயகப் பெருமான் ஆலயத்திற்கு வருகை தந்துள்ளனர். இவர்களுள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ்மீது தீராத ஆர்வங்கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார், தாம் செல்லும் இடங்களிலெல்லாம் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளார். சொல்லில் மட்டுமன்றிச் செயலிலும் இவற்றைச் செய்துகாட்டிய பெருமை அருட்திரு குன்றக்குடிகளாரையே சாரும்.

புதுமை உணர்வும், தெய்விக நிறைவும் கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்து, தமிழில் மணிவாசகப்பெருமான் அருளிய போற்றித்திருவகவல் அர்ச்சனையைத் தீந்தமிழில் பாட, சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், மற்றும் ஆலய பிரதம குருவாகிய சிவஸ்ரீ சொ. பஞ்சாட்சர ஐயரும் இணைந்து, வரசித்தி விநாயகருக்கு அர்ச்சனை செய்தார்கள். இலங்கையிலே முதன் முதலாகத் தமிழிலே அர்ச்சனை நடைபெற்ற பெருமை, கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திற்கே உரியதாகும்.

1983 ஆம் ஆண்டு கலட்டி வரசித்தி விநாயகப் பெருமானுக்கு சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்பொழுது நடைபெற்ற சம்பவமொன்று விநாயகரின் திருவருளையும் அவர் புரியும் அற்புதங்களையும் நினைவுகூரத்தக்க வகையிலே அமைந்து காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தமிழகத்திலிருந்து கொழும்பு கொம்பனித்தெரு அடியார்களின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தின் முதல் நாளிரவு திருமுருக கிருபானந்தவாரியார் கனவிலே தோன்றிய வரசித்தி விநாயகர், தனது கோவிலைத் தரிசிக்க வருமாறு அழைத்துள்ளார். அவ்வாறே இக்கோவிலுக்கு வருகைதந்து பிரசங்கம் செய்த வாரியார்

250167

சுவாமிகள், தனக்கேற்பட்ட அனுபவத்தை அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு எடுத்துக்கூறி, வரசித்தி விநாயகரின் பெருமையை. மேலும் பலரும் அறியுமாறு செய்த சம்பவமும் நடைபெற்றுள்ளது.

கலட்டி வரசித்திவிநாயகர் ஆலயத்தின் நித்திய பூசைகளை புங்குடுதீவு ஸ்ரீ பஞ்சனத ஐயர் அவர்களும், அவர்களுடைய பரம்பரையினருமே நடத்தி வந்துள்ளனர். இவர் மீது இவ்வூர் மக்கள் அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். இவரது கட்டளைப்படியே இவ்வாலயத்தின் உபயங்களையும், திருவிழாக்களையும் இவ்வூர் மக்கள் மகிழ்ச்சியாக ஏற்று நடத்துவது வழக்கம். ஆரம்பகாலத்தில் ஸ்ரீ பஞ்சனத ஐயா குடும்பத்தில் உற்சவாச்சாரியார் இல்லாத காரணத்தினால், இவ்வாலயத்திலே நிகழும் மகோற்சவத்தையும், மற்றும் கும்பாபிஷேகத்தையும் நடத்துவதற்கு, சித்தங்கேணியைச் சேர்ந்த சிவஸ்ரீ வை. மு. குமாரசாமிக்குருக்களை ஏற்பாடு செய்துள்ளனர். இவரின் பின்னர், இவரது சகோதரராகிய கோப்பாய் வை. மு. பரமசாமிக் குருக்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

11744

ஸ்ரீ பஞ்சனத ஐயர் குடும்பத்தில் அக்காலத்தில் உற்சவாச் சார்யார் எவரும் காணப்படாத குறையை நீக்க, 1960 ஆம் ஆண்டு, அமரர் சரவணமுத்து சுவாமியாரின் முயற்சியினால், பஞ்சனத ஐயரின் மகன்களுள் ஒருவராகிய சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்கள் திருக்கேதீஸ்வரம் குருகுலத்திலே சேர்க்கப்பட்டார். இவர் குருகுலத்தில் கற்று முதல் மாணாக்கராகக் கற்றுத் தேறி, திருக்கேதீஸ்வரம் தேவஸ்தான பிரதம குருவாகவும், உற்சவ ஆச்சார்யராகவும் விளங்கினார்.

ஸ்ரீ பஞ்சனத ஐயர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு, தமது புத்திரராகிய சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்களை அழைத்து, ஆசி வழங்கி, கலட்டி வரசித்தி விநாயருக்குக் கொடியேற்றச் செய்தார். பஞ்சனத ஐயருடைய மூத்த மகனாகிய சிவஸ்ரீ கணேச ராஜக்குருக்கள் பல வருடங்கள் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும்

KOHA
L
யாழ்ப்பாண பொதுசன நூலகம்
பொது நூலகம்
யாழ்ப்பாணம்

வாழ்ந்து பல கும்பாபிஷேகங்களை சிறப்பாக நிகழ்த்தியுள்ளார். மலேசியாவிலே முதன் முதலாக மூவார் ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் 17 ஓமகுண்டங்களுடன் கூடிய மஹாகும்பாபிஷேகம் மற்றும் உற்சவங்களையும் தலைமையேற்று நடத்தியுள்ளார். சில காலத்தின் பின் நாடு திரும்பிய சிவஸ்ரீ கணேசராஜக் குருக்களைக் கொண்டு, ஸ்ரீ பஞ்சனத ஐயர் அவர்கள், 1991 ஆம் ஆண்டு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் கொடியேற்று மகோற்சவத்தை நடத்தி முடித்தார்.

இவ்வாறாக 1991 ஆம் ஆண்டு வரை கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் தீவகத்தில் மட்டுமன்றி, ஈழத்திலேயே அருளும் புகழும் பெற்ற ஆலயமாக விளங்கியதோடு, சமயப்பணி, சமூகப்பணி ஆகியவற்றிலும் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. ஈழத்திலே காணப்படும் இனஅழிப்புப் போரின் காரணமாக, ஈழத்தமிழர்கள் இந்தியா மற்றும் மேலைத்தேசங்களுக்குப் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்காரணத்தினால் ஈழத்தமிழர்களால் போற்றி வழிபாடு செய்யப்பட்ட ஆலயங்கள் குண்டுவீச்சுக்களினால் பாதிக்கப்பட்டதோடு, நித்திய, நைமித்திய வழிபாடுகள் செய்ய முடியாத நிலையில் பராமரிப்பின்றி, தமது தனித்தன்மை குன்றி, அழிந்துபோகும் நிலை ஏற்பட்டது. 1991 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலே பூசை வழிபாடுகள் நடைபெறாது காணப்பட்டுள்ளது. ஆயினும் ஈழத்திலே சிறிதுகாலம் காணப்பட்ட அமைதிநிலையைத் தொடர்ந்து, இவ்வாறான ஆலயங்களை மக்கள் மீண்டும் புனருத்தாரணம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின்மீது கொண்ட ஆராத பற்றின் காரணமாக, ஸ்ரீ பஞ்சனத ஐயா அவர்களுடைய மகன்களுள் ஒருவராகிய, சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி ஐயா), வரசித்தி விநாயகர் ஆலயமொன்றை ரொறன்ரோவில் அமைத்து, அதன் பிரதம குருவாக விளங்குவதோடு அமையாது காலத்தின் தேவையறிந்து ஆலயப்பணியோடு, தமிழ்,

சங்கீதம் மற்றும் சமய வளர்ச்சிக்கான இந்துக்கல்லூரி ஒன்றினையும் நிறுவி, சமய, சமூகப் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றார்.

கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பரம்பரை பூசகர்களாக விளங்கிய ஸ்ரீ பஞ்சனத ஐயரின் வாரிசுகளில் ஒருவராகிய, ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகரும், பிரதம குருவுமாகிய ஐயாமணி சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், இவ்வாலயத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று ஆர்வங் கொண்டு, உரியவர்களோடு தொடர்புகொண்டு ஆலயப் புனரமைப்பு முயற்சிகளைச் செய்தார். இதன் பலனாக, இதுவரை காலமும் ஆலயத்தை நிர்வகித்து வந்த அமரர் பொறளை நாகலிங்கம் மற்றும் அவரது சந்ததியினரின் வேண்டுகோளின்படி, தற்பொழுது கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் சகல குருத்துவ உரிமைகளையும், ஆலயத்தை நிர்வகிக்கும் முழுப்பொறுப்பினையும், சட்டப்படி ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகரும், பிரதம குருவுமாகிய ஐயாமணி சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இதன்பின்னர் கலட்டி வரசித்திவிநாயகர் ஆலய திருப்பணி வேலைகள், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி) தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. 24-03-2003 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, ஆலய திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. இதன் பின்னர் இவ்வாலயத்தின் திருப்பணிகள் தொடர்பாகக் கலந்துரையாட, கலட்டிப் பிள்ளையார் ஆலய அடியார்கள், ஆலய திருவிழா உபயகாரர்கள், அன்பர்கள், மற்றும் ஆலய நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்ட கூட்டமொன்று 21-09-2003 இல் சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஏற்பாட்டில், ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்திலே நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய திருப்பணிவேலைகள் ஆரம்பமாகி,

சுற்றுக்கொட்டகை, தரைவேலைகள், மூலஸ்தான விமானவேலைகள், விக்கிரக வர்ண வேலைகள், புதிதாக உத்திர மட்டத்திற்கு ஒரு வாசற் கோபுரமும், கோபுரத்தின் வெளியில் அழகிய மண்டபமும், சுற்றுப்புற வீதி திருத்த வேலைகளும் நிறைவு செய்யப்பட்டது. அனைவருடைய ஏகமனதான ஒத்துழைப்போடு ஆலய திருப்பணிகள் நிறைவுபெற்று, 03-09-2004 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை, புங்குடுதீவு கிழக்கு கலட்டியம்பதி ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகள்ளான ஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ சுப்ரமணியப்பெருமான், ஸ்ரீ சண்முகநாதப் பெருமான், ஸ்ரீ வைரவப்பெருமான், ஸ்ரீ சண்டேசுவரப் பெருமான் ஆகியோருக்கும் நவகுண்டபட்ஷ சம்புரோட்ஷண மகாகும்பாபிஷேகப் பெருவிழா, மிகச் சிறப்பாக நடந்தேறியது. அத்தோடு, புதிய மணிக்கூட்டுக் கோபுரம், வசந்த மண்டபம் ஆகியனவும் அழகாகச் செய்து முடிக்கப்பட்டது.

இக் கும்பாபிஷேகப் பெருவிழாவின் பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியாராக, திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தின் பிரதம குருவும், ஸ்ரீ பஞ்சனத ஐயர் அவர்களுடைய புத்திரர்களுள் ஒருவருமாகிய, சிவபூஜா துரந்தரர், சிவாகமபூஷணம், பிரதிஷ்டாதிலகம், சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்ரமணியக் குருக்கள் இருந்துள்ளார்கள். ஸ்ரீ பஞ்சனத ஐயர் அவர்களுடைய வாரிசுகளான ரொறன்ரோ ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தான பிரதம குருவும், ஆலய ஸ்தாபகருமாகிய சிவாகமபூஷணம், சிவாச்சார்யதிலகம், சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக்குருக்கள், மற்றும் கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருவும், உற்சவகுருவும், ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குருவும், ஸ்தாபகருமான சிவாச்சார்ய குலபூஷணம், சிவாகம வித்யாபூஷணம், கலாநிதி சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் ஆகியோரும் இணைந்து இக் கும்பாபிஷேகப் பெருவிழாவை சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர்.

இவர்களோடு இப்பெருவிழாவில் சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானம் கிரியாகலாபமணி, சித்தாந்த கலாநிதி, சிவாகம

வித்வான் சிவஸ்ரீ Dr. நா. சோமாஸ்கந்தக் குருக்கள், சுன்னாகம் கதிரமலை தேவஸ்தானம், முத்தமிழ்க் குருமணி, சகலாகம சங்கிரகர், சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், மற்றும் சுன்னாகம், வேதாகம சங்கீத ஸ்தோத்திர பாராயணம், கானவாரிதி, இசைக்கலாபமணி சிவஸ்ரீ சோ. உமாரமணக் குருக்கள், சித்தன்கேணி கிரியா கலாபமணி சிவஸ்ரீ ச. லம்போதரக் குமாரசாமிக்குருக்கள் ஆகியோர் சர்வபோதகர்களாகச் சிறப்பித்தனர். நயினை நாகபூஷணி தேவஸ்தானத்தைச் சேர்ந்த தருமை ஆதீன ஆகமப் பிரவீணா, பிரதிஷ்டா திலகம், சிவாகம சாம்ராட், கலாநிதி. சிவஸ்ரீ ஐ. கைலாசநாத வாமதேவக் குருக்கள் சர்வ சாதகராகப் பணியாற்றியுள்ளார்.

சாதகாச்சாரியார்களாக, சுன்னாகம் கிரியா கலாபமணி. சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக் குருக்கள், நயினை சாதகாச்சார்ய திலகம் சிவஸ்ரீ பால கணேஷ்வரசர்மா, சிலாபம் அலங்காரபூஷணம் சர்வஸ்ரீ தியாக கருணானந்த சர்மா, கல்வயல் சாதகார்ச்சார்யமணி சிவஸ்ரீ ப. சனாதனசர்மா ஆகியோர் பங்கு கொண்டு சிறப்பித்தனர். அத்தோடு கனடா, மற்றும் ஈழத்தின் பல பகுதிகளிலுமிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் வருகை தந்து கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்தனர். வேறுநாடுகளிலே புலம்பெயர்ந்து வாழும் இவ்வூர் மக்கள் ஊர்ப்பற்றோடும், சென்றவிடமெல்லாம் சீரோடும், சிறப்போடும், பேரோடும் வாழ அருள் செய்த வரசித்தி விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல வருட இடைவெளிக்குப் பின்னர் இடம்பெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, பங்குனி பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 16-03-2005 இல் கொடியேற்றப் பெருவிழா, ஐயாமணி சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கொடியேற்ற விழாவிலே தமிழகத்திலிருந்து பிள்ளையார்பட்டி பிச்சைக்குருக்கள்,

மற்றும் சிவஸ்ரீ Dr. நா. சோமாஸ்கந்தக் குருக்கள், ஈழத்தின் பிரபலமான எல்லா ஈஸ்வரங்களிலிருந்தும் சிவாச்சாரியார்களும் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

இனக்கலவரங்களினாலும், இராணுவக் கெடுபிடிகளாலும், ஆலயங்கள் மட்டுமன்றி, தமிழீழத்திலே வாழுகின்ற இளைய தலைமுறையினரும் பல்வேறு இன்னல்களினால் மனோரீதியான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையைப் போக்க சமயப் பயிற்சிகளும், இறைதொண்டும் பெரிதும் உதவும் கருவிகளாகக் காணப்படுகின்றன. இதனை நிறைவேற்றும் வகையில், கலட்டி வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருவும், ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகரும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருகள், இங்கு தொண்டாற்றிவரும் சர்வோதய தொண்டர்களின் உதவியோடு, இளைஞர்களுக்குச் சமயப் பயிற்சிகள் கொடுக்கவும், ஆலயத் தொண்டுகளை முன்வந்து ஆற்றுவதற்கும் ஒழுங்குகளைச் செய்துள்ளார். ஆலயங்கள் சமயப் பணியோடு அமையாது காலத்திற்கேற்ப சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு, இங்குள்ள பாடசாலைகளுக்கு வேண்டிய உதவிகளையும் வகுத்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

புதுப்பொலிவுடன் திகழும் கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்திலே, ஆரம்பகால பூசகராக விளங்கிய ஸ்ரீ பஞ்சனந்த ஐயர் அவர்கள் காட்டிய வழியில், நித்திய, நைமித்திய பூசைகளும் மற்றும் சிறப்புப் பூசைகளும் நடைபெறுகின்றது. அத்தோடு வெள்ளிக்கிழமைகளில் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறுவதோடு, சிறப்புப்பூசைகளும் இடம்பெறும்.

இவ்வூர் மக்கள் ஈழத்திலே காணப்படுகின்ற நாட்டு நிலைமை காரணமாக மேலைத் தேசங்களில் புலம்பெயர்ந்து வாழுகின்றனர். எனினும் தாம் வணங்கிய கலட்டி வரசித்தி விநாயகப் பெருமானை

சென்ற இடங்களிலும் போற்றி வணங்க மறக்கவில்லை. கனடா, சுவிஸ், ஜெர்மனி போன்ற நாடுகளிலும் வரசித்தி விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

வரங்களையும், சித்தியையும் அருளும் விநாயகரின் வரலாறு, விநாயக வழிபாடு, அவ்வழிபாட்டின் பொருள், விநாயக வழிபாட்டிற்குரிய துதிகள் என்பன பற்றிய தெளிந்த விளக்கத்தைத் தரும் நூல்கள் பலவாகக் காணப்படுகின்றன. தமிழிலே திருவாவடுதுறை கச்சியப்ப முனிவர் இயற்றிய பார்க்கவ புராணம் என்னும் விநாயக புராணம், விநாயக வரலாற்றுக் களஞ்சியமாகவும், இலக்கிய விளக்கக் கருவூலமாகவும் விளங்குகின்றது. ஔவையாரின் விநாயகர் அகவல் சிறந்த பாராயண நூலாகக் கருதப்படுகின்றது. நம்பியாண்டார் நம்பி பாடிய திருநாரையூர் திருவிரட்டை மணிமாலை, கபிலதேவ நாயனாரின் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை என்பன பதினோராந் திருமுறையில் இடம்பெறும் சிறப்பு மிக்க துதிகளாக விளங்குகின்றன.

முற்கால, இடைக்கால, பிற்காலப் புலவர்களைப் போலவே இக்காலப் புலவர்களும் பல தனிப்பாடல்களையும், சிற்றிலக்கியங்களையும், துதிமாலைகளையும் இயற்றியுள்ளனர். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, பாரதியார், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் போன்ற கவிஞர்கள் பாடல்களில், கணபதி துதியாக அற்புதமான கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

நம்பிக்கையோடு வழிபடுவோரை தும்பிக்கையான் கைவிடமாட்டார் என்பதற்கிணங்க வரசித்தி விநாயகர் பதம் பணிந்து வேண்டும் வரங்களைப் பெற முடியும்.



# பெரியபுலம் சங்கரநாதர் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம்

## அனலைதீவு யாழ்ப்பாணம்

ஊருக்குப் பொதுவான கோயில், வீதிக்குப் பொதுவான கோயில், வீட்டிலே பூசை அறை என்று ஏற்படுத்தி பல மூர்த்திகளையும் தொன்று தொட்டு வணங்கி வருவது சைவர்களுடைய பண்பாடாகக் காணப்படுகின்றது. நாம் வாழ்கின்ற வீடும், நாம் எடுத்துள்ள உடம்பும் மனிதனுக்குப் பயன்படுவன. அவ்வாறே, நாம் வழிபடும் ஆலயங்களும், விக்கிரகங்களும் இறைவனுக்காக அமைக் கப்படவில்லை. இறைவனை வழிபட்டுப் பயனடைய விரும்பும் பக்தர்களுக்காகவே ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எந்தப் பொருளையாவது மனதில் எண்ணவேண்டுமானால் அந்தப்பொருளுக்கு ஒரு பெயரும், உருவமும் இருக்க வேண்டும். நாமரூப நாட்டம் உடையது மனம். நாமரூபம் இல்லாவிட்டால் ஒரு பொருளில் மனம், ஈடுபாடு கொள்வது கடினம். இறைவன் உலகிலுள்ள உயிர்களைக் காப்பாற்றியருள உருவ வடிவிலே தோற்றம் பெறுகின்றான். அவ்வாறு இறைவன் எடுத்த பல்வேறு தோற்றங்களுள், கணபதி வடிவமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒன்றாகிப், பலவாகிக் காணப்படும் இறைவன் ஒருவனே என்பது பேருண்மை.

ஆதிசங்கரர் நிறுவனப்படுத்திய சண்மதங்களுள் காணபத்தமும் ஒன்று. கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டதாக இம்மதம் காணப்பட்டது. இதனைக் காணபத்தியம், வைநாயகம் என்றும் அழைக்கும் மரபு காணப்பட்டது. தனிம்தமாக விளங்கிய காணபத்தம், பிற்காலத்திலே தனது தனித்தன்மையை இழந்து சைவ சமயத்தோடு இணைந்து காணப்படுகின்றது. முதல் வணக்கத்தைக் கணபதிக்குத் தெரிவித்தே, தமது காரியங்களைத் தொடங்குவது இந்துக்களுடைய பாரம்பரியமாகக் காணப்படுகின்றது.

ஈழநாட்டிலே பெரியதும், சிறியதுமான விநாயகர் கோவில்கள் பல காணப்படுகின்றன. ஈழத்தின் சப்த தீவுகளுள் ஒன்றாக விளங்குவது அனலைதீவு. இத்தீவு யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கில் அமைந்துள்ள தீவுகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது.

கற்பகவிருட்சங்கள் நிறைந்து, சைவமும், தமிழும் தழைத்தோங்கும் இத்தீவில், பெரியபுலம் சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. கணபதிக்குரிய பல்வேறு நாமங்களுள் பிள்ளையார் என்னும் திருநாமமும் ஒன்றாகும். இவ்வாலயத்திலுள்ள கணபதியை அவருக்குரிய இரண்டு நாமங்களையும் ஒன்று சேர்த்து கணபதிப்பிள்ளையார் என அழைக்கும் வழக்குக் காணப்படுகின்றது.

கணபதி என்னும் சொல் சமய தத்துவ உண்மைகள் அடங்கிய பொருட் சிறப்புடையது. க என்பது அறிவு. ண என்பது வீடு. எனவே கணபதி அறிவிற்கும், வீட்டிற்கும் தலைவ ரான தெய்வம் எனக் கொள்ளலாம். இதனையே மற்றொரு முறையிலும் கற்றறிந்தோர் விளக்கியுள்ளனர். க என்பது (அறிவுலகில்) செல்லுதலையும், ண என்பது (இவ்வறிவின்) முடிவெல்லையையும் குறிக்கும். எனவே கணபதி உயிரின் ஈடேற்றத்திற்கு வழியும், முடிபுமாய்த் திகழும் தலைமைப் பண்புள்ள தெய்வம் என்பது இவர்களது விளக்கமாகக் காணப் படுகின்றது.

கணம் என்பது கூட்டம் என்னும் பொதுப்பொருளுள்ள சொல். அது வல்வினைக் கூட்டத்தைச் சிறப்பு நிலையில் உணர்த்தும். எனவே கணபதி என்னும் தொகைச் சொல் அடியார் வல்வினைக் கூட்டத்தை ஒழிக்கும் தெய்வம். கணங்கொண்ட வல்வினைகளை நீக்கும் தெய்வம் எனக் கூறலாம். கணபதியின் தோற்றத்தின் அடிப்படையில் ஆன்றோர் கூறிய மற்றொரு விளக்கமும் அவதானிக்கத்தக்கது.

ஏனைய தெய்வங்களிலிருந்து கணபதியை வேறு படுத்துவது அவருடைய யானைமுகம். இது ஓம் என்னும் பிரணவ வடிவிலுள்ளது. எனவே கணபதி ஓங்காரப்பொருளின் சின்னம் என்பது சமயத்துறை வல்லாளர்களின் பரந்துபட்ட கருத்தாகும்.

கணபதிக்குப் பல பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிள்ளையார் என்பது சாதாரண வழக்கிலுள்ள பொதுப்பெயராகக் காணப்படுகின்றது. குறிப்பாகத் தமிழர்கள், இவரைச் சிவபிரானின் மூத்த பிள்ளையாகக் கருதிப் பிள்ளையார் என்று அழைப்பர். மூத்த பிள்ளையார், மூத்த நாயனார் என்னும் பெயர்கள் இவரைக் குறிக்க இலக்கிய வழக்கிலே காணப்படுகின்றன. விநாயகரைப் பிரமச்சாரியாகவே ஈழத்திலே வழிபடுவர்.

இவ்வாறான பொருள்கள் பலவற்றைக்கொண்ட மகா கணபதிப்பிள்ளையார் வழிபாடு, அனலைதீவிலே சிறப்பாகக் காணப்படுகின்றது. தென்னிந்திய ஆலயங்களுடன் யாழ்ப்பாண மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட தொடர்பைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தொடர்பின் பயனாக ஈழத்திலே பல ஆலயங்கள் எழுப்பப்பட்டமையும், அந்தணர்கள் வருகையும் அவர்கள் சந்ததியர் தற்காலத்திலும் ஈழத்து ஆலயங்களிலே பணியாற்றுவதும், இத்தொடர்புகளை உறுதி செய்கின்றது. இவ்வாறான ஆன்மீகத் தொடர்புகள் அன்றிலிருந்து இன்றுவரை நீடித்துக் காணப்படுகின்றது.

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி ஆலயம், சிதம்பரம், திருச்செந்தூர் ஆலயங்களுக்கு அனலைதீவிலே தருமசாசனம் செய்யப்பட்ட காணிகள் இருந்துள்ளன. இராமேஸ்வரம் இராமநாதர் சுவாமி ஆலயத்திற்கு பால், தயிர், இளநீர், பூசைத்திரவியங்கள் போன்றவற்றை நெடுந்தீவு மூலமாகக் கொண்டுசெல்லும் வழக்கம் பழங்காலத்திலே காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சென்ற மக்கள் மூலமாகச் சப்ததீவுகளின் சிறப்பையும், வளங்களையும் அறிந்து கொண்ட தாமோதர ஐயர் என்னும் அந்தணர், அவ்வடியார்களுடன் படகில் ஏறி நெடுந்தீவு வந்து, பின்னர் அனலைதீவுக்கும் வந்துள்ளார். சிலகாலத்தின்பின் திரும்பவும் தமது ஊரான இராமேஸ்வரத்திற்குத் திரும்பிச் சென்றுள்ளார். அக்கால குலவழக்கப்படி கடல்கடந்து செல்லும் அந்தணர்களை தேசப்பிரதிஷ்டம் செய்து, ஆலயப்பணிகளைச் செய்யவிடாது முற்றாக ஒதுக்கி வைக்கும் வழக்கம் காணப் பட்டுள்ளது. கடல்கடந்து திரும்பிய தாமோதர ஐயருக்கும் அவரது ஊர் மக்களால் தேசப்பிரதிஷ்டம் விதிக்கப்பட்டது. இந்நிலையில் தான் சென்றுவந்த தீவுகளின்பால் ஈர்க்கப்பட்டு, பிள்ளையார் விக்கிரகமொன்றுடன் இராமேஸ்வரத்திலிருந்து தாமோதர ஐயர் புறப்பட்டார். கடல்மார்க்கமாக அனலைதீவை அடைந்து, தாம்

கொண்டுவந்த பிள்ளையார் விக்கிரகத்தைச் சங்கரயன்புலம் என்னும் காணியில் சிறுகொட்டில் அமைத்து, பிள்ளையார் விக்கிரகத்தை வைத்து வணங்கி வழிபாடு செய்து தமது வாழ்நாள் முழுவதும் பிள்ளையார் பணி செய்து வாழ்ந்துவந்துள்ளார். சங்கரயன்புலம் என்ற காணியில் ஆரம்பத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டமையால், சங்கரநாதர் என்னும் அடைமொழியோடு இப்பிள்ளையார் அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு ஆரம்பமாகிய இக்கோவில் பின்னர் கல்லிலாலான கட்டிடம், திருக்கேணி என அமைக்கப்பட்டுக் காணப்பட்டது. ஸ்ரீ தாமோதர ஐயரும் அவரது பரம்பரையினரும் இக்கோயிலில் பூசைகளைச் செய்து வரலாயினர். அனலைதீவு மக்கள் வேண்டும் வரங்களை எல்லாம் அளிப்பவராக சங்கரநாதர் மகாகணபதிப் பிள்ளையார் விளங்கிவருகின்றார். அனலைதீவு மக்களில் பெரும் பாலானோர் விவசாயிகளாகக் காணப்படுகின்றனர்.

பிள்ளையார்மீது ஆராஅன்புகொண்ட இம்மக்கள், விவசாய காலங்களில் தமது விளைவின் ஒருபகுதியைப் பிள்ளையாருக்கு வழங்கும் வழக்கம், பண்டு தொட்டு இன்றுவரை காணப்படுகின்றது. அத்தோடு வசதி படைத்தோர் தமது நெற்காணிகளையும், தோட்டக்காணிகளையும் ஆலயத்திற்குத் தருமசாசனம் செய்துள்ளார்கள். இக்காரணத்தினால் ஆலயத்தின் ஆதனங்கள் அதிகரித்துக் காணப்பட்டது. இதன்பயனாக நூற்றாண்டுகளுக்கு முன், அருகாமையிலிருந்த பெரியபுலம் என்னும் இடத்தில் புதிய சுண்ணாம்புக்கல் ஆலயம் அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் வளர்ச்சியில் மிக ஈடுபாடு கொண்டு உழைத் தவர்களாக சின்னப்பவாத்தியார் அவர்களும், வேலுப்பிள்ளை உடையார் அவர்களும் விளங்கியுள்ளார்கள். இவர்கள் இருவரும் இக்கோயில் நிர்வாகத்திலே பங்குகொண்டு ஆலய வளர்ச்சியில் உதவியுள்ளனர். ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்னர்,

கீரிமலை, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல், வெள்ளைக்கல் என்பவற்றைக்கொண்டு இக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே கோயி லில் வருடாந்த மகோற்சம் ஆரம்பமாகியது.

இவ்வூரின் பெரியார்கள் பலரும் இக்கோயில் நிர்வாகத்திலே பங்கு கொண்டு பெரிதும் உதவியுள்ளனர். இவர்களுள் இவ்வாலயத்தின் முகாமையாளரராகப் பணியாற்றிய திரு. நா. ப. இராசையா என்ற பெரியார் குறிப்பிடத்தக்கவர். இவரது காலத்திலே ஆலயத்தின் சுற்றுக் கொட்டகைகள், சுற்றுமதில்கள், வசந்தமண்டபம், யாகசாலை, வாகனசாலை, தங்குமிடம், சுவாமி திருவுலா வரும் வாகனங்கள், ஆலயத்திற்கென நிரந்தர மின்வசதி ஆகிய திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன.

காலத்திற்குக் காலம் புனர்நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளது. ஈழத்தில் பஞ்சமுக விநாயகரைக்கொண்ட ஆலயங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. பெரியபுலம் சங்கரர் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள பஞ்சமுக விநாயகர் மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங்குகின்றார்.

பஞ்சமுகம் தத்துவ விளக்கம் கொண்டதாகக் காணப்படு கின்றது. படைத்தல் தொழிலைச் செய்பவராகப் பிரமா கருதப்படு கின்றார். பஞ்சமுக விநாயகரின் ஒருமுகம் படைக்கும் ஆற்றல் பெற்ற முகமாகக் கருதப்பட்டு, பிரமமுகம் என அழைக்கப் படுகின்றது. காத்தல் தொழிலைச் செய்பவர் விஷ்ணு. எனவே அடுத்தமுகம் விஷ்ணுமுகம் என அழைக்கப்படுகின்றது. அழித்தல் தொழிலைச் செய்பவர் சிவன். பஞ்சமுகவிநாயகரின் மற்றுமொருமுகம் சிவமுகம் என அழைக்கப்படுகின்றது. அன்பும், கருணையும் சக்திக்குரியது. எனவே மற்றுமொருமுகம் சக்தி முகம் என அழைக்கப்படும். கணங்களுக்குத் தலைவரான ஒரு முகம் கணபதிமுகம் என அழைக்கப்படுகின்றது.

பஞ்சமுக விநாயகரின் தோற்றத்தை எண்ணும்போது, உலக இயக்கங்களைத் தன்னுள் அடக்கியவராகவும், கருணைகூர்ந்து உயிர்களைக் காப்பவராகவும் காணப்படுவது புலனாகின்றது. மேலும் கணபதிக்குத் தரும் நைவேத்தியங்கள், கணங்களாக மாறிய மூதாதையர்களைச் சேரும் என்பது ஐதீகம். ஸதா பாலரூபாயி என ஆதிசங்கரர் பஞ்சமுக விநாயகரைத் தனது சுப்ரமண்ய புஜங்க தோத்திரத்திலே குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பெருமைவாய்ந்த பஞ்சமுக விநாயகர் வணக்கமுறையும், அனலைதீவு பெரியபுலம் சங்கரநாதர் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்திலே காணப்படுகின்றது. 1960ஆம் ஆண்டு முதல் இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம், ஆனி உத்தரத் திருநாளைத் தீர்த்தமாகக் கொண்டு நடைபெற்று வந்தது. பிற்காலத்தில் சித்திர வருடப்பிறப்பு நாளில் தேர்த்திருவிழா நடைபெறத்தக்க முறையில், வருடாந்த உற்சவம் மாற்றி அமைக் கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் விநாயகருக்குரிய விரதங்களும் விழாக் களும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாதச்சதுர்த்தி, வருடப்பிறப்பு, தைப்பிறப்பு, விநாயகஷஷ்டி முடிவில் பொங்கல் உற்சவம், திருக்கார்த்திகை, திருவெம்பாவை, சிவராத்திரி, நவராத் திரி ஆகியன சிறப்பாக நிகழ்ந்து வருகின்றன. ஆவணிச்சதுர்த்தி விழா அலங்கார விழாவாக நடைபெறும். பெருங்கதை எனப்படும் விநாயகர் புராண வாசிப்பும், திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரடிகள் புராணம் ஓதும் வழமையும், நீண்டநாட்களாக இவ்வாலயத்திலே நிகழ்ந்து வருகின்றது.

ஈழத்திலேயே புகழ்பெற்ற அரிகரபுத்திர ஐயனார் ஆலயம் அனலைதீவிலே அமைந்து காணப்படுகின்றது. பல்வேறு பெருமை களையும், அற்புதங்கள் பல பொழியும் ஆற்றலும் கொண்ட ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவத்தோடு, அனலைதீவு மகாகணபதிப்

பிள்ளையார் ஆலயம் தொடர்புப்பட்டுக் காணப்படுகின்றது. பெரிய புலம் சங்கரநாதர் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வந்து அனுக்ஞை முதலிய ஆரம்பக்கிரியா வழிபாடுகள் செய்யப்பட்ட பின்னரே, ஐயனார் கோவிலுக்குரிய மகா கும்பாபிஷேகம் மற்றும் மகோற்சவக் கிரியைகள் ஆரம்பமாகின்ற மரபு காணப்படுகின்றது.

ஐயனார் திருக்கல்யாண உற்சவத்தின்போதும் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயமே மாப்பிள்ளை வீடாகக் கருதப்பட்டு, ஐயனார் இக்கோவிலுக்கு எழுந்தருளி, அபிஷேகங்கள் நடைபெற்று அலங்கரிக்கப்பட்டு, மேள தாளங்களோடு திருக்கல்யாணக் கிரியைகள் நடைபெறும். சகோதரர்களுள் மூத்தவர்களை இளையவர்கள் மதிக்கவேண்டும் என்ற பண்பாடு தற்காலத்தில் அருகிக் காணப்பட்டபோதிலும், அக்கால சமயப்பெரியார்களும், அருளாளர்களும் மூத்தவரான விநாயகப்பெருமானின் அருளாசியை, இளையவரான ஐயனார் பெறுவதான ஒரு சம்பிரதாயத்தை இறைத்தத்துவத்தின்மூலம், ஏற்படுத்தி வழிகாட்டியுள்ளனர்.

அனலைதீவு நாற்புறமும் கடல் சூழ்ந்த சிறிய தீவு. படகுகளின் மூலமே யாழ்ப்பாணத்துடனான தொடர்பு ஏற்படுத் தப்பட்டுள்ளது. ஊரின் மத்தியில் அமைந்துள்ள மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் விமானத்தைப் படகில் வரும்போது தூரத்திலிருந்தே தரிசிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

ஈழத்திலே நிலவும் அரசியல் சூழ்நிலைகளால் இக்கிராம மக்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் வாழ்ந்தபோதிலும், தாம் வணங்கி வழிபட்ட ஆலயங்களை இன்றும் போற்றி வருகின்றனர். நன்கொடைகள், நிலங்கள் போன்றவற்றை இவ்வாலயத்திற்குத் தருமசாசனம் செய்வதோடு கும்பாபிஷேகம், மகோற்சவம் நடைபெறும் காலங்களில் வருகை தந்து சிறப்பாக நடைபெற உதவி வருகின்றனர்.

கணபதியை நிலவளம், விளைச்சல் பெருக்கம், வாழ்க்கை நலம், அறிவுப்பேறு ஆகியவற்றை நாட்டுக்கும், மக்களுக்கும் அருளும் தெய்வமாக இந்துக்கள் கருதுகின்றனர். இக்கணபதி வடிவங்களிலே உச்சிட்ட கணபதி, மகாகணபதி போன்ற சில வடிவங்களே அதிகம் வழிபடும் சிறப்புமிக்கனவாகக் காணப் படுகின்றன.

கணபதிக்குச் செய்யும் பூசைகளில் பொருளாழமும் சிறப்பும் மிக்கது ஏகவிஞ்சதி பத்திரபூசை. ஆவணி மாதத்திலே தாராள மாகக் கிடைக்கும் இலை, தளிர், பூக்களைத் தூவி வழிபடுதல் இப்பூசையின் சிறப்பாகும். மருத்துவப் பயனுள்ள இருபத்தியொரு மரம், செடி, கொடிகளின் இலை, தளிர், பூக்கள் இவ்வழிபாட்டிலே பயன்படுத்தப்படும். சுற்றாடலின் தூய்மை, உடற்தூய்மை, நச்சுக்கடி, இதயநோய் முதலிய நோய்கள் இதன் மூலம் நீங்கும்.

அவ்வாறே நினைவாற்றல், குரலினிமை ஆகியவற்றையும் இம்மூலிகைகள் மற்றும் மரஞ்செடி, கொடிகள் மூலம் பெறத் தக்கவகையில் ஏகவிஞ்சதி பத்திரபூசை வழிபாடு அமைந்துள்ளது. உடலும், உள்ளமும் ஒருங்கே நலம்பெறும் வகையில் அமைந்துள்ள கணபதி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாக எங்கும் காணப்படுகின்றது.



# மாணிக்கப் பிள்ளையார் கோவில்

## அட்டன், மலையகம்

ஈழத்திருநாட்டின் இதயம் போன்று மலையகம் காணப்படுகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக இப்பகுதி விளங்குகின்றது. மலைகளும் குன்றுகளும் உயர்ந்தோங்கி நிற்க, அவற்றிடையே சலசலத்து ஓடும் ஆறுகளும் அருவிகளும் எழில் பெருக்க, பச்சைப்பசேலென்ற இயற்கை எழிலோடு, கண்கவர் பூமியாக விளங்குவது மலையகப் பிரதேசமெனில் அது மிகையாகாது.

பச்சைமலைக்குன்றின்மேல் பரிவார மூர்த்திகள் சகிதமாக எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையார் கோயில், அருளும் அற்புதமும் ஒருங்கே அமைந்த கோயிலாகக் காணப்படுகின்றது. இந்தியாவில், தமிழகத்திலுள்ள திருச்சி உச்சிப்பிள்ளையார் மலைமீது எழுந்தருளியதைப்போன்று, அட்டன் மாணிக்கப் பிள்ளையார் கோயிலும் அமைந்து காணப்படுகின்றது. சமதரையிலிருந்து நூற்றியெட்டுப்

படிகளேறி உச்சியை அடைந்து, ஆலயத்தைத் தரிசிக்கும் முறையில் இக்கோயில், உயர்வான பிரதேசத்திலே அமைந்து காணப்படுகின்றது.

இந்துசமயத்திலே யாவற்றிற்கும் மேலான பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறுவகைப்படும். இவை அறுவகைச் சமயங்களெனப் போற்றப்படுகின்றது. இறைவனை எந்த வடிவிலே நாம் வழிபடுகின்றோமோ அந்த வடிவிலே இறைவன் அருள்புரிவர். ஆறுவகைச் சமயங்களிலே கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். இவர்களைக் காணாபதர் என்றழைப்பர். ஈழத்திலே ஏனைய இந்துமத வழிபாடுகள் பெற்ற பிரபல்யத்தை விநாயக வணக்கம் பெறவில்லை. எனினும் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்கு முன், கணபதியை வணங்கியே ஆரம்பிப்பது இந்துமரபாகக் காணப்படுகின்றது.

கோபுரம், விமானம் என எதுவுமே இல்லாமல் அரசமரத்தடியில் வானமே கூரையாகக்கொண்டு எழுந்தருளி இருக்கும் தெய்வம் பிள்ளையார். சர்வலோக மாதாபிதாவின் மூத்தபிள்ளையாதலால், இவரைப் பிள்ளையார் என அழைப்பர். பிரணவத்திலிருந்தே சகல பிரபஞ்சங்களும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் வடிவமாகக் கருதப்படுபவர் பிள்ளையார். பிள்ளையாரின் ஆனைமுகம் மற்றும் வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகத் தோன்றும்.

ஈழத்திலே இந்துக்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் கணபதியை வழிபாடு செய்கின்றனர். மற்றும் யாவா, பர்மா, கம் போடியா, திபெத், மங்கோலியா, யப்பான், நேபாளம், சீனா போன்ற நாடுகளிலும், வெவ்வேறு பெயர்களில் கணபதி வழிபாட்டை மேற் கொண்டு வருகின்றனர். வேதகாலத்தில் கணபதி வழிபாடு காணப் பட்டுள்ளமையை "கணாம் த்வாம் கணபதிம் அவாமஹ" என்று யசுர் வேதத்திலுள்ள சத ருத்திரியத்திலும், வாஜ சநேஜ சம் ஹிதையிலும் விநாயகர் பற்றிய குறிப்புக்களும், அதில் கணபதிக்கு

வணக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் ஐதரேய பிராஹ்மணத்திலே, விநாயகர் விக்கினங்களைத் தீர்த்து வைப்பவர், சாந்தப்படுத்துபவர் என்ற குறிப்புள்ளது. கணபதி உபநிடதத்திலே விநாயகரைப்பற்றிக் கூறும்பொழுது 'எல்லாம் நீயே, படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் நீயே' என்றும் கூறப்பட்டுள்ளதோடு, ஏரம்ப உபநிடதத்திலும் விநாயகரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டு, விநாயக வணக்கத்தின் தொன்மையைப் புலப்படுத்துகின்றது.

விநாயகர் வழிபாடு தொன்மையான வழிபாடு என்பதையும், விநாயகரின் பெருமையையும் இதிகாச, புராணங்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளன. விநாயகர் புராணம், முக்கல புராணம், கணேசபுராணம், பவிஷ்யபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் போன்ற புராணங்கள் மூலமும், கணேசகீதை, கணேசகல்ப்பம், விநாயகபரத்துவம், விநாயகர் கவசம், இராமாயணம், மகாபாரதம் போன்ற சமய இலக்கியங்களின் மூலமும் விநாயகப் பெருமானின் பெருமையை அறியலாம்.

வேதகாலத்திலிருந்து இன்றுவரை அற்புதங்களாலும், மகிமைகளாலும், இடர்நீக்கும் தெய்வமாக மக்கள் மனதில் நிலைத்த பிள்ளையார், ஈழத்தின் மத்தியபகுதியில் அமைந்துள்ள அட்டன் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து, பல அற்புதங்களைக் காலத்திற்குக் காலம் நிகழ்த்தி வருகின்றார்.

இங்கு எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையாரை அவர் புரிந்த அற்புதங்களின் காரணமாக, "ஆலயக்கல்சுமந்த ஆனைமுகப் பெருமான்" என்றும், "பாலஸ்தாபனம் செய்யவந்த பரமனின் பிள்ளை" என்றும் பல்வேறு திருநாமங்களைச் சூட்டி, இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சியடைவர்.

மாணிக்கப்பிள்ளையார் கோயில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளையும் ஒருங்கேகொண்டு காணப்படுகின்றது.

பாறையைக் குடைந்து தோண்டிய ஊற்றுக் கிணறு உள்ளே அமைந்திருப்பது, ஆலய மகிமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

மலையகமெங்கும் பல்வேறு வணக்கமுறைகள் சிறப்புப்பெற்று விளங்கியபோதிலும், 1963 ஆம் ஆண்டளவில், அட்டன்பிரதேசத்தில் மாணிக்கப்பிள்ளையாருக்கு ஆலயமொன்றை அமைக்க வேண்டுமென, இப்பிரதேச இந்து மகாசபை ஆலய நிர்வாகக் குழவினர் தீர்மானித்திருந்தனர். சபையினரின் தீர்மானத்தின்படி, மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் விழாவிற்குரிய சுபநேரங்கள் பெரியவர்களால் கணிக்கப்பட்டது.

இத்திருப்பணியை ஆரம்பித்து வைப்பதற்காக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல சிற்பாச்சாரியார் ஒருவரை ஆலய நிர்வாகம் ஏற்பாடு செய்தது. இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதம் தெரிவித்திருந்த சிற்பாச்சாரியார், சுகவீனம் காரணமாகக் குறிப்பிட்ட நாளன்று வருகை தருவதில் தாமதம் ஏற்பட்டது. சகல ஏற்பாடுகளும் நிறைவுபெற்று ஆலய அடிக்கல் நாட்டும் திருநாளை எதிர்பார்த்திருந்த நிர்வாகத்தினரும், பக்தர்களும் மனச்சோர்வோடு எல்லாம் அவன் செயல் என்று ஆனைமுகத்தானை உளமாரப் பிரார்த்தனை செய்தவண்ணமிருந்தனர்.

இவ்வேளையில் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்ட நியமிக்கப்பட்ட இடத்திற்கு அண்மையில் அமைந்திருந்த, மண்டபத்தின் திண்ணையில் வயதான பெரியவர் ஒருவர் கந்தல் உடையுடன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரது தலையணையாகச் சிறுபொதியொன்றும் காணப்பட்டது.

இவர் தூங்கிக் கொண்டிருந்த திண்ணைக்குச் சற்றுத் தூரத்திலிருந்து, ஆலயநிர்வாகத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஒன்றுகூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர். மாணிக்கப்பிள்ளையார் கோவிலின் அடிக்கல் நாட்டும் வைபவம் எப்படி நிகழப் போகின்றது?

என்ன செய்வது? என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட பெரியவர், நித்திரை விட்டெழுந்தவர் போல எழுந்து, "ஐயா ஏன் கவலைப்படுகிறீர்கள்? என்ன நடந்தது? என்னால் உங்களுக்கு உதவ முடிந்தால் மகிழ்ச்சியடைவேன்" என்று கூறினார்.

பெரியவரின் கந்தல் உடையையும், ஆடம்பரமற்ற தோற்றத் தையும் அவதானித்த ஒருவர், இவரை அலட்சியமாக நோக்கி விடை கூறாது அகன்றார். எனினும் அருகிலிருந்த மற்றொருவர் மாணிக்கப்பிள்ளையார் கோயில் அடிக்கல் நாட்டும் வைபவத்திற்குச் சிற்பாச்சாரியார் வருகை தரமுடியாத நிலையைக் கூறி மனவருத்தப்பட்டார்.

யாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த வயதானவர் "ஐயா நானும் ஒரு சிற்பியே. அடிக்கல் நாட்டும் வேலைக்குரிய ஆயுதங்களும் என்னிடம் இருக்கின்றன. வேத சாத்திரநூலும் என்னிடம் உண்டு. சாத்திரமுறைப்படி அடிக்கல் நாட்டும் வைபவத்தை நிறைவேற்ற என்னால் முடியும். தாங்கள் விரும்பினால் நான் உதவத் தயாராக இருக்கிறேன்" என்று கூறி, தலையணையாகப் பாவித்த பொதியை அவிழ்த்து, சிற்பவேலைக் குரிய பொருட்களையும் எடுத்துக் காட்டினார். இச்செய்தி ஏனையோருக்கும் பரவ அனைவரும் மகிழ்ச்சியோடு சம்மதித்தனர்.

முதியவரும் தாம் ஏற்ற பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார். அடிக்கல் நாட்டும் திருப்பணியும், குறிப்பிட்டநாளில் மிகச் சிறப்பாக நிறைவேறியது. திருப்பணியை நிறைவேற்றிய பெரியவருக்குரிய சன்மானத்தை வழங்க அவரைத் தேடியபோது, அவரை எங்கும் காண முடியவில்லை. அவர் எங்கோ மாயமாக மறைந்துவிட்டார். தான் கோயில் கொள்ளவிருந்த கருவறைக்குத் தானே அடிக்கல் நாட்டும் பணியைச் சிறப்பாகச் செய்துவிட்டு, வந்தசுவடு தெரியாமல் மறைந்த விநாயகரின் பெருமையை, அனைவரும் போற்றித் துதித்தனர். இச்செய்தி காட்டுத் தீபோல எங்கும் பரவ, பிள்ளையாரின் அருட்கருணையை நாடிப் பக்தர்கள்,

தினந்தோறும் இக்கோயிலுக்கு வந்து வணங்கித் தமது குறைகளை முறையிட்டு நிவர்த்தி பெற்றுச் சென்றனர்.

இவ்வாலயத்திலே காணப்படும் நவக்கிரக விக்கிரகங்கள், ஏனைய ஆலயங்களை விட மாறுபட்டுக் காணப்படுவது புதுமையானது. நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்ய எண்ணியபோதும், அவற்றை அமைப்பதற்குரிய ஆசனக் கல்லை, மலையடிவாரத்திலிருந்து நூறடிக்கும் மேற்பட்ட மலைஉச்சிக்கு எவ்வாறு கொண்டு செல்வது என, ஆலய அறங்காவலர்கள் சிந்தித்தனர். ஆலய அடிக்கல் நாட்டும்பணி சிறப்புற நிறைவேற உதவிய ஆனைமுகப் பெருமான் கைகொடுப்பார் என்ற நம்பிக்கையில், தும்பிக்கையானைத் தினமும் போற்றி வணங்கியவாறு, நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்ய நாளும் குறிக்கப்பட்டது. பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் ஆசனக்கல் அசைவின்றித் தெருவிலேயே கிடந்தது. இவ்வேளையில் ஆசனக்கல் கிடந்த தெருவழியே யானையொன்றைப் பாகன் ஒருவன் ஓட்டிக்கொண்டு வந்தான். யானையைக் கண்ட அறங்காவலர்கள் பாகனை அணுகி, நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய ஆசனக் கல்லை மலையுச்சிக்கு எடுத்துச் செல்ல உதவுமாறு கேட்டனர். யானைப்பாகன் எதற்கும் இணங்கவில்லை.

இவ்வேளையில் யானைப்பாகன் ஓட்டிச்சென்ற யானை மெல்ல மெல்ல நகர்ந்து சில அடி தூரம் சென்ற பின்பு, அப்பால் செல்ல மறுத்து அவ்விடத்திலேயே நின்றது. யானைப்பாகன், அங்குசத்தால் குத்தியும், யானைமொழியால் அதற்குக் கட்டளையிட்டும் அதனை ஓட்டிச் செல்ல முடியவில்லை. அந்த யானையோ ஆலயப்பக்கம் திரும்பியவாறு அசைவின்றி நின்றது. அறங்காவலர்களும், யானைப் பாகனும் திகைப்புற்றுக் காணப்பட்டனர். இவ்வேளையில், யானை துதிக்கையைத் தூக்கித் தலைமேல் வைத்தவாறு, ஆசனக்கல் கிடந்த இடத்தை நோக்கி வேகமாக வந்தது. ஆசனக்கல்லின் அருகே வந்ததும் முன்னங்கால்களை மடித்துத் துதிக்கையால்

ஆசனக்கல்லைத் தூக்கிக்கொண்டு, ஆலயம் அமைந்திருந்த மலையுச்சியை நோக்கிச் சென்றது.

மலையுச்சியை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப்பாதை, பாறைகளும் செடிகளும் நிறைந்து காணப்பட்டபோதிலும், அவற்றையெல்லாம் இலகுவாக விலக்கி மலையுச்சியை நோக்கிச் சென்றது. இச்செய்தி எங்கும் காட்டுத்தீ போலப் பரவ, அவ்விடத்தே கூடிய மக்கள் ஆனைமுகப்பெருமானின் கருணையை எண்ணி, அரோகரா கோசமெழுப்பி வணங்கினர்.

அறங்காவலர்களும் நம்பிக்கையோடு துதித்தால் தும்பிக்கையான் துணையிருப்பான் என்பதை கண்முன் கண்டு, "ஆலயக் கல் சுமந்த ஆனைமுகப்பெருமான்" எனப் போற்றித் துதித்தனர். யானை எவ்வித சிரமமுமின்றி ஆசனக்கல்லை உரிய இடத்தில் வைத்துவிட்டு அமைதியாகத் திரும்பிச் சென்றது. இவ்வாறான அற்புதங்களோடு, ஆலயத்திருப்பணிகளும் சிறிது சிறிதாக நிறைவேறி, பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய நிர்ணயித்த நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது.

மூலஸ்தான திருப்பணி, மற்றும் சிற்பங்களுக்கு வர்ணந் தீட்டும் பணி என யாவும் முடிவுற்றபின்னர், ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் மிக விரைவாகச் செய்து வந்தது. தமிழ்நாடு திருவானைக்காவைச் சேர்ந்த பிரபல சிற்பியொருவரே ஆலய கோபுரச் சிற்பங்களைச் செதுக்கியவர். சிற்பியாருடன் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்காக குருக்கள் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வேளையில் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பதற்கு வரவேண்டிய குருக்களால் குறிப்பிட்ட நாளன்று சமூகமளிக்க முடியாதென்ற செய்தி கிட்டியதும், கும்பாபிஷேகத்தை ஒத்திவைப்பதென ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. குறிப்பிட்ட தினத்தன்று கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் மீண்டும் இதே சுபநேரத்திற்காக

இரண்டு வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும். இந்நிலையில் கும்பாபிஷேகத்திற்கு வரவேண்டிய சிற்பி விமானத்தில் புறப்பட்டு விட்டார் என்ற தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. சில மணிநேரத்தின் பின்னர் சிற்பிகள் அட்டன் ஆலயத்திற்கும் வந்து விட்டார். இவ்வேளையில் குருக்கள் ஒருவரும் யாரும் எதிர்பாராத விதமாக ஆலயத்திற்கு வந்திருந்தார்.

கும்பாபிஷேகத்தை ஒத்திவைக்காது நடத்துவதென ஆலய நிர்வாகத்தினர் தீர்மானித்தனர். இதனைத் தொடர்ந்து சகல ஆயத்தங்களும் நிறைவேற, தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த ஸ்ரீலஸ்ரீ புரணானந்த சுவாமிகள் தலைமையில், மகாகும்பாபிஷேகம் மிக விமரிசையாக நிறைவேறியது. 1963ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்த சகல திருப்பணிகளிலும், விக்கினங்களைக் களைந்து அற்புதங்களைப் புரிந்த விநாயகப்பெருமானின் மகிமையை அவரின் பக்தர்கள் நன்குணர்வர்.

இவ்வாறு படிப்படியாகப் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், 1998 ஆம் ஆண்டு மேலும் பல திருப்பணிகள் நிறை வேற்றப்பட்டது. ஆலயத் திருப்பணி வேலைகள் யாவற்றையும் தமிழ்நாடு மாமல்லபுரம் சிற்பவல்லுனரான, ஆ.இரவிசங்கர் தலைமையின்கீழ், சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சிற்பாச்சாரியார்கள் செய்துமுடித்தனர்.

மூன்றுதள வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபமும் மிக அழகாக அமைக்கப்பட்டது. உற்சவமூர்த்தியான பஞ்சமுக விநாயகருக்கு அழகிய கோயில், சபாமண்டபம், மூஷிகவாகனம், பலிபீடம், கொடித்தம்பம், நவக்கிரக ஆலயம், சண்டேசுவரர் கோயில், மகாமண்டபம் மற்றும் வாயிலின் இருமருங்கிலும் கம்பீரமான தோற்றமுடைய துவாரபாலகர்கள் என்பன அமைக்கப்பட்டன. இத்திருப்பணிகள் நிறைவேறியதும் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள், சுபவேளையில்

கொழும்பு சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில், பாலஸ்தாபன கிரியைகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகமும் நிறைவேறியது.

இக்காலப் பகுதியிலேயே ஆலய மண்டபங்களின் மேலுள்ள கொங்கிரீட் கூரையைத் தாங்கி நிற்கும் கொங்கிரீட் தூண்கள், சிறந்த சிற்பவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டது. இக் கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் கஜலக்சுமி, சப்தகன்னியர்கள், சந்தானகோபாலர், லிங்கேஸ்வரர், சரஸ்வதி, இராஜஇராஜேஸ்வரி அம்பாள், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கோயில்களும் நிர்மாணிக்கப்பட்டது. அவற்றின் வாயில்கள் முன் காவல் தெய்வங்களாகிய துவாரபாலகி, துவாரபாலகர்கள் மிகவும் கம்பீரத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டனர்.


மாணிக்கப்பிள்ளையார் கோயிலின் சிறப்பம்சமாக விளங்குவது, சனீஸ்வர பகவானின் திருக்கோயிலாகும். சூரியன் முதலான ஒன்பது கிரகங்களில் அவரவர் ஜாதக அமைப்பின்படியும் பலன்களை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கிரகம் சனிபகவான். இவரை ஆயுட்காரகர் என்று சோதிடசாத்திரம் கூறுகின்றது. இவரே ஆரோக்கியகாரராகவும் விளங்குகின்றார்.

சனியைப்போலக் கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லை என்ற கூற்று வழக்கத்திலே காணப்படுகின்றது. இவர் சர்வ வல்லமை படைத்த சர்வேஸ்வரனிடம் தணியாத பக்திகொண்டு, சனீஸ்வரன் என்ற பட்டத்தைப் பெற்றவர். நீதிக்குத் தேவரான சனீஸ்வரபகவானைப் போற்றி வணங்கினால், சகல நன்மையும் கிடைக்கும் என்பதைப் புராண வரலாறுகள் விளக்கியுள்ளன. இத்தகைய சனீஸ்வர பகவானுக்கு அழகிய கோபுரத்துடன் கூடிய தனியான கோவிலொன்று, மாணிக்கப் பிள்ளையார் கோயிலில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

மிக அழகிய நடராஜர் மண்டபம், வசந்த மண்டபம் ஆகியனவும் இக்கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க 108 படிகளைக் கொண்ட ஆலயத்தின் பிரதான நுழைவாயிலில் அழகிய கோபுரம் காட்சி தருகின்றது. அதன் இருமருங்கிலும் கம்பீரமாகக் காட்சி தரும் துவாரபாலகர்கள் இருவர் காணப்படுகின்றனர். அருகிலேயே வழிப்பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளது.

இவ்வாலயத்திலே புனர்நிர்மாணப்பணிகள் பல அவ்வப் போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் 2003 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் மிக விமரிசையாக நிறைவேறியது. மேலும் பல திருப்பணிகளும், சமூகப்பணிகளும் இவ்வாலயத்தினால் தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில், அருளும் எழிலும் மிக்க ஆலயமாக அட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது. மிகக் குறுகிய காலப்பகுதியில் இவ்வாலயம் இத்தகைய சிறப்புக்களைப் பெற, மலையுச்சியில் அமர்ந்து, ஈழத்தின் உச்சிப்பிள்ளையாராக விளங்கி அருள்புரியும், மாணிக்கப்பிள்ளையாரின் கருணையேயன்றி வேறேதுமில்லை எனப் பக்தர்கள் மனமுருகிக் கூறுகின்றனர்.



# கோட்டைமுனை வீரகத்திப்பிள்ளையார் கோவில்

## மட்டக்களப்பு

ஈழத்தில் கணபதி வணக்கமுறை பரவலாகக் காணப்பட்டாலும், மிகப்பெரிய கணபதி ஆலயங்கள் மிகச் சிலவாகவே காணப்படுகின்றன. கணபதி வணக்கம் ஏனைய வணக்க முறைகளைப் போலன்றி மிக இலகுவான வணக்க முறையாகக் காணப்படுவதே இதற்குக் காரண மாகும். ஈழத்தில், மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பிள்ளை யார் வணக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. இவற்றுள் கோட்டைமுனையில் அமைந்துள்ள வீரகத்திப் பிள்ளையார் கோவில் அருளும், புகழும் கொண்டதாக விளங்குகின்றது. போத்துக்கேயர் கி.பி 1627 இல் மட்டக்களப்பில் தாம் கட்டிய கோட்டைக்கு மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதற் கும் அமைந்த பெயரான, மட்டக்களப்பு என்ற அடைமொழி யுடன் கூடிய மட்டக்களப்புக்கோட்டை என்னும் பெயரையே

சூட்டினர். மட்டக்களப்புக் கோட்டையை நோக்கி நீண்டிருந்த புளியடிக்குடா முனைக்குக் கோட்டைமுனை என்னும் பெயர் காரணப் பெயராக ஏற்பட்டது. இப்பிரதேசத்துள், புளியடிக்குடா சின்ன உப்போடைப்பகுதிகள், மோரிசாப்பிட்டி, தாமரைக்கேணி, தாண்டவன்வெளி ஆகியன உள்ளடங்கும்.

கோட்டைமுனைப் பிரதேசத்திலே அமைந்திருந்த, வீரகத்திப்பிள்ளையார் கோவிலைச் சூழ வசித்த நெசவுத் தொழில் புரியும் மக்கள், இத்தொழில் வீழ்ச்சி காரணமாகத் தாமரைக் கேணிக்கும், வேறு ஊர்களுக்கும் குடிபெயர்ந்துள்ளனர். எனினும், இம்மக்களே இவ்வாலயத்தைத் தொடர்ந்தும் நிர்வகித்து வந்தனர். இவ்வாலயத்திற்கு வடக்கில் பழைய வாடிவீட்டுத் தெருவும், தெற்கில் பௌத்த ஆலயவளவும், கிழக்கில் குடியிருப்பாளர்களின் வளவுகளும், மேற்கில் பாஞ்சாலைவீதியும் எல்லைகளாகக் காணப்படுகின்றன.

கோட்டைமுனை வீரகத்திப்பிள்ளையார் கோவில் அமைப்பு, மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எனினும் கொடிமரம் நட்டுத் திருவிழா செய்யும் வழக்கம் இக்கோவிலில் ஆரம்பத்திலே காணப்படவில்லை. இவ்வாலயம் யாரால் கட்டப்பட்டதென்பதற்குரிய சான்றுகளும் காணப்படவில்லை.

போத்துக்கேயர் வருகையின்போது இக்கோவில் காணப் பட்டுள்ளது. 1627 ஆம் ஆண்டு, மட்டக்களப்பிலே கோட்டை கட்டவந்த போத்துக்கீசர், இக்கோவிலைப் பேய்வணக்கம் நடை பெறும் கோவிலெனத் தமது சரித்திரக் குறிப்புக்களிலே கூறியுள்ள னர். போத்துக்கேயரின் இக்கருத்திற்கு ஆதாரமாக இக்கோவிலில் நடைபெற்ற மாரியம்மன் வணக்கமுறையும் காரணமாக இருந்துள்ளது.

அக்காலத்திலே அம்மன்கோவில்கள் சிலவற்றிலே உருவேறிக் குறிசொல்லும் வழமை காணப்பட்டுள்ளது. மாரியம்மன்கோவிலிலும் தெய்வமாடிக் குறிசொல்லும் வழக்கம் இடம்பெற்றுள்ளது.

குறிசொல்லல், தெய்வம்வந்து ஆடுதல் போன்ற செயல்கள், போத்துக்கேயர் எண்ணத்தில், பேய்வணக்கமாகத் தென் பட்டிருக்கவேண்டும். மாரியம்மன் கோவில் 1882ஆம் ஆண்டு தாமரைக்கேணிக்கு வடக்கில் இடம்மாற்றி அமைக்கப்பட்டது.

போத்துக்கேயர் மட்டக்களப்பிலே கோட்டை அமைக்க முனைந்த காலமாகிய 1627 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வீரகத் திப்பிள்ளையார் ஆலயம் பெரிய கட்டிடமாகக் காணப்படவில்லை. ஆலய வளவிலே நின்ற வில்வமரத்தடியில் ஓர் மேடையமைத்து அதை உள்ளடக்கி, ஓலைக்கொட்டிலில் கருங்கல்லினாலான ஒரு சிறு பிள்ளையார் உருவம் வைக்கப்பட்டிருந்தது. இதனையே யாவரும் பயபக்தியோடு வழிபட்டு வந்துள்ளனர். இவ்வேளையில் மட்டக்களப்பிலே போத்துக்கேயர் கட்டிய கோட்டையை, ஒல்லாந்தர் 1639 ஆம் ஆண்டு கைப்பற்றினர். 1684 இல் ஒல்லாந்தர் இக்கோட் டையைப் பலப்படுத்திக் கட்டி முடித்தனர். ஒல்லாந்தர் காலத்திலே ஏராளமான மக்கள் புளியந்தீவிலே குடியேறத்தொடங்கினர்.

கோட்டைமுனையிலே வசித்த தனவந்தர்களிற் சிலர் மரக்கலங்களிற் சென்று வியாபாரம் செய்துவந்தனர். இவர்களுள் ஒருவரான தாமோதரம் என்பவர் மரக்கலத்திலே புடவை, நூல், தேன், பசுநெய் முதலிய பொருட்களைக் கொண்டு சென்று வியாபாரம் செய்ததன் மூலம் பெரும் செல்வந்தராக விளங்கினார். இவருக்குக் குழந்தைச் செல்வம் இல்லாத காரணத்தால், தான் ஈட்டிய பணத்தைத் தர்ம வழிகளில் செலவு செய்து வந்தார். தாமரைக்கேணிப் பகுதியில் பெரும் பரப்பளவு கொண்ட நிலங்களை வாங்கி, அந்நிலத்திலே நெசவாளர்களைக் குடியேற்றி, அவர்கள் நெசவு செய்வதற்குரிய நூல் மற்றும் உபகரணங்களை வழங்கி ஊக்குவித்தார். அவ்வாறே அம்மக்கள் நெய்யும் புடவைகளை வாங்கிப் பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்து உதவினார்.

தாமரைக்கேணியில் ஒரு சிறிய தாமரைக்குளம் காணப்பட் டது. தனவந்தரான தாமோதரம், அக்குளத்திலே மலரும் தாமரைப்

பூவை, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கொண்டு சென்று கோட்டை முனை வீரகத்திப்பிள்ளையாருக்கு அர்ப்பணித்து குழந்தைச் செல்வத்தை அருளுமாறு வேண்டி, வழிபாடு செய்துவந்தார். தாமரைப்பூவுடன் வந்து வழிபாடு செய்யும் தாமோதரத்தைத் தாமரையார் என்று அழைக்க, தாமோதரம் என்ற பெயர் மருவித் தாமரையார் என்ற பெயரே அவரது பெயராக நிலைத்தது.

இவ்வாறு தாமரை மலர் சாத்தி வழிபாடு செய்துவந்த தாமரையார் கனவிலே பிள்ளையார் தோன்றி, நானே உனது பிள்ளை, என்னை உனது பிள்ளையைப்போல நேசி என்று கூறி மறைந்துள்ளார். இச்சம்பவத்தை எண்ணி மனம் நெகிழ்ந்த தாமரையார், வில்வமரத்தடியில் குடிசையாக இருந்த கோவிலைப் பெரிதாகப் பச்சைக் கல்லினால் கட்டி, அங்கிருந்த மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து வணங்கினார். இக்கோயிலுக்குப் பூசகராகத் தாமரையாருடைய உறவினரான வேலாயுதர் என்பவர் நியமிக்கப்பட்டார்.

1685 ஆம் ஆண்டு தாமரையார், மரக்கலத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரத்தைச் சென்றடைந்தார். அங்கிருந்து பிள்ளையார் விக்கிரகமொன்றைக் கொண்டுவந்து, முறைப்படி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றினார். இக்கோயிலின் மூர்த்திக்குத் தனது பாட்டனாரின் பெயரான வீரகத்தி என்னும் பெயரையும் சேர்த்து, வீரகத்திப் பிள்ளையார் எனத் திருநாமம் சூட்டினார்.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த ஆலயத்தைப் பராமரிப்பதற்கு, வண்ணக்குமார்களாகத் தனது உறவினர்களில் இருவரை ஏற்பாடு செய்தார். கோவில் நிர்வாகத்திற்குத் தலைவராக இருப்பவரை வண்ணக்கர் என அழைப்பர். இவ்வாறு ஏற்பாடு செய்த தாமரையார், தன்னிடமுள்ள சொத்துக்கள் யாவற்றையும், வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குத் தருமசாதன நன்கொடை செய்தார். அத்தோடு இக்கோவிலின் நித்திய, நைமித்திய பூசைகளுக்கு இடையூறு

ஏற்படாவண்ணம், இங்குள்ள மக்கள் உதவவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இச்சம்பவங்கள் கி.பி 1700 ஆம் ஆண்டளவிலே நடைபெற்றது.

கோட்டைமுனைப் பகுதியில் காணப்பட்ட ஒரே கோவிலான வீரகத்திப்பிள்ளையார் கோவில், 1875 ஆம் ஆண்டுவரையிலும் காலத்திற்குக் காலம் பல வழிகளிலும் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. இக்காலப்பகுதியில் வண்ணக்குமார்களாகவிருந்தவர்கள், ஆலய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டுழைத்து மடப்பள்ளி, மணித்தூண் மற்றும் மண்டபங்கள் பலவற்றையும் கட்டியுள்ளனர். எனினும் 1878 ஆம் ஆண்டு வீசிய புயலினால் இக் கோவில் சேதமடைந்தது. இவ்வேளையில் அமிர்தகழி மக்களோடு சேர்ந்து, ஊறணி, கொத்துக்குளம், தாண்டவன்வெளி, தாமரைக்கேணி, செங்கலடி ஆகிய இடங்களிலுள்ள சைவமக்கள் ஒன்றிணைந்து, கோவிலைப் புதிய முறையிலே திருத்திக் கட்டினர். அத்தோடு கொடிமரம் நட்டுத் திருவிழா நடைபெறவும் ஏற்பாடு செய்தனர்.

ஆடி மாதத்தில் வரும் அமாவாசைக்குப் பன்னிரண்டு நாட்க ளுக்கு முன், அதாவது மாமாங்கப் பிள்ளையார் கோவில் கொடி யேற்றத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன், இப் பிரதேசத்திலுள்ள செங்குந்தகுல மக்கள் கொடிக்கயிறு மற்றும் பூசைப்பொருட்கள் முதலியவற்றை, வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் ஆயத்தமாக வைத்திருப்பர். மாமாங்கேஸ்வரர் ஆலய வண்ணக்குமார், தங்கள் கோயில் மேளதாளத்துடன் வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு வந்து, பூசையிலே பங்குகொள்வர்.

வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் உள்ள வண்ணக்குமார், அவர்களுக்கு மரியாதை வழங்குவர். அதன்பின் கொடிச்சீலை, கயிறு, பூசைப்பிரசாதம் ஒரு சிறு ஏடகத்தில் (தேர்) வைத்துச் செங்குந்த குலமக்கள் சுமந்துகொண்டு, மேளவாத்தியம் முழங்க ஊர்வலமாகச் சென்று, மாமாங்கேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைவர். அங்கு கோயிற் குருக்களும், வண்ணக்குமார்களும்

கொடிச்சீலை, கொடிக்கயிறு என்பவற்றை ஏற்றுக்கொண்டு, மாமாங்கேஸ்வரத்தில் பூசை நிகழ்த்தி, வீரகத்திப்பிள்ளையார் கோவில் வண்ணக்குமார்களை மரியாதை செய்து, பிரசாதம் வழங்கி வழியனுப்பி வைப்பர்.

இவ்வாறே மாமாங்கேஸ்வரர்க்குக் கொடிச்சீலை, கொடிக் கயிறு கொடுப்பது போல, ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலுக்கும் கொடிச்சீலை கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கமும் காணப்பட்டது. இதனையும் இங்குள்ள செங்குந்த குலமக்களே செய்து வந்த போதிலும், இவ்வழக்கம் இடையிலே நிறுத்தப்பட்டது. ஆனைப் பந்திப் பிள்ளையார் கோவிலில் கந்தபுராணம் படிக்கப்பட்டு, ஈற்றில் சூரசங்கார விழா நடைபெறும். கந்தபுராண வரலாற்றிலே கூறப்பட்டதுபோல கந்தசுவாமியுடன் நின்று சூரசங்காரம் நிகழ்த்திய நவவீர பரம்பரையில் வந்த செங்குந்தகுல மக்களே, சேனைத் தலைவர் வேடம் பூண்டு சென்று, விழா நடத்தும் உரித்துடை யோராயிருந்து நிறைவேற்றி வந்துள்ளனர்.

இந்துக்கள் மிகவும் பயபக்தியோடு கடைப்பிடிக்கும் விரதங்களிலே கந்தசட்டி விரதமும் ஒன்றாகும். ஐப்பசி மாதத்தில் வரும் பூர்வபக்கப் பிரதமையில், கந்தசட்டி விரதம் ஆரம்பமாகும். கந்தசட்டி ஆரம்பித்து ஆறாம்நாள் சூரசங்காரவிழா சிறப்பாக நடைபெறும்.

சூரசங்கார விழாவில் வீரவாகுதேவர் முதலான ஒன்பது பேருடன், மற்றுமொருவர் நாரதர் வேடமணிந்து கொள்வார். விழாவிலே பங்குபற்றும் இந்தப் பத்துப்பேரும், கந்தசஷ்டி விரதம் அனுட்டித்து, வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆயத்தமாகவிருப்பர். ஆனைப்பந்தி ஆலய வண்ணக்குமாரில் ஒருவர் அல்லது அவருடைய பிரதிநிதி மேள வாத்தியத்துடன் வந்து, இந்தப் பத்துப் பேரையும், வீரகத்திபிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த வண்ணக்குமாரையும் அல்லது அவர்களது பிரதிநிதிகளையும் அழைத்துச்சென்று பூசையில் பங்கு கொள்ளச் செய்து மரியாதை செய்வர்.

பின்னர் விழா தொடங்கும்போது சுவாமியினுடைய பக்கம் நின்று சூரசங்கார விழாவை நவவீரர் நடத்துவர். விழா முடிவில் ஆனைப்பந்தி விநாயகர் ஆலயக் குருக்கள் பிரசாதம் வழங்கி வழியனுப்பி வைப்பர். இந்த ஆலயத்திற்குக் கொடிச்சீலை, கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கமும், சேனைத் தலைவர் வேடம் பூண்டு சூரசங்கார விழா நடத்தும் வழக்கமும் 1890 ஆம் ஆண்டு முதல் தவறாது நடைபெற்று வந்துள்ளது. 1974 ஆம் ஆண்டு முதல் இவ்வழக்கம் கைவிடப்பட்டுள்ளது.

கொடிச்சீலை, கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கம், யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர்க்கந்தசுவாமி கோயிலில், பண்டைக்காலந்தொட்டு செங்குந்தமக்களால் நிகழ்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான மரபுகள் ஆலயங்களிடையே தொடர்பை ஏற்படுத்துவதோடு தொன்றுதொட்டு இருந்துவரும் கலாச்சார வழக்கங்களையும் பேண உதவுகின்றது. அத்தோடு கூடிவாழும் மனப்பான்மையையும் கோவிலின் விழாக்களும், மரபுகளும் ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கத்தக்கது.

வீரகத்திப்பிள்ளையார், மக்கள் வேண்டுவதை ஈயும் அருளாற்றல் கொண்டவர். தமது வேண்டுதல்கள் நிறைவேறப் பெற்ற அன்பர்கள் பலரும், பல திருப்பணி வேலைகளையும், அன்பளிப்புக்களையும் வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குச் செய்துள்ளனர். திரு. சி. கணபதிப்பிள்ளை என்பவர் தனது எண்ணம் நிறைவேறியமைக்காக மகிழ்ந்து, 1900 ஆம் ஆண்டில் ஓர் மடமும் கிணறும் கட்டிக் கொடுத்துள்ளார். இக்கட்டிடம் பல வருடங்களாக சிவானந்த வாசிகசாலையாகவும், சைவ மாணவர்களின் ஞாயிறு பாடசாலையாகவும் பயன்பட்டு வந்தது.

இவ்வாறு பல வழிகளிலும் மக்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றி வந்த வீரகத்தி பிள்ளையார் கோவில், 1907 ஆம் ஆண்டில் அடித்த புயலால் மீண்டும் சேதமடைந்தது. இக் காரணத்தினால் பூசை செய்ய முடியாதநிலை காணப்பட்டது.

இந்நிலையில் தாமரைக்கேணியில் வசித்த திரு.சி. குமாரசாமி ஐயர் அவர்களுடைய இல்லத்தில் அமைந்திருந்த சுவாமி அறையில், வாலஸ்தாபனம் செய்து பூசை நடைபெற்று வந்தது. இவர் சிறந்த ஆசாரசீலர் என்பதோடு, சிறந்த கல்விமானாகவும் விளங்கியுள்ளார். வைத்தியகலாநிதியான இவர், சுவாமி விவேகானந்தருக்குச் சங்கதமொழிக் கல்வியைத் தொடக்கி வைத்தவராவர். இவரே வீரகத்திப்பிள்ளையாருக்குப் பூசைகளையும் நடத்திவந்தார். இவ்வேளையில், சேதமடைந்த ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளும் நடைபெற்றது. சில ஆண்டுகளின் பின் திரு.சி. குமாரசாமி ஐயர் அவர்களே, வீரகத்திப் பிள்ளையார் கோவிலின் வண்ணக்கராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் வண்ணக்கராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஆலயம் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்தது. அன்பர்கள் கொடுத்த நன்கொடைகளையும், தன்வசமிருந்த பணத்தையும் கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், மணிக்கோபுரம், பரிவாரமூர்த்திகளின் கோயில்கள் ஆகியவற்றைத் திருத்தியும் சிலவற்றைப் புதிதாகவும், அழகாகவும் கட்டிமுடித்து, 1928 ஆம் ஆண்டு ஆகம விதிமுறைப்படி சம்புரோட்ஷண மகாகும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றினார். இப்பெருமகனார் 1947 ஆம் ஆண்டு சிவபதம் அடைந்தார். இவரின் மறைவுக்குப்பின் வண்ணக்குமாரை நியமிக்கும்முறை நிறுத்தப்பட்டு, நிர்வாக சபை மூலம் கோயிற்கருமங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1964 ஆம் ஆண்டு இவ்வாலய வளவின் எல்லைகளுக்குச் சுற்றுமதில் அமைக்கப்பட்டு, இரும்புக் கம்பியால் தலைவாசற் கதவும் அமைக்கப்பட்டது.

1969 ஆம் ஆண்டு ஆலய புனருத்தாரண வேலைகளுக்காக மூர்த்திகளை வாலஸ்தாபனம் செய்தனர். !976 ஆம் ஆண்டு, இவ்வாலயத்தின் தூபி வேலை, பரிவாரக் கோயில்களின் திருத்தம் ஆகியவற்றைச் செய்தனர். 1978 ஆம் ஆண்டு வீசிய

சூறாவளியினால் சுற்றுமதில் சேதமடைந்தது. இவ்வாறு சூறாவளியால் பாதிக்கப்பட்ட மதில்கள் 1980 ஆம் ஆண்டு திருத்தப்பட்டதுடன், மகாமண்டபமும் திருத்தியமைக்கப்பட்டது. மீதிவேலைகளும் நிறைவேற்றப்பட்டு, 1989 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

பிரதிஷ்டாகுருவாக, வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூரண தியாகராஜ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற, மேற்படி மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, அடுத்த மாதம் அஷ்டோத்திர சகஸ்ர (1008) சங்காபிஷேகமும் நடைபெற்றது. இக்கோவிலில் ஆதிகாலந் தொடங்கி, சங்கமர் குருக்கள்மாரும், பிற்காலத்தில் சைவக்குருக்கள்மாரும் பூசை செய்துள்ளனர். 1947 ஆம் ஆண்டு முதல் பிராமணர் பூசை செய்து வருகின்றனர். பிற்காலத்திலும் பல தடவைகள் ஆலயத்திலே புனருத்தாரண வேலைகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் பரிவார மூர்த்திகளாக வைரவர், முருகன், நாகதம்பிரான் சன்னிதிகள் அமைந்துள்ளன.

இவ்வாலயத்திலே சித்திரை வருடப்பிறப்பு. சித்திராபூரணைச் சித்திரகுப்த விரதம், கந்தசஷ்டி விரதம், திருக்கார்த்திகை, விநாயகசஷ்டி விரதம், திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம் ஆகிய திருநாட்களில் விசேட பூசைகள் சிறப்பாக நடைபெறும். திருவெம்பாவைத் தீர்த்தம், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத் தீர்த்தக்கேணியில் நடைபெறும். அன்று மதியம் அன்னதானமும், ஆராதனைகளும் நிறைவேறிய பின்னர், மாலையில் சுவாமி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தை மீண்டும் வந்தடைவார். இரவு திருப் பொன்னூஞ்சல் நடைபெறும்.

இவ்வாலயத்திலே கந்தப் புராணம், காசிகாண்டம், திருவாத வூரடிகள் புராணம், சித்திரகுப்தர்கதை என்பன படிக்கப்படுவது

வழக்கம்.. பிற்காலத்திலே காசிகாண்டம் படிக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது. வீரகத்திப் பிள்ளையார்மீது பலர் பதிகம் பாடிப் போற்றியுள்ளனர். இக்கோவிலின் வண்ணக்கராகப் பணிபுரிந்த திரு.சி. குமாரசாமிஐயர் அவர்களால் ஒரு பதிகம் பாடப்பட்டுள்ளது. சதோதய முனிவர் மற்றும் ஆரையம்பதியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் டாக்டர், திரு. நல். அளகேச முதலியார், செல்வி திருமலர் சிவசிதம்பரப்பிள்ளை ஆகியோரும் கோட்டைமுனை வீரகத்திப் பிள்ளையார்மேல் திருப்பதிகங்கள் பாடியுள்ளனர். 1971 ஆம் ஆண்டு வீரகத்திப்பிள்ளையார் மீது, கரவையம்பதியைச் சேர்ந்த டாக்டர். திரு.க. குழந்தைவேலு அவர்கள் திருவூஞ்சற் பாக்களைப் பாடியுள்ளார்.

பிள்ளையார்கோவில் இல்லாத ஊர்களை மட்டக்களப்பிலே காண்பதரிது. சைவமக்கள் அனைவரது உள்ளத்திலும் இடம்பெற்ற கணபதி அல்லது விநாயகர், எச்செயலைத் தொடங்குமுன்பும், முதலில் மனதில் தியானித்துக் கொள்ளும் மங்கலமான தெய்வமாக விளங்குகின்றார். கல்வி, தொழில், கடவுட்பூசை எதுவாயினும் பிரணவவடிவான கணபதிக்கு, முதல்வணக்கம் செய்யாவிடில் அக்கருமம் இனிது நிறைவேறாது என்றும், கணபதியின் திருவருளைப் பெற்றுவிட்டால், எடுத்தகருமம் இடையூறெதுவுமின்றி இனிதே நிறைவேறும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே வேரூன்றியுள்ளது.

# பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயம்

## மூதூர், திருகோணமலை

எங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற பரம்பொருளை மிக எளிதில் அடையக்கூடிய இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயம் என்பது எல்லாம் ஒடுங்கும் இடம் என்பதைக் குறிக்கின்றது. ஆலயம்- ஆ என்பது பசுவையும், லயம்- என்பது ஒடுக்கத்தையும் குறிக்கும். பசுவாகிய ஆன்மா, தனது மும்மலங்களையும் நீக்கி இறைவனிடம் ஒடுங்குவதற்குரிய இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுகின்றது. ஆலயம் மற்றும் கோபுரம், தேர் என்பவை சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையிலே காணப்படுகின்றன.

மனித சரீரம் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலய அமைப்புக் காணப்படும். மூலஸ்தானம்

அல்லது கருவறை மனிதனது சிரசினையும், அர்த்தமண்டபம் கழுத்தினையும், மகாமண்டபம் மார்பினையும், தரிசனமண்டபம் வயிற்றையும், அதனை அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன. யோக மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள ஆறாதாரங்களுள் மூலாதாரம் கொடித்தம்பத்தையும், சுவாதிட்டானம் பலிபீடத்தையும், மணிபூரகம் தரிசனமண்டபத்தையும், அநாகதம் மகாமண்டபத்தையும், விசுத்தி அர்த்தமண்டபத்தையும், ஆக்ஞை கர்ப்பக்கிரகத்தையும் குறிக்கின்றன. சகஸ்ராரத்தை (ஆயிரமிதழ் -கமலம்) நினைவூட்டவே கர்ப்பக்கிரகத்தில் கமலவிளக்குக் காணப்படுகின்றது. ஸ்தம்பமண்டபத்திலே கொடித்தம்பத்திற்கு அருகிலே பலிபீடமும், அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கும். இவை பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளை விளக்குவனவாக அமைந்திருக்கும்.

நந்தியானது சிவனை நோக்கியவாறு (மூலமூர்த்தியை நோக்கியவாறு) அமைந்திருக்கும். பலிபீடம் மலநீக்கத்திற்கு அறிகுறியாக விளங்குகின்றது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைப் பலியிட்டு பதியின் பாதாரவிந்தங்களை நாடவேண்டும் என்பதைப் பலிபீடம் குறிப்பாக உணர்த்துகின்றது. இவ்வாறு ஆலய அமைப்புக்கள் ஒவ்வொன்றும் ஆழ்ந்த தத்துவங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

இவ்வாறான அரும்பெரும் பொக்கிஷங்களாக மக்களால் போற்றப்படும் இந்து ஆலயங்கள், ஈழத்திருநாட்டிலே இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்படுகின்றன. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இந்நிலைமை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் ஆலயங்களின் மூலம், நிலப்பரப்பின் வரலாறுகளையும், ஆலயங்களோடு தொடர்புபட்டு வாழ்ந்த மக்களின் கலாச்சார பண்பாடுகளையும், அவர்கள் வாழ்ந்த பாரம்பரிய நிலப்பரப்புக்களையும் அறிய முடிகின்றது. அண்மைக் காலத்தில் தாம்வாழ்ந்த நிலப்பரப்பாகிய மூதூர்ப்பிரதேசத்திலிருந்து

தமிழ் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை காணப்பட்டுள்ளது. இங்குள்ள ஆலயங்கள் பராமரிப்பாரின்றி அழிந்துபோவதும், அழிக்கப்படுவதும், சூறையாடப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இச்சூழ்நிலையில் பாரம்பரியம்மிக்க இவ்வாலயங்களின் வரலாறுகளை ஆவணமிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஈழத்தில் திருகோணமலை மாவட்டத்தின் தெற்கே, கொட்டியாரக்குடாவை வடக்கு எல்லையாகக் கொண்டு மூதூர் என்னும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. வடக்கு, தெற்கு எல்லைகளாக, சூடைக்குடா தொடக்கம் வெருகல்வரையும், கிழக்கு, மேற்கு எல்லைகளாக, இந்து மகாசமுத்திரக்கடலையும், இறால் குழியையும் கொண்ட ஒரு நீண்ட பரந்த பிரதேசமாகவே மூதூர் காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலே இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் எனப் பல பிரிவினரும் வாழ்கின்றனர். மூதூர்ப் பட்டினத்திலிருந்து எட்டுக்கிலோமீற்றர் தூரத்திலுள்ள தமிழ்க்கிராமம் பள்ளிக்குடியிருப்பு என அழைக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப்பிரதேசத்தின் மிகப் பழம்பெரும் கிராமமாகப் பள்ளிக்குடியிருப்பு விளங்குகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள சித்தி விநாயகப்பெருமான் ஆலயம், ஆகமமுறைசார் வழிபாட்டு நெறிகளைக்கொண்டதாகவும், வரலாற்றுப் பாரம்பரியங்களை அடக்கியதாகவும் விளங்குகின்றது. அவ்வாறே பள்ளக்குடியிருப்பு என்ற பெயரே பின்னர் பள்ளிக்குடியிருப்பாக மாறியிருக்கலாமென்றும், பள்ளிச்சி குடியிருப்பு என்பது பள்ளிக்குடியிருப்பு எனத் திரிபுபட்டிருக்கலாமென்றும், பல கருத்துக்கள் மக்களிடையே காணப்படுகின்றன.

சித்தி விநாயகப்பெருமான் ஆலயம் அமைந்துள்ள பள்ளிக் குடியிருப்புக் கிராமம், வயலும் வயல்சார்ந்த மருதநிலத்திலே அழகுற அமைந்துள்ளது. மருதநிலத்தின் மற்றுமொரு பெயர் பள்ளி என்பதால், பள்ளிக்குடியிருப்பு என இப்பிரதேசத்தின் பெயர்

அமைந்திருப்பதும் ஏற்கக்கூடிய வாதமாகவே காணப்படுகின்றது. மகாவலியின் நீர்வளமும், குளங்களில் நிரம்பிவழியும் நீரும், கிராமத்தைச் சூழவுள்ள வயல்பிரதேசங்களைப் பசுமைகுன்றாது வைத்திருப்பது இப்பிரதேசத்தின் சிறப்பாகும். இங்குள்ள மக்கள் ஆதிகாலந்தொட்டு தமது குலத்தொழிலாக, நெற்செய்கையையும், கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்திலே வாழும் இந்துக்களின் அன்றாட வாழ்விலே, சமயம் பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றது. வழிபாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், இன்பதுன்ப நிகழ்வுகள், அனைத்தும் ஆலயத்தோடு பின்னிப் பிணைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் பலவும், குளக்கோட்டு மன்னனோடும், அவனது திருப்பணி வேலைகளோடும் தொடர்புகொண்டனவாகக் காணப்படுகின்றன. கோணேசர் கோவிலைப் பராமரிப்பதற்கான பல முன்னேற்பாடுகளை, திருகோண மலையைச் சூழவுள்ள கிராமங்களை மையப்படுத்தியே, குளக் கோட்டு மன்னன் செய்துள்ளான். குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவில் திருப்பணிகளை நிறைவேற்றியபின்னர், சிந்துநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மக்களை, பள்ளிக்குடியிருப்பில் குடியேற்றினான் என்றும், இம்மக்கள் விவசாயம் செய்து பெறும் நெல்லை, கோணேசர் கோவிலுக்கு அனுப்பும்படி பணித்தான் என்றும், கோணேசர் கல்வெட்டிலே கூறப்பட்டுள்ளது. இவர்களுடைய சந்ததியினரே பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தைக் கட்டியுள்ளனர். குளக்கோட்டு மன்னனால் கோணேசர் கோயிலுக்கு நெல் மற்றும் தானியங்களை வழங்கும் கிராமமமாகப் பள்ளிக் குடியிருப்பை ஏற்படுத்தி, இங்கு ஏழுகுடிமக்களைக் குடியேற்றிய தாக வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 200 வருடங்களுக்கு முன், இக் கோவில் சிறு கொட்டிலாகவே அமைக்கப்பட்டிருந்துள்ளது. பள்ளிக்குடியிருப்பு

சித்திவிநாயகர் ஆலயவரலாறு, 1850 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே காணப்படுகின்றது. அவ்வாறு காணப்பட்ட ஆலயத்தை, 1875 ஆம் ஆண்டின் பின்பு, பெரிய ஆலய அமைப்பிலே உருவாக்கியதாக, இப்பிரதேசத்திலே வாழும் மூத்தோர் வாயிலாக அறியமுடிகின்றது.

திரு.சின்னத்தம்பி என்னும் அடியவர், பிடியரிசி சேகரித்து அதனை ஏலத்திலேவிட்டு, அதன்மூலம் கிடைத்த நிதியைப் பயன்படுத்தி, ஆலயத்தை விரிவுபடுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. அன்னாரது இம்முயற்சியினால் பழமைவாய்ந்த இவ்வாலயம் மீண்டும் ஆகமமுறைப்படி புனரமைக்கப்பட்டு, சிற்ப வேலைப்பாடுகளுடன் மிளிர்ந்தது. அக்காலத்திலே இவ்வாறான ஆலயத் திருப்பணிகளை மேற்கொள்ளும்பொழுது, அனைத்து மக்களுடைய பங்களிப்பும் இடம்பெற வேண்டும் என்ற நன்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, பிடியரிசி சேர்க்கும் மரபுமுறை காணப்பட்டுள்ளது. அத்தோடு சிறுதுளி பெருவெள்ளம் என்பதை உணர்த்த, பிடியரிசி சேர்த்து மிகப்பெரும் ஆலயத்தையே ஆகம விதிமுறைகளோடு கட்டியமை வெளிப்படுத்தியுள்ளது.

பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய நிர்வாக அமைப்பிலே, குளக்கோட்டனால் குடியமர்த்தப்பட்ட ஏழு குடிகளிலிருந்தும் ஒவ்வொருவர் தெரியப்பட்டு, சிறப்பானமுறையிலே நிர்வாகம் செய்துள்ளனர். இவர்கள் அடப்பன்மார் என அழைக்கப்படுவர். இவர்களுள் முதற்குடியாக உமணகுடி கருதப் படுகின்றது. இவர்களிலிருந்து தலைமை அடப்பனார் தாய் வழியாகத் தெரிவு செய்யப்பட்டு, மணியக்காரராகச் (தலைவராக) செயற்படுவார். ஏனைய பெரியகுடிகளிலிருந்து செயலாளர், பொருளாளர் போன்றோர் நியமிக்கப்படுவர்.

வழிவழியாக இவ்வாறான பொறுப்புக்களை ஏற்று நடத்திவந்தபோதிலும், 1950 ஆம் ஆண்டிலிருந்து, திரு.க.மாரிமுத்து என்பவர் தலைமை மணியகாரர் அல்லது முதல் அடப்பனாகத் தெரிவுசெய்யப்பட்டார். 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்

தினால் ஆலயமும் பலவழிகளிலே பாதிப்புற்றது. அவற்றைப் புனருத்தாரணம் செய்து 1960 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இக்காலப்பகுதியில் தலைமை மணியக்காரர் திரு.க.மாரிமுத்து அவர்களோடு, செயலாளராகவிருந்த திரு.சி. கந்தையா அவர்களும் ஏனைய அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து பல திருப்பணிகளை நிறைவேற்றி, ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர்.

இக்காலப்பகுதியில் ஆன்மீகத்தைப் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தும் முயற்சியில், ஆலயநிர்வாகம் ஈடுபட்டமை குறிப்பிடத் தக்கது. பக்தி மேம்பாட்டிற்காக செயலாளராகவிருந்த விதானை யார் திரு. சி. கந்தையா அவர்கள், தினமும் கூட்டுப்பிரார்த்தனை களை ஏற்பாடுசெய்து நடத்தியுள்ளார். அவ்வாறே விசேட தினங்களில், சிறப்புச்சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும், விசேட தினம், மற்றும் திதிகளை சிறப்பாகச் செய்தும் நெறிப்படுத் தியுள்ளார். இவ்வாறானவர்களுடைய ஆன்மீக முயற்சிகளின் காரணமாகப் பள்ளிக்குடியிருப்புக் கிராமமக்கள், சித்திவிநாயகர் ஆலயத்தோடு தம்மை நெருக்கமாக ஈடுபடுத்தி, சைவப் பாரம்பரிய பழக்கவழக்கங்களுடன் தமது வாழ்வுநெறியை நெறிப்படுத்தினர்.

1976 ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும், இந்து இளைஞர் மன்றத் தலைவராகவும் திரு. ஆ.குணராஜரெட்ணம் அவர்களும், செயலாளராக இரா.கோபாலபிள்ளை அவர்களும், பொருளாளராக மா.சிவலிங்கம் அவர்களும் ஒன்றிணைந்து, பொதுமக்களின் சேவையையும், குறிப்பாக இளைஞர்களையும் ஆலயத் திருப்பணியிலே ஈடுபடுத்திச் செயற்பட்டுள்ளனர். தொடர்ந்து இயங்கிய ஆலய பரிபாலன சபையிலே திரு.செ. வினாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் ஆலய நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றது.

1985 ஆம் ஆண்டின் பின்னர் ஆலய நடைமுறைகளிலே மாற்றங்கள் செய்யப்பட்டன. இக்கால நிர்வாக முறையிலே பத்துத்

திருவிழாவை நடத்தும் அங்கத்தவர்களும், பத்துக் குடியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு குடித்தலைவர், அல்லது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருடம் தலைவராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இத்தெரிவுகள் திருவுளச்சீட்டு எடுக்கும் முறையில் நடைபெற்றது. குடவோலை, திருவுளச்சீட்டு போன்ற பாரம்பரிய முறை மூலம் தெரிவு செய்யப்படுவதால், பாரபட்சமற்ற முறையில் தெரிவு இடம்பெறும். தலைவர் மட்டுமன்றி, செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளும் திருவுளச்சீட்டு முறையிலே தெரிவு செய்யப்பட்டதால், எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அத்தோடு, திருப்பணியிலே ஈடுபடவுள்ளோர் போட்டி மனப்பான் மையை அகற்றி, கிடைத்த சந்தர்ப்பத்தை தெய்வ வாக்காகக் கொண்டு, மகிழ்வோடு செயலாற்றவும் திருவுளச் சீட்டுமுறை வழிவகுத்தது.

இவ்வாறாக படிமுறை வளர்ச்சி நிலையில், பாரபட்சமற்ற நிர்வாக முறையிலே வளர்ச்சியடைந்து மக்களை நல்வழிப்படுத்த ஆதாரமாகவிருந்த பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயம், 1992 ஆம் ஆண்டு வன்செயலால் பாதிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் திரு. க. சண்முகராஜா அவர்கள் தலைவராக இருந்துள்ளார். இவரது முயற்சியினால், ஆலயத்தை மீண்டும் திருத்தியமைக்க வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சு, 25,000 ரூபா நிதியைப் பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய மீள் புனர்நிர்மாணப்பணிக்கு உதவியது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற உதவியோடு, ஊர்மக்களின் உதவியும் சேர்ந்து 2000 ஆம் ஆண்டில் சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது. இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்கள் பெரிதும் உதவியுள்ளார்கள்.

பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய நிர்வாக முறையை நோக்கும்போது, அக்காலத்திலே இயங்கிய பஞ்சாய

அமைப்புமுறையிலான நிர்வாகத்தை அவதானிக்கமுடிகின்றது. இப்பிரதேசத்து மக்களிடையே காணப்பட்ட பாரம்பரிய பழக்க வழங்கங்களில், ஒவ்வொரு குடியிலிருந்தும் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் இணைந்து முடிவெடுப்பவர்களாகக் காணப்பட்டுள் ளனர். உதாரணமாக, திருமணங்கள், பூப்புனித நீராட்டுவிழா, உறுப்பினர் தெரிவுகள், போன்ற சமுதாயம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடப்பனாரின் அனுமதியை முதலிலே பெறவேண்டும் என்ற மரபு காணப்பட்டுள்ளது.

இதிலே தட்டம் வைத்தல் (வெற்றிலை வைத்தல்) என்பது முக்கியமானது. முதல் தட்டத்தினை, தலைமை அடப்பனாருக்கும் ஏனைய அங்கத்தவர்களுக்கும் வைத்து அவர்களையும் அழைத்து அனுமதி பெறுவர். வீடுகட்டுதல், திருமணத்தைப் பேசி முடித்தல் போன்ற விடயங்களிலும் ஊர்மக்கள் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்வர்.

இவ்வாறான செயற்பாடுகள் தற்காலத்திலே அருகிவந்தபோதிலும், கிராமிய ஒற்றுமை இம்மக்களிடையே தொடர்வது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக எழுத்திலில்லாமல் மரபுரீதியான பாரம்பரிய வழக்கங்களை, இம்மக்கள் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். உதாரணமாக, கிராமத்திலே மரணவீடு ஒன்று நடைபெற்றால், வேளாண்மை அறுவடை நடைபெறுகின்ற காலமாக இருந்தாலும், அதனை நிறுத்திவிட்டு, அனைவரும் மரணநிகழ்ச்சியிலே கலந்து கொள்வதென்பது ஒரு நியதியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறான பல பழக்கவழக்கங்கள் தற்காலத்திலும் இங்கு நிகழ்ந்து வருவது மக்களின் ஒற்றுமை உணர்வையும், மனிதநேயத்தை மதிக்கும் கிராமிய பண்பாட்டின் அடிநாதத்தையும் உணர்த்துவதாகக் காணப்படுகின்றது.

பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். ஆரம்பகாலத்தில் குளக்கோட்டுமன்னனால் குடியேற்றப்பட்ட ஏழு குடிகளுக்கும் ஏழு

திருவிழா போக மீதி 1,2,4 ஆம் திருவிழாக்களில், 1ஆம் திருவிழா பொதுவாகவும், 2ஆம் திருவிழா உமணகுடியினராலும், 4ஆம் திருவிழா சலவைத்தொழிலாளி திரு.சின்னத்தம்பி அவர்களாலும் முன்பு நடத்தப்பட்டது. பின்னர் இவற்றிலும் மாற்றம் செய்யப்பட்டது. 1ஆம் திருவிழா வெள்ளக்குடியினருக்கும், 2வது திருவிழா ஆசாரி குடியினருக்கும், 4ஆம் திருவிழா மாலயன் குடியினருக்கும் வழங்கப்பட்டது.

1964 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இங்கு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. 7ஆம் திருவிழாவினைத் தொடர்ந்து சுவாமி, சப்பறம், தேர் ஆகியவற்றிலே எழுந்தருளி உலாவருவார். விசேடமாக யாழ்ப்பாணத்திலிருந்து பிரபல நாதஸ்வர வித்வான்கள் அழைக்கப் படுவதும் வழக்கமாக இருந்துள்ளது. திருவிழாக் காலத்தில் சின்னமேளம், நாட்டிய நாடகம், வாணவேடிக்கை போன்றனவும் இடம்பெறுவதால் இக்காலப் பகுதியில் ஊரே கொண்டாடி மகிழும்.

1985 ஆம் ஆண்டுகளின் முன்னர் பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்திலே, ஆவணி மாதத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெற்றுவந்துள்ளது. 1985 ஆம் ஆண்டின் பின்னர் பங்குனி உத்தரத்திலே தொடங்கி நடத்தப்படுகின்றது. இக்கிராமத்திலே நடைபெறும் காலபோக அறுவடையை மையமாகக் கொண்டே திருவிழா ஆரம்பமாகும் காலம் மாற்றப்பட்டது. 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாலயத்திலே பூசை செய்யும் ஐயருக்கு வேதனமாக, ஒவ்வொருவரும் பத்து நாள் நெல் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. பின்னர் இம்முறை மாற்றப்பட்டு வேதனமாகப் பணம் வழங்கப்படுகின்றது. பத்தாம் திருவிழா நிறைவேறிய பின்னர் பூங்காவனத் திருவிழா, தீமிதிப்பு, தீர்த்தம், அன்னதானம் என்பன நடைபெறும்.

நித்திய பூசைகளாகத் தினமும் மூன்று காலப்பூசை நடைபெறுவது வழக்கம். மற்றும் வருடாந்த மகோற்சவத்தோடு,

கந்தசஷ்டி விரதமும் மிகச் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.. ஆறு நாட்களும் விசேட அபிஷேகத்தோடு, திருவிழாவாக நடத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு திருவெம்பாவை, பிள்ளையார் காப்பு, கேதாரகௌரி காப்பு, சிவராத்திரி, புதுவருடப்பிறப்பு முதலானவைகளும், சிறப்பாக இவ்வாலயத்திலே நிகழும்.

கொட்டியாரப்பற்றிலுள்ள ஆலயங்களுள் இவ்வாலயம் ஆகம முறைப்படி முறையாக அமைக்கப்பட்ட ஆலயமாக விளங்குகின்றது. கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், தரிசனமண்டபம், ஆகியவற்றைக்கொண்டதாக இவ்வாலயம் கட்டப் பட்டுள்ளது. வசந்த மண்டபம், பாகசாலை என்பனவும் இவ்வாலயத் திலே அமைக்கப்பட்டுள்ளது. வைரவருக்குத் தனிக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

அழகிய தூபியுடைய கருவறையில் பிள்ளையார் சிலா விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மகாமண்டபத்தில் பிள்ளையார், வள்ளி, தெய்வானை சமேத சுப்ரமணியர் முதலான விக்கிரகங்கள் காணப்படுகின்றன. மூஷிகம், பலிபீடம் என்பன ஸ்நபன மண்டபத்தில் எழுந்தருளியுள்ளன. வாசலில் மணிக் கோபுரமும் அமைந்துள்ளது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னரே ஆகமமுறையுடன் கூடிய சிற்ப வேலைப்பாடுகளோடு, இவ்வாலயம் திகழ்ந்துள்ளது. இவ்வாலய வளர்ச்சிக்காகக் கிராமமக்கள் பலரும் காலத்திற்குக் காலம், தமக்கேற்ற முறையிலே தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

கோவில் அமைந்துள்ள காணியும், கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் மேடை அமைந்த புறவீதிப் பகுதியும் திரு.சி. தம்பாப்பிள்ளை சகோதரர்களால் வழங்கப்பட்டது. அறியக் கிடைத்த ஆதாரங்களின்படி, வைரவர் கோயிலை திரு.ப.முத்துக்குமார் குடும்பத்தினரும், மடப்பள்ளி மற்றும் புனருத்தாரணத்தை திரு.

ஆ. கனகரெட்ணம் குடும்பத்தாரும், மதில்களை 7, 8, 9, 10 ஆம் திருவிழாக்காரர்களும், விழா மண்டபத்தினை உமணகுடியினரும் அமைக்க உதவியுள்ளனர்.

அவ்வாறே, தெற்கு வாசல் மண்டபம் தோப்புச்சி குடியினராலும், முருகன் ஆலயம் திரு. கந்தையா, தவராசா ஆகியோரின் குடும்பத்தினராலும், மணிக்கோபுரம் திரு.பொ. அழகுதுரை குடும்பத்தினராலும், காரியாலயம் படைத்தார் குடியினராலும் நிறைவேற்றப்பட்டது. எழுந்தருளி பிள்ளையார் விக்கிரகம் திரு.செ. விநாயகமூர்த்தி குடும்பத்தினராலும், முருகன் விக்கிரகம் திரு.சி. கந்தையா குடும்பத்தினராலும் செய்யப்பட்டன. இவற்றைத்தவிர பொதுமக்களால் பல திருப்பணிகள் இன்றுவரை நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் நித்திய, நைமித்திய கருமங்கள் இனிதே நிறைவேறப் பலரும் உதவிவருகின்றனர். வயல்காணிகளாக ஒவ்வொரு ஏக்கர் நிலத்தை, திரு.செ.விநாயகமூர்த்தி குடும்பத்தினரும், திரு.மா.கனகசிங்கம் குடும்பத்தினரும் வழங்கியுள்ளனர். அத்தோடு மாடுகளையும் நிதிஉதவிகளையும் காலங்காலமாக வழங்கி, ஆலய வளர்ச்சியில் ஆர்வங்கொண்டு செயலாற்றியுள்ளனர்.


பள்ளிக்குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய நிர்வாகமுறை கிராமிய நிர்வாக முறையாகக் காணப்பட்டுள்ளது. ஆண்டவன் சமூகத்தில் அனைவரும் அவனது பிள்ளைகளே என்ற நோக்கிலே சாதி வேறுபாடின்றி அனைவரும் திருவிழாக்கள் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். தற்காலத்திலும் சாதியம் பார்த்து ஆலயவழிபாட்டிற்கு இடைஞ்சலாக இருக்கின்ற மக்களின் மனதிலே, இவ்வாறான ஆலய நடைமுறை ஒரு முன்னுதாரணமாக அமைவது குறிப்பிடத்தக்கது. அனைவரையும் ஒரே குடும்பமாக நினைக்கும் பரந்த மனப்பான்மை காரணமாக பதவிப்போட்டியின்றி, பெரியோரை

மதித்து, ஆலய நிர்வாகத்தை நடத்திவந்தமையை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

கோயிலின் வண்ணக்கர், கங்காணம் முதல் அடப்பன், மணியகாரன் என்ற முறைகளால் விழாக்காலங்களில் ஏற்படும் சர்ச்சைகளில் இருந்து விடுபட்டு, மகிழ்வோடு ஆலய விழாக்களை அனுபவிக்கும் சூழ்நிலையை, இவ்வாலயத்தோடு தொடர்புடைய பெரியவர்களும், நிர்வாகிகளும் ஏற்படுத்தியுள்ளமை, சிறப்பான அம்சமாகும்.

ஆலயத்தோடு தொடர்புடைய பத்துக் குடிகளும் சமமான வாய்ப்பைப் பெறும் வகையில் வழிசெய்ததோடு, அவரவர் பதவிக்காலங்களில் ஆலயத்தின் வளர்ச்சிக்கும், ஆலயத்தோடு தொடர்புடைய மக்களுக்கும், தன்னலமின்றிப் பணியாற்றும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலயநிர்வாகங்களும், நடைமுறைகளும் போட்டிகளோடும், பூசல்களோடும் திண்டாடும்வேளையில், இவ்வாறான நடைமுறைகள் ஏனைய ஆலயங்களுக்கும் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் அமைவது சிறப்பம்சமாகத் தோன்றுகின்றது.



# சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயம்

## சுழிபுரம், யாழ்ப்பாணம்

இலங்கையில் வழங்கும் சமயநெறிகளுள் சைவ சமயமே மிகப் புராதனமானது. ஆதிகாலத்தில் இருந்தே ஈழத்திலே, சிவாலயங்கள் பல நிலைபெற்றுக் காணப் பட்டுள்ளன. இதனை மகாவம்சக் குறிப்புக்களினாலும் மற்றும் தமிழ், சிங்கள, பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலுள்ள நூல்களினாலும், சாசனங்களினாலும் அறியலாம். ஆயினும், ஈழ வரலாற்றிலே காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அன்னியர் படையெடுப்புக்களும், அன்னிய மதச்செல்வாக்கும் சைவ மதத்தவர்கள், வேற்று மதங்களைத் தழுவ வழி வகுத்தது.

ஈழத்துள் அன்னியர் வருகையால் சைவ ஆலயங்கள், வேற்று மதத்தவரின் ஆலயங்களாக, ஆள்வோரின் உதவி யுடன் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறான நிலையி

னின்றும் தப்பி, தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்தியம்பும் பல ஆலயங்கள், வரலாற்று ரீதியாக வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் தமிழர்களின் வரலாற்றோடு தொடர்பு கொண்ட பல ஆலயங்களின் வரலாறுகளை வெளிக் கொண்டு வர முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்து சமுத்திரத்தால் சூழப்பெற்றிருக்கும் ஈழத்திருநாட்டின் எட்டுத் திசைகளிலும் தொன்மைச் சிறப்பு மிக்க சிவாலயங்கள் காணப்படுகின்றன. இச்சிவாலயங்கள் அனைத்தும் கடற் கரையோரமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. திருகோண மலையில் திருக்கோணேஸ்வரம், கீரிமலையில் நகுலேஸ்வரம், சிலாபத்தில் முனீஸ்வரம், மன்னாரில் திருக்கேதீஸ்வரம், கொழும்பில் பொன்னம்பலேஸ்வரம், காலியில் சந்திரேஸ்வரம், மட்டக்களப்பில் தான்தோன்றீஸ்வரம், சுழிபுரத்தில் சம்புநாதேஸ்வரம் என வரலாற்றுக்கு அப்பாற்பட்ட தொன்மையோடு பல ஆலயங்கள் அமைந்து காணப்படுகின்றன.

ஈழத்தின் ஆதிக்குடிகளாகிய திராவிடப் பழங்குடிமக்கள், சிவலிங்க வழிபாட்டிலே மிகுந்த ஈடுபாடுடையவர்களாக விளங்கியுள்ளனர். கி.மு. 543 ஆம் ஆண்டளவில் இலங்கையுள் காலடி எடுத்து வைத்த விஜயனின் வருகையின்போது, பஞ்ச ஈஸ்வரங்கள் காணப்பட்டதாகவும், இவற்றை விஜயன் புனர்நிர்மாணம் செய்ததாகவும் வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க பஞ்ச ஈஸ்வரங்களோடு, மேலும் பல சிவாலயங்கள் புராதனச் சிறப்பு மிக்கவையாக விளங்கியுள்ளன.

ஈழவரலாற்றோடு தொடர்பு கொண்ட பஞ்ச ஈஸ்வரங்களோடு, மேலும் பல சிவாலயங்கள் ஈழத்தமிழரின் ஆதிவரலாற்றை விளக் கும் மூலகங்களாகக் காணப்படுகின்றன. இவ்வாறான ஆலயங்களுள் ஒன்றாக விளங்குவது, சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் ஆலய மாகும். இவ்வாலயம் சரித்திரப் புகழ்வாய்ந்த சம்பில்துறையில் அமைந்துள்ளது. ஈழத்திருநாட்டின் சிரசுபோல விளங்கும்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில், வடமேற்குச் சமுத்திரக் கரையோரம் அமைந்துள்ள நிலப்பரப்பே, சம்பில்துறை என வழங்கப்படுகின்றது. இப்பிரதேசம், திராவிட இனத்தவரான ஈழத்தமிழரின் ஆதிவரலாற்றினை எடுத்தியம்பும் பிரதேசங்களுள் ஒன்றாகவும், ஈழத்தமிழரின் வரலாற்றை நிலைநிறுத்துவதற்கான எச்சங்கள் பல மறைந்துள்ள இடமாகவும் திகழ்கின்றது.

சம்பில்துறை ஈழத்தமிழ் மக்களாலும், வரலாற்று ஆய்வாளர் களாலும் பெரிதும் அறியப்படாத ஒரு இடமாகவே இன்றுவரை காணப்படுகின்றது. இப்பிரதேசம் அமைந்திருக்கும் இட அமைப்பினையும், இந்நிலைக்குக் காரணமாகக் கருதலாம். சம்பில்துறை, பொன்னாலைக் கடற்கரைக்கும், மாதகல் கடற் கரைக்கும் இடைப்பட்ட பகுதியாகும். நெடுங்காலமாக இப் பிரதேசம் பற்றைக்காடாகவே காட்சி அளிக்கின்றது. பொன்னாலை வாழ் மக்களும், மாதகல் பிரதேச மக்களும் பண்டத்தரிப்பு வழியாகவும், சுழிபுரம் வழியாகவும் தேவை நோக்கிப் பிரயாணம் செய்வதால், சம்பில்துறைப் பிரதேசம் தேவையற்ற பகுதியாகக் காலப்போக்கில் மாறியது.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு, ஈழத்தின் புகழ்பெற்ற பட்டினங்களுள் ஒன்றாகச் சம்பில்துறை விளங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் இந்தியாவின் தமிழகத்திலுள்ள மக்கள் ஈழப்பிரதேசங்களில் குடியேறுவது சாதாரண நிகழ்வாகக் காணப்பட்டது. இவ்வாறான குடியேற்றங்கள் நிகழ்வதற்கு இந்திய-ஈழ நிலஅமைப்பும் ஒரு காரணமாக விளங்கியது.

கன்னியாகுமரிக்குத் தெற்கே இன்று காணப்படும் இந்துமாகடல் பகுதி அக்காலத்திலே மண்செறிந்த நிலப்பரப்பாகக் காணப்பட்டது. கிழக்கே பர்மா தொடங்கி தெற்கே சீனா வரையிலும், மேற்கே ஆபிரிக்காவின் கிழக்குத் தெற்குக்கரை வரையிலும், வடக்கே விந்தியமலைவரையிலும் விரிந்திருந்த நிலப்பரப்பே

குமரிக்கண்டம் என அழைக்கப்பட்டது. இப் பிரதேசத்தில் குமரிக்கோடு என்ற மலையும் இருந்துள்ளது. இவற்றையெல்லாம் கடற்கோள் தன்வயப்படுத்திவிட்டது. "ப∴றுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள.." என்ற வரிகளின் மூலம் அன்றை நிலப்பரப்புக்கள் கடல்வாய்ப்பட்டதை அறியமுடியும். இவ்வாறான கடற்கோள் கி.பி. 79 ஆம் ஆண்டு நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு பலதடவைகள் ஏற்பட்ட கடற்கோள்கள் தமிழகத்திற்கும், ஈழத்தின் வடபகுதிக்குமான நிலப்பரப்பில் பெருமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. போக்குவரத்து வசதிகள் வசதியாக இருந்த காலத்தில், அக்காலப்பகுதியில் தமிழகத்திலிருந்து வாணிபத்தின் நிமித்தம் வந்தவர்களுள் ஒரு சிலர், தமது வாழ்விடங்களாகவும் ஈழத்தைக் கொண்டுள்ளனர். இவ்வாறு வந்தவர்களுள் ஈழத்தின் துறைமுகக் கரையோரங்களில் வாழ்ந்த தமிழ் மக்களுள் செட்டியார் வம்சாவழியினர் முன்னிலை வகுத்தனர்.

பண்டைய வரலாற்றிலே தென்னிந்தியாவிலுள்ள செட்டிநாட்டுச் செட்டிமார்கள், காவிரிப் பூம்பட்டினத்தில் பண்டமாற்று வியாபாரத்தில் ஈடுபட்டுப் பல தேசத்தவர்களுடனும் தொடர்புகொண்டு காணப் பட்டனர். இவர்களின் சந்ததியினரே சம்பில்துறைப் பிரதேசத்திலும் தமது வாழ்விடங்களை அமைத்து ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். சம்பில்துறைத் துறைமுகம் அடங்கிய இப்பிரதேசம், சோழபுரம் என்றிருந்து பின்னர் சோழியபுரம் என மருவி, தற்காலத்தில் சுழிபுரம் என அழைக்கப்படுகின்றது. "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்றொரு வழக்கு இன்றும் தமிழர்களிடையே காணப்படுகின்றது.

அன்றைய சோழபுரத்தின் வடமேற்குக் கரையோரம், செட்டிகுறிச்சி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இன்றும் அப் பெயர் வழக்கிலுள்ளது. எனினும் இப்பகுதியில் வாழ்ந்த செட்டியார் எனும் பெருங்குடி மக்கள் காலகதியில் அருகிப்போய்விட்டனர்.

ஒரு குறிப்பிட்ட பகுதியினர் ஒரு தேச ஆதிக்கத்தைத் தம் வயம் வைத்திருப்பதும் காலப்போக்கில் அந்த ஆதிக்கம் மறைவதும் வரலாறு கண்ட உண்மையாகும். சோழபுரம், செட்டிகுறிச்சி போன்ற பிரதேசங்களின் வரலாற்றுப் பின்னணியை அறிவதன் மூலமே, வரலாற்றுப் பெருமை மிக்க சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயத்தைப்பற்றியும் அறியமுடியும். செட்டியார் பெருமக்கள் ஆழ்ந்த சைவசமயப் பற்றுடையவர்கள். தமது வாணிபத் தொழிலைச் செய்யச் சென்ற நாடுகளிலெல்லாம், சைவாலயங்களை அமைத்துத் தமது வழிபாட்டைத் தொடர்ந்துள்ளனர். இவற்றிற்கு உதாரணமாக இலங்கையின் பல்வேறிடங்களிலும் காணப்படும் சைவாலயங்கள் சான்று பகர்கின்றன. குறிப்பாகக் கொழும்புப் பிரதேசத்திலுள்ள செட்டியார்தெரு, வெள்ளவத்தை போன்ற இடங்களிலே காணப்படுகின்ற சைவக்கோயில்கள் மேற்கூறிய கருத்திற்குச் சான்றாக இன்று வரைக்கும் காணப்படுகின்றது.

ஆயினும், சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் ஆலயம், செட்டிமார்களால் பரிபாலிக்கப் படுவதற்கு முன்பிருந்த நிலைபற்றி அறிவது அவசியமாகும். இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசத்தில், தொல்லியல் ஆய்வுக்குரிய தகவல்கள் பல காணபபட்டபோதிலும், நாட்டுநிலைமை காரணமாக ஆய்வாளர்கள் தமது பணியைத் தொடர முடியாதநிலை காணப்படுகின்றது. எனினும் புராணவரலாற்றுக் குறிப்புக்களின்மூலம் பல தகவல்களை அறிய முடிகின்றது.

புராண, வரலாற்றுக்குறிப்புக்களின் துணையோடு, மண்மூடிக்கிடந்த திருக்கேதீச்சரம் ஆலயம் வெளிக்கொண்டு வரப்பட்டமை, புராணவரலாற்றுக் கூற்றுக்களிலும் வரலாற்றுத் தகவல்கள் பின்னப்பட்டிருப்பதை உணர முடியும். ஒரு நாட்டின் வரலாற்றைச் சரித்திர வரலாறு கூறுவதுபோல ஒரு ஆலயத்தின் வரலாறு, அக்காலச் சமூகநிலை போன்ற பல தகவல்களைத் தரக்கூடியவையாக புராணங்களும், தல புராணங்களும் காணப் படுகின்றன.

இந்தவகையிலே சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயத்தின் ஆரம்பகாலத் தோற்றம்பற்றி, பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய தட்சண கைலாயபுராணத்திலே, சுயம்புநாதர் படலத்திலே விரித்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஏட்டில் எழுதி வைக்கப்பட்ட புராணக் கதைகள், அன்றைய மக்கள் மத்தியிலே காணப்பெற்ற ஆன்மீக உணர்வையும், நாட்டு நிலையையும் எடுத்துக் காட்டுவதோடு பல விடயங்களை அறியக்கூடியதாக அமைந்துள்ளது. புராணம் என்பது புராதனம், தொன்மை போன்ற பல கருத்துக்களைத் தன்னுள் அடக்கியுள்ளது.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் சம்பில்துறை, பட்டின மாக மிளிர்ந்தபோது இப்பகுதியில் வாழ்ந்த வணிகச்செட்டிமார் இங்குள்ள ஆலயத்தைப் பேணியுள்ளனர். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும்போது இம்மக்கள் வருகைக்கு முன்னரே புராதன பெருமை கொண்ட சிவாலயமாக இவ்வாலயம் காணப் பட்டுள்ளது என்பதைத் தட்சிணகைலாய புராணக் கூற்றுக்களின் மூலம் உய்த்துணர முடியும். இப் புராதன ஆலயத்தின் தோற்றம் பற்றித் தட்சிணகைலாயபுராணம் விரித்துரைக்கின்றது.

இப்புராணத்தில் இவ்வாலயம், சுயம்புநாத சேத்திரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. வேதவியாசருடைய மாணாக்கராக விளங்கியவர் சூதமுனிவர். இவர் சகல சாத்திரங்களையும் கற்றுணர்ந்த பெரு ஞானி. இவரது மாணவர்கள் இவரிடம், “சூதரே, பாயிரத்திலே சுயம்பு சேத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ள தலத்தின் சிறப்புக்களை அறிய விரும்புகின்றோம்” என்று வினவுகின்றார்கள். அதற்குப் பதிலளித்த சூதர், “சுயம்பு சேத்திரத்தினுடைய சிறப்பைக் கேட்பதால் பாவங்கள் அழியும். தரிசிப்பதால் மோட்சம் கிடைக்கும். அத்தகைய சுயம்புநாத தல மான்மியத்தை அனைவருக்கும் கூறுகின்றேன்” என உரைத்து விளக்குகின்றார்.

முன்னொரு காலத்திலே வைரவன் என்னும் பெயருள்ள வேளாளன் ஒருவன் மிகவுந் தரித்திரனாயும், வேளாண்மை செய்து

சீவனஞ் செய்பவனாகவும் இருந்தான். மனைவி, மக்களோடு, ஆடு, மாடுகள் யாவற்றையும் தனது வேளாண்மைத் தொழிலால் பாதுகாத்து வந்தான். ஒரு நாள் வைரவன் காட்டை வெட்டித் திருத்தித் தானியங்களை விதைக்க எண்ணி, காட்டை அழித்து தீமூட்டி அழித்தான். அப்பொழுது குறிப்பிட்ட சிறிதிடம் எரியாமல் இருந்தது. எரியாமல் அவ்விடம் இருந்தமைக்குக் காரணம் யாது? என்பதை அறிய விருப்பங் கொண்டு, கைக் கோடாலியால் அவ்விடத்தை வெட்டினான்.

அப்போது, அந்த இடத்திலிருந்து இரத்தம் வெள்ளமாய்ப் பெருகியது. இதனை உற்றுநோக்கியபோது, அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் காணப்பட்டது. அச்சிவலிங்கத்தின் சிரசில் கோடாலி பட்டபோது, இரத்தம் பெருகியதை வைரவன் உணர்ந்தான். உடனே அச்சங் கொண்டு இது என்ன அதிசயம் எனச் சிந்தித்து, ஊர்மக்களை அழைத்து வந்தான். ஊர்மக்களும் சிவலிங்கத்தின் சிரசிலிருந்து, உதிரம் பெருகுவதைக் கண்டு வியந்தனர். எங்களை ஈடேற்றும் பொருட்டன்றோ தயாநிதியாகிய சிவனே இவ்விடத்தில் வெளிப்பட்டார் என்று மகிழ்வுற்றனர். உடனே தமது ஆபரணங்களை கழற்றி, இவை சிவனுக்குரியவை எனச் சிவார்ப்பணம் செய்துவிட்டுத் தோத்திரம் செய்து வணங்கித் தமதிடம் சென்றனர்.

அவ்வேளையில், இப்பிரதேசத்தை ஆட்சி செய்த வன்னிய ராசன் இச்சம்பவத்தைக் கேள்வியுற்றுத் தமது மந்திரி பிரதானிகளை அனுப்பி, சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலே, சிவாலயம் கட்ட ஏற்பாடு செய்யும்படி கூறினான். அவ்வாறே அவர்களும் சிற்பநூலில் வல்லவர்களாகிய சிற்பிகளை வரவழைத்து, சிவாகம விதிப்படி கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலானவைகளையும், பிரகாரம், கோபுரம், பரிவாரதேவர் போன்றோர்க்குரிய ஆலயங்களையும் அமைப்பித்தனர்.

ஆதி சைவப் பிராமணர்களைக் கொண்டு, சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணமியில், சோமவார சுபதினத்தில் சுப

முகூர்த்தத்தில் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தி, நித்திய நைமித்திய பூசைகளும் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தனர். அத்தோடு, எப்பொழுதும் பூசை, திருவிழாக்கள் தடையின்றி நடைபெற விளைநிலங்களையும், கிராமங்களையும் இவ்வாலயத்திற்கு மானியமாக வழங்கினர். வைரவனால் தான்தோன்றீஸ்வரராகக் கண்டுபிடிக்கப்பட்டமையால், அந்த லிங்கத்தினைத் தான்தோன்றியநாதலிங்கம் என அழைத்தனர்.

முற்காலத்திலே அகத்தியமுனிவர் இமயமலையரசன் புத்திரியின் திருக்கல்யாணத்தின்போது, பரமசிவனது அனுமதிப்படி பொதியமலைக்கு போகும் பயணத்தில், திருகோணமலை என்னும் தட்சிணகைலாயத்தை அடைந்து, மகாவலிகங்கையில் மூழ்கி, விதிப்படி நித்திய நைமித்திய கருமங்களை முடித்துக் கொண்டார். பின்னர் கைலாசபதியை வணங்கித் துதித்து, விடை பெற்றுக் கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டார். அங்கிருந்து சுயம்புநாத சேத்திரத்தையடைந்து, சுயம்புலிங்கப் பெருமானைப் பூசித்து வணங்கினார். பின்னர் திருக்கேதீஸ்வரத் தலத்தை அடைந்து, அங்கே சுவாமி தரிசனம்செய்து பின் பொதியமலையை அடைந்தார். இவ்வாறு அகத்தியமுனிவரால் வழிபடப்பட்ட இச் சுயம்பு சேத்திரம் சிறப்பானது என்று சூத முனிவர் கூறி முடித்தார்.

ஆரம்பகாலத்தில் சுயம்புசேத்திரம் என அழைக்கப்பட்ட இவ்வாலயம், கடற்கோள்களின் காரணமாக அழிய நேரிட்டது. இவ்வேளையில் பாதுகாக்கப்பட்ட சுயம்புநாதரை, செட்டிமார் பாதுகாத்து வழிபாடியற்றி வந்துள்ளனர். இவர்கள் காலத்தில் சுயம்புநாத சேத்திரம் என்ற பெயர் மருவிச் சம்புநாதர் ஆலயமாக மாறியது. இப்பெயருடனேயே தற்காலத்திலும் இவ்வாலயம் நிலைபெற்றுள்ளது.

தட்சிணகைலாய புராணம் கூறும் ஆலயம் கடற்கோளுக்கு இரையானபோது, மூல விக்கிரகமான சிவலிங்கசொரூபத்தை மீட்டு கடற்கரையை அண்டிய நாவற்காட்டில் எழுந்தருளச் செய்ததாகவும்,

இயற்கையின் சீற்றத்தினால், பிற்காலத்தில் இவ்வாலயத்தின் இருப்பிடம், பல்வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும், செட்டியார் பரம்பரையினர் கூறியுள்ளனர்.

தட்சிணகைலாய புராணம் வடமொழியில் இயற்றப்பட்டது. இதனை யாழ்ப்பாணத்து வதிரி வித்வான் சி. நாகலிங்கம்பிள்ளை அவர்கள் தமிழிலே மொழிபெயர்த்துள்ளார். தட்சிண கைலாயத்தின்மூலம் மறைந்துபோன பல ஆலயங்களைப் பற்றிய ஆதாரங்களைப் பெறமுடிகின்றது. இதிலே பதினெட்டாவது படல மாகக் காணப்படுவது சுயம்புநாதர் படலமாகும். இப்படலத்திலே ஆதி சுயம்புநாதர் சேத்திரம்பற்றிய மேற்கூறிய குறிப்புக்கள் அடங்கியுள்ளன.

சில வேளைகளிலே வரலாறுகள் மறைந்தோ, மறைக்கப் பட்டோ காணப்படுமிடத்து, இலக்கியக் குறிப்புக்களும், புராணக் குறிப்புக்களும் வரலாறாக அமைவதுண்டு. ஈழத்தமிழர்களின் தொன்மையான வரலாறுகள், இலக்கியங்களிலும், புராணங்கள், தலபுராணங்களிலும் மிகுதியாகவே காணப்படுகின்றது. எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண் பதறிவு என்பதற்கிணங்க, உண்மைக் கருத்துக்களைக் கண்டறிவது அவசியமாகும்.

வரலாற்றுரீதியிலும் சுயம்புநாதசேத்திரத்தின் வரலாறு சம்பந்தப்பட்டுள்ளது. இவ்வாலயம் இலங்கையை ஆட்சி செய்த தேவநம்பியதீசன் காலத்திற்கு முந்திய தொன்மைமிக்கதாகக் காணப்படுகின்றது. இக்கூற்றிற்கு ஆதாரமாகச் சரித்திர, வரலாற்றுக் குறிப்புக்கள் உதவுகின்றன. இலங்கையை ஆட்சி செய்த தேவநம்பியதீசனுடைய ஆட்சிக்காலம், கி.மு. 247 - கி.மு.207 வரையானதாகும். விஜயனின் வருகை திராவிட இன மக்களைப் பிளவுபடவைத்தது போல, தேவநம்பியதீசனுடைய ஆட்சியில் ஈழத்திலே வாழ்ந்த திராவிடஇனமக்கள், புதியமதம், புதியமொழி, அன்னிய கலாச்சாரம் ஆகியவற்றைப் பின்பற்ற நேர்ந்தது.

இம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் ஈழத்துள் நுழைந்த புத்த மத வருகையும், பாளிமொழியின் தாக்கமும், சைவசமயத்தையும், அதைப் பின்பற்றிய மக்களையும் பெரிதும் பாதித்துள்ளது.

தேவநம்பியதீசன் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துள்ளான். நாட்டிலே காணப்பட்ட அரசியல் குழப்ப நடவடிக்கைகளினின்றும் பாதுகாப்புத்தேடி, வடஇந்தியாவில் உள்ள, மகதநாட்டை ஆண்ட அசோகச் சக்கரவர்த்தியின் உதவியை நாடினான்.

சைவமதத்தவனாகிய அசோகன், கலிங்கப் போரின் விளைவாகப் புத்தமதத்தைத் தழுவ நேர்ந்தது. அத்தோடு அம்மதத்தை உலகெங்கும் பரப்பவும் முற்பட்டான். அசோகனுடன் நட்புக் கொண்ட தேவநம்பியதீசன் அதற்குக் கைமாறாக ஈழத்துள் பௌத்தமதம் பரவ உதவி செய்தான். இதன் அடிப்படையில், தேவநம்பியதீசன் காலத்திலேயே அசோகனின் மகனாகிய மகிந்தனும், மகளாகிய சங்கமித்தையும் பௌத்த மதத்தைப் பரப்பும் நோக்குடன் ஈழத்திற்கு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம்பகுதி முற்காலத்திலே சம்புத்தீவு, நாவலந்தீவு என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. இங்குதான் மகாவம்சம் குறிப்பிடும் சம்புகோளப்பட்டினம் காணப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள துறைமுகம் சம்பில்துறை எனப்பட்டது. கடல் கொண்டதாகக் கருதப்படும் இப்பட்டினம் போக்குவரத்து, வியாபாரம் ஆகியவற்றின் முக்கிய துறையாக விளங்கியுள்ளது.

அசோகன் மகளாகிய சங்கமித்தை வெள்ளரச மரக் கிளையுடன் இத்துறையினூடாகவே ஈழத்திற்குள் காலடி வைத்த தாக மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. இக்காலப்பகுதியில் இவ் விடத்திலே சம்புநாதேஸ்வரம் காணப்பட்டுள்ளது. இவ்விடத்தில் வாழ்ந்த வணிகச் செட்டிமார்கள் மற்றும் ஈழத்திராவிட மக்களின் வழிநடத்தலின் பேரிலேயே சங்கமித்தை அனுராதபுரத்தை

அடைந்துள்ளாள். சம்புநாதேஸ்வரம் அமைந்திருந்த சம்பில்துறை, அக்காலத்திலே பிரபல்யம் பெற்ற துறையாக விளங்கியமைக்கு மற்றுமொரு வரலாற்றுச் சான்று உண்டு. முதலாம் கஜபாகு மன்னன் இலங்கையை கி.பி. 113- 135 வரை ஆட்சி செய்துள்ளான். இலங்கையில் கண்ணகி வழிபாட்டினை அறிமுகப்படுத்தியவன், முதலாம் கஜபாகு மன்னன். இந்தியாவில் சேரநாட்டை ஆண்ட சேரன் செங்குட்டுவன் காலத்திலேதான் கற்புக்கரசியாம் கண்ணகிக்கு ஆலயம் அமைக்கப்பட்டு, கண்ணகி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பெற்று கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்குப் பல தேச அரசர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. முதலாம் கஜபாகு மன்னனும் தனது பரிவாரங்களுடன் சென்று, இவ்விழாவிலே கலந்து கொண்டான். இம்மன்னன் சம்பில்துறையூடாகவே தனது பயணத்தை மேற்கொண்டுள்ளான்.

பின்னர் சேரநாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய பொழுது, கண்ணகியம்மன் கற்சிலைகளையும், கொண்டு வந்தான். ஈழத்திற்குத் திரும்பியபொழுது, சம்பில் துறையில் வாழ்ந்த மக்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டதோடு, அங்கு வாழ்ந்த செட்டிமார்களிடம் ஒரு கண்ணகி கற்சிலையையும் கொடுத்துச் சென்றுள்ளான்.

சம்பில்துறை சம்புநாதரைப் பூசித்து வந்த செட்டிமார்களே, இந்தக் கண்ணகி அம்மன் சிலைக்கும் கோவில்கட்டிப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்துள்ளனர். அக்காலத்திலிருந்து 2000 ஆம் ஆண்டு முடியும்வரை பரம்பரை பரம்பரையாக ஆண்வழி உரித்துடையோர் இக் கண்ணகி அம்மன் கோவிலையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். சம்பில்துறை சம்புநாதேஸ்வரம் கடற்கோளால் பாதிக்கப்பட்டது போன்று, கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் நிகழ்ந்துள்ளது.

விசேட சேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

19 ஆம் நூற்றாண்டில் செட்டிகுறிச்சியில் கண்ணகி அம்மனுக்கு ஆலயம் மீண்டும் அமைக்கப்பட்டது. இவ்வாறான வரலாற்றுத் தொடர்புடைய சம்பவங்கள் பல வரலாற்றுப் புகழ்மிக்க சம்பில்துறையோடு தொடர்புப்பட்டுள்ளது. இவ்வாறான தொடர்புகள், சம்பில்துறையின் தொன்மையையும், இப்பிரதேசத்திலே வாழ்ந்த திராவிட மக்கள் மற்றும், குடியேறிய மக்கள் மேற்கொண்ட சிவலிங்க வழிபாடு, மற்றும் வழிபாட்டு முறைகளையும், இப்பிரதேசத்திலே காணப்பட்ட வரலாற்றுப் பெருமைமிக்க சம்புநாதேஸ்வரர் சிவாலயத்தின் தொன்மையையும் எடுத்துக் காட்டுவதாகக் காணப்படுகின்றது.

ஈழத்தமிழரின் 2500 ஆண்டுகால வரலாற்றைப் பிரதிபலிக்கும் சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயம், மக்கள் அறியாத ஆலயமாகக் காணப்படுகின்றது. 2500 ஆண்டுகளாக 60 தலை முறைகளுக்கும் மேலாகப் பரம்பரை பரம்பரையாக ஒரு தனிக் குடும்பச்சொத்தாக, ஏகபோக உரிமையாக சம்புநாதேஸ்வரர் ஆலயம் இருந்தமையே இத்தகைய நிலைமைக்குக் காரணமாகக் கருதப்படுகின்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க சம்பில்துறைப் பட்டினத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த சம்புநாதேஸ்வரர் சிவாலயம், எண்ணிறந்த தடவைகள் இடம்மாறிப் பல இடங்களில் வழிபாடு செய்யப்பட்டும் வந்துள்ளது.

எனினும் கி.பி. 1820 ஆம் ஆண்டு தொடக்கம், சாத்தா வோலையில் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. தமிழீழப்பகுதியில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெறும் யுத்தம் காரணமாகச் சைவாலயங்கள் பெரிதும் பாதிப்படைந்தன.

குறிப்பாக, யாழ்குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் மட்டும் 800க்கும் மேற்பட்ட ஆலயங்கள் பாதிப்பிற்குள்ளாகிக் காணப் படுகின்றது. 1992 ஆம் ஆண்டு சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயமும் இராணுவத்தினரின் குண்டுவீச்சுத் தாக்குதலில் மிகப்

பாரதூரமாகப் பாதிப்படைந்தது. நவக்கிரக மூர்த்திகள் உட்பட ஆலயமே சுக்கு நூறாகித் தரை மட்டமாக்கப்பட்டது. இதன்பின்னர் சிறு கோவிலொன்றினைத் தற்காலிகமாக அமைத்து, சம்புநாதரை எழுந்தருளச் செய்தனர்.

சுழிபுரம் (அன்றைய சோழபுரம்) கிராமத்தின் வடமேற்கெல் லைப் பிரதேசமாக விளங்கிய பரந்த செட்டிக் குறிச்சிப் பகுதியில், அன்று செல்வப் பெருக்கோடு வாழ்ந்த மக்கள் சைவச் செட்டி யார்கள். இவர்களின் ஒரு குடும்பப் பரம்பரை ஆண்வழி உரிமைச் சொத்தாக, சம்புநாதேஸ்வரர் ஆலயம் இருந்து வந்துள்ளது. தற்காலத்தில் இம் மக்கள் அருகி, அயல்நாடுகளுக்கும், வெவ்வேறிடங்களுக்கும் சென்றுள்ளனர். ஆலயத்தைப் பராமரித்த கடைசிக் குடும்பம், 11.07.1999 ஆம் ஆண்டு ஆலயத்தின் சொத்துக்கள் உட்பட அனைத்துப் பொறுப்புக்களையும், அயல் கிராமங்களின் மக்களை மகாசபையாகக் கூட்டி, 11 உறுப்பினர்களைக் கொண்ட பரிபாலன சபையிடம் கையளித்துள்ளது.

ஈழத் தமிழரின் ஆதி வரலாற்றிற்குச் சான்றாக விளங்கும் சம்பில்துறைப் பட்டினம், தென்னிந்திய கடற்கரையில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் போலப் பஞ்சபூதங்களின் சீற்றத்துக்குள்ளாகி, சமுத்திரத்தோடு சங்கமமாகிவிட்டது.

ஆயினும், சம்பில்துறைப் பட்டினமும், அங்கு அமைந்திருந்த அருள்மிகு சம்புநாதேஸ்வர புராதன ஆலயத்தின் தொன்மையையும் வெளிக் கொண்டுவரவேண்டிய பணி ஆய்வாளர்களுடையது. அமைதி நிலவிய காலத்தில் இப்பிரதேசத்தில் ஆய்வுவேலைகள் நடைபெற்றுப் பல தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாக இக்கோவிலோடு தொடர்புடையோர் கூறியுள்ளனர்.

இவ்வாலயம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதோடு, தீராத நோய்களைத் தீர்க்கும் ஆற்றல் பெற்ற ஆலயமாகவும் விளங்கி யுள்ளது. வேண்டுவோர்க்கு வேண்டுவன அருளும் முழுமுதற்

கடவுளின் அருள் பெற்ற பலரின் வாழ்க்கை வரலாறு இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், சம்புநாதேஸ்வரத்திற்கு அருகாமையில் ஒரு சைவச் செட்டியார் குடும்பம் வாழ்ந்து வந்தது. இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகளும், கார்த்திகேசு என்ற மகனும் இருந்தனர். கடைசியாகப் பிறந்த ஆண்குழந்தை தீராத நோயால் அவதிப்பட்டது. கும்மல், பிரட்டுநோய் காரணமாகப் பாடசாலை சென்று படிக்க முடியாதநிலை காணப்பட்டது. இக்காரணத்தினால் மூன்றாம் வகுப்புடன் படிப்பை நிறுத்த நேர்ந்தது.

இந்நிலையிலே சில்லாலை என்னும் கிராமத்தில் ஞானவைரவர் ஆலயமொன்றிலே பூசை செய்து வந்த பூசாரியிடம் அருள்வாக்குக் கேட்கச் சிறுவனை அழைத்துச் சென்றனர். அருள் வாக்கிலே, சிறுவனின் நோய் மாறுவதற்கு மருந்து கிடையாது என்றும், இறைவனின் கருணையால் மட்டுமே நோய் தீரும் எனவும் கூறப் பட்டது. பல ஆலயங்களுக்குச் சிறுவனை அழைத்துச் சென்ற போதிலும், அவனைப் பீடித்திருந்த கும்மல், பிரட்டுநோய் காரணமாக ஆலயங்களிலே தங்குவதிலே பிரச்சினை ஏற்பட்டது.

இறுதியாகக் கார்த்திகேசு என்ற இச் சிறுவன், தனிக்குடும்பச் சொத்தாகக் காணப்பட்ட சம்புநாதர் சிவாலயத்திலுள்ள சிறு மடத்திலே தங்கியிருந்து, அங்கிருந்த பூசாரியார் கூறியபடி தினமும் பிராணாயாமம் செய்து வந்தார்.

கீரை மூலிகைகள் சேர்த்த ஒருநேர உணவு, பிராணாயாமம், யோகப் பயிற்சி, இவற்றோடு சிவனை இடையறாது தியானித்தும் வந்தார். பின்னாளில் இவர், யோகி கார்த்திகேசு என அனைவராலும் அழைக்கப்பட்டார். இறையருள் கிடைக்கப்பெற்று, பிரம்மச்சரிய விரதம் காத்த, யோகி கார்த்திகேசு அவர்கள் 1986 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

புகழ்பெற்ற உரையாசிரியரான அமரர் யோகி கார்த்திகேசு அவர்கள் கந்தபுராணம், பெரிய புராணம், சிவராத்திரி புராணம்

முதலியவற்றிற்கு மிக நுட்பமாகவும், சுவைபடவும் உரைகூறிவந்துள்ளார்.

தமிழீழ தாயகத்திலே வாழ்ந்த பேரறிஞர்களுள் ஒருவராக அமரர் யோகி கார்த்திகேசு அவர்கள் விளங்குகின்றார். இத்தகைய பேற்றினை அருளியவர், சம்பில்துறையில் எழுந்தருளியுள்ள சம்புநாதேஸ்வரர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற ஆன்றோர் வாக்கு, யோகி கார்த்திகேசுவின் வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்காலத்தில் சம்பில்துறைப் பிரதேசம், சனநடமாட்டமற்ற காட்டுப்பிரதேசமாக விளங்குகின்றது. பல தடவை திருத்தி எழுதப்பட்டு, சிங்கள மக்களால் வரலாற்று நூல் எனக் கருதப்படும், புராணவகைப் பாளிமொழி நூல் மகாவம்சம். இந்நூலிலே கூறப் பட்டுள்ள கூற்றுக்களை மூலதனமாக வைத்து, சம்பில் துறைப்பிரதேசத்தில், பெளத்தமதம் சார்ந்த பல செயற்பாடுகள் நிலைபெற்றுள்ளன. சம்பில்துறையில், பலகோடி ரூபா செலவுசெய்து, புத்தவிகாரை அமைத்தும், பர்ணசாலைகள், பூஞ்சோலைகள் உருவாக்கியும், சங்கமித்தபுர எனப் பெயரிட்டும், மிகப் பெரிய புத்த ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் தமிழ்மக்களின் நடமாட்டமும் தடை செய்யப்பட்டுள்ளது.

பல பெருமைகளைப் பெற்று தட்சிணகைலாயம், மகாவம்சம் ஆகியவற்றிலே குறிப்பிடப்பட்ட சம்பில்துறைப் பட்டினத்திலே அமைந்திருந்த, சுயம்பு சேத்திரமான சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் சிவாலயம், பழைய தொன்மையை இழந்து, தனது தொன்மையை நிலைநாட்ட முடியாத நிலையிலே காணப்படுகின்றது. இந்நிலையில், இவ்வாலயத்தின் வரலாற்றினை மீளக்கொண்டுவரும் பணியில் பலர் ஈடுபாடுகொண்டு உழைத்து வருகின்றனர்.

இப் பெருமக்களின் முயற்சியால், வரலாற்றுப் புகழ்மிக்க சம்புநாதேஸ்வரர் ஆலயப் புனர்நிர்மாணப் பணிகள் மீண்டும் 2000 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பமாகியது. குண்டுவீச்சுக்குப்

பலியாகி முற்றுமுழுதுமாகச் சேதமடைந்த பழைய கோவிற் கட்டிடங்களை முற்றாக அகற்றி, புதிதாகக் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும் நிதிப்பற்றாக்குறை காரணமாக இவ்வாலயத்தின் பணிகளிலே காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

அண்டகோளங்கள் அனைத்தும் ஐம்பெரும்பூதங்களிலே உள்ளடங்கிக் காணப்படுகின்றது. அண்டசராசரங்களையும், அவற்றுள் கோடானுகோடி ஜீவன்களையும், ஐந்தொழில் மூலம் படைத்துக் காத்து, அருள்புரிபவர் முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமான். மணிவாசகப்பெருமான் சிவபுராணத்திலே, 'நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த' என்று பாடிப் பரவியுள்ளார். எல்லாம் வல்ல சிவபிரானுக்குப் பஞ்சமுகன் என்ற பெயரும் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது.

குண்டுவீச்சுத் தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்ட சம்பில் துறை சம்புநாதர் ஆலயத்தின் ஆரம்பகால வரலாற்றைக் கருத்தில் கொண்டு, ஈசான்யம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், சத்யோசாதம் என்ற அமைப்பில், பஞ்சமுக சுயம்புநாதசுவாமியை மூலவராகக் கொண்டு மீண்டும் புதிய ஆலயம் அமையவுள்ளது. நாலாபுறமும் நின்று பக்தர்கள் ஒரே நேரத்தில் பூசை வழிபாடுகளைக் காண்பதற்கு வசதியாகப் பஞ்சமுக சிவலிங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

சம்பில்துறை அருள்மிகு சம்புநாதேஸ்வரர் ஆலயத்தின் தொன்மையை நிலைநிறுத்தப் பரிபாலனசபை நிறுவப்பட்டுள்ளது. இச்சபையில், பலர் தொண்டாற்றுகின்றனர். தொண்டர் எனப் பலராலும் அன்புடன் அழைக்கப்படும், பெரியவர் திரு.கு.வி. கந்தசாமி அவர்கள் தலைவராகவும், திரு.சிச.சிவானந்தராசா, திரு.க.கனகசபை ஆகியோர் இணைத் தலைவர்களாகவும், திரு.க.சிவரஞ்சன், திரு.க.செல்வராசு ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், திரு.கி.பூபாலசிங்கம் J.P அவர்களைப் பொருளாளராகவும், திரு.வே.சிவசுப்ரமணியம், திரு.வீ.சிவசுப்ரமணியம், திரு.சோ.

மகேந்திரன், திரு.வ.ந.பொன்னுத்துரை, திரு.சி. அருணாசலம் ஆகியோர் சபை உறுப்பினர்களாகவும், திருமதி பண்டிதை பொன் பாக்கியம் அவர்கள் காப்பாளராகவும் விளங்கும் பரிபாலனசபையின் கணக்காய்வாளர்களாகத் திரு.மு.தியாகராசா, பண்டிதர். ப.இராசகுரு ஆகியோர் தொண்டாற்றுகின்றனர்.

முகாமையராகத் திருமதி. மகேந்திரன் யசோதா அவர்கள் தொண்டுபுரிகின்றார். இப்பெரு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நல்ல பல திட்டங்களைத்தீட்டிச் செயற்படுத்தி, வரலாற்றுப் புகழ்மிக்க இக்கோவிலைக் கட்டியெழுப்பும் பணியில் அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றனர்.

11747

இப்பெருமக்களது அயராமுயற்சியினால், ஆலயத்தைக் கட்டியெழுப்பும் பணியில் மூன்றிலொரு பங்கு வேலைகள் மட்டுமே முடிவடைந்த நிலையில், மேலும் தொடர்வதற்குப் பல இலட்சம் ரூபாய்கள் தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்பை அறியும் சைவ மக்கள் நிச்சயமாக இவ்வாலய வளர்ச்சியிலே ஆர்வம் காட்டுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்நிலையில் இந்த ஆலயத்தின் குடமுழுக்குப் பெருவிழா ஆவணித்திங்கள் 10ஆம் நாள் (04.09.2008) சிறப்பாக நடைபெற்றது.

கி.மு. 543 ஆம் ஆண்டளவில் ஈழத்துள் காலடி எடுத்துவைத்த விஜயன், ஐந்து ஈஸ்வரங்களில் புனருத்தாரணப்பணிகளைச் செய் துள்ளான். இவை நகுலேஸ்வரம், முன்னேசுவரம், திருக் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், தொண்டீஸ்வரம் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. இவை யாவும் கடற்கரைக்கு அண்மித்தவையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், இவற்றுள் நான்கு ஈஸ்வரங்கள் மட்டுமே தற்காலத்தில் காணப்படுகின்றன. ஐந்தாவது ஈஸ்வரமாகத் தொண்டீஸ்வரம் குறிப்பிடப்பட்டபோதிலும், இவ்வாலயத்தின் வரலாறு தொடர்பான குறிப்புக்கள் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சம்பில்துறை அருள்மிகு சம்புநாதேஸ்வரர் ஆலயத்தின் அமைவு, தோற்றம், காலம், புராண, சரித்திர வரலாறுகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நோக்கும்போது, பஞ்சஈஸ்வரங்களுள் ஒன்றாக இவ்வாலயம் விளங்கியிருக்க முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது.

தொல்பொருள் ஆய்வின் மூலமே இக்கேள்விக்குரிய விடையைக் கண்டறிய முடியும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், புராண வரலாற்றுக் குறிப்புக்களின் துணையுடன் மீண்டும் திருக்கேதீஸ்வரம் ஆலயம் வெளிவர உதவியதுபோல, அருளாளர்களின் எண்ணத்தில் இவ்வாலயத்தின் வரலாறும் என்றோ ஒருநாள் வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

எனவே இவ்வாறான அருளும், ஆற்றலும் மிக்க, ஈழத்தமிழரின் ஆதி வரலாற்றோடு தொடர்புடைய ஆலயங்களை மீட்டெழுப்பிப் பாதுகாப்பது, ஒவ்வொரு தமிழரின் தலையாய பணியாகும். ஆய்வாளர்களும், தொல்லியல் பணியிலே ஈடுபாடு கொண்ட பெருமக்களும், இப்பிரதேசத்திலே ஆய்வுகளை மேற்கொண்டு, சம்பில்துறை சம்புநாதேஸ்வரர் ஆலயத்தின் பெருமைகளையும், இவ்வாலயத்தோடு தொடர்புடைய ஈழத்தமிழரின் வரலாற்றுப் பெருமையையும் நிலைநிறுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.



# கந்தளாய் சிவன் கோவில்

## திருகோணமலை

மனித வளர்ச்சியிலே ஆன்மீகத்தை வளர்க்கும் வழிமுறைகள் பல பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆன்மீகம் உட்பட அனைத்திற்கும் அடிப்படையானது அன்பு. அத்தகைய அன்பைப் பிரதானமாகக் கொண்டு அறத்தைப் பின்பற்றுவோராக மக்கள் விளங்குகின்றனர். அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டது ஆன்மீகம். ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிகோலும் கோட்பாடுகளைக் கொண்டனவாக ஆலயங்கள் காணப்படுகின்றன.

ஆலயங்களையும், அங்கு அருள் நிறைந்த விக்கிரகங்களையும் எழுந்தருளச்செய்து, ஆலய வழிபாட்டின்மூலம் ஆன்மீகத்தை வளர்த்து வருவது காலங்காலமாக நடைபெறும் நிகழ்வாகத் தொடர்கின்றது. மக்கள் மிகப் பெரிய அளவிலே பொருட்செலவு செய்து வழிபாடு செய்து வருகின்றனர். ஆலயங்களோடு தொடர்புடைய வழிபாட்டுச் சடங்குகள், விழாக்கள்,

கொண்டாட்டங்கள், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், மனித மன உணர்வுகள், கலைகள், கதைகள், நம்பிக்கைகள் எனப் பல்வேறுபட்ட கூறுகள், மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்குத் தூண்டு கோலாய் அமைகின்றன. தற்காலத்திலே அல்லலுறும் மக்களை ஆதரிக்கும் மனிதநேயப் பணிகளையும், ஆலயங்கள் ஊக்கு விக்கின்றன.

மனிதகுலம் மேன்மையுற பல வழிமுறைகளை எமது முன்னோர் வகுத்துச் சென்றுள்ளனர். இவற்றுள் பலவும் ஆலயங் களை மையமாகவைத்தே வகுக்கப்பட்டுள்ளன. மனிதகுலம் பின்பற்றும் ஆன்மீகப் பண்பாட்டு முறைகள், வழக்காறுகள், சுகாதார பழக்கவழக்கங்கள் அனைத்தும் ஆலயங்களை மையமாகக் கொண்டே திகழ்கின்றன. இவற்றின்மூலம் மனித மனங்களைப் பண்படுத்தி, மனிதநேயத்தை உணர்த்தி, இறையுணர்வைத் தூண்டும் களங்களாகவும் ஆலயங்கள் அமைந்துள்ளன. மனித வாழ்வின் அனைத்துக்கூறுகளுக்கும் வழிகாட்டும் ஆலயங்களை அழித்தொழிப்பதன் மூலம் ஒரு இனத்தின் சுவடுகளை அழிக்க முடியும் என்ற கருத்தை, அன்றுதொட்டு இன்றுவரை ஆக்கிர மிப்பாளர்கள் முதன்நிலையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். தமிழீழப்பகுதிகளில் தொடரும் போரினால் அண்மைக்காலத்திலே அழிக்கப்பட்ட ஆலயங்கள் கணக்கிலடங்காதவையாகக் காணப் படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையிலுள்ள ஆலயங்களையும் அதன் வரலாறுகளையும் அறிவது அவசியம்.

போர்ச்சூழ்நிலையிலுள்ள பல ஆலயங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலைப்பிரதேசங்களில் காணப்படுகின்றன. தமிழ்மக்களின் பூர்வீக பூமியாகக் காணப்பட்ட பல பிரதேசங்கள் பெயர்மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்கள் இருந்த சுவடே தெரியாமல் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பிரதேசங்களில் ஒன்றாக விளங்குவது திருகோணமலையிலுள்ள கந்தளாய் என்ற ஊராகும். இவ்வூர் திருகோணமலைப் பட்டினத்

திலிருந்து கொழும்பு கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. ஈழத்தின் மிகப் பெரிய விவசாயப் பிரதேசங்களில் ஒன்றாகக் கந்தளாயும் கணிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுப் பின்னணிகள் பலவற்றைக் கொண்ட இவ்வூருக்கு கந்தளை, கண்தளை, கந்தளாய் எனப் பல்வேறு பெயர்களும் காணப்படுகின்றன. காரணப்பெயர்களாக விளங்கிய இவ்வூரின் பெயர்கள் பின்னாளில் திரிபுபட்டு, பல பெயர்களால் அழைக் கப்பட்டது. தமிழ்மக்களின் விவசாயப்பிரதேசங்கள் அழிக்கப்பட்டு, திட்டமிட்ட குடியேற்றங்கள் பலவும் நிகழ்ந்த பிரதேசமாகக் கந்தளாய்ப்பிரதேசம் விளங்கி வருகின்றது. இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களின் காரணமாகக் கந்தளாயின் பண்டைய வரலாறு மறைக்கப்பட்டும், மறைந்தும் வருகின்றது.

கந்தளாயில் பல திருக்கோயில்கள் காணப்படுகின்றன. வரலாற்றுப் பெருமைமிக்க பல கோயில்கள் அழிக்கப்பட்டு, குடியேற்ற நிலங்களாக மாற்றம்பெற்றுவிட்டன. ஆயினும் அவ்வப்போது ஆலயங்கள் இருந்தமைக்கான வெளிப்பாடுகள் பல இடங்களிலே வெளிப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வரலாற்றுப்பெருமைகொண்ட கந்தளாய் சிவன் கோயில், இவ்வாறான சூழ்நிலையிலே காணப்படும் திருக்கோயிலாக விளங்குகின்றது. இக்கோவிலும், இக்கோவில் அமைந்துள்ள கந்தளாய்ப்பிரதேசமும் வரலாற்றுப் பெருமைமிக்க மன்னனான குளக்கோட்டு மன்னனோடும், ஏனைய சோழ அரசர்களோடும் தொடர்புடையது.

கந்தளாய் சிவன்கோயிலின் ஆரம்பகால வரலாற்றை அறிவதன்மூலம், ஈழத்தை ஆட்சி செய்த சோழமன்னர்களின் வரலாற்றையும், காலத்திற்குக் காலம் தமிழ்மன்னர்கள் ஈழத்தை ஆண்ட வரலாற்றையும், இன்னும் பல செய்திகளையும் அறிந்துகொள்ள முடியும்.

சுவடிகளின் கூற்றுப்படி கி.மு.1300 ஆம் ஆண்டளவிலே மனுராசன் என்னும் மன்னன், கோணேசர் ஆலயத்தைக் கட்டி னான் என்று கூறப்பட்டுள்ளது. இவரது மகனான குளக்கோட்டு மன்னன், கோணேசகோயில் திருப்பணிகளை மேற்கொண்டுள்ளான். இதற்கு ஆதாரமாக, "முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே..." என்ற கூற்று சான்றாகக் காணப்படுகின்றது. இவ்வாறான திருப்பணிகளைச் செய்து முடித்த குளக்கோட்டு மன்னன், கோணேசர் கோவிலைப் பராமரிப்பதற்காகப் பல திட்டங்களை மேற்கொண்டான். விவசாயத்தை விருத்தி செய்து அதன்மூலம் கிடைக்கும் பயன்களால், கோணேசர் கோவிலைப் பராமரிப்பதற்காகப் பல திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளான். அல்லைக்குளம், வெண்டரசன் குளம் என்பவற்றைக் கட்டி, இரண்டாயிரத்து எழுநூறு அவணம் நெல்விதைக்கும் விதைப்புத் தரையை உருவாக்கினான்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட நிலங்களிலே விவசாயம் செய்வதற்காகவும், திருக்கோணேஸ்வரத்தின் பணிகளைச் செய்வதற்காகவும், மருங்கூர், காரைக்கால், சிந்துநாடு போன்ற இடங்களிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். குளக்கோட்டு மன்னனால் உருவாக்கப்பட்ட விவசாயப் பூமிகளுக்கு, நீர்ப்பாய்ச்சுவதற்கு அல்லைக்குளம், வெண்டரசன்குளம் ஆகிய வற்றின் நீர் போதாது, பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் கந்தளாய்க்குளத்தைக் கட்டி, மகாவலிகங்கையிலிருந்து வாய்க்கால் மூலம் கந்தளாய்க்குளத்தில் நீரைத் தேக்கினான். கந்தளாய்க் குளத்தின் உதவியால், கந்தளாய்பிரதேசத்தில் விவசாயம், எவ்வித தடையுமின்றி நடைபெற்றது என்ற கூற்று, கோணேசர் கல்வெட்டிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன், குளக்கோட்டு மன்னனுடைய திட்டப்பிரகாரம், சைவத்தமிழ்மக்களின் குடியிருப்புக்களும், பிராமணக் குடியிருப்புக்களும் கந்தளாயில்

உருவாக்கப்பட்டன. பேராசிரியர் செ. குணரத்தினம் அவர்களுடைய கல்வெட்டு ஆராய்ச்சிகள் இதனை உறுதி செய்துள்ளன. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. 1952ஆம் ஆண்டுக்குப் பின் கந்தளாயிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் அக்கால அரசு, குடியேற்றத்திட்டங்களை நிர்மாணிக்க முற்பட்டபோது, இப் பிரதேசத்திலே குடியேறியவர்கள் நிலத்தினடியில், திருவுருவங்கள் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். இவற்றுள் பிள்ளையார், அம்பாள், மகாவிஷ்ணு முதலிய திருவுருவங்கள் குறிப்பிடத் தக்கவையாகக் காணப்பட்டன.

இதனைத்தொடர்ந்து இப்பகுதியில் ஆலயங்கள் அமைந் திருந்து காலகதியில் மறைந்துள்ள செய்தி வெளிப்பட்டது. ஆய்வாளர்கள், புதைபொருளாராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் கவனம் செலுத்த ஆரம்பித்தபோது, பல உண்மைகள் வெளிப்பட்டன. இவர்களுடைய கூற்றுக்கள், இப்பிரதேசத்திலே சோழர்களால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய சிவாலயம் ஒன்று அமைந்திருந்த தென்பதை உறுதி செய்தது.

கி.பி. 993 ஆம் ஆண்டு சோழர், முழு இலங்கையையும் கைப்பற்றி பொலநறுவையை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்களது காலத்திலே பொலநறுவை, சனநாதபுரம் எனப் பெயர் பெற்றது. சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழீழப்பகுதிகள், மற்றும் பொலநறுவை, அனுராதபுரம் போன்ற பல இடங்களிலும் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. சோழ அரசர்கள் தமது வழிபாட்டிற்கென அமைக்கப்பட்ட இவ்வாலயங்கள், பிற்காலத்தில் பொதுமக்கள் சென்று வணங்கும் ஆலயங்களாகவும் மாற்றம் பெற்றன.

இச்சிவாலயங்கள் சிற்பவேலைப்பாடுகளைக்கொண்ட மிகப் பெரிய கோவில்களாகத் திகழ்ந்துள்ளன. சோழர்களின் பின் ஆட்சிக்கு வந்த சிங்களவர், சோழர்களால் கட்டப்பட்ட சிவாலங்

களைப் பராமரிக்க முன்வரவில்லை. மாறாக இவ்வாறான ஆலயங்களைப் புத்தமத விகாரைகளாக மாற்றி அமைத்தனர். அத்தோடு சோழர்களுடைய கட்டிடங்கள் யாவும், பிற தேவைகளுக்காக அக்கால ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

இலங்கையைச் சோழர் ஆட்சி செய்தகாலம், ஈழத்தமிழர்களுடைய பொற்காலமாகக் கருதப்படுகின்றது. சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழும், சைவமும் தழைத்தோங்க வழிசெய்தனர். பராந்தகன் என்னும் சோழமன்னன் ஈழத்தைக் கைப்பற்றியதால், 'மதுரையும் ஈழமும் கொண்டவன்' என்ற பட்டத்தைப் பெற்றுள்ளான்.

இராசேந்திரதேவன் என்பவன் இலங்கையைக் கைப்பற்றி, சோழ மண்டலத்தின் ஒரு பகுதியாக்கி, இலங்கைக்கு மும்முடிச்சோழமண்டலம் எனப் பெயரிட்டான். சோழர் இலங்கையை 126 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். இந்தியாவிலே சோழர்கள் மகோன்னத நிலையிலே இருந்த காலத்தில், அவர்கள் செல்வாக்கு இலங்கையிலும் பரவியிருந்துள்ளது.

பொலநறுவை, திருகோணமலை, கந்தளாய், திருக்கரசை போன்ற இடங்களில் சோழப் பேரரசின் செல்வாக்கினால் சிவன்கோயில்கள் கட்டப்பட்டன. கி.பி. 1010 ஆம் ஆண்டு, இராசேந்திர சோழமன்னன் கந்தளாய் சிவன்கோவிலைக் கட்டினான். மிகப் பெரிய சரித்திர வரலாற்றைக் கொண்ட கந்தளாய் சிவன்கோவில், தமிழர்களின் வரலாற்றையும், சைவசமயத்தின் பண்டைப் பெருமைகளையும், பிராமணக் குடியிருப்புக்களின் தொன்மைகளையும் நினைவுபடுத்துவதாகக் காணப்படுகின்றது. கந்தளாய் பிரதேசம் திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புகொண்ட பிரதேசமாக விளங்கிய காரணத்தாலும், தமிழரின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டமையாலும் அக்காலத்திலே தமிழர் பின்பற்றிய சைவாலயங்கள் கந்தளாயில் பரந்து காணப் பட்டுள்ளன.

சோழர்களால் கட்டப்பட்டு பராமரிப்பின்றி அழிந்து போன ஆலயங்களுள் ஒன்றாகக் கந்தளாய் சிவன்கோயில் காணப்படுகின்றது. கந்தளாய் பிரதேசத்தில் பல ஆலயங்கள் இவ்வாறான நிலையில் காணப்படுகின்றன. கந்தளாயில் போட்டங்காடு என்னுமிடத்திலுள்ள சிவன்கோயிலின் கருங்கற் திருப்பணிச் சிதைவுகளும், திருவுருவங்களும் மண்ணிலே புதைந்தும் புதையாமலும் காட்சியளிக்கின்றன.

குடியேற்றத் திட்டங்களைக் கருத்திற்கொண்ட அரசு, காடுகளை அழித்தபோது, 1952 ஆம் ஆண்டு கந்தளாய் சிவன்கோவில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கிடைத்த கருங்கற் திருவுருவங்கள் அழிக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டன. ஆயினும் அத்திவாரத்தோடு மறைக்க முடியாத காரணத்தினால் பின்னமடைந்த திருவுருவங்கள் மீட்கப்பட்டன. இரண்டு சிவலிங்கங்கள், இரண்டு ஆவுடையார் இவற்றோடு சிவன் பார்வதி சிலைகளின் சிதைந்த பாகங்கள், பீடங்கள், பின்னமடைந்த நந்தி, கருங்கற்தூண்கள், படிக்கற்கள், நிலைகள், ஆசனக்கற்கள் என்பன இராசேந்திரசோழனால் கட்டப்பட்ட கந்தளாய் சிவன்கோயிலின் வரலாற்றை எடுத்தியம்புவனவாகக் காணப்பட்டன.

சோழராட்சிக் காலத்திலே பல கற்சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. இச்சாசனங்களின்மூலம் பல விடயங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இராசேந்திரசோழனால் கட்டப்பட்டு அழிந்துபோன ஆலயத்தின் சிதைவுகளில், இரண்டு கற்சாசனங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சாசனத்திலே கந்தளாய் சிவன்கோயிலின் வரலாறு, பதினோராம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழர்களின் செல்வாக்கு, ஆகியன தெளிவாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலே ஆட்சி செய்த நிசங்கமல்லன் என்னும் அரசன் தன்னாட்சியை, கந்தளாய் பிரதேசத்திலே நிறுவ பிராமணக்

குடியேற்றங்கள் தடையாகக் காணப்பட்டுள்ளது என்ற குறிப்பினையும், தமிழரின் செல்வாக்கு வலுப்பெற்றிருந்த தென்பதையும் கற்சாசனங்கள் தெரிவித்துள்ளன.

கந்தளாய் சிவன்கோயிலுக்குச் செல்லும்வீதியில், 1977 ஆம் ஆண்டு கந்தளாய் பட்டினசபையினரால் வடிகால் வெட்டும்போது ஒரு வெண்கலச்சிலையும், பூசைக்குப் பயன்படுத்தப்படும் மணியும் கண்டெடுக்கப்பட்டது.

வெண்கலச்சிலை, நாயன்மார்களுள் ஒருவருடைய சிலையென திரு. கனக தாமோதரம்பிள்ளை என்பவராலும், வேறு சைவ அன்பர்களாலும் அடையாளம் காணப்பட்டது. பின்னர் இச்சிலை தொல்பொருள் காட்சியகத்திற்குக் கையளிக்கப்பட்டது. இச்சிலை மற்றும் பூசைக்குரிய மணி ஆகியன கந்தளாய் சிவன்கோயிலின் பண்டைப் பெருமையை எடுத்துக்காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

ஆகமரீதியான கோவில்களைச் சோழர்கள், பல இடங்களிலும் அமைத்துள்ளனர். இவர்களால் அமைக்கப்பட்ட கோவில்கள் இன்றும் இலங்கையிலே காணப்படுகின்றன. இவ்வாறான கோவில்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டவை.

பதினோராம் நூற்றாண்டிலே சிறப்புப்பெற்று விளங்கிய கந்தளாய் சிவன்கோயிலும் இச்சிறப்புக்களைக் கொண்டதாக அமைந்திருந்ததென்பதற்கு, அன்றாட வழக்கிலுள்ள பெயர்ச்சிறப்பினை ஒரு காரணமாகக் கருதமுடியும். கந்தளாய் சிவன்கோயிலுக்குக் கிழக்குப் பக்கமாக நானூறுமீற்றர் தூரத்திலே தெப்பக்குளம் இருந்திருக்கலாமென நம்பப்படுகின்றது. கந்தளாய்பிரதேசத்திலே குடியேறிய ஆரம்ப குடியேற்றவாசிகளால் இவ்விடம் குளப்பள்ளம் என அழைக்கப்பட்டது. இக்கோவிலைச் சுற்றி தமிழர்களின் குடியிருப்புக்களே அண்மைக்காலம்வரை காணப்பட்டன.

1954ஆம் ஆண்டு இப்பகுதியில் மக்கள் குடியேற்றப் பட்டார்கள். இம்மக்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட காணிகளைப் பண்படுத்தினார்கள். அப்போது ஒரு செங்கற்பாதை காணப்பட்டுள்ளது. அப்பாதை கோவிலின் தெற்கு மூலையில் இருநூறு மீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பமாகி, கிழக்குப்பக்கமாகக் கோவிலை நோக்கி அமைந்திருக்கக் கண்டனர்.


இதனை ஆராய்ந்தோர் இப்பாதை கந்தளாய் சிவன்கோவிலின் தேரோடும் பாதையாக அமைந்திருக்கலாமெனத் தெரிவித்துள்ளனர். இப்பிரதேசத்தில் வெண்கலச்சிலை கிடைத்த இடத்திலேயே விநாயகர் சிலையொன்றும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிலை பின்னர் எவ்வாறோ மறைக்கப்பட்டுவிட்டது. குடியேற்றத்திற்காகக் கந்த ளாய்க் காடுகளை அழித்துத் திருத்தியபோது பல கோவில்களின் சுவடுகள் காணப்பட்டதாகவும் அவை அழிக்கப்பட்டதாகவும் இப்பகுதியில் வாழ்ந்த முதியவர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறாக தமிழும் சமயமும் ஒருங்கே தழைத்தோங்க அரும்பணி புரிந்த இராசேந்திர சோழமன்னனால் கட்டப்பட்டு அழிந்து போன கந்தளாய் சிவன் கோவில், 1960 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு, 1975 ஆம் ஆண்டு ஆனிமாதம் பத்தொன்பதாந் திகதி குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கோவிலின் கருவறையில் பூமியிலிருந்து வெளிப்பட்ட சிவலிங்கம் நிறுவப்பட்டுள்ளது. மூன்றுகாலமும் நித்தியபூசைகளும், கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தை நினைவுகூர்ந்து அத்தினத்தில் அலங்காரப்பூசைகளும், விசேடகாலப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வூர் மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட பரிபாலன சபை அமைக்கப்பட்டு, கோவில் பராமரிக்கப்பட்டது. இவ்வாறான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலுள்ள ஆலயங்களையும், அவற்றோடு தொடர்புடைய

வரலாறுகளையும் அழிப்பதன்மூலம், தமிழர்களின் தொன்மையை, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த உண்மையை மறைக்க, ஒரு சாரார் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். இன்றைய நிலையில் கந்தளாய் போன்ற பிரதேசங்களில் தற்காலத்தில் தமிழ் மக்கள் அருகியே காணப்படுகின்றார்கள். இக்காரணத்தினால் வரலாற்றுப்பெருமைமிக்க ஆலயங்கள் பல பேணுவாரற்ற நிலையில் பற்றைக்காடுகளாக மாறும் நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது. ஆயினும் தொடர்ந்தும் இப் பிரதேசங்களிலே அருகி வாழுகின்ற தமிழ்மக்கள் இவ்வாறான ஆலயங்களை பேணிக்காத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களை வெறும் வழிபாட்டிடங்களாக மட்டும் கொள்ளாது, தமிழர்களின் பாரம்பரியத்தையும், வரலாற்றையும் உள்ளடக்கிய கருவூலங்களாகவும் கருதவேண்டும். தற்காலத்திலே ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன. சுற்றாடலில் வாழ்ந்து இறைதொண்டு செய்யும் மக்களும், குருக்களும் வலிந்து இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான காரணங்களினால் பல கோவில்கள் பராமரிப்பின்றி அழிந்துபோகும் நிலை காணப்படுகின்றது. ஈழத்தமிழர்களின் வரலாற்றோடு தொடர்புபட்டுள்ள ஆலயவரலாறுகளைச் சேகரித்து வைப்பதன் மூலம், என்றோ ஒருநாள் மீண்டும் இவ்வாலயங்களுக்குப் புத்துயிர் கொடுக்கமுடியும்.



# முத்துமாரி அம்பாள் ஆலயம்

## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

முழுமுதற் கடவுளாக விளங்கும் சிவனை அறிவின் ஆதாரமாகக் கொள்வோர், அதன் இயக்கமாகச் சக்தியைக் கருதுகின்றனர். இந்துசமய அடிப்படையில் சிவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும்போது, சக்தி அதனை இயக்கும் தத்துவமாக விளங்கி அருள் செய்கின்றாள். சக்தியைப் பல்வேறு தோற்றப்பாடுகளுடன் வணங்கும் மரபு மிகத் தொன்மை யானது.

ஆகமமுறை தழுவிய தாய்த்தெய்வ வழிபாட்டோடு, கிராமியமுறை தழுவிய தாய்தெய்வ வழிபாடும் தற்காலத்திலும் காணப்படுகின்றன. ஆகமமுறை தழுவிய தாய்த் தெய்வ வழிபாட்டிலே ஸ்ரீ சக்கரபூசை முதலிடம் பெறுகின்றது. கிராமிய மட்டத்திலே நாட்டார் வழிபாடாக வும் அம்பிகை வழிபாடு காணப்படுகின்றது. நாட்டார் வழிபாட்டிலே காளி, மாரி போன்ற தெய்வங்கள்

செல்வாக்குள்ளவை. இவை நோய் நொடிகளை நீக்கும் தெய்வங்களாகக் கருதப்படுகின்றது.

கிராமிய வழிபாடு, மக்களுடைய அன்பின் அடிப்படையில் அமைகின்றது. இம்மக்களுக்கும், இறைவனுக்குமிடையில் இடைத்தரகர்கள் இல்லை. வழிபடுவோர் தாம் விரும்பியதைப் பொங்கிப்படைத்து, மடை பரவி உணர்வுபூர்வமாகத் தெளிந்த மனதோடு வழிபடும் நிலை, கிராமியவழிபாட்டிலே காணப்படுகின்றது. அன்னையை ஆத்மார்த்தமாக வழிபடும் அடியவர்களிலே அன்னையின் சக்தி வெளிப்பட்டு, தமது குறைகளுக்குரிய தீர்வைக் கூறும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை, கிராமிய வழிபாட்டின் ஆதாரமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு அம்பிகை, அடியார்களூடாக வெளிப்பட்டுக் கூறும் வாக்குக்களை அருள்வாக்கு என்று ஏற்று, தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளும் நிலை, கிராமிய வழிபாட்டிலே காணப்படுகின்றது.

இவ்வாறான கிராமிய வழிபாடு தழுவிய சக்திகோயில்கள், தற்காலத்தில் ஆகமமுறை தழுவிய கோவில்களாக மாற்றம் பெற்றுக் காணப்படுகின்றன. பல ஆலயங்களின் பூர்வீகம், சரித்திர வரலாற்றுக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகின்றது. திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயமும் இவ்வகையைச் சேர்ந்ததே. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கொண்டதாகக் கருதப்படும் திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களோடும் விளங்குகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில், நல்லூர் பிரதேசசபையின் நிர்வாகத் திற்குட்பட்ட, திருநெல்வேலியின் வடக்குப் பக்கமாகத் திருநெல் வேலி முத்துமாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக அன்னை முத்துமாரி எழுந்தருளி யுள்ளாள்.

மாரியம்மன் வழிபாடு, சக்திவழிபாட்டின் ஒரு பிரிவாகவே காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலே இடம்பெற்ற கண்ணகி வழிபாடே, மழைதரும் தெய்வம் என்ற பொருளில், மாரியம்மன் வழிபாடாகத் திரிபுபெற்றது. கிராமப்புற மக்கள், அச்சங்காரணமாக மேற்கொண்ட வழிபாடே மாரியம்மன் வழிபாடு என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகின்றது. மாரியம்மன் வழிபாடு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் காணப்பட்டாலும், மாரியம்மன் வழிபாடு, உமையவளின் அம்சமான சக்தி வழிபாடாகவே, தற்காலத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

கி.பி. 1505 ஆம் ஆண்டின் பின் ஈழத்துள் நுழைந்த அன்னியர், தமது மதத்தைப் பரப்புவதில் கவனம் செலுத்தினர். இதன் முதற்படியாக, சைவாலயங்களைத் தகர்த்துக் கொள்ளையடித்தனர். ஈழத்தைக் கைப்பற்றித் தமது மதத்தைப் பரப்ப எண்ணிய போத்துக்கேயர், சைவாலயங்களைச் சூறையாடியும், திருவுருவங்களைச் சிதைத்து, அபகரித்தும் கோவில்களை அழித்தமை வரலாறு கண்ட உண்மை. இந்த ரீதியில், திருநெல் வேலி முத்துமாரி அம்மன் ஆலயமும், போத்துக் கேயரினால் அழிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் கொட்டில்களில் திருவுருவங்களை மறைத்தும், கிணறு, குளம் போன்ற நீர்நிலைகளுள் போட்டும் தாம் வணங்கிய தெய்வத் திருவுருவங்களை மக்கள் காப்பாற்றியுள்ளனர்.

போத்துக்கேயரால் திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயம் அழிக்கப்பட்டவேளையில், அன்னை முத்துமாரியம்மனை, பனையோலையால் வேயப்பட்ட கொட்டிலுள் மறைத்துவைத்து, அடியவர்கள் வணங்கி வந்துள்ளனர். சூழ்நிலை மாற்றத்தால் ஆலயங்களைச் சிறிது சிறிதாகப் புனரமைக்கும் பணியில் ஊரவர்களும், பக்தர்களும் ஈடுபட்டனர். இவ்வாறான நிலையில்,

திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயம், செங்கற்களால் கட்டப்பட்டது. இதன் பின்னர் காலத்திற்குக்காலம் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றுத் தற்காலத்தில் ஆகமமுறை தழுவிய ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் நுழைவாயிலின் முன்னால் பெரிய மண்டபம் உள்ளது. ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தை அடுத்து அர்த்த மண்டபமும், மகாமண்டபமும், தரிசன மண்டபமும், ஸ்தம்ப மண்டபமும் என அழகுற இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் தலவிருட்சங்களாக கொன்றையும், வேம்பும், பலாவும் காணப்படுகின்றன.

திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயத்தின் கருவறையில் அகில உலகங்களையும், உயிர்களையும், தாயாகி நின்று தாங்கும் முத்துமாரியம்பாள், நான்கு திருக்கரங்களுடன் இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவைத்தவண்ணம் கிழக்குத்திசை நோக்கியபடி எழுந்தருளியுள்ளாள். அன்னையின் வலது பக்கத் திருக்கரங்களிலே, சூலமும் வாளும் காணப்படுகின்றது. இடதுபக்கத் திருக்கரங்களிலே, டமருகமும் கபாலமும் ஏந்தியவாறு, அக்கினிச் சடாபாரத்துடன் அன்னை முத்து மாரியம்பாள் விளங்குகின்றாள். அன்னையினுடைய பாதார விந்தங்களில் ஸ்ரீ சக்கரம் என்னும் மகிமை வாய்ந்த யந்திரம் வைத்துப் பூசிக்கப்படுகின்றது.

ஸ்ரீசக்கர வழிபாடு என்பது, உலகை உருவாக்கி உய்வித்த அன்னைக்குச் செய்யும் யந்திர, தந்திர வழிபாடாகும். சக்திக்காகவும், அறிவுக் கூர்மைக்காகவும் ஸ்ரீசக்கர வழிபாடு செய் யும் மரபு தொன்மையுடையது. ஓர் உருவம், ஓர் நாமம் என்றில்லாத இறைவனை, ஆண், பெண் உருவத்தில் விக்கிரகமாகவும், சித்திரமாகவும் வைத்து வழிபடுவது வழக்கம். அவ்வாறே பக்தியை பொருள் நிறைந்த சொற்களிலும், சக்திவாய்ந்த சப்த

உச்சாடனங்களிலும் வெளிப்படுத்தி, மந்திரங்களாக ஓதி இறைவனை வழிபடுவதும் மரபு. இதில் பீஜ அட்சரங்களின் மூலம், சக்தியை உருவாக்கும் வித்துக்கள், எழுத்து வடிவத்தில் சொல்லாகவும், ஒலி வடிவத்தில் உச்சாடனமாகவும் இடம்பெறுகின்றன. இந்த இரண்டிற்குமிடையே வருவதுதான் சக்கரம் அல்லது யந்திரம் என்று அழைக்கப்படுகின்றது.

இதில் சக்திக்குரிய தெய்வம் கோண, வட்டவடிவங்கள் கொண்ட அமைப்பான (Geometirical Diagram) வடிவம் பெறச் செய்யப்படுகின்றது. மந்திரங்கள் மனனத்துக்குரியவையாக உள்ளே இடம்பெறும். யந்திரம் (சக்கரம்) வெளியே, பூசைக்குரியதாக, புறவழிபாடாகக் காணப்படும். விக்கிரக வழிபாட்டைக்காட்டிலும் சக்கர வழிபாடு, உருவ எல்லைகளைக் கடந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. சக்கரம் என்பது மந்திரத்தைப்போலவே, தெய்வீக உருவை சிந்தனையில் நிறுத்த உதவுகின்றது.

அளவிலும், விரிவிலும் அடக்க முடியாத மாபெரும் சக்தியை அளவுபடுத்தி, பிரயோகம் செய்யக்கூடிய அமைப்பில், சக்தியின் அருளாசியை ஸ்ரீசக்கரம் அளிக்கின்றது. சக்தியை வழிபடுபவர்கள், ஸ்ரீசக்கர வழிபாட்டை மேற்கொண்டு, இந்த அருளைப் பெறுகின்றார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, ஸ்ரீசக்கரத்தை ஆதிசங்கரர் நிறுவி வழிபட்டுள்ளார்.

அவர் நிறுவிய மடங்களில் சக்கர வழிபாடு இடம்பெற்றிருக்கின்றது. புனித ஆலயங்களில் அவர் நிறுவிய யந்திரங்கள், ஆன்மீக சக்தியை வெளிப்படுத்துவதன்மூலம், இந்து தர்மத்தை ஒளிவிடச் செய்யும் சக்தி படைத்தவையாக மிளிருகின்றன.

ஸ்ரீசக்கரத்தை வழிபாடு செய்பவர்கள், அபாரமான சக்தியையும், சகல செல்வங்களையும் பெறுகின்றார்கள். இந்த அபூர்வ வடிவத்தை மனதிருத்தி வணங்குபவர்கள், பிரபஞ்சத்தை

உருவாக்கிய மறைபொருளான சக்தியின் மர்மங்களைக் காணும் ஆற்றலுடையவர்களாக விளங்குகின்றார்கள்.

கண்ணுக்குத் தெரியாத சக்தியை வானத்திலிருந்தும், நீரிலிருந்தும், மண்ணிலிருந்தும், வெளிக்கொண்டுவரக்கூடிய தத்துவத்தை இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. ஸ்ரீசக்கர பூஜை, தெய்விக சக்திக்கும், மனித ஆற்றலுக்குமிடையே சக்தியைப் பாயச்செய்யும் சாதனமாக விளங்குகின்றது. எல்லாவற்றையும் படைத்த தேவியின் உபாசனைமூலம், படைப்புத்திறனையும், அதற்குரிய அறிவு வளத்தையும் பெறும், ஆற்றலை வளர்த்துக்கொள்ள ஸ்ரீசக்கரபூஜை வழிகாட்டுகின்றது.

ஸ்ரீ சக்கரத்திலுள்ள முக்கோணம், மூன்று நிலைகளை உணர்த்துகின்றது. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய கால அளவுகளையும், விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய நிலைகளையும், சத்வ, ரஜஸ், தாமஸ் ஆகிய மூன்று குணங்களையும், ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று ஆற்றல்களையும் மனிதவாழ்வின் அடிப்படைகளாகக் கருதுகின்றோம். இவ்வடிப்படை, ஸ்ரீசக்கரத்தின் முக்கோண வடிவில் மூன்று அம்சங்களாக இடம்பெறுகின்றது.

முக்கோணத்தின் முனை உயரே இருப்பது சிவத்தையும், முனை கீழே இருப்பது சக்தியையும் உணர்த்துகின்றது. இவை கலந்து இணைந்த வடிவம், பிரும்மம் செறிந்த (Polarisation) நிலையைக் காட்டுகின்றது. நிலையாக இருக்கும் சக்தி (Static) இதன்மூலம் இயங்கும் சக்தியாக (Dynamic) மாறுகின்றது. இவ்வாறான சக்திவாய்ந்த ஸ்ரீசக்கரவழிபாடு, தேவியின் அருளை இலகுவில் பெற உதவுகின்றது. இவ்வாறான சக்தியின் அருளைப்பெற உதவும் ஸ்ரீசக்கரம் என்னும் மகிமைபொருந்திய யந்திரம், திருநெல்வேலி முத்துமாரியம்பாளின் பாதார விந்தங்களிலே வைத்துப் பூசிக்கப்படுகின்றது.

இவ்வாலயத்திலே கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பன ஆகமமுறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. வசந்த மண்டபமும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றது. யாகசாலை, பாகசாலை, வாகனசாலை, களஞ்சிய அறை என யாவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

விநாயகர், துர்க்கை, நாகேஸ்வரி, வள்ளி, தெய்வயானை சமேத சுப்ரமணியர், வைரவர், சந்தான கோபாலர், சனீஸ்வரர், காத்தவராயர், சண்டேசுவரர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும், தனித்தனியே பரிவாரக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தின் தேவசபை தெற்கு நோக்கியவாறு காட்சி தருகின்றது.

உற்சவ மூர்த்திகளான விநாயகர், அன்னை முத்துமாரி, துர்க்காதேவி, இலக்குமிதேவி, சரஸ்வதிதேவி, வள்ளி தெய்வயானை சமேத சுப்ரமணியர், நாகேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, சந்தானகோபாலர் ஆகிய எழுந்தருளி மூர்த்தங்கள், இந்தத் தேவசபையில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்.

பொதுவாக சக்திகோவில்களில் துர்க்கையின் திருவுருவம், கருவறையின் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள மாடத்தில் அமைப்பதுதான் வழக்கம். ஆனால் திருநெல்வேலி முத்து மாரியம்மன் ஆலயத்தில் காணப்படும் துர்க்கையின் திருவுருவம் உட்சுற்றுப்பிரகாரத்தில், வடபகுதியில் அமைக்கப்பட்டு, வடக்கு வாயிலை நோக்கியபடி காணப்படுகின்றது. வைரவர் சந்நிதிக்கு அருகில், கண்டாமணிக்கோபுரம் உயர்ந்தோங்கியவாறு அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புக்களோடு, உள்வீதி, வெளிவீதி என்பனவும் அழகாக அமைந்து, ஆலயத்திற்கு மேலும் அழகைக் கொடுக்கின்றது.

திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம், ஆனி மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தன்று

கொடியேறி, தொடர்ந்து பத்துத்தினங்கள் சிறப்பாக நடைபெறும். அழகிய சித்திரத்தேரில் அன்னை பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

இவ்வாலயத்தில் வைகாசி விசாக நட்சத்திரத்தன்று, நடைபெறும் பொங்கல் சிறப்புடையது. ஆலயத்தின் வடக்குத் தெற்கு வீதிகளில், காலை முதல் மாலைவரை பொங்கல் நடைபெறும். பொங்கல் அவிர்ப்பாகம் யாவும், காத்தவராயருடைய மண்டபத்தில் வைக்கப்படும். வைகாசிப் பொங்கலின் மாலையில், அம்பாள் வீதிவலம் இடம்பெற்று, அடியார்களின் தீமிதிப்பு வைபவம் நடைபெறும்.

தற்காலத்தில் ஆகமமுறை தழுவிய ஆலயமாக, திருநெல்வேலி முத்துமாரியம்பாள் ஆலயம் காணப்பட்டபோதிலும், ஆரம்பகால வழிபாட்டுமுறைகளும் தற்காலத்தில் சிறப்பாகத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. "அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்பதற்கமைய, நாளும் பொழுதும் அன்னையை வழிபடும் மக்கள், அனைத்து வளங்களையும் பெற்று வருகின்றனர்.



# இணுவில் சிவகாமி அம்மை ஆலயம்

## யாழ்ப்பாணம்

இந்துப்பண்பாட்டின் ஆணிவேராகச் சிந்துவெளி நாகரிகம் கருதப்படுகின்றது. பழம்பெரும் நாகரிகமாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலே, தாய்த்தெய்வ வழிபாடு சிறப்புப்பெற்ற வழிபாடாக நிலவியதற்கான சான்றுகள் பல உண்டு. சிந்துவெளிப் பிரதேசத்திலே கிடைக்கப்பெற்ற பெண் தெய்வங்கள், கோர வடிவமாகவும், சாந்த வடிவமாகவும் இருநிலையிலே கண்டெடுக்கப்பட்டன. இங்கு கண்டெடுக்கப் பட்ட அமைதியான முகத்தோற்றம் உடைய பெண் உருவங்களை, தற்கால வழிபாட்டிலே காணப்படுகின்ற கௌரி, கல்யாணி, வடிவாம்பிகை, சிவகாமி ஆகிய தெய்வங்களோடு ஒப்பிடுவது வழக்கம்.

வைதிகமுறையிலே அம்பிகையை வழிபடும் வழிபாட்டு முறையைத் தட்சணாச்சரம் எனக் குறிப்பிடுவர். இவ்வாறான முறையிலே வழிபடுவதை, 'ஸ்ரீ வித்யா உபாசனை' எனவும்

அழைப்பர். இவ்வழிபாட்டு முறையிலே காயத்திரி மந்திரம் முக்கிய மானது. வேதங்கள் கூறியமுறையிலே சக்தியை வழிபடுபவர்கள், எல்லா நன்மையும் கிடைக்கப் பெறுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

தாய்த் தெய்வ வழிபாடு ஆகமவிதிகளுக்கேற்பவும் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆகம வழிபாட்டிலே ஸ்ரீசக்கரபூஜை முதலிடம் பெறுகின்றது. அம்பிகையை நவசக்திகளாகப் பாவனை செய்து நடைபெறும் நவசக்தி அர்ச்சனை, சக்திவழிபாட்டின் சிறப்பு அம்சமாகக் கருதப்படுகின்றது. ஆகமவிதிமுறைகளைப் பேணாது கிராமிய மட்டத்திலே, நாட்டார் வழிபாடாகவும் சக்தி வழிபாடு பின்பற்றப்படுகின்றது. இவ்வழிபாட்டிலே காளி, மாரி போன்ற தெய்வங்கள் பெரிதும் போற்றப்படுகின்றன. இத் தெய்வங்கள் மக்களை, நோய் நொடியிலிருந்து காப்பாற்றுபவையாகக் கருதப்படும் மரபு தொன்மையுடையது.

இதிகாசபுராணங்களிலும் சக்திவழிபாட்டின் பெருமையைக் காணலாம். மகாபாரதத்திலே துர்க்கையைத் துதிக்கும் தோத்திரங்கள் காணப்படுகின்றன. சக்தி வழிபாட்டிற்கு புராணங்களே எழுச்சியைக் கொடுத்துள்ளன. சக்தியின் அருட் செயல்களை அடிப்படையாகக்கொண்ட உருவமும், நாமமும் கொடுத்துச் சக்தியை வழிபடப் புராணங்கள் உதவியுள்ளன. சாக்தம் என்ற தனி மதத்தை உருவாக்கிய ஆதிசங்கரர், சக்தியின் பல்வேறு வ:டிவங்களைத் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என மூன்றாக வகுத்தார். சங்க இலக்கியத்திலும், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்றவற்றிலும், தாய்த்தெய்வம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சோழ அரசர்கள் அம்பியையை, நிதம்பசூதனி என்ற பெயரிலே வழிபட்டனர். பாண்டியர்கள் மீனாட்சியைப் பாண்டிய அரசைத் தோற்றுவித்த தலைவி என்று போற்றினர்.

ஈழத்தில் சக்தி வழிபாடு, புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. இலங்கையில் வாழ்ந்த பூர்வீகக்குடிகளின் வழிபாடாகிய நாக, யக்ஷ வழிபாட்டிலே, பெண்தெய்வங்களாக

நாகினி, யக்ஷி ஆகியவை வணங்கப்பட்டதை ஈழவரலாற்றிலே காணலாம். ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் துர்க்கை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஈழத்தை ஆட்சிசெய்த மன்னர்கள், வீரத்தை வேண்டிச் சக்தியை வழிபட்டனர். தாம் வணங்கும் சக்தியை வழிபட்டபின்னரே அன்றாட கடமைகளை ஆரம்பிக்கும் வழக்கம், ஈழத்தையாண்ட தமிழ் மன்னர்களிடையே காணப்பட்டுள்ளது. ஈழவரலாற்றோடு தொடர்புடைய தொன்மைமிகு பிரதேசமாக, இணுவில் பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு அமைந்துள்ள சிவகாமி அம்மன் கோவில், யாழ்ப்பாண அரசர்காலத்துச் சக்தி திருத்தலமாக விளங்குகின்றது.

இணுவில் என்னும் அழகிய ஊர், யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்நகரிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் பெருவீதியில், நான்காவது கல்தொலைவில் இருக்கின்றது. இதனூடாக வலிகாமத்தின் பல இடங்களுக்குச் செல்லும் தெருக்கள் காணப்படுவதால், இணுவில் ஊர் நடுநாயகமாக விளங்குகின்றது. சிவகாமி அம்மையின் திருத்தலத்தைக் கொண்ட இணுவில், யாழ்ப்பாண அரசர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாக இருந்துள்ளதோடு, ஆட்சித்தலைவன் ஒருவனையும் கொண்டு காணப்பட்டது.

பல்வேறு வளங்களும், நல்லாட்சியும் ஒருங்கமையப் பெற்று, இணையில்லாத சிறப்பொடு விளங்கியமையால், இணையிலி என வழங்கப்பட்டு, பின்னாளில் இணுவில் ஆயிற்றென்பர். அத்தோடு இணு+வில்= இணுவில். இணு என்பது மூங்கிலைக் குறிக்கும் சொல். இங்கு மூங்கில் அடர்த்தியாக இருந்த காரணத்தினால், இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

இணுவில்பற்றிய செய்திகளை, ஈழத்தின் பழந்தமிழ் இலக்கியங்களான, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச்

சரித்திரம், கைலாயமாலை போன்றவற்றிலும் காணலாம். இணுவில் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய பஞ்சவண்ணத்தூது என்ற நூலிலே, யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகரமன்னன், இணுவில் பிரதேசத்திலிருந்து ஆட்சிசெய்தான் என்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளது. "இந்திரலோகம் இது என்றிடவே வளம் உந்து இணுவை", "தேக்கும் இந்திரச் செல்வம் மிகுதென் இணுவை" எனப் பலவாறாகப் போற்றப்படும் இணுவில் பிரதேசத்திலே, அருளாற்றல்மிக்க பல திருத்தலங்கள் காணப்படுகின்றன.

அவற்றுள் ஒன்றாக இணுவில் சிவகாமி அம்மை ஆலயம் விளங்குகின்றது. யாழ்ப்பாண அரசர் காலத்திலே, இணுவையூர் ஆட்சிப்பிரிவிற்குத் தலைவனாயிருந்த பேராயிரவன் என்பவரே, இணுவில் பிரதேசத்தில் சிவகாமிஅம்மை வழிபாட்டை ஏற்படுத்தினார்.

தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாண இராச்சியம் என்றழைக்கப்பட்ட பெருநிலப்பரப்பை கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15 ஆம் நூற்றாண்டுவரை வெகு சிறப்பாக ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் ஆட்சியில் தமிழும், சைவமும் தலைசிறந்து காணப் பட்டுள்ளது. யாழ்ப்பாண அரசர்கள் தமது பிரதேசத்தைப் பல ஆட்சிப் பிரிவுகளாக வகுத்து நல்லாட்சி புரிந்துள்ளனர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு தலைவரை நியமித்து, நாட்டில் நல்லாட்சி ஓங்க வழிவகுத்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட ஆட்சிப்பிரிவுகளுள் ஒன்றாக, இணுவையூர் பிரதேசமும் காணப்பட்டது. இப்பிரிவிற்கு பேராயிரவன் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் சிவகாமி அம்மைமீது ஆராஅன்பு கொண்டவர். இதன் காரணமாகச் சிதம்பரத்திலிருந்து சிவகாமியம்மை திருவுருவத்தை வரவழைத்து, தான் வாழ்ந்த இடத்திலே சிவகாமியம்மை வழிபாட்டை ஏற்படுத் தினார். சிவகாமியம்மை வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட இடத்தைச் சிதம்பரவளவு எனப் பெயரிட்டு, சிவகாமி அம்மையை வழிபாடு செய்து வந்துள்ளார்.

பேராயிரவனின் பின் இப்பகுதியை, காலிங்கன் என்பவர் ஆட்சி செய்துள்ளார். இவரைக் காலிங்கராயன் என மக்கள் அழைப்பது வழக்கம். தினமும் தனது ஆட்சிக் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன், சிதம்பரவளவில் எழுந்தருளியிருந்த சிவகாமி அம்மையை வழிபாடு செய்வதை, இவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவரது மறைவிற்குப் பின் மகன் கைலாயநாதன், இணுவில் பிரதேசத்தை நல்லாட்சி புரிந்துள்ளார். இக்கைலாயநாதனை இளந்தாரி எனவும் அழைப்பது வழக்கம். இளந்தாரி என்னும் சொல் வாலிபனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்பாட்டிலே காணப்படுகின்றது.

இணுவில் பிரதேசத்தை ஆட்சிசெய்த கைலாயநாதன், அறிவும் ஆற்றலும் கொண்டவராக, இளமைத்துடிப்புடன் விளங்கிய காரணத்தால், இளந்தாரி எனப் போற்றப்பட்டார். இவரது உலாவின்பொழுது, அவ்வுலாவிற்கு முன்பாக சிவகாமியம்மையின் திருவுருவம் தேரில் எழுந்தருளுவது வழக்கமென, பஞ்சவண்ணத் தூது என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது. பழந்தமிழ் வழக்கிலே அரசரும் மன்னரும் ஒருநிலையில் வைத்துப் போற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ்மன்னர்களும், தமிழ் ஆட்சித் தலைவர்களும் போற்றி வளர்த்த சிவகாமி அம்மை கோவிலை, கி.பி 1505 ஆம் ஆண்டு, ஈழத்துள் காலடி எடுத்து வைத்த அன்னியர் இடித்து அழித்தனர். ஆயினும் சிவகாமி அம்மையின் திருவருளால் மீண்டும் ஒல்லாந்தர் ஆட்சியில் இக்கோவில் திருத்தியமைக்கப்பட்டு, வழிபாடு நடைபெற்றது. இணுவிலின் புகழை தமிழுலகு அறியும் வண்ணம் அருந்தமிழால் எடுத்துரைத்தவர் சின்னத்தம்பிப் புலவர். இவர் ஒல்லாந்தர் ஆட்சியில், தோம்பு எழுதும் உத்தியோகத்தராகப் பதவி வகித்தவர். சின்னத்தம்பிப்புலவர் சிவகாமியம்மைமீது நீங்காத பக்திகொண்டு வழிபாடியற்றி வந்துள்ளார்.

இவரை ஒரு சந்தர்ப்பத்தில் ஈழத்தையாண்ட ஒல்லாந்து ஆட்சியாளர்கள் சிறையிலிட்டனர். அப்பொழுது சிவகாமி

அம்மையின் அருளினால் சிறைக்கதவு திறந்து, இவர் வெளியே வந்தார். இச்செயலின் பின் சிவகாமியம்மையின் புகழ் நாடெங்கும் பரவி, இத்திருத்தலத்தின் புகழை யாவரும் அறிய வகை செய்தது. இணுவிலூர் சின்னத்தம்பிப்புலவர் சிவகாமி அம்மையின் திருவருளை வியந்து போற்றி, சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ், சிறைநீக்கு பதிகம், சிவகாமியம்மை துதி, திருவூஞ்சல் ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

சிவகாமியம்மை எழுந்தருளியுள்ள திருக்கோவில், தெய்வீகச் சூழல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. பண்டைத் தமிழ் மன்னர்கள் வீரம்வேண்டி வழிபட்ட வைரவர், பத்திரகாளி கோவில்கள், சிவகாமியம்மை திருக்கோவிலின் மேற்குவீதியிலே காணப்படுகின்றது. இக்கோவிலுக்குக் கிழக்கிலே, சோழர் காலத்தோடு தொடர்பு கொண்ட காரைக்கால் சிவன்கோவில் அமைந்துள்ளது. கோவிலின் மேற்கிலே, பெருஞ்சித்தராக விளங்கிய பெரியசந்நியாசியார் அடக்கம் செய்யப்பட்ட புனிதபூமி காணப்படுகின்றது. சிவகாமி அம்மை ஆலயத்தின் வடமேற்கிலே, இணுவில் பிரதேசத்தை நல்லாட்சி செய்த இளந்தாரி எனப்போற் றப்பட்ட கைலாயநாதனின் இளந்தாரிகோவில் அமைந்துள்ளது. மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பதற்கமைய, ஆட்சிசெய்த ஒருவரை தெய்வநிலைக்கு உயர்த்தி வழிபடும் உயர்ந்த பண்பாட்டைக் கொண்ட பிரதேசமாக இணுவிலூர் காணப்படுகின்றது.

சிவகாமியம்மை ஆலயத்தின் வீதிகளிலே வேம்பு, அரசு, வில்வம், மகிழ் போன்ற புனித விருட்சங்கள் காணப்படுகின்றன. ஆலயச் சூழலில் காணப்பட்ட அழகிய பூந்தோட்டத்திலிருந்து, ஆலயத்திற்குத் தேவையான பூக்களைப் பெறுவது வழக்கம். இவ்வாலயத்தின் அழகிய இராசகோபுரம், இவ்வாலயத்திற்கு மேலும் அணி செய்கின்றது.

சிற்பவேலைப்பாடுகளைக்கொண்ட தேரும், சிவகாமியம்மை எழுந்தருளுவதற்குரிய ஊர்திகளும் இங்கு காணப்படுகின்றன.

உள்வீதியிலே எல்லாத் தெய்வங்களுக்குமுரிய கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிவீதியிலே திருமடமும், சின்னத்தம்பிப்புலவர் அரங்கும் உள்ளது.

இவ்வாலயத்திலே நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுவதோடு, வருடாந்த மகோற்சவம், பங்குனி மாதத்திலே, பன்னிரண்டு நாட்கள் மிக விமரிசையாக நடைபெறும். உத்தரநாள் தீர்த்தத் திருவிழாவும், அதற்கு முதல்நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். அத்தோடு எல்லாச் சிறப்புத்தினங்களும், இவ்வாலயத்திலே சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். ஆடிப்பூரக் கற்பூரத்திருவிழா, மிகச் சிறப்பான திருவிழாவாக நடைபெற்று, பகல்பொழுதில் சங்காபிஷேகம் நிகழும். அன்னைக்குரிய திருநாட்களான நவராத்திரித் திருநாட்கள், விரதமாகவும், விழாவாகவும் மிகக் கோலாகலமாக நிகழும்.

முழுமுதற்பொருளாகிய சிவனை அவரது அடியவர்கள் சேர்வதற்குச் சக்தியே துணை செய்கின்றதென, உமாபதி சிவாச்சாரியார் அருளியுள்ளார்.

பிள்ளைகள் செய்கின்ற எல்லாக் குற்றங்களையும் மன்னித்து அரவணைத்து அன்பு காட்டுபவள் அன்னை. தாயன்பிலும் மேலான அன்பை வேறெங்கும் காணமுடியாது. அதுபோல எல்லா ஜீவராசிகளுக்கும் தாயாக விளங்கும் சக்தியே, தவறு செய்வோரையும் மன்னித்து, இறைவனடி சேரத் துணை புரிகின்றாள். இவ்வாறான சிவகாமியம்மை இணுவிலூரிலே எழுந்தருளி, அனைவரையும் காத்தருகின்றாள். அவள்பாதம் பணிவோம்.

"மலையிலேதான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலேயூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையி லுயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே"

# பண்டாரபுலம் மனோன்மணி அம்பாள் ஆலயம்

## யாழ்ப்பாணம்

பரம்பொருளைத் தாயாக வழிபடும் வழக்கம் தொன்மையானது. சிவன் அறிவின் ஆதாரமாகவும், சக்தி அதன் இயக்கமாகவும் அமைக்கின்றாள். சிவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக விளங்கும்போது, சக்தி அதனை இயக்கும் தத்துவமாகத் திகழ்கின்றாள். சக்தியின் திருவிளையாடல்களை அணுமுதல் அண்டம்வரை பரக்கக் காணலாம்.

ஆற்றலுக்குரியவன் இறைவன் என விளங்கும்போது, அந்த ஆற்றலின் இயக்கத்திற்குச் சக்தி என்று கூறப்படுகின்றது. "சக்தியின்றிச் சிவமில்லை" எனச் சௌந்தர்யலகரியில், சங்கராச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். ஆதிசங்கராச்சாரியார், சக்தியின் பெருமையையும் புகழையும்,

வழிபாட்டு முறைகளைப் பற்றியும் தோத்திரப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். "மூவேழுலகுக்கும் தாயே" என்று மணிவாசகப்பெருமானும் புகழ்ந்தேத்தியுள்ளார்.

இத்தகைய பெருமைமிக்க சக்தியை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் ஆலயங்கள் பல ஈழமெங்கும் காணப்படுகின்றன. குறிப்பாக, இலங்கையின் வடபகுதியில் புகழ்பெற்ற பல ஆலயங்கள் சக்தி வழிபாட்டுத்தலங்களாக விளங்கிவருகின்றன. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்துறைத்தொகுதியில் நாராந்தனைக் கிராமம் காணப்படுகின்றது. இக்கிராமத்தின் வடபகுதி பற்றைகளும், முட்புதர்களும், விழுதுகளை ஈன்ற தாழை மரங்களும் பரந்து காணப்பட்ட காட்டுப்பகுதியாக விளங்கியது. அத்தோடு வடக்கே அலைமோதும் கடலும் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான சூழலில் காலதேச வர்த்தமானங்களுக்கு அமையவும், அப்பகுதியில் வாழ்ந்தோரின் பூர்வபுண்ணிய பலனாகவும் அன்னை சக்தியானவள் தன்னை வெளிப்படுத்தக் கருணை கொண்டாள். பண்டாரபுலம் மனோன்மணி அம்பாளின் தோற்றம் மிகவும் அற்புதமானது. அஞ்ஞான இருளை நீக்கும் ஒளியாயும், பரம கருணா ரூபிணியாயும் காணப்படும் அன்னை, பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி என்ற மணிவாசகர் வாக்கிற்கிணங்க கல்லோடு கல்லாகச் சங்கமமாகி நின்று, கஜலட்சுமி ரூபவடிவத்தில் தான்தோன்றியாக வெளிப்பட்டுள்ளாள்.

இவ்வூரிலுள்ள சிலர் பாரிய காட்டுக்கற்கள் நிறைந்த இந்தப்பகுதியிலுள்ள கற்களை உடைத்துத் தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். இவர்கள் பார்வையிலே மிகப்பெரிய கல் லொன்று தென்பட்டது. அதனை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் அவர்களால் அந்தப் பாரிய கல்லை உடைக்க முடியவில்லை. இறுதியில் அக்கல்லைக் குடைந்து வெடி வைத்

தார்கள். அப்பொழுது கலீர் என்ற ஓசையைக் கேட்டுக் கல் உடைக்க வெடிவைத்த தொழிலாளர்கள் ஓடிச் சென்று பார்த்தனர். அங்கே மனோன்மணி அம்பாளின் தங்கத்திருவுருவச் சிலையைக் கண்டு திகைத்தனர்.

இத்திருவுருவத்துடன் தங்கக்கட்டிகளும், நவமணிகளும், 11ஆம், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழ நாணயங்களும் வெளிப்பட்டன. கல்லுடைக்கும் தொழிலாளர்கள் கிறிஸ்தவ மதத்தவர்களாகக் காணப்பட்டபோதிலும், அன்னையின் பெருமையை அறிந்த அவர்கள் ஓடிச்சென்று கற்பூரம் வாங்கிவந்து கொளுத்திய பின்னரே தமது கரங்களால் அன்னையை எடுத்துப் பார்த்துப் பரவசமடைந்தனர். இவ்வழகிய தங்கச்சிலையிலே அணியப் பட்டிருந்த மாலையிலிருந்து சிதறுண்ட தங்க மணிகளையும், கூடவே காணப்பட்ட நாணயங்களையும் எடுத்துச் சென்றனர். பின்னர் இந்த நாணயங்கள் யாழ்.நூதனசாலையில் அரசாங்கத்தால் வைக்கப்பட்டது.

அன்னையானவள், கல்லோடு கல்லாக மறைந்திருந்து வெளிப்பட்ட செய்தி காட்டுத்தீபோல எங்கும் பரவியது. அன்னை வெளிப்பட்ட இடத்தைக் கண்டுகளிக்கப் பெருந்தொகையானோர் தினமும் கூடினர். ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பரவசமடைந்தனர். இப்பக்தர்களால் அவ்விடத்தில் திருவிளக்கேற்றப்பட்டது. பின்னர் அனைவரும் சேர்ந்து சிறிய கொட்டில் அமைத்து விளக்கேற்றி வழிபட்டனர். திரைச்சீலையிலே அன்னையின் திருவுருவத்தை வரைந்து கற்பூர ஆராதனைகள் செய்து வழிபட்டு வந்தனர்.

இவ்வாறான நிலையில் இதே ஆண்டில் கிராமவாசி ஒருவரின் கனவிலே அன்னை தோன்றி, "நாளை நீ என்னைக் கடலிலே காண்பாய்" எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளாள். ஆச்சரியமுற்ற அக்கிராமவாசி கனவிற் கண்ட இடத்திற்குக் காலையிலே சென்றபொழுது, கல்லிலே சமைந்த நாகமொன்று மூன்று

தலைகளுடன் அலைமோதும் கடலிலே இருப்பதைக் கண்டார். இச்செய்தி ஊரெங்கும் பரவியது. அன்று மாலையே இந்த நாகஉருவத்தினை, கொட்டிலால் அமைக்கப்பட்ட கோவிலுக்கு எடுத்துவந்து வழிபாட்டியற்றத் தொடங்கினர். 1953 ஆம் ஆண்டு வீசிய பெரும் புயற்காற்றினால் கொட்டில் சரிந்து வீழ்ந்தது. இதனால் மூன்றுதலை நாகத்தின் ஒரு தலை சிதைவுற்றது.

இச்சம்பவத்திற்குப் பிறகு அன்னை உற்பவித்த இடத்திலே கோவிலொன்றை அமைக்க அவ்வூர் மக்கள் விரும்பினர். இக்காரணத்தினால் 1951 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் இருபதாம் நாள் சைவ மகாசபையைக் கூட்டினர். இவர்களது அயராத முயற்சியின் காரணமாக, கோவில் அமைப்பதற்குரிய காணி, அரசிடமிருந்து பெறப்பட்டது. அக்காலப்பகுதியில் தீவுப்பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு.செ. சிவஞானம் அவர்கள், கோவிலுக்கு வேண்டிய காணியைப் பெறுவதிலும், அன்னைக்கு ஆலயத்தை அமைப்பதிலும் பேருதவியாக இருந்துள்ளார்.

1952 ஆம் ஆண்டு, தைமாதம் பதினேழாந்திகதி, அச்சுவேலி பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் அவர்கள், அன்னையின் திருவுருவம் வெளிப்பட்ட இடத்தை மையமாக வைத்து, ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை எடுத்துக்கொடுத்தார்கள். அத்தோடு கல்லுக்குள்ளிருந்து வெளிப்பட்ட அன்னையினுடைய திருவுருவத்தைக் கருத்தில் கொண்டு, அவ்விடத்திலே எழுந்தருளி அருள்பாலிப்பவள் அன்னை மனோன்மணி எனக் கூறியுள்ளார். அக்காலத்திலிருந்து இவ்வாலயத்தை மனோன்மணி அம்பாள் ஆலயம் என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. அன்னை பராசக்தி, இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றாகிய அருளலில், சதாசிவமூர்த்தியின் சக்தி மனோன்மணியாக விளங்குகின்றாள்.

முழுமுதற் கடவுளாகிய சிவன் பல்வேறு காரண காரியங்களின் நிமித்தம், பல்வேறு தோற்றங்களை எடுத்துள்ளார்.

இவ்வாறான நிலையில் சக்தியின் பல்வேறு தோற்றப்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் உலக இயக்கம் அனைத்திற்கும் சக்தியே காரணம் என்பதை விளக்கும்வகையில் "சக்தியிருந்தால் செய். இல்லையேல் சிவனே என்று சும்மாயிரு" என்று கூறும் பழமொழியொன்று வழக்கிலுள்ளது. சைவசித்தாந்தத்திலும் சக்தி பற்றிக் கூறப்பட்டுள்ளது. தொழில் வேறுபாட்டினால், சிவசக்திக்குப் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன. ஈசானம் முதல் சத்தியோசாதம் ஈறாகிய பஞ்சசக்திகளாயும், நிவிர்த்தி முதல் சந்தீய தீதை ஆகிய பஞ்ச சக்திகளாயும், பிறவாயும் சிவசக்தி காணப்படும்.

இவ்வாறு உலகமாதாவாகிய பராசக்தியின் தோற்றங்களிலே மனோன்மணி அம்பாளின் தோற்றமும் ஒன்றெனக் குறிப்பிடுவர். சக்தியின் ஒவ்வொரு திருப்பெயரும் ஒவ்வொரு சம்பவத்தோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. மனோன்மணி என்ற திருப்பெயரும் ஆழ்ந்த கருத்துடையதாகக் காணப்படுகின்றது. தத்துவ ஆராய்ச்சியின்படி, புருவங்களுக்கு மத்திய ஸ்தானத்திலிருந்து பிரஹ்மரந்தம் வரையுள்ள ஸ்தானங்களில் எட்டாவது ஸ்தானத்திற்கு மனோன்மணீ என்று பெயர். லலிதா சகஸ்ரநாமத்திலே, சர்வதந்திரரூபா (மனோன்மணி), மகேஸ்வரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனோன்மனன் என்ற சிவனுடைய சக்திக்கு மனோன்மனீ என்னும் திருநாமம் காணப்படுகின்றது. புருவமத்தியிலிருந்து பிரஹ்மரந்தம் வரையுள்ள நவசக்திகளை முறையே இந்து, ரோதினீ, நாத, நாதாந்த, சக்தி, வியாபினீ, வமனா, உன்மனீ அல்லது மனோன்மனீ, மகாபிந்து எனக் குறிப்பிடுவர். பக்தர்களுடைய மனதிலே ஞானத்தோடு கூடியுள்ள நிலையை ஏற்படுத்துவதாலேயே அம்பிகைக்கு மனோன்மணீ என்ற பெயர் ஏற்பட்டது.

இத்தகைய சிறப்புவாய்ந்த அம்பிகைக்கு ஆலயம் அமைக்கும் முயற்சியில் பக்தர்கள் பெரும் ஈடுபாடு காட்டினர்.

இந்நிலையில் 1954 ஆம் ஆண்டு தைத்திங்கள் இருபத்தியாறாம் நாள் ஆலயம் எழுவதற்குரிய அடிக்கல் நாட்டப்பட்டது. அம்பிகை திருக்காட்சி கொடுத்த இடத்தில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புக்களுடன் கூடிய ஆலயத்தைக் கட்டியெழுப்பினர். ஆலயத்திருப்பணியில் ஊரவர்கள் மட்டுமன்றி அயல்ஊரவர்களும், அம்பாள் பக்தர்களும் ஒருங்கிணைந்து ஆலயத்தை அமைக்கப் பெரும்பணியாற்றியுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் அம்பிகையைப் பிரதிஷ்டை செய்ய ஆயத்தங்கள் நடைபெற்றன. 1958 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 20 ஆம் நாள் சுவாதி நட்சத்திரம் கூடிய சுப வேளையில், கும்பாபிஷேகப்பெருவிழா நடைபெற சைவமகா சபையினர் சகல ஆயத்தங்களையும் செய்தனர். இணுவில் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகவிருந்த வேளையில், கிராமத்திலே பரவியிருந்த கொடியநோய் காரணமாகக் கும்பாபிஷேகம் தடைப்படும் சூழ்நிலை காணப்பட்டது.

அம்பிகையின் ஆலயம் அமைந்துள்ள சூழலில் அம்மை நோய் பரவி, ஒருவர் இறந்து விட்டார். இக்காரணத்தினால் அம்மைநோய்த் தடுப்பு வேலைகள் மிக மும்முரமாக நடைபெற்றது. ஆலயம் அமைந்திருந்த நாரந்தனைக் கிராமத்தின் வடபகுதி, நோய்ப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இக்காரணத்தினால் மக்கள் கூடுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆலயத்தில் நடைபெறவிருந்த கும்பாபிஷேகத்தினையும் உடனடியாக நிறுத்தும்படி அரசு உத்தரவு பிறப்பித்தது. ஆலய நிர்வாகிகளும், ஊர்மக்களும் செய்வதறியாது திகைத்தனர். நிர்வாகிகளும், குருக்கள் ஐயாவும் யாழ்ப்பாணம்சென்று சுகாதார அத்தியட்சகருடன் ஆலோசனை நடத்தினர். உடனே குறிப்பிட்ட தொகையினருடன் கும்பாபிஷேகத்தை நடத்துமாறு கூறி சுகாதார அத்தியட்சகரும் பொருளுதவி புரிந்தார்.

மனோன்மணி அம்பிகையின் அருளால் சகல தடைகளும் நீங்கி, அம்பாளின் மூர்த்தியைக் கர்ப்பக்கிரகத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அம்மை நோயும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சுகாதார அதிகாரிகளே இந்நோய் சீக்கிரம் கட்டுப்பாட்டுக்குள் வந்தமை கண்டு வியப்பெய்தினர். எனினும் அடியவர்களின் வேண்டுதலை ஏற்ற அன்னை, தடைகளை நீக்கிக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறச் செய்தமை, அன்னையின் பேரருளைக் காட்டுவதாகவே அமைகின்றது.

இதன்பின்னர் ஆலயம் பல வகையிலும் வளர்ச்சி கண்டது. அன்னையின் அருள் பிரவாகம் எடுத்து எங்கும் திருவருள் பரவிக் காணப்பட்டது. 1959 ஆம் ஆண்டு அம்பிகையின் எழுந்தருளித் திருவுருவம் ஐம்பொன்னால் செய்யப்பெற்று, அலங்கார உற்சவங்கள் நடைபெறத் தொடங்கின. 1963 இல் ஸ்ரீ சக்கர மேரு யந்திரம் அமைக்கப்பட்டு ஆலயத்துள் பூசையில் வைக்கப்பட்டது.

ஸ்ரீ சக்கரம் பல தத்துவக் கருத்துக்களை உடையது. ஸ்ரீ சக்கரத்தின் பூசைகள்மூலம், ஒளிபொருந்திய கதிர்கள் சக்கரத்தைச்சுற்றிப் பிரகாசமாக ஒளிவீசுவதை ஞானிகள் கண்டுள்ளார்கள். ஒவ்வொரு தெய்வத்திற்குமுரிய சக்கரத்தை அமைப்பதன் மூலம், அந்தத் தெய்வ வடிவத்தை வழிபாட்டின் வழியாக உருவாக்கிப் பார்க்க முடியும் என்பதை யந்திரசாத்திரம் உணர்த்துகின்றது. பிரகாசமான ஒளிக்கதிர்களைக் குறிப்பிட்ட வழியின் மூலம் ஒன்று சேர்த்து, அந்த உருவத்தை நம்மால் உணர முடிகின்றது. ரிக் வேதத்திலும், ஈசா உபநிடதத்திலும் உள்ள இதற்குரிய பகுதிகள் இப்படியோர் வியூகத்தை மனத்தளவில் குறித்துப் பார்க்க வழி கூறுகின்றன.

அளவிலும் விரிவிலும் அடக்க முடியாத மாபெரும் சக்தியை அளவுபடுத்தி, பிரயோகம் செய்யக்கூடிய அமைப்பில் சக்தியின் அருளாசியை ஸ்ரீ சக்கரம் அளிக்கின்றது. சக்தி வழிபாட்டை

மேற்கொள்வோர், ஸ்ரீ சக்கர வழிபாட்டை மேற்கொண்டு, அருளைப் பெறுகின்றார்கள். சக்தி வழிபாட்டிலே ஸ்ரீ சக்கர வழிபாடு மிகுந்த சக்தி வாய்ந்ததாகவும், தனிப்பண்பு கொண்டதாகவும் கருதப்படுகின்றது. இத்தகைய பெருமை மிக்க ஸ்ரீ சக்கர மேருயந்திரம் பண்டாரபுலம் மனோன்மணி அம்பாள் ஆலயத்திலே அமைக்கப்பட்டமை, இவ்வூர் மக்கள் சக்திவழிபாட்டிலே கொண்ட தனித்தன்மையை உணர்த்துவதாகக் காணப்படுகின்றது.

இலங்கையிலே சில சக்தி ஆலயங்களிலே மட்டுமே ஸ்ரீ மேரு யந்திர பூசை நடைபெற்றுவருகின்றது. அவற்றுள் ஒன்றாக நாராந்தனை மனோன்மணி அம்பாள் ஆலயமும் விளங்குகின்றது. ஆரம்பகாலத்தில் இப்பூசை அலங்கார உற்சவங்கள் நடைபெறும் வேளையில் நிகழ்ந்தது. பின்னர் நவராத்திரி காலத்தில் இடம்பெற்று வருகின்றது.

படிப்படியாக வளர்ச்சிபெற்றுவந்த இவ்வாலயத்திற்குப் புதுத்தேர் அமைக்கும் முயற்சிகள் 1966 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இதனைச் செயற்படுத்தும்வகையில் 1966 ஆம் ஆண்டு ஆடிமாதம் 13 ஆம் நாள், தேர்த் திருப்பணிச்சபை அமைக்கப்பட்டது. இத்திருப்பணியை நிறைவேற்ற நாடகம் போட்டுப் பணம் திரட்டினர்.

இந்நிலையில் தேர்த்திருப்பணி வேலைகளைச் சைவ மகாசபை பொறுப்பேற்றது. திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.செ. கந்தசாமி ஸ்தபதியாரை ஏற்பாடுசெய்து, 1970 ஆம் ஆண்டு தேர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அழகிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. தேர் மண்டபமும் அமைக்கப்பட்டது. தேருக்குரிய பவளக்கால், மணிகள், முடி என்பவற்றைத் தனி உபயங்களாகப் பக்தர்கள் செய்து கொடுத்தனர்.

மீண்டும் 1973 ஆம் ஆண்டு கோவிலைப் புனருத்தாரணம் செய்து, புதிதாக வைரவகோவில் அமைத்து, இரண்டாவது

கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டு அம்பாள் தோற்றம் வெளிப்பட்ட 25வது ஆண்டாகும். இக்காலப்பகுதியில் ஆலயத்தில் பல முன்னேற்றமான விடயங்கள் நடைபெற்றுள்ளன. ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டுச் செய்யப்படும் பஞ்சகிருத்தியங்களையும் மகோற்சவமாக நடத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. புதிதாகக் கொடிமரம் செய்யப்பட்டு ஆலயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது. உள்ளூர்-வெளியூர் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியின் உதவியுடன் புதுமையான அழகிய சித்திரத்தேர் வேலைகளும் நிறைவுபெற்றது.

நாரந்தனை மனோன்மணி அம்பாள் ஆலயத்தில், தினமும் இருநேரப் பூசைகளும், வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் மூன்றுநேரப் பூசைகளும் நடைபெறும். அவ்வாறே செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் கூட்டுப்பிரார்த்தனைகள் நிகழும். ஆலயத்திலே அறநெறி பயிலும் மாணவர்களும், இந்து இளைஞர் மன்றத்தினரும் இக் கூட்டுப் பிரார்த்தனைகளில் பங்குகொள்வர். வருடந்தோறும் ஆவணிமாதத்திலே அலங்கார உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். அம்பாள் மூன்றுதலை நாகமாகக் காட்சியளித்த கடற்பிரதேசத்தில் தீர்த்தம் நடைபெறும்.

வருடந்தோறும் தை அமாவாசைத் திதியிலே அபிராமிபட்டர் விழா, மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது இக் கோயிலுக்குரிய தனிச்சிறப்பாகும். அக்காலப்பகுதியிலே இவ்விழா வேறெங்கும் நடைபெறவில்லை. சக்தி வழிபாட்டிலே ஆத்மார்த்த மாக ஈடுபட்டு அன்னையருளால் அற்புதங்களை நிகழ்த்தியவர் அபிராமிபட்டர்.

இவரது ஆரம்பகாலப் பெயர் ஸ்ரீ சுப்ரமணியம் என்பதாகும். அபிராமி அன்னையே துணையென வாழ்ந்தவரை, பேயனென்றும், பித்தனென்றும் அனைவரும் எண்ணினர். ஒருநாள் சரபோஜி மகாராஜா கோவிலுக்கு வந்தபொழுது, சுப்ரமணியத்தைப் பற்றிப் பலரும் தப்பான கருத்துக்களை எடுத்துக்கூறினர். எனினும்,

அவற்றை நம்ப மறுத்த அரசன் ஸ்ரீ சுப்ரமணியத்தை நோக்கி, இன்று என்ன திதி என்று கேட்டார். அன்னையின் திருமுகத்தில் லயித்திருந்த அவர் பௌர்ணமி என்றுரைத்தார். ஆனால் அன்று அமாவாசை தினமாகக் காணப்பட்டமையால் அரசர் கோபமுற்றார். இன்று இரவு முழுநிலவு உதிக்காவிட்டால் யமகண்டம் என்னும் தண்டனை வழங்கப்படும் என்று கூறிச்சென்றார். யமகண்டம் என்பது தண்டனை பெற்றவர் ஒரு உறியிலே அமரவேண்டும். கீழே நெருப்பு கொழுந்துவிட்டெரியும்.

"அபிராமிபட்டர் பௌர்ணமி என்று கூறியதை நிரூபிக்கா விட்டால், உறியைப் பிணித்த கயிற்றை அறுத்துவிடுவார்கள். உறி நெருப்பில் விழ அதில் அமர்ந்தவரும் சாம்பராவர். போட்டியை ஏற்ற ஸ்ரீ சுப்ரமணியம் பாட ஆரம்பித்தார். "உதிக்கின்ற செங்கதிர்" என்று அபிராமி அந்தாதி ஆரம்பமாகியது. அன்னை அபிராமியின் கருணையைப் புகழ்ந்து பாடிக்கொண்டேயிருந்தார். 79 ஆம் பாடல் தொடங்கியது.

"விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு .." என்று பாடும்பொழுது அன்னை அபிராமி தன் தாடங்கத்தை (காதணி) வானில் நிலவாக மிளிரவைத்தாள். பக்தனின் துன்பம் அன்னையின் துன்பமல்லவா? மன்னர் உள்ளிட்ட அனைவரும் அன்னையின் அருளையும், ஸ்ரீ சுப்ரமணியத்தின் பக்தியையும் எண்ணி வியந்து நின்றனர். அன்றிலிருந்து அபிராமிபட்டர் என்னும் பெயரைப் பெற்றார்.

அபிராமிபட்டரின் அன்பும், பரமபக்தியும் கொண்ட வடிவமே அபிராமி அந்தாதி. உலகநாயகியாம் அன்னைமீது நம்பிக்கைவைத்து, அவளே கதியென எண்ணுவோருக்கு அன்னையின் அருளும் அற்புதங்களும் நிகழும் என்பதை உணர்த்திய அபிராமிபட்டருக்கு, வருடந்தோறும் நாரந்தனை மனோன்மணி அம்பாள் ஆலயத்திலே விழாவெடுப்பது, மிகவும் அற்புதமானவொரு செயற்பாடாகும். இவ்வாறான விழா, சக்தி வழிபாட்டின் பெருமையையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

என்ற ஆன்றோர் வாக்கின் உண்மைநிலையையும், மக்களுக்கு உணர்த்துவதாகக் காணப்படுகின்றது. உற்சவ காலங்களிலும், ஏனைய திருநாட்களிலும் இவ்வாறான அர்த்தம்பொதிந்த, மக்களிடையே இறைநம்பிக்கையை ஏற்படுத்தவல்ல விழாக்களை ஏற்படுத்துவது, சமுதாயநலனுக்கு உகந்ததாகும்.

1951 ஆம் ஆண்டு தன்னை வெளிப்படுத்தி அருள்புரிந்த தங்கத்தாலான அன்னை, யாழ் நூதனசாலையில் வைக்கப்பட்ட போதிலும், அன்னை தோன்றிய இடத்தில் ஆலயமெழுப்பி வழிபடும் பக்தர்களுக்கு, அன்னை பல அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றாள்.

மனோன்மணி அம்பாள் சிலையின் ஆதிவரலாற்றை அறிய, எவ்வாறு அவ்விடத்திலே அன்னையின் சிலை வந்தது? என்பதை யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர். இந்திரபாலா உட்பட்ட பலரும் ஆய்வு செய்துள்ளார்கள்.


நாரந்தனையை அண்மித்து ஊர்காவற்துறை காணப்படுவதாலும், ஆரம்பகாலத்திலே வியாபாரநிமித்தம் இலங்கை வந்த செட்டிமார்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் ஆலயம் அமைத்து வழிபட்டமையும், ஈழ வரலாற்றுக் குறிப்புக்களிலே காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலும் செட்டிமார்களோடு தொடர்புடைய பல பெயர்கள் காணப்படுகின்றன. அன்னை தோற்றமளித்தபோது கிடைக்கப்பெற்ற நாணயங்கள் சோழர் காலத்தனவாகவும், 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் குறிப்புக்களிலே காணப்படுகின்றன.

கி.பி. 1505 ஆம் ஆண்டிற்குப் பின், பல சைவ ஆலயங்கள் போத்துக்கீயரால் அழித்தொழிக்கப்பட்டபோது பக்தர்கள், நீர்நிலைகளிலும், பாதுகாப்பான இடங்களிலும் திருவுருவங்களை மறைத்து வைத்துப் பேணியுள்ளனர். அவ்வாறான சூழ்நிலையில் மனோன்மணி அம்பாளின் திருவுருவமும் மறைக்கப்பட்டதா? அப்படியாயின் திருவுருவம் எழுந்தருளியிருந்த கோயில் எது?

என்பன போன்ற விடைகளை ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பதன் மூலம் பல உண்மைகள் வெளிப்பட வாய்ப்புண்டு.

ஏனைய ஆலயங்களினின்றும் பல்வேறு நிலைகளில் வேறுபட்டதாக மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் சிறப்புற அமைய ஊர்மக்களோடு இவ்வாலயத்தின் நிர்வாகப்பணிகளிலே ஈடுபட்டுள்ள அனைவரும் ஒன்று கூடி உழைத்துள்ளனர்.

உயர்ந்த நிலையிலே அன்னையைப் போற்றும், ஸ்ரீ சக்கர பூசை மற்றும் சக்தி வழிபாட்டின் பெருமையை உணர்த்தும் அபிராமிபட்டர் விழா போன்றவை மிக உயர்ந்த நிலையில் சைவசமயத்தின் ஆழமான தார்ப்பரியங்களைப் போற்றும் வகையில் நிகழ்பவையாகும். இவ்வாறான அறிவுபூர்வமான வழிபாட்டுமுறைகள், இந்துசமயத்தின் ஆழமான கருத்துக்களை மக்கள் மனதிலே நிலைநிறுத்த உதவும்.



# சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயம்

## திருகோணமலை

ஈழத்தின் பாடல்பெற்ற திருத்தலமாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திருப்பதியான திருகோணமலை, பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது.

இயற்கை அழகு கொஞ்சும் திருகோணமலையில் பல தமிழ்க்கிராமங்கள் பண்டுதொட்டு இன்றுவரை, தமிழரின் பாரம்பரியத்தை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன.. இக்கிராமங்கள் பலவும் தற்காலத்திலே நிலவும் போர்ச் சூழலால் சின்னாபின்னமாக்கப்பட்டு, இந்தப் பிரதேசங்களிலே காலங்காலமாக வாழ்ந்த தமிழ்மக்கள் தமது வாழ் விடங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களால் பேணப்பட்ட ஆலயங் களும், தேடுவாரற்ற நிலையில் பெரும்பாதிப்புக்குள்ளாகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சொந்த நாட்டிலேயே காலங்காலமாக வாழ்ந்த இடத்தை விட்டு, அகதிகளாகத் துரத்தியடிக்கப்பட்ட துன்பம், சம்பூர்க் கிராமமக்களுக்கு அண்மையில் ஏற்பட்டது. சம்பூரிலுள்ள இந்து ஆலயங்களுக்கு, பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. என்றோ ஒருநாள் எமது எதிர்காலச்சந்ததியினர், தமிழ்மக்கள் வாழ்ந்த நிலப் பரப்புக்களைத் தேடி ஆய்வுசெய்யும்பொழுது, இந்தப் பிரதேசங் களிலே வாழ்ந்த தமிழ்மக்கள் பேணிய கோயில்களின் சுவடுகள் மூலம், தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அடை யாளங்காண, அழிக்கப்பட்ட, கோயில்களின் வரலாறுகள், ஒரு சான்றாக அமையக்கூடும். இந்நோக்கிலேயே, போர்ச்சூழலிலே அமைந்துள்ள ஆலயங்களின் வரலாற்றை நாமறிவது அவசியமாகின்றது. திருகோணமலையில் அமைந்துள்ள அழகிய தமிழ்கிராமங்களுள் ஒன்றாகச் சம்பூர் திகழ்கின்றது. இந்தப் பிரதேசத்திலே காணப்படும் போர்ச்சூழல் காரணமாக், இங்குள்ள இந்து ஆலயங்களைப் பேணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் சம்பூர் பிரதேசத்தை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். தாம் இழந்த பூமியில் திரும்பி வாழ்வதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

வரலாற்றுக்காலத்திற்கு முன்பிருந்தே சம்பூர், தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாக விளங்கியமைக்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. சம்பூர் என்றாலே சம்பூரணமான ஊர் என்று பொருள்கொள்வர். ஆனால் இவ்வூரின் இன்றைய நிலை தமிழ் மக்களைப்பொறுத்தவரை, இரத்தக்கறை படிந்த ஊராக விளங்குகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப் பற்றில், மூதூரிலிருந்து கட்டைபறிச்சான் என்னும் கிராமத்திற்கூடாக ஆறு கிலோமீற்றர் தூரத்தில், கடற்கரையோரமாக சம்பூர் என்னும் அழகிய கிராமம் அமைந்திருக்கின்றது. இக்கிராமத்திலே காணப்படும் பத்திரகாளி அம்பாள் ஆலயம் மிகப் பிரசித்திபெற்ற ஆலயமாகும்.

முழுமுதற்பொருளாகிய சிவனும், சக்தியும் மக்களுடைய மனநிலைக்கேற்ப பல்வேறு வடிவங்களைத் தாங்கி அருள்பாலிக்கும் தன்மை இந்துசமயத்திலே பரந்து காணப்படுகின்றது. இந்த வகையிலே பத்திரகாளி அம்பாள், பராசக்தியின் அம்சமாகப் போற்றப்படுகின்றார். பத்திரகாளி அம்பாள் ஆலயங்களில் சிவனின் அம்சமான வீரபத்திரரும் அம்பாளுடன் இணைந்து காணப்படுவர்.

பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுள் உலகைப் படைக்கும் பிரம்மதேவனுக்கு அவதாரம் எதுவும் கிடையாது. படைக்கும் ஆற்றல்பெற்றவராகப் பிரமா கருதப்பட்ட போதிலும், அவரைத் தெய்வமாக வணங்காத நிலைக்குப் பல புராணக்கதைகள் கூறப்பட்டுள்ளன. முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் சிவனுக்கும் அவதாரம் கிடையாது. ஆனால் சிவனுடைய சக்தியினால் சிவாம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சிவகணங்கள் இந்துசமய வழிபாட்டிலே இடம்பெற்றுள்ளனர்.

இவர்களை அவதாரங்களாகக் கொள்ளாது, சிவகணங்களாக, சிவமூர்த்தங்களிலே சேர்ப்பதே வழக்கமான மரபாகக் காணப்படுகின்றது. இந்தவகையிலே சிவமூர்த்தமான வீபத்திரக்கடவுளும், சக்திஅம்சமான பத்திரகாளியும் ஒன்றிணைந்து மக்களுடைய வேண்டுதல்களை விரைந்து நிறைவேற்றுபவர்களாக, இந்துக்களால் வணங்கப்படுகின்றார்கள்.

அநீதி தலையெடுத்து நீதி தலைசாய நேர்ந்தபோது, அநீதிக்குக் காரணமானவர்களைச் சம்காரம் செய்யும் நோக்குடன், பராசக்தியானவள் எடுத்த திருக்கோலமே பத்திரகாளி அம்பாள் எனப் போற்றப்படுகின்றது. பத்திரகாளியின் வீரத்தையும், அதர்ம வழியிலே வாழ்ந்தவர்களைப் பத்திரகாளி எவ்வாறு சம்காரம் செய்தாள் என்பதையும் விளக்க, பல புராணக் கதைகள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய சக்தியின் அம்சமான பத்திரகாளி அம்பாள் சம்பூரிலே எழுந்தருளியுள்ளாள்.

பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாற்றை அறிவதற்கு முன்னோடியாக, இக்கோயில் அமைந்துள்ள சம்பூர்க்கிராமத்தின் வரலாற்றை அறிவது தமிழரின் தொன்மையையும், பாரம்பரிய வரலாற்றையும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க உதவியாக அமையும். சம்பூர் என்னும் பெயர் குளக்கோட்டு மன்னனுடைய வரலாற்றோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

கி.மு. 1263 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய வீரபாண்டிய மன்னன், இலங்கையைக் கைப்பற்றியமைக்குச் சான்றாக, வெற்றிச்சின்னமாக கோணேசர் ஆலய கோட்டைவாயிலில், இரண்டு மீன் இலச்சினைகளைப் பொறித்துச் சென்றுள்ளான். இவ்வாறான இலச்சினைகளைத் தற்காலத்திலும் காணலாம்.

பாண்டிய மன்னன் ஆட்சிக்காலத்திலே, மநுநீதிகண்ட சோழனின் மகனாகிய குளக்கோட்டுமன்னன், கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தானென யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு குளக்கோட்டு மன்னன் திருக்கோணேசுவரத்தில் திருப்பணிகள் செய்து நிறைவேற்றிய பின், திருக்கோணேசுவரக் கோயிற் தொழும்புகளுக்காக, தென்னிந்தியாவிலிருந்து ஏழு குடிமக்களை கொட்டியாரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமம்பற்று ஆகிய இடங்களிலே குடியமர்த்தினான். இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு, குளக்கோட்டுமன்னன் மானியங்களை வழங்கியுள்ளான்.

இவ்வாறான இடங்களிலே குடியமர்த்தப்பட்டவர்கள், மன்னன் கொடுத்த மானியத்தை மகிழ்வுடன் ஏற்று, 'யாவும் சம்பூரணம்' என்று பரமதிருப்தியடைந்தார்களாம். ஆதலால் இந்த ஊர் சம்பூரணமான ஊர் என்ற பொருளில், "சம்பூர்" என வழங்கியதாகக் கர்ணபரம்பரைக் கதையொன்று காணப்படுகின்றது. திருக்கோணேஸ்வரத்தின் வரலாறு, வரலாற்றுக்கு முற்பட்டது. இவ்வாறான பழம்பெருமைமிக்க தலத்தின் வரலாற்றுக் காலத்தோடும், குளக்கோட்டு மன்னன் காலத்தோடும் தொடர்புடைய சம்பூரில்

ஆதியிலிருந்தே தமிழ்மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இத்தகைய தமிழரின் பாரம்பரியப்பிரதேசத்திலே அமைந்திருந்த பத்திரகாளி அம்பாள் ஆலயம், பலவகையிலும் சிறப்புப்பெற்றதாக விளங்குகின்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இந்துக்களோடு ஏனைய சமய மக்களும், சம்பூர் பத்திரகாளி அம்பாளுக்கு நேர்கடன் வைத்து, பயபக்தியோடு பொங்கலிட்டு வழிபடும் சம்பிரதாயம், பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு சுமார் 600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது. 600 ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவிலிருந்து வந்த கப்பலொன்றில், சம்பூரில் எழுந்தருளியுள்ள பத்திரகாளிஅம்பாளின் திருவுருவம் கொண்டு வரப்பட்டது. அம்பாளின் ஆணைப்படி அத்திருவுருவம் கெவுளியாமுனை என்னும் பகுதியில் இறக்கப்பட்டது. இச்செய்தியை அங்குள்ள அன்பர் ஒருவருக்கு, கனவிலே அம்பாள் தெரியப்படுத்தியுள்ளார். அந்த அன்பர் இச்செய்தியை, சம்பூரிலே வாழ்ந்த காரியப்பர் என்பவருக்கு அறிவித்துள்ளார். காரியப்பர் என்பது, குளக்கோட்டு மன்னனால் கோயிற் தொண்டுகளுக்காக நியமிக்கப்பட்ட தொழும்பாளர் களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயராகக் காணப்படுகின்றது. குளக்கோட்டு மன்னனால் நியமிக்கப்பட்ட தொழும்பாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இவர்கள் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறான பெயருடையவர் ஊருக்கு முக்கியமானவராகக் கருதப்படுவர். இக்காரணத்தினாலேயே அக்காலத்திலே வாழ்ந்த காரியப்பருக்கு, கனவிலே கண்ட செய்தி உடன் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தியை அறிந்த காரியப்பர் சம்பூர் மக்களோடு சென்று, கெளியாமுனையிலிருந்த அம்பாளைச் சம்பூருக்குக் கொண்டுவந்து, காட்டுத்தேங்காய் மரத்தடியில் எழுந்தருளச் செய்து, பூசை செய்து வந்துள்ளார்கள்.

அந்த மரமும் மரத்தடியில் எழுந்தருளிய அம்பாளும் அசைக்க முடியாத வகையிலே எழுந்தருளியுள்ளதாகச் சம்பூர்மக்கள் கூறுவர். பெருங்கோயிலெழுப்பி அம்பாளை எழுந்தருளச் செய்ய மக்கள் விருப்பமுற்றபோதிலும், பயம் காரணமாக அம்பாளை, காட்டுத் தேங்காய் மரத்தின் கீழ் எழுந்தருளும் நிலையிலேயே, சிறுகோயிலை அமைத்தனர். இக்கோயிலையும் மரத்தையும் சுற்றி மதிலெழுப்பி, மிகப் பயபக்தியோடு வழிபடுவது வழக்கமாகக் காணப்பட்டுள்ளது. ஒரு கையிலுள்ள சூலத்தால், மகிஷாசுரனை மர்த்தனம் செய்த பாவனையில், சம்பூரில் எழுந்தருளியுள்ள பத்திரகாளிஅம்பாள் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது.

மரத்தடியிலிருந்து அம்பாளை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு சம்பூர்மக்கள் உள்ளத்திலே பயம் காணப்பட்டது. எனவே, இச்சிறு கோவிலுக்கருகில் பத்திரகாளி அம்பாளுக்கு, பெரிய கற்கோவில் கட்டி, காட்டுத் தேங்காய் மரத்தடியில் எழுந்தருளியுள்ள திருவுருவ அமைப்பில், சிலாவிக்கிரகம் செய்து, கருவறையில் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். இப் புதிய கோயில் சுமார் எழுபது ஆண்டு களுக்கு முன்பு கட்டப்பட்டது. இக்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம் ஆகிய அமைப்புக் களைக் கொண்ட மடாலயமாக அமைக்கப்பட்டது.

மகாமண்டபத்திலே அம்பாளும், விநாயகரும் எழுந்தருளி யுள்ளனர். கோயில்வீதியிலே வீரபத்திரர், பைரவர், நாகதம்பிரான் ஆகியோருக்குத் தனிக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளது. தரிசன மண்டபத்தில் சிங்கம், பலிபீடம் ஆகியவை காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் வடக்குவீதியிலும், தெற்குவீதியிலும் பத்து இடங்களில், பஞ்சலோகத்தால் அமைக்கப்பட்ட அழகிய திரிசூலங்கள் நிறுவப்பட்டுள்ளமை இவ்வாலயத்திற்கே உரிய தனிச் சிறப்பாகக் காணப்படுகின்றது. பீடங்கள் வளைவு தளங்களால் மேற்கூரையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட திரிசூலங்களைத் திக்குக் காவற்தெய்வங்களாகக் கருதி, இவற்றிற்குப் பூசை நடைபெறுவது வழக்கம். பத்திரகாளி கோயில், கண்ணகி அம்மன்கோயில் போன்றவை மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் அமைக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இத்தெய்வங்கள் மீது மக்கள் கொண்ட பயமும், ஆசாரம் கடைப்பிடிக்கப்படாவிட்டால், துன்பம் நேரும் என்ற எண்ணமுமே இதற்குக் காரணமாகக் காணப்படுகின்றது. இக்காரணத்தினால் சம்பூர் பத்திரகாளிஅம்பாள் கோயிலும், மக்கள் குடியிருக்கும் இடத்திற்குச் சற்று ஒதுக்குப்புறமாகவே அமைந்திருந்தது. சக்தி வழிபாட்டிலே மக்கள் ஆழ்ந்த நம்பிக்கையும், பக்தியும் அத்தோடு பயமும் கொண்டிருந்தமையை இது புலப்படுத்துகின்றது.

அன்னை பத்திரகாளியிடம் நேர்கடன்வைத்து, மக்கள் வரங் களைப் பெறுவர். இவ்வாறு தமது வேண்டுதல்கள் நிறைவேற்றப் படும்பட்சத்தில், அதற்கு நன்றி தெரிவிக்குமுகமாகப் பொங்கலிட்டு மகிழ்வர். இவ்வாறு பொங்கலிடுவது அனேகமான பத்திரகாளி ஆலயங்களிலும் நடைபெறும் பொது வழக்காகக் காணப்படுகின்றது. எனினும், சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில், பொங்கலிடும் வழக்கம் சற்று மாறுபட்ட வழமையுடையதாக விளங்குகின்றது. நேர்த்திக்கடனுக்காகப் பொங்கலிடுவோர் ஒவ்வொருவரும், ஏழுபானை வைத்துப் பொங்கலிடும் வழக்கம் பழைய மரபொன்றை நினைவூட்டுவதாகக் காணப்படுகின்றது.

ஆரம்பகாலத்தில் குளக்கோட்டுமன்னனால் ஏழுகுடிமக்கள் திருக்கோணேஸ்வரத் தொழும்புகளுக்காகக் குடியமர்த்தப்பட்டனர். இச்சம்பவத்தை நினைவுகூர்ந்து கௌரவிப்பதற்காகவும், இந்த ஏழு குடிமக்களும் அவர்கள் பரம்பரையினரும், சம்பூர் பத்திரகாளி அம்பாளின் தொழும்பாளர்களாக இன்றுவரை விளங்குகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், ஏழுபானைகளில் பொங்கலிட்டுப் படைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. அம்பாள்

எழுந்தருளியுள்ள ஆலயங்களில் செவ்வாய்க்கிழமை மிகவும் விசேடமானதாகக் கருதப்படுகின்றது. ஆகவே இப்புனிதமான செவ்வாய்க்கிழமைகளிலேயே சம்பூர் பத்திரகாளி அம்பாளுக்குப் பொங்கலிடும் வழக்கம் தொடர்கின்றது.

இவ்வாலயத்திலே வருடா வருடம் சங்காபிஷேகம், லட்சார்ச் சனை, அலங்காரஉற்சவம் என்பன சிறப்பாக நடைபெறுவது வழக்கம். சித்திராபூரணையை அடுத்துவரும் ஐந்தாம்நாள் தொடக் கம் சித்திரைமாத அமாவாசை வரையுமுள்ள பத்துநாட்களும், மிகச் சிறப்பாக இலட்சார்ச்சனை நடைபெறும். இலட்சார்ச்சனை முடிவில் சகஸ்ர சங்காபிஷேகம் நிகழும். அம்பாளுக்குரிய திருநாட்களிலே நவராத்திரி மிகச் சிறப்புடையது. நவராத்திரி ஒன்பது நாட்களும் விசேட அலங்கார உற்சவம் கோலாகலமாகக் கொண்டாடப்படும். நவராத்திரியை விரதமாகவும் அதேநேரத்தில் விழாவாகவும் கொண்டாடுவது வழக்கம். இவற்றோடு சிவராத்திரி, திருவெம்பாவை, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு என்பனவும் சம்பூர் மக்களால் கடந்த காலங்களிலே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

கிழக்குமாகாண மக்கள் கௌரிவிரதத்தை மிகப் பயபக்தியுடன் கடைப்பிடிப்பர். கௌரிவிரதம் சிவனுக்குரிய விரதமாயினும், அம்பாள் சிவனை நோக்கி விரதமிருந்து, வேண்டிய வரங்களைப் பெற்ற காரணத்தினால், அம்பாள் ஆலயங்களில் மிகப் பயபக்தியோடு இருபத்தியொரு நாட்களும், கௌரி விரதம் அனுட்டிக்கும் மரபு காணப்படுகின்றது. சம்பூர் பத்திரகாளி அம்பாள் எழுந்தருளியுள்ள ஆலயத்தின்மீது பாடப்பட்ட காவியம் பல சம்பவங்களை எடுத்தியம்புகின்றது.

இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தோடு, தமது வாழ்வை இணைத்திருந்த தமிழ் மக்கள், அகதிகளாக வேறிடங்களிலே தஞ்சம்புகுந்துள்ளனர். இதே வேளை சம்பூர்ப் பிரதேசத்திலே காணப்படும் போர்ச்சூழ்நிலையில் மக்கள் தஞ்சம்புக

ஏதுவாக இருந்த ஆலயங்களும் குண்டுவீச்சுக்களுக்கு இலக்காகி அழிய நேர்ந்துள்ளமை மிகவும் துயரமானதாகும். போத்துக் கேயரிலிருந்து இன்றுநாள்வரை தமிழர்களின் கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை அழிக்க எண்ணுவோர் கண்களில் முதலிலேபடுவது ஆலயங்களாகவே காணப்படுகின்றது. போர் அனர்த்தம் காரணமாக அண்மையில் திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள வெருகலம்பதி ஆலயத்தின்மீது ஏற்பட்ட அழிவு மேற்கூறிய நிலைக்குச் சான்றாகக் காணப்படுகின்றது.

எத்தனை துன்பம் நேரினும் அவற்றை ஏற்று வாழும் மனப்பக்குவத்தை தமிழ்மக்கள் பெற்றுள்ளார்கள். இவ்வாறான மனப்பக்குவத்தை ஏற்படுத்த ஆன்மீக உணர்வுகள் துணை செய்கின்றன. திருக்கோயில் வழிபாட்டின் உயர்ந்த தத்துவத்தை உணர்ந்து இடம்பெயர்ந்தாலும், புலம்பெயர்ந்தாலும் ஆங்காங்கே கோயில்களை அமைத்து, தமது இஷ்ட தெய்வங்களைப் போற்றி வருகின்றனர்.

இந்துசமயத்திலே திருக்கோயில் வழிபாடு உணர்த்தும் தத்துவம் மிகவும் ஆழமானது. ஒரு மனிதனின் உடலமைப்பைக் கொண்டதாகத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. குண்டலினி சக்தி உறங்கிக்கிடக்கும் மூலாதாரம், கொடிமரமாகவும், கொடிமரத்திலுள்ள முப்பத்திரண்டு வளையங்களும் முள்ளந் தண்டிலுள்ள முப்பத்திரண்டு எலும்புகளையும், கொடிமரக்கயிறுகள் இடைகலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும்போது, ஆன்மா பேரானந்தத்தை எய்துகின்றது.

எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் 'கொப்புள்' என்னும் நிலையத்தில் நந்தியை பிரதிஷ்டை செய்யும்போது, எண்ணங்களை அடக்கி மனதினைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகின்றது. அறுவகை உட்பகையும் இதயத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதை பலிபீடம் உணர்த்துகின்றது

பிரம்பகபால வடிவிலே மூலத்தானத்தை அமைக்கும் வழக்கமுண்டு. புருவமத்தியிலே ஆக்ஞா சக்கரத்தில் ஆன்மநேய ஒருமைப்பாடு ஏற்படும்பொழுது. ஆன்மஒளி உண்டாகும் என்பதை லிங்கப்பிரதிஷ்டை உணர்த்துகின்றது. கர்ப்பக்கிரகத்தின் மேலே அமைந்துள்ள இராஜகோபுரம் பரவெளித் தத்துவமாகிய நந்தனத்தை உணர்த்துகின்றது.

யோகம் செய்யும்பொழுது மனதினை ஒருநிலைப்படுத்த உதவும் சக்கரங்கள், கோயிலின் அமைப்பை உணர்த்துவனவாகக் காணப்படுகின்றன. சாதாரண பார்வையிலே தோன்றும் ஆலய அமைப்பு முறை, மெய்ஞ்ஞான நோக்கிலே அர்த்தமுள்ள தத்துவத்தைக் கொண்டு காணப்படுகின்றது. மனித உடம்பிலே அமைந்துள்ள சக்கரங்களிலே மூலாதாரம் கர்ப்பக்கிரகத்தையும், சுவாதிட்டானம் அர்த்தமண்டபத்தையும், மணிபூரகம் மகா மண்டபத்தையும், அனாகதம் ஸ்நபன மண்டபத்தையும், விசுக்தி அலங்கார மண்டபத்தையும், ஆக்ஞை சபாமண்டபத்தையும் உணர்த்துவனவாகக் காணப்படுகின்றன.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டுகளிலிருந்து இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், தற்கால ஆக்கிரமிப்பாளர் என முறையே இந்து ஆலயங்களை அழித்த போதிலும், இவர்களது வீழ்ச்சியின் பின் மீண்டும் அழிக்கப்பட்ட ஆலயங்கள் யாவும் பேரெழுச்சி பெற்றன. 'குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்து நண்ணினும் நண்ணுவர்' என்ற வாக்கிற்கமைய ஆட்சியாளர் பலருடைய எழுச்சியும் வீழ்ச்சியும் வரலாற்றிலே காட்டப்பட்டுள்ளது. தமிழர் வாழ்வின் உயிர்மூச்சாகக் காணப்படும் ஆலயங்களும் மீண்டும் எழுச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

★ ★ ★

# ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்

## வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

**கா**லத்தால் வரையறுக்கமுடியாத தொன்மை வாய்ந்த சமயமாக இந்துமதம் விளங்குகின்றது. எவரையும் புண்படுத்தாது வந்தாரை வரவேற்று, போவோரை வாழ்த்தி அனுப்பும் மதமாகவும் இம்மதம் விளங்குகின்றது. இறைவன் ஒருவனே என்ற ஆழ்ந்த தத்துவத்தின் வெளிப்பாடாக, இந்துமதத்தின் செயற் பாடுகள் காணப்படுகின்றன. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்ற தத்துவம் காணப்பட்ட போதிலும், இத்தத்துவத்தை உணராத மக்கள் அனைவரும் ஆலயங்களுக்குச்சென்று தமது இஷ்ட தெய்வங்களை வழிபட உதவியாக, ஆலயங்களை எமது முன்னோர் அமைத்தனர்.

ஆதிகாலத்திலே வாழ்ந்த மனிதன், இயற்கையின் சீற்றத்திற்குப் பயந்து, அதன் வெளிப்பாடாக

இயற்கையைப் போற்றி வணங்கி வழிபட ஆரம்பித்தான். வாழ்வியலின் பரிணாம வளர்ச்சியில் இவ்வாறு போற்றி வழிபட்ட இயற்கைக்கு உருவங்களைக் கொடுத்து, மனக்கண்முன் கொண்டுவந்து வணங்கவும் தலைப்பட்டான். இதன் விளைவாக ஆத்மார்த்த வழிபாடு தோன்றியது. ஆயினும் பின்னர் இவ்வாறான வழிபாடு வேத, ஆகம விதிமுறைகளைக் கொண்டதாக விரிவடைந்தது.

இதிகாச புராணங்கள் இவ்வளர்ச்சியின் படிமுறைகளை வெளிக்காட்டியுள்ளன. இவற்றிலே காணப்படும் வழிபாட்டு முறைகள் வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை எனப் பல்வேறு வழிமுறைகளைக் கொண்டனவாகக் காணப் பட்டன. கோயிற் கிரியைகளை இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதாகப் பரார்த்தவழிபாடு காணப் பட்டது. இவ் வழிபாட்டிற்கு அடிகோலியவர்கள் ஆரியர்கள். சமஸ்கிருதம், கிரந்தம் இவைகளின்றித் தெய்வத்தை வழிபடுவது ஏற்புடையதல்ல என்ற கருத்தை, ஆரிய சமுதாயம் மக்களிடையே ஆழமாக வேரூன்றச் செய்தது. இறைத்தத்துவத்தையோ, அன்றி வழிபாட்டுமுறைகளின் தத்துவத்தையோ உணரமுடியாத மக்கள், பரார்த்த வழிபாட்டை மேன்மைப்படுத்தி, ஆத்மார்த்த வழிபாட்டை மறந்தனர்.

இந்நிலையில் கிராமிய வழிபாட்டுமுறையும் மக்களிடையே பிரபல்யம் பெற்ற வழிபாடாகக் காணப்பட்டது. சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய அறுவகைச் சமயங்களும் தமக்கென முழுமுதற்கடவுளைக் கொண்டுள்ளன. இந்நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுவது, கிராமியவழிபாட்டு முறையாகும். இவ்வழிபாட்டு முறையின் ஆதாரமாக அவரவர் பேசும்மொழியும், ஆத்மார்த்தமான அன்பும், தெய்வத்தை வணங்க நீரும், பூவும், தீபமுமே காணப்படுகின்றது. ஆனால் இவ்வழிபாடும் பல மாற்றங்களுடன்

பிற்காலத்தில் மாற்றமடைந்து, பரார்த்த வழிபாட்டு முறையைத் தழுவ நேர்ந்தது.

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள தமிழீழப் பிரதேசமெங்கும் இவ்வாறாக மாற்றமடைந்த, நூற்றுக்கணக்கான கோவில்கள் காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் ஏற்படும் இனப்பிரச்சினைகளின் வெளிப்பாடாக, இப்பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் தரைமட்டமாக்கப்படுவது சாதாரண விடயமாக நடைபெற்று வருகின்றது. ஆயினும் இவ்வாறு அழிக்கப்படும் ஆலயங்களை மீண்டும் மீண்டும் புனர்நிர்மாணம் செய்து வழிபடுவதும், காலங்காலமாக இடம்பெற்று வருகின்றது. இந்நிலைக்கு தமிழீழப் பிரதேசத்திலே வாழுகின்ற மக்களின் சமய ஆர்வமும், கடவுள் நம்பிக்கையுமே அடித்தளமாகக் காணப்படுகின்றது.

இந்துசமயத்தில் பல்வேறு வணக்கமுறைகள் காணப்படுகின்றன. பரம்பொருள் ஒன்றாக விளங்கியபோதிலும், தாம் விரும்பிய இஷ்டதெய்வங்களைப் போற்றி வணங்கி சமயவளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் வித்திட்டு வாழும் மக்களை, இப்பிரதேசத்திலே காணலாம். ஒவ்வொரு நாட்டிலும், சமூகத்திலும் மக்கள் தத்தம் சூழலுக்கேற்ப வழிபாட்டுமுறைகளை ஏற்படுத்திக்கொள்வர். சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து இன்றுவரை தாய்வணக்கமுறை புகழ்பெற்ற வழிபாட்டு முறையாகப் பின்பற்றப்படுகின்றது. தாயைவேண்டி எதனையும் இலகுவில் பெற முடியும் என்ற வாழ்வியலின் கோட்பாடு, தெய்வங்களிலும் பின்பற்றப்பட்டது. இதன் காரணமாக மக்களிடையே அம்மன் வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மாநகர எல்லைக்குள் அமைந்த பிரதேசமாக வண்ணைப் பிரதேசம் விளங்குகின்றது. இவ்வண்ணைப்பகுதியின் வடகிழக்கே அமைந்துள்ள வீரமாகாளி அம்மன் ஆலயம், தமிழ் அரசர்களால் அமைக்கப்பட்ட பழமைவாய்ந்த ஆலயமாகும்.

இவ்வாலயம் வடக்கில் பருத்தித்துறை வீதியையும், கிழக்கில் வைமன் வீதியையும், தெற்கில் நாவலர் வீதியையும் கொண்டு விளங்குகின்றது.

தமிழீழப்பிரதேசங்களிலும், இலங்கையின் ஏனைய இடங்களிலும் அமைந்துள்ள ஆலயங்கள் பலவும், ஈழத்தை ஆட்சி செய்த மன்னர்களோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. ஈழத்தை ஆட்சிசெய்த இராவணேசுவரன் தொடக்கம் ஆரியச் சக்கரவர்த்திகள் ஈறாக இத்தொடர்பு காணப்படுகின்றது. எனவே ஆலய வரலாறுகளை அறியும் பொழுது அவற்றோடு தொடர்புபட்ட அரசர்களையும், ஏனைய தகவல்களையும் அறிவது, இந்துசமயத்தின் பெருமையை உணர்த்துவதாகவே அமையும்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த கனகசூரிய சிங்கைஆரியன் நல்லூரைத் தனது இராசதானியாக்கி, அந்நகரைப் புதுப்பொலிவுடன் விளங்க வைத்துள்ளான். இவனது மூத்த மகனாகிய பரராசசேகரன் என்பவன் சிங்கைப் பரராசசேகரன் என்னும் அரச நாமத்துடன் கி.பி. 1478 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக முடிசூடிக்கொண்டான். இவன் பண்புள்ளவனாக விளங்கியதோடு தமிழும், சைவமும் வளர அரும்பணியாற்றியுள்ளான். இவனது காலத்திலே பல சைவாலயங்கள் கட்டப்பட்டன.

நல்லூரை அழகுபடுத்திய பரராசசேகரன், நாற்திசைகளிலும் நகர்காவற் கோவில்களை அமைத்தான். வடக்கே சட்டநாதர்கோவிலையும், கிழக்கில் வெய்யிலுகந்தபிள்ளையார் கோவிலையும், தெற்கில் கைலாசநாதர் கோவிலைப் புனரமைத்தும், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோவிலையும், அமைத்துத், தலைநகரைப் பொலிவுறச் செய்தான். இவ்வாறு வரலாற்றிலே கூறப்பட்டபோதிலும் இக்கோயில்களை 13 ஆம் நூற்றாண்டிலே ஆட்சிசெய்த, முதலாவது ஆரியச்சக்கரவர்த்தியான கலிங்கமாகன் அல்லது கூழங்கைச்சக்கரவர்த்தி (கி.பி 1215-1236) என்னும் அரசனே கட்டினானென வைபவமாலையிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட சேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

இக்கூற்றின்படி நோக்கின், கலிங்கமாகனால் கட்டப்பட்ட ஆலயங்களை, சிங்கைப்பரராசசேகரன் புனரமைத்தானா? என்பது போன்ற கேள்விகளும் எழலாம். தமிழர்களுடைய ஆரம்பகால சரித்திரத்தையும், கோயில்களின் சரியான வரலாறுகளையும், வரலாற்றுரீதியான தகவல்களுடன் எவரும் எழுதிவைக்கவில்லை. காணப்படும் பல தகவல்களும் ஆதாரங்களற்று, ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த நிலையில் காணப்பட்டு, ஊகங்களாகவே நிலைத்து நிற்கின்றது. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உட்பட, ஈழத்திலுள்ள பல கோயில்களின் காலம், கட்டியவர் பெயர் பற்றிய வேறுபாடான கருத்துக்கள் இன்றுவரை நிலவுகின்றது.

சிங்கைப் பரராசசேகரன் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் ஓர் ஏரி அமைத்து, தென்னிந்தியாவிலுள்ள யமுனை நதியின் புண்ணிய நீரைக் காவடிகளிலே தருவித்து, அதனை அவன் அமைத்த ஏரியில் கலந்து அதற்கு யமுனையேரி (யமுனாரி) எனப் பெயரிட்டான். செண்பகப் பெருமாளால் அழிக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தை மீண்டும் நிறுவியவனும் இவனே. இவனது ஆட்சியிலே இவனது மைத்துனனான அரசகேசரி என்னும் வடமொழி, தென் மொழி தெரிந்த புலவர் இருந்தார். இவர் இரகுவம்சம் என்னும் நூலை வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்காக்கி அரங் கேற்றியுள்ளார்.

மிகப் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப் பாண இராச்சியம் காணப்பட்டுள்ளது. இப்பிரதேசம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில், பல பெருமைகளோடு சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது. இவர்கள் காலத்தில் தமிழும் சைவமும் மிக உன்னத நிலையிலே காணப்பட்டது. ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பெயரை நோக்கும்போது ஆரியர் என்பது ஆரியர், திராவிடர் என்ற இனப் பாகுபாட்டைக் காட்டவில்லை என்பதைக் கருத்திலே கொள்ளவேண்டும். ஆரியசக்கரவர்த்திகள் என்பது தமிழ் மன்னர்களுடைய பட்டப்பெயர். யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியரான

முதலியார் செ. இராசநாயகம் அவர்கள், எவ்வாறு ஆரிய சக்கரவர்த்திகள் என்ற பெயர் ஏற்பட்டது என்பதை கீழ்வருமாறு விளக்கியுள்ளார்.

"கலிங்க அரசர் இராமேசுவரத்துப் பிராமண அரசகுடியில் சம்பந்தம் செய்த பின், உபவீதம் அணிந்து ஆரியச்சக்கரவர்த்திகள் என நாமம் புனைந்து, இராமேசுவரத்தைத் தம் தேசத்தின் ஆளுகைக்குட்படுத்தி, அதனால் சேதுகாவலர் எனப் புதுப்பெயர் புனைந்து, விடைக்கொடியும், சேதுலாஞ்சனையும் பொறித்து, ஒருவர்பின் ஒருவராக பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு, உலகம் போற்ற அரசு செலுத்தி வந்தார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். மேற்கூறிய காரணத்தினாலேயே யாழ்ப்பாண அரசர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த மன்னர்களால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்ட வீரமாகாளி அம்மன் ஆலயம், புகழும் அருளும் பெற்ற அம்மன் ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. காளி, கொற்றவை, துர்க்கை என்னும் நாமங்களுடன் விளங்கும் அம்பிகையானவள், வீரமாகாளி என்னும் திருப்பெயருடன் வடக்குவாசலிலே எழுந்தருளியிருப்பதால், வடவாயிற்கிழத்தி எனவும் பெயர் பெறுகின்றாள். வடக்கிலுள்ள பெரியகுளம், அம்மைச்சியார்குளம் என வழங்கப்படுகின்றது.

காளி வீரத்திற்கும் போருக்குமுரியதெய்வமாகப் போற்றப் படுபவள். அரசர்க்கு அத்தியாவசியமான வீரத்தைக் கொடுப்பவள் என்பதால் வீரமாகாளி எனப் பெயர் பெற்றாள். ஆரியச் சக்கர வர்த்திகள் அம்பிகையைத் தியானித்து வழிபட்டு வீரமும், வெற்றியும் பெற்றனர். ஆரியச்சக்கரவர்த்திகள் அன்னையாகிய வீரமாகாளிக்கு பல்வேறு விழாக்களை நடத்திச் சிறப்பித்தபோதிலும், இவற்றுள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட விழாவாக நவராத் திரிவிழா கூறப்பட்டுள்ளது. வண்ணைத் திருநகரில் எழுந்தருளியுள்ள அன்னை வீரமாகாளியின் அழகுத் தோற்றம், வர்ணிக்கமுடியாத

அழகுமிக்க கோலமாக விளங்குகின்றது. பெயரளவிலே காளி யென்றால் அனைவரும் பயந்து ஒதுங்குவதுண்டு. அன்னை அநீதி செய்பவர்களுக்கு மட்டுமே கோரவடிவினளாகத் தோன்றுவாள். ஆயினும், கட்டழகு, வீரத்திருவுருவம், யோகத்திருவுருவம், அருட் திருவுருவம் எனப் பல்வேறு நிலையில் அன்னையாயும், கன்னியாயும் இருக்கும் தன்மை வாய்ந்தவள். வண்ணை வீரமாகாளியை அன்பர்கள், காளியாச்சி, தாய், கிழவி, அம்மாளாச்சி என்றெல்லாம் பக்தி மேலீட்டால் பலவாறாக அழைத்து அன்பு செலுத்துவார்கள்.

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் சிலாவிக்கிரகமாக அன்னை எழுந்தருளியுள்ளாள். இவ்விக்கிரகம் கருணாம்பிகை வடிவாகத் திகழ்கின்றது. பத்துத் திருக்கரத்தினைக் கொண்டவளாக விளங்கும் வீரமாகாளி அம்மன், இடது திருவடியை ஊன்றி, வலது திருவடியை மடித்து, ஒருவகைச் சுகாசனத்தில் எழுந்தருளியுள்ளாள்.

கி.பி. 1505 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய போத்துக்கீசராலும், அவர்களைத்தொடர்ந்து, இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தராலும், ஈழத்திலுள்ள சைவாலயங்கள் பலவும் அழிக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டன. வண்ணையில் எழுந்தருளி யுள்ள வீரமாகாளி அம்மன் ஆலயத்தையும் பறங்கியர் அழிக்க முற்பட்டனர். பறங்கியர் கோயில் வாசலுக்கு வந்தபோது, அங்கே பெரிய சிங்கமொன்று சடைவிரித்துக் கர்ச்சித்ததைக் கேட்டு, உடனடியாகவே அவ்விடத்தை விட்டு ஓடிமறைந்தனர். ஆயினும் 1621 ஆம் ஆண்டளவில், சைவாலயங்களில் நடைபெறும் பூசை களுக்குத் தடைவிதித்தனர். இந்நிலை ஆங்கிலேயர் ஆட்சியில் சற்றுத் தளர்த்தப்பட்டது. மீண்டும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வீரமாகாளிஅம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு, பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறத் தொடங்கின.

இடைக்காலத்திலே நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் மந்திரம், கிரியை எதுவுமின்றி ஆவாகனம், அபிஷேகத்துடன் பிரதிட்டை

நிகழ்ந்துள்ளது. இதன் பின் அம்பிகையின் அருள் சுரந்து மக்கள் மகிழ்வோடு வாழ்ந்தனர். ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் அவர்களுக்குரியதாகக் காணப்பட்ட நிலப்பரப்புக்கள் யாவும், அவர்கள் மறைந்தபின் ஆலயங்களுக்கு உரித்தானது. இவ்வாலயத்திலே நடைபெறும் விழாக்கள் அனைத்தும், வாணவேடிக்கை, பரதநாட்டியம், பலகூட்டமேளம் என பலவகைக் கலாச்சார நிகழ்ச்சிகளோடு, களிப்பையும் கொடுப்பதாக இடம்பெற்றுள்ளது.

ஆரம்பகாலத்தில் வருடாந்த உற்சவம் பதினெட்டு நாட்களே கொண்டாடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 25 நாட்களாகியது. 1941 ஆம் ஆண்டு இக்கோயிலின் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இத்தேரின் வெள்ளோட்டம் நடைபெறுகையில் அம்பாளே கிழவி வடிவிலே தோன்றி, தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞருக்கு ஐந்து ரூபாவினைத் தட்சணையாகக் கொடுத்துள்ளார். இச்சம்பவத்தின்பின் தேரை உருவாக்கிய சிற்பியின் கையிலே ஏற்பட்டிருந்த பிரச்சினை மாறி சுகம் பெற்றார். இந்த அற்புத நிகழ்ச்சியின் பின், வண்ணை வீரமாகாளி அம்மனின் பெருமை நாடெங்கும் பரவி, அனைவரும் அன்னையின் அருளை வேண்டிநின்றனர்.

11747

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயம், வடக்குத்திசையை நோக்கியுள்ளது. இவ்வாலயத்தின் உட் பிரகாரத்திலே விநாயகர், நாகதம்பிரான், சுப்ரமணியர், சனீஸ்வரன், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்பிரகாரத்தில் சந்தானகோபாலர், வைரவர் ஆகியோரும் தனித்தனி கோயில்களில் எழுந்தருளியுள்ளனர். இங்கு காணப்படும் எழுந்தருளி அம்பாள் விக்கிரகம், சங்கிலி மன்னனால் வணங்கப்பட்ட மூர்த்தமாகவும், உற்சவமூர்த்தியாகவும், மகிடாசுரனை வதம்புரிந்த சிங்கமேறிய எட்டுக்கரங்களுடன் கூடிய திருவுருவமாகவும் மூன்று வடிவங்களிலே காட்சிதருகின்றாள். மன்னர்கள் போருக்குப் புறப்படும்பொழுது, வீரத்திற்கு அன்னையாகிய காளியை வணங்கிச் செல்லும் வழக்கம் காணப்படுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகிய

சங்கிலி மன்னன் போருக்குப் புறப்படுகையில், ஆயுதங்களை அம்பாளின் திருவடியில் வைத்து பூசை செய்து வணங்கிச் செல்லும் மரபு காணப்பட்டுள்ளது. தற்காலத்திலும் சங்கிலி மன்னனின் உடைவாள் இங்கு காணப்படுவதுடன், மானம்பூ விழாவில் வாழை வெட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

வண்ணை வீரமாகாளிஅம்மன் ஆலயத்தின் தேரோடும்வீதி. மிக அழகு வாய்ந்தது. இங்கு சுத்தநீர்க்கிணறும், மருதமரமும். அரசமரமும் காணப்படுகின்றன. மேற்குவீதியில் எண்கோணத்திலே அமைக்கப்பட்ட நீர்த்தொட்டி உள்ளது. இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும். தற்காலத்திலே காணப் படுகின்ற போர்ச்சூழல் காரணமாக, இவ்வாறான ஆலயங்களின் விழாக்கள் மிக அமைதியான முறையிலேயே நடைபெறுகின்றது. தமிழீழப்பகுதிகளிலே காணப்படும் இந்து ஆலயங்கள் இவ்வாறான நெருக்கடிகளைக் காலத்திற்குக் காலம் சந்தித்தமையை வரலாற்றிலே காணலாம். மீண்டும் புதுப்பொலிவுடன் இவ்வாலயங் கள் எழுந்தமையையும் இதே வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது.

அநீதியை அழிக்கத்தோன்றிய வடிவமே காளிவடிவமெனக் கூறப்பட்டுள்ளது. அன்னைவடிவமான மகாசக்தியின் பல்வேறு வடிவங்களில் ஒன்றாகக் காளி வடிவம் கருதப்படுகின்றது. காளியின் தோற்ற வரலாற்றைப் புராணங்கள் பல்வேறு விதமாக எடுத்துரைத்துள்ளன. சும்பன், நிசும்பன் என்ற அரக்கர்கள் நான்முகனை நோக்கி வரமிருந்து, பெண்ணைத் தவிர வேறு யாராலும் தமக்கு அழிவுநேரக்கூடாதென்ற வரத்தைப் பெற்றனர். இவ்வரத்தினால் அனைவரையும் துன்புறுத்தி வந்தனர். இவர்களது கொடுமையினின்றும் நிவர்த்திபெற, அன்னை பராசக்தியின் அருளை வேண்டி நின்றனர். இவர்களைக் காப்பாற்றும் நோக்கோடு, அன்னை பராசக்தி தனது உடலிலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தாள். இவ்வாறு வெளிப்பட்ட தோற்றம் அஞ்சத்தக்கநிலையில் கருமை யுடன் காளி வடிவமாக வெளிப்பட்டது. இத்தோற்றநிலையிலேயே

சும்ப நிசும்பர்களை அன்னை அழித்து உயிர்களுக்கு அருள் புரிந்தாள்.

சினம் தணியாதிருந்த காளியின் சினத்தை அடக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், காளி தங்கியிருந்த ஆலங்காடு வந்து, காளியுடன் ஆடற்போட்டியில் ஈடுபட்டார். ஆட்டவேகத்திலே வலது செவியிலிருந்து விழுந்த காதணியை ஆட்டத்தை நிறுத்தாமல், சிவபிரான் வலது காலால் தூக்கித் தனது செவியிலே மீண்டும் அணிந்து கொண்டார். வலது காலை உயர்த்தி ஆடற்குறிப்புக் காட்டமுடியாத நிலையிலே காளி தோல்வியுற்று சினம் அடங்கி, அமைதிபெற்றதாகப் புராணக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. இத் தாண்டவத்தை ஊர்த்துவதாண்டவம் என்றும், சண்டவதாண்டவம் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சங்ககாலத்திலே பாலைநிலத்தின் தெய்வமாக மக்கள் காளியை வழிபட்டுள்ளனர். இடைக்காலத் தமிழ்ப் புலவர்கள் இமயக் கிழவி என்றும், கடும்போர் கடந்த குமரி என்றும் காளியைக் குறிப்பிட்டுள்ளனர். ஈழத்தில் மட்டுமன்றி, தமிழகத்திலும் மன்னர்கள் காளியைக் குலதெய்வமாகப் போற்றி வழிபட்டுள்ளனர். சோழ அரசனான விசயபாலன், தஞ்சையில் காளிக்குத் தனிக்கோயில் எழுப்பி, குலதெய்வமாகப் போற்றி வணங்கியுள்ளான். இராமகிருஷ்ண பரமஅம்சர், கவிகாளிதாசன் போன்றோர் காளியின் அருளைப் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர்.

இவ்வாறான சக்தியின் அம்சமான காளி வழிபாடு, வீரமாகாளி என்ற பெயருடன் வண்ணைப்பதியில் போற்றப்படுகின்றது. இந்துசமயத்திலே சக்தி வழிபாடு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகக் காணப்படினும், அனைவரும் அனைத்து வடிவங் களையும் ஏற்று மகிழ்வோடும் பக்தியோடும் வணங்கி வழிபடும் மரபு இந்து மரபாகக் காணப்படுகின்றது.

ௐ

# உகந்தைமலை முருகன் கோவில்

## மட்டக்களப்பு

சமயம் என்பது கடவுட்கொள்கை. சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கௌமாரம் போன்ற பல மதங்களின் ஒன்றிணைப்பினை, இந்துசமயம் என அழைக்கும் மரபு காணப்படுகின்றது. சைவசமயம் என்னும் சொல் சிவத்தை முதலாகக் கொண்டது என்னும் பொருளுடையது. சிவம் என்பது கடவுள் என்றும், சமயம் என்பது நெறி என்றும் கருதப்படுகின்றது. சைவசமயம் அநாதியானது.

சர்வசங்காரகாலத்தில் உலகம் மீளப்படைக்கப்படும் பொழுது, ஆன்மாக்களது அருளின் தன்மைக்கேற்ப, இறைவன் அருளால் சைவசமயம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட சமயத்தின் முழுமுதற் கடவுளாகக் கருதப்படும் சிவபெருமானின் அருள்மூர்த் தங்கள் பலவற்றையும், அன்றுதொட்டு இன்றுவரை மக்கள் வணங்கி வழிபட்டு வருகின்றார்கள்.

இத்தகைய அருள் மூர்த்தங்களை சிவலிங்கம், விநாயகர், முருகன், அம்பாள் வடிவமெனப் போற்றும் பண்பு, மிகப் பழைமை மிக்கதாகக் காணப்படுகின்றது. அவரவர் மனநிலை, நம்பிக்கை, இவற்றிற்கமைய இவற்றுள் ஏற்புடையதொன்றை மனதிருத்தி வணங்குவது வழக்கம். மட்டக்களப்புப் பிரதேசத்தின் மிகப் பழமையான வழிபாடுகளுள் ஒன்றாக முருகவழிபாடு காணப் படுகின்றது. பழமையும், பிரசித்தமுமுடைய முருக வழிபாட்டுத் தலங்களைத் திருப்படைக்கோவில்கள் என்று அழைப்பர். இவ்வாறே உகந்தைமலை முருகன் கோவில், தாந்தாமலை முருகன் கோவில் போன்ற பழமையான மலைக் கோவில்களும் மட்டக்களப்புத் தமிழகத்தின் பிரசித்தமான முருகன் கோவில்களாக விளங்கு கின்றன. இவ்வாறான முருகன் கோவில்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களையும் கொண்டவையாக அமைந் திருக்கின்றன. உகந்தைமலை முருகன் கோவில், பாணமை யிலிருந்து கூமுனை செல்லும் காட்டுப்பாதையோரமாகக் கடற்கரைப் பக்கத்தில் அமைந்துள்ளது.

மலைக்கோவில் எனப்போற்றப்படும் உகந்தைமலை முருகன் கோவிலின் பெயர்க்காரணம், பல ஐதீகங்களோடு தொடர்புடைய தாகக் காணப்படுகின்றது. உகந்தைமலை முருகன்கோவில் அமைவதற்கு முன்னர், இப்பிரதேசத்திலுள்ள நீர்ச்சுனைகளையும், வடிவேல் குன்றத்தையும் மக்கள் பக்திப்பரவசத்தோடு நாடிநின்றுள்ளனர். இதன் பிற்பாடு ஓலையால் பந்தரிட்டு முருகனைப் பிரார்த்தித்து வந்துள்ளனர்.

அனைவர்க்கும் துன்பமிழைத்த அவுணகுல மன்னனை அடக்க எறிந்த வேலானது பல பொறிகளாகியதென்றும், மீண்டுவந்த அத்தகைய வேற்படைக் கதிர்களுள் ஒன்று உகந்தைமலையில் தங்கிற்றென்றும் ஐதீகக்கதை கூறுகின்றது. அவ்வாறே முருகப்பெருமானே தனது படைவீடுகளுள் ஒன்றாக உகந்தை மலையைக் கொண்டாரென்றும், போர் முடிந்தபின்னர் உகந்தை

மலையிலே இளைப்பாறி இருந்தாரென்றும் ஐதீகம் கூறுகின்றது. முருகப்பெருமான் உவந்து இருந்த காரணத்தினாலேயே இப்பிரதேசம் உவந்தமலையாகிப் பின்னாளில் உகந்தை மலை எனப் பெயர்பெற்றது.

முருக விரதங்களுள் கந்தசஷ்டி விரதம் மிகவும் முக்கியமான விரதமாகப் போற்றப்படுகின்றது. உகந்தைமலை முருகன் கோவிலோடு தொடர்புடையது போன்ற புராணக்கதையொன்று கந்தசஷ்டி விரதத்தை அனுட்டிப்பதற்குக் காரணமாகக் காணப் படுகின்றது. ஆணவங்கொண்ட சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் யாவரையும் துன்புறுத்தி வந்தனர். பரம்பொருளாகிய பரமசிவன் இதற்கொரு முடிவுகாண எண்ணங்கொண்டார். தமது சக்தியையே முருகப்பெருமானாக அவதரிக்கச் செய்தார். முருகப்பெருமான் அசுரர்களுடன் ஆறுநாட்கள் போரிட்டு இறுதியில் வென்றார். இந்த அருட்செயலை நினைந்து போர் நிகழ்ந்த கால மாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் ஆறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு தேவரும், முனிவரும் விரதமிருந்து வந்தனர். இதுவே கந்தசஷ்டி என்ற பெயரில் மக்களால் அனுட்டிக்கப் படுகின்றது.

இந்தக் கந்தப்புராணக் கதையை "சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என நகைச்சுவையாகக் கூறினும் இதன் பொருள் ஆழமானது. சங்கரன் புதல்வராகிய முருகப்பெருமான், ஷஷ்டித் திதியிலே மாமரமாக வந்த சூரனை அழித்து அருள் புரிந்தார் எனப் பொருள்படும். முருகப்பெருமானுக்கும், சூரனாதியோருக்கும் ஆறுநாட்களும் நடைபெற்ற போரானது ஆறுபகைகளை வெல்லு தலைக் குறிக்கும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறுபகைகளையும், ஆணவமாகிய மும் மலங்களையும் வென்று ஆண்டவனின் திருப்பாதங்களை அடையவேண்டும் என்பதையே கந்தசஷ்டி விரதம் குறியீடாக விளக்குகின்றது.

சைவத் தமிழ்மக்கள் கடைப்பிடிக்கும் கந்தசஷ்டி விரதம் சகல செல்வங்களையும், சுகபோகங்களையும் தரவல்ல விரதமாகக் காணப்படுகின்றது. இவ்விரதம் புத்திரலாபத்திற்குரிய விரதம் என்பதைக் குறிக்க "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்" என்ற பழமொழி கூறப்படுகின்றது. இதற்குரிய வெளிப்படையான பொருள் வேறாகக் காணப்பட்டாலும், உட்பொருள் கந்தசஷ்டி மகிமையை விளக்குவதாகக் காணப்படுகின்றது. ஷஷ்டியில் விரதமிருந்தால், அகப்பையாகிய கருப்பையிலே கரு உண்டாகும் என்ற கருத்தை, இப்பழமொழி உட்கருத்தாகக் கொண்டுள்ளது. முருக பக்தர்கள் கந்தசஷ்டி விரதத்தை கடுந்தவமாகவே கருதிக் கடைப்பிடிப்பர். ஆறுநாட்களும் உபவாசமிருந்து இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கும் வழக்கம் தாயகத்திலே காணப்படுகின்றது.

முருகப்பெருமானின் அருட்கருணையை எடுத்தியம்பும் இவ்விரதத்தினை முருகன் ஆலயங்களிலே சிறப்பாகக் கடைப் பிடிப்பது வழக்கம். மட்டக்களப்பிலுள்ள உகந்தை மலை முருகன் ஆலயத்திலும் இவ்வாறான விரதங்களும் விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலின் மூலம் பல வரலாற்றுத் தகவல்களை அறியலாம். அந்த வகையிலே உகந்தைமலை முருகன் கோவிலின் தொன்மையை மட்டக்களப்பு மான்மியத்தின் மூலமும் அறியக்கூடியதாயுள்ளது. இந்த வரலாற்று ஏட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள், இலங்கையை ஆண்ட இராவணனோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

இலங்கையை இராவணன் ஆட்சி செய்த காலத்திலே யமதர்மனுடன் பகை ஏற்பட்டது. இராவணனின் வலிமைக்கு அஞ்சிய யமதர்மன் "நீ பெரும் பாவி" என்று வஞ்சினம் கூறித் தன்னிடம் சென்றான். யமதர்மனின் வஞ்சினத்தால் ஏற்பட்ட பாவந்தீர, தட்சணாகிரி (திருகோணமலை), உகந்தகிரி (உகந்தைமலை) எனும் இரு மலைகளிலும் பூசைகள் செய்து,

தனது பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்தான். இராம-இராவண யுத்தத்தின்பின் ஆட்சிக்கு வந்த விபீடணன் முதலியோரான இராவணனுடைய சந்ததியினர், சீதையின் சாபத்தால் சந்ததியற்றுப் போன காரணத்தினால் இவ்வாலயங்கள் ஒரு யுகம்வரையும் பாழடைந்து காணப்பட்டுள்ளது. அதன்பின்னர் சிங்ககுமாரனது தந்தையார் தட்சணாகிரி ஆலயத்தைச் செப்பமிட்டு, திருக்குளமும் கட்டுவித்தார். இக்கோவிலில் தினமும் ஆறுகாலப்பூசை நடைபெற வகையும் செய்தார்.

இவ்வாறே உகந்தகிரியிலும் ஆலயம் அமைத்து, உமது எண்ணம்போல வாழ்வாயாக என்று சிங்ககுமாரனிடம் மந்திரிமார் கூறினர். மந்திரிமாரின் பேச்சைக்கேட்ட சிங்ககுமாரன், உகந்தகிரி மலைக்குச் சென்று அம்மலையின் அழகையும், அதன் சூழலையும் கண்டு மனமகிழ்ந்தான். பின்னர் வடநாட்டுச் சிற்பிகளை வரவழைத்து, உகந்தகிரி உச்சியிலே சிவாலயம், விஷ்ணு ஆலயம், பிரம்மாலயம் ஆகிய மூன்று திருக்கோவில்களையும் கட்டுவித்தான். மூன்று ஆலயங்களுக்கும் நடுவில் தங்கத்தால் கொடித்தம்பமும் நிறுவினான். உகந்தகிரி மலையடிவாரத்தில் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்னும் திக்குப்பாலகர் களுக்கும் எட்டுத்திக்கிலும் ஆலயம் அமைத்து, ஒவ்வொரு ஆலயத்திலும் செப்புக் கொடித்தம்பம் நிறுவினான்.

பின்னர் அந்தணப் பெருமக்களின் அறிவுரையின்படி, அபிஷேகம் செய்து, ஆயிரம் அவணம் நெல் விளையும் கழனியைத் திருத்தியமைத்தான். குமுகனல் எனப்படும் வெட்டுவாய்க் காலிலிருந்து நீரெடுத்து, மூன்று ஏரியில் பாச்சி செந்நெல் கழனிகள் செழித்தோங்க வகைசெய்தான். அத்தோடு உகந்தைத் திருக் கோயில் திருப்பணிக்கு 500 அவணம் நெல் விளையுந் தறையையும் அளித்தான். ஆலயப்பணிபுரியும் அந்தணர் முதலானோர்க்கு 200 அவணத் தறையை மானியமாக அளித்தான். புவனத் திருப்பணி அதிகாரரே எக்காலமும் கடமைக்காரரெனத் திட்டம் செய்து,

மட்டக்களப்பை அரசு புரியும் பிரசேதுவோடு நட்புரிமை கொண்டாடினான். இவற்றோடு ஆடித்திங்கள் அமாவாசை இரண்டுதினமும் இராவணேஸ்வரன் பேரில் உகந்தைத் திருக்கோவிலில் பெரிய தீபம் ஒன்றினை ஏற்றவும் வகைசெய்து ஆட்சிபுரிந்து வந்தான். சிங்ககுமாரனின் மனைவியின் பெயர் தாரகசோதி. சிங்க குமாரனுக்கும் தாரகசோதிக்கும் சிறீசிங்கன் என்னும் புத்திரன் இருந்தான். சிங்ககுமாரன் ஆட்சிக்காலத்தில், மட்டக்களப்பு ஆட்சியாளனாக இருந்த பிரசேதுவின் மகளான அரசினாச்சி என்பவரை, சிறீசிங்கன் திருமணம் செய்தான். இதன்பின்னர் உன்னரசுகிரியின் ஆட்சியாளனாக சிறீசிங்கன் விளங்கினான். இவ்வாறான உகந்தை மலைக்கோவிலோடு தொடர்புடைய வரலாற்றுச் செய்திகளை, மட்டக்களப்பு மான்மியம் கூறியுள்ளது.

மட்டக்களப்பு மான்மியத்தின் கூற்றுப்படி, சிங்ககுமாரன் உன்னரசுகிரியை ஆட்சி செய்த காலம் கலிபிறந்து 337 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வாளர் கூற்றுப்படி இக்காலம் சுமார் கி.மு. 268 எனக் கொள்ள முடியும். இவற்றைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது, உகந்தைமலை ஆலயத்தின் வரலாறு, இற்றைக்கு இரண்டாயிரம் வருடம் பழமை வாய்ந்ததெனக் கருதமுடியும்.

இந்நிலையில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட பழமைமிக்க உகந்தைகிரி மலைக்கோவில், மீண்டும் 1885 ஆம் ஆண்டு, மட்டக்களப்பில் குடியேறிய யாழ்ப்பாணப் பிரதேசத்தவரான மார்க்கண்டு முதலாளியார் என்பவரால் கட்டப்பட்டது. இக்காலப்பகுதியில் உகந்தைமலைப்பகுதி அடர்ந்த காட்டுப்பிரதேசமாகவும், யானை, புலி, கரடி முதலான கொடிய மிருகங்கள் உலவும் பகுதியாகவும் காணப்பட்டது.

இச்சூழ்நிலையில் இவ்விடத்திலே ஆலயம் அமைக்கப்பட்டதை இவ்வூர் மக்கள் விசித்திரமாகவே கருதினர்.

இக்கோவிலின் முதற் பூசாரியாக கோளாவிலைச் சேர்ந்த காளியப்பன் என்பவர் நியமிக்கப்பட்டார். கோவிலின் வண்ணக்கராக ஜெசேகர ஸ்ரீ வர்ணதிசநாயக்கா என்றும் முதியன்சே பண்டார மகாத்மியா என்றும் அழைக்கப்பட்ட ஒருவரையும் நியமனம் செய்தார். இவரது பெயரை நோக்கும்போது சிங்கள இனத்தவராகத் தென்பட்டபோதிலும், தமிழில் வல்லவராகவும், தமிழ்ப்பாடல்களைக் கற்றறிந்தவராகவும் விளங்கிய முதலாவது வண்ணக்கராக இவர் திகழ்ந்தார்.

மட்டக்களப்பின் சமய வரலாற்றிலே மக்கள் தெளிந்த கொள்கையுடையவர்களாக விளங்கியுள்ளனர். மொழி, இனம், சாதி இவற்றைக்கடந்த அன்புநிலை ஆலயப்பணிக்கு அத்தியாவசியம் என்பதை இம்மக்கள் உணர்ந்திருந்தனர். உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் என்பதில் மக்கள் தெளிவுடையவர்களாக விளங்கியுள்ளனர். ஆயினும் தூய வழிபாட்டிற்கு உருவவழிபாடு ஏற்புடையது என்பதிலும் மக்கள் ஆர்வங்கொண்டுள்ளவர்களாகவும் விளங்கியுள்ளனர்.

சாத்திரம் படித்தோ, நாத்திகம் பேசியோ காலத்தை வீணாக்காது, ஆண்களொடு பெண்களும் இறைவனது உருவங்களைத் தரிசித்துத் தொட்டு வணங்க உரிமையுண்டு என்னும் கருத்து மட்டக்களப்பு மக்களது சமயக் கொள்கையுள் அடக்கமாக விளங்குகின்றது. இந்த ரீதியில் மட்டக்களப்பு மக்களின் சைவத்தின் பெரும்பங்கு, வீரசைவத்தைச் சார்ந்ததாகவே காணப்பட்டது. வீரசைவக்குருமாரே மட்டக்களப்புக் கோவில்களில் பூசனையாற்றியுள்ளனர். பிற்காலத்திலே இம்முறைகளிலே மாற்றங்கள் ஏற்பட, பல ஆலயங்கள் ஆகமமுறை தழுவிய கோவில்களாக மாற்றம்பெற்றுவிட்டன.

மட்டக்களப்பு வழக்கிலே ஆலய பரிபாலனத்தோடு தொடர் புடையவர்களைப் பல்வேறு பெயர்கள் கொண்டழைக்கும் மரபு காணப்படுகின்றது. கோவிற் பரிபாலகரை வண்ணக்கர் அல்லது

வண்ணக்கு என அழைப்பது மட்டக்களப்பின் பரவலான வழக்க மாகக் காணப்படுகின்றது. வண்ணக்கர் என்பது தூய தமிழ்ச்சொல். இது கணக்கறிஞர் தலைவன் எனப் பொருள்படும். கோயிற் பரிபாலகரை வண்ணக்கர் என அழைக்கும் வழக்கினை, மட்டக் களப்புத் தவிர்ந்த வேறெந்தப் பிரதேசத்திலும் காணமுடியாது. கண்டிஇராச்சியத்தை ஆண்ட தமிழர்கள் சிங்களப்பெயர்களோடு ஆட்சி செய்தகாலத்தில், பௌத்த ஆலய பரிபாலகர்களை வண்ணக்கு நிலைமை என அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. மட்டக்களப்பு கண்டிஇராச்சியத்தின் கீழ் இருந்த காலத்தில், வண் ணக்கர் முறை கண்டிஇராச்சியத்திற்குப் பரவியிருத்தல் வேண்டும்.

உகந்தைமலை முருகன் கோவிலின் முதல் வண்ணக்கராக விளங்கிய ஸ்ரீ வர்ணதிசநாயக்காவின் பின், இவருடைய மருமகனான கிரிபண்டா சந்தகாமி என்பவர் ஆலய வண்ணக்கராக நியமிக் கப்பட்டார். இவர் சிறந்த சிவபக்தர். தமிழ்ப்புலமை மிக்கவர். இவருக்குப்பின் இவருக்கு மகன் முறையினராகிய தந்தகாமி புஞ்சிமாத்தையா என்பவர் வண்ணக்கர் பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர்கள் அனைவரும் சிங்களப் பெயர் உடையவர் களாகக் காணப்பட்டபோதிலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழருள் திருமணம் செய்தவர்கள். இவர்கள் அனைவரும் பாணமையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. உகந்தைமலை முருகன்கோவில் பூசகர்கள், தினப்பூசகர் என்ற முறையிலேயே நியமனம் பெற்றுக் காணப்பட்டனர்.

1885 இல் ஓலைக்கட்டடமாக அமைக்கப்பட்ட இக்கோவில் பின்னர் திருத்தியமைக்கப்பட்டு புதிய மடங்களும், முன்மண்ட பங்களும் கட்டப்பட்டன. உகந்தை மலையின் அடிவாரத்தில் மலையுடன் இணைந்து பிள்ளையார் கோவிலொன்றும் அமைக்கப் பட்டுள்ளது. உகந்தைமலை இரு பிரிவாகக் காணப்படுகின்றது. இவற்றுள் இரண்டாம் மலையடிவாரத்தில், உகந்தைமலை முருகன்

கோவிலுக்குரிய தலவிருட்சமான வெள்ளைநாவல்மரம் காணப்படுகின்றது. உகந்தைமலை முருகன்கோவிலின் திருவிழாக் காலங்களிலே, அடியவர்கள் பிள்ளையாருக்குப் பொங்கிப்படைப்பது வழக்கம்.

உகந்தைமலை முருகன்கோவில் கருவறையில் பிள்ளையார் சிலையும், பக்கத்தில் ஒரு தங்க வேலாயுதமும் காணப்படுகின்றது. முருகன் கோவில்களில் நந்திக்குப் பதிலாக மயில் காணப்படுவதே மரபு. ஆனால் உகந்தைமலை முருகன் கோவிலில் மயிலுக்குப் பதிலாக மூஷிகமே இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் சில கோவில்களில் இவ்வாறான வேறுபாடுகள் காணப் படுவதை அவதானிக்கவேண்டும். உதாரணமாக மாமாங்கேச்சரம், சிவனுக்குரிய தலமாக விளங்க வேண்டும். ஆனால் இவ்வாலயத்தை மாமாங்கப்பிள்ளையார் ஆலயம் என்றே மக்கள் அழைப்பர். கருவறையிலுள்ள சுயம்புலிங்கம், விநாயகர் அங்கியுடனேயே காட்சியளிப்பார்.

உகந்தைமலைக் கோவிலின் பக்கத்தில் வடபுறமாகவும், பிள்ளையார் கோவிலுக்குச் சற்றுத் தெற்கேயும் பெரிய ஆலமரமுண்டு. இந்த ஆலமரத்தின்கீழ் மேடையமைத்துத் தனி வேலாயும் நிறுவப்பட்டுள்ளது. வெளியாக இவ்விடம் காணப் படுகின்றது. ஆதியில் வேல் இந்த இடத்திலேயே காணப்பட்டதாக ஐதீகம் உண்டு. திருவிழாக்காலத்தில் சுவாமியை இவ்விடத்திலே இறக்கிப் பூசை செய்வது வழக்கம். ஒரு ஞானியாரின் சமாதியும் இம்மேடைக்குப் பக்கத்திலே காணப்படுகின்றது. இப்பகுதியில் யோகியரும் ஞானியரும் வாழ்ந்து சமாதியடைந்திருப்பதாகக் கூறுவர்.

மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள முருகன் கோவில்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் கதிர்காமத்துடன் தொடர்புபட்ட வையாகக் காணப்படுகின்றன. உகந்தைமலை முருகன்கோவில் திருவிழா, ஆடிப்பூரணை அன்று அல்லது அதனையொட்டிய

திருவோண நட்சத்திரத்தன்று தீர்த்தம் நடைபெறக்கூடிய வகையில் நடைபெறும். முதல் மூன்று திருவிழாக்களின்போதும், சுவாமியைத் ( வேல்) தாம்பாளத்தில் வைத்து, பட்டுச்சீலையால் மூடி வீதிவலம் வருவது வழக்கம். நாலாம் திருவிழாவிலிருந்து பதினைந்தாம் திருவிழாவரை திறந்த தேரிலே மயூரம், வேல் என்பவற்றுடன் முருகன் வலம் வருவார். வள்ளி அம்மனோ, தெய்வயானை அம்மனோ இவ்வூர்வலத்தின்போது இடம்பெறுவதில்லை. கொடியேற்றத்தின் பின்னர் கொடியில் பக்தர்கள் காசுமுடிப்புக் களைக் கட்டுவது வழக்கம். கொடிமரத்திற்கென விசேட பூசைகள் எதுவும் நடைபெறுவது கிடையாது.

சுவாமி தீர்த்தமாடு முன்னரே கொடிச்சீலை இறக்கப்பட்டு, அதனையும் சுவாமியுடன் (வேல்) தீர்த்தமாடக் கடலுக்கு எடுத்துச் செல்வர். கடற்கரையிலே கோவில் இருந்தாலும், அதற்கு நேராக உள்ள வாசலில் தீர்த்தம் ஆடாமல், சிறிது வடபுறமாக விலகியே தீர்த்தமாடும் இடம் காணப்படுகின்றது. தீர்த்தமாடச் சுவாமியை (வேல்) கொண்டு செல்லும்பொழுது பட்டுச்சீலையால் அழகாக அலங்கரித்துக் கொண்டு செல்வது வழக்கம். இக்காரணத் தினாற்போலும் தீர்த்தமாடச்செல்லும் சுவாமியை(வேல்) பட்டுச்சாமி என அழைப்பர். தீர்த்தமாடும்பொழுது பட்டுச்சாமியின் பெயரை உரத்து உச்சரித்தவாறே தீர்த்தம் நிகழும்.

தீர்த்தமாடியபின்னர் பட்டுச்சாமி தமக்குரிய கோவிலுக்கு எழுந்தருளுவதில்லை. மாறாக, பக்கத்து மலைமீதிருக்கும் வள்ளிநாச்சியாரின் கோவிலுக்கு எழுந்தருளுவார். அங்கு பொங்கல் முதலியன செய்யப்பட்டு சுவாமியை வரவேற்க ஆயத்தமாவர். இந்நாளில் வெளியார் எவரும் பொங்கல் செய்வதற்கு அனு மதிக்கப்படுவதில்லை. பட்டுச்சாமிக்கும் வள்ளிநாச்சியாருக்கும் பொங்கலைப் படைத்துச் செய்யப்படும் பூசைகள் மிக விசேட மானவையாகக் கருதப்படும். உகந்தை மலைக்கோவிலில் வள்ளி நாச்சியார் மட்டுமே கோவில் கொண்டுள்ளார். மண்டூர் முருகன்

கோவிலில் தெய்வயானை அம்மையாருக்குக் கோவில் இருப்பினும், திருவிழாக்காலங்களில் கதிர்காமத்தைப் போன்று, வள்ளிநாச்சியார் கோவிலை மட்டுமே சுவாமியின் ஊர்வலம் தரித்துச் செல்வது வழக்கம். இச்செயற்பாடு பல செய்திகளை எமக்குத் தெரிவிக்கின்றது. பழம்பெரும் தமிழ் நூல்களை எடுத்துக் கொண்டால், குறிஞ்சித்தலைவனான முருகப்பெருமானுக்கு, வள்ளிநாயகியார் ஆகிய ஒரு மனைவியார் மட்டுமே குறிப்பிடப் படுகின்றது. இதனை உற்றுநோக்கும்பொழுது மட்டக்களப்புப் பிரதேசத்திலே காணப்படும் முருகவழிபாட்டின் தொன்மை, பழமையான தமிழர் கலாச்சாரத்தின் சுவடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

திராவிடர்களுடனான ஆரியக் கலப்பே தெய்வயானை அம்மையாரை முருகனுடன் இணையச் செய்தது. ஆரியர் தாம் வணங்கிய கார்த்திகேயனுக்கு, இந்திரனுடைய மகளாகிய தெய்வயானையைச் சக்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தனர். ஆரியரின் தெற்கு நோக்கிய படையெடுப்புக்கள்மூலம் தமிழரை வெற்றிகொள்ள முடியாமல் போனபோது, ஆரியர், தமிழருடன் இணைந்து, இயைந்து வாழ முற்பட்டனர். இதன்விளைவாக ஆரியர் வணங்கிய கார்த்திகேயனும், தமிழர் வணங்கிய முருகனும் ஒன்றுபடுத்தப்பட்டனர். இதன் விளைவாக வள்ளிநாயகியாரோடு தெய்வயானை அம்மையாரையும், முருகனுடைய சக்தியாக வணங்கி வருகின்றனர்.

முருகன், இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளையும் கொண்டவன்.. இச்சக்திகள் வள்ளி நாச்சியாரையும், தெய்வயானை அம்மையாரையும், ஞானவேற் படையையும் குறிக்கும். எப்படியாயினும் கிரியாசக்தி என்று கொள்ளப்படும் தெய்வயானை அம்மையாரைப்பற்றிய செய்திகள் எதுவும், பழந்தமிழர் வழக்கில் இல்லை. ஆயினும் சமய, சமூக ஒருமைப்பாடு கருதி, பிற்காலத்திலே முருகனுடன் தெய்வயானை

அம்மையாரை முருகனின் சக்தியாக இணைத்திருக்க வேண்டும். பழந்தமிழர் வழக்கினைப் பின்பற்றி, பிற்கால மாற்றங்களைக் கருத்திற்கொள்ளாது, உகந்தைமலை முருகன் ஆலய வழிபாட்டு முறைகள் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

சிலகாலங்களுக்கு முன்புவரை கதிர்காமத்திற்கு யாத்திரை செல்ல முறையான பாதைகள் எதுவும் காணப்படவில்லை. யாத்திரிகர்கள் வழியிலுள்ள ஆலயங்களைத் தரிசித்து நடைபாதையாகக் காட்டுவழியே கதிர்காமத்திற்குச் செல்வர். அப்பொழுது யாத்திரிகர்கள் யாவரும் இவ்வழியே வந்து உகந்தைத் திருவிழாவைப் பார்த்து, இவ்விடத்திலே தங்கிக் களைப்பாறிப் பொங்கிப் படைத்துச் செல்வது வழக்கம். இக் கோவிலில் இருந்து கதிர்காமம் செல்வோர் தெற்கே காட்டிலாகாச் சந்தியிலிருந்து நடந்து செல்வர்.

உகந்தைமலையின்மீது ஏறிநின்று பார்த்தால் சுற்றுப்புறக் காட்சிகள் மிக அழகாகக் காட்சியளிக்கும். வள்ளிமலை என அழைக்கப்படும் முதலாவது மலையிலே கோவில்கள் அமைந்து காணப்படுகின்றன. இம்மலையில் வள்ளிநாச்சியார் கோவிலும், தனியாக வேலும் காணப்படுகின்றது. இப்பகுதியிலே சுமார் ஏழு நீர்ச்சுனைகள் காணப்படுகின்றன. வள்ளியம்மன் கோவிலுக்கு முன்னாலுள்ள பெரிய சுனையைச் சரவணப்பொய்கை என அழைப்பர். கடலில் நீராடிவிட்டு வரும் அடியவர்கள், சரவணப்பொய்கையில் நீராடிவிட்டே செல்வர். வள்ளி அம்மன் கோவிலில் வள்ளி நாச்சியாருடைய சிலா விக்கிரகம் ஒருபுறமும், பிள்ளையார்சிலை, மற்றும் வேலாயுதம் மறுபுறமும் காணப்படுகின்றது. மலையடிவாரத்தில் கடற்பக்கமாக உள்ள கோவிலில் சன்னியாசிகள் உறைவதாகவும், மக்களறிந்த சன்னியாசியார் ஒருவர் இவ்விடத்திலே வாழ்ந்து, 1975 ஆம் ஆண்டு உயிர்நீத்தார் என்றும் கூறப்படுகின்றது. உகந்தைமலைக்கோவில் வீதியெங்கும் தேத்தா மரங்களும், ஆலமரங்களும், நிழல்தரும் மரங்களும் உண்டு. இக்கோவிலின்

பின்புறமாகப் பெரிய நீர்க்கேணி ஒன்றுள்ளது. இக்கோவிலின் பரிபாலனத்திற்காக மார்க்கண்டு முதலாளியார், பல ஏக்கர் காணியை மானியமாகக் கொடுத்துள்ளார். மார்க்கண்டு முதலாளியார் காலத்தில் பல ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்டதாகக் காணப்பட்ட உகந்தை மலைக்கோவில், தற்காலத்தில் சிறிய நிலப்பரப்பைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

மேற்கே பாணமையிலிருந்து கூமுனை செல்லும் பாதையும், கிழக்கே கடலும், வடக்கே காடும், தெற்கே காட்டிலாகாச் சந்தி என்பவற்றிற்கு இடைப்பட்ட பூமியே தற்பொழுது கோவிலுக்குரிய நிலமாகக் காணப்படுகின்றது. உகந்தைமலை கோவிலுக்குத் தென்மேறகே சுமார் 10 மைல் தூரம் காட்டுப்பிரதேசத்திற்குள், கூமுனையிலிருந்து வடமேற்கே 12 மைல் தூரத்தில் கபிலித்த அம்மன் கோவில் என்றொரு அம்மன் கோவில் காணப்படுகின்றது. இக்கோவில் உகந்தை மலைக்கோவிலுக்குரிய காவற்தெய்வமாகக் கருதப்படுகின்றது. இக்கோவிலுக்குத் தமிழ், சிங்கள இன வேறுபாடின்றி மக்கள் சென்று வணங்குவது வழக்கம்.

ஆலயங்கள் வெறும் கிரியைகளின் இருப்பிடம் அல்ல என்பதை உணர வேண்டும். ஈழத்திலுள்ள இந்துஆலயங்களிலே, ஈழத்தமிழரின் வரலாறுகள் புதைந்து கிடக்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஈழத்தையாண்ட தமிழ்மன்னர்களின் வரலாறுகள் மறைந்து கிடக்கின்றது. ஆயினும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அரசியல்மாற்றங்களும், பிரளயங்களும், தமிழர்களின் வரலாற்றினையும், இந்து ஆலயங்கள் தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்களையும் சரிவர எழுதிவைக்காத நிலையும், எதனையும் ஊகங்களாகக் கருதும் நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும், கால தேச வர்த்தமானங்களுக்கமைய இயற்கை நியதிப்படி, அருள்பெற்ற ஆலயங்கள் பலவும் மீளவும் அந்தந்த இடத்திலே தோற்றம்பெற்றமையை, திருக்கேதீஸ்வரம்,

திருக்கோணேஸ்வரம் போன்ற பல ஆலயங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் தெளிவாக விளக்கியுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தில் தமிழர்கள் ஈழத்தையாண்ட செய்திகளை அறிவதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் பலவும் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டுமுள்ள சூழ்நிலையில், மட்டக்களப்பு மான்மியம், திருக்கோணாசல புராணம் போன்றவற்றிலே காணப்படும் செய்திகளை, வெறும் புராணக் கதைகள் என நோக்காது எதிர்காலத்தில் ஆய்வுசெய்வது, தமிழரின் ஆதிவரலாற்றை நிலைநிறுத்தப் பெரிதும் உதவும் காரணிகளாக அமையும்.

புராணம் என்பது புராதனம், பழமை போன்ற கருத்துக்களைக் கொண்டதேயன்றி, கட்டுக்கதை என்பதைக் குறிக்கவில்லை. புராணக்கதை என்றால் அவை கற்பனைகலந்த கதைகள் என்ற எண்ணம் கருத்தறியாதோர் மனதிலே நிலவுகின்றது. இம்மனநிலையைத் தவிர்த்து புராணக்கதைகளிலே புதைந்து கிடக்கும் சாரங்களை வெளிக்கொண்டு வரவேண்டும்.

மட்டக்களப்பிலுள்ள உகந்தைமலை முருகன்கோவில், தமிழர்களின் ஆதிவரலாற்றை எடுத்தியம்பும் உன்னதமான திருக்கோவிலாகக் காணப்படுகின்றது. இக்கோவில்பற்றிய குறிப்புக்களை மனதிருத்தி இவ்வாலயத்தின் ஆதிவரலாற்றை வெளிக்கொண்டுவருவதும் ஆய்வாளர் கடமையாகும்.

# தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி திருக்கோவில்

## சரவணை, யாழ்ப்பாணம்

**பா**ர்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருளுக்கு, உலகமே கோவிலாக விளங்குகின்றது. உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் என்பதற் கிணங்க, மெய்யடியார்கள் தமது மனக்கண்ணால் இறைவனைப் பூசித்து வழிபட்டு வருகின்றனர். ஆயினும் இந்நிலையைச் சாதாரண நிலையிலுள்ள மக்கள் அடைவது மிகக் கடினமாகும். சாதாரண நிலையிலுள்ள மக்கள் தனித்தோ, ஒன்று கூடியோ வணங்கி வழிபட, ஆலயங்கள் ஆதாரமாக விளங்குகின்றன. அத்தோடு, ஆலயங்கள் மனிதகுலத்திற்கு அமைதியைத் தரும் இடமாகவும் விளங்குகின்றது. தூணிலும், துரும்பிலுமுள்ள இறைவனின் சக்தியைப் பெறுமிடங்களாகக் கோவில்கள் கருதப்படுகின்றன.

பசுவின் உடலெங்கும் பால் காணப்பட்டபோதிலும், அதன் மடிமூலமே பாலைப்பெற முடிகின்றது. அவ்வாறே எங்கும் நிறைந்த இறைவனின் அருளை ஆலயங்களின் மூலம் இலகுவாகப் பெறமுடியுமென ஆன்றோர் கூறியுள்ளனர்.

எங்கும் நிறைந்த பரம்பொருளை மனதிடை நிறுத்தி வணங்க, உருவவழிபாடு அவசியமாகின்றது. இந்நிலையிலேயே முன்னோர்களின் சிந்தனைக்கேற்ப இறைவடிவங்கள் ஏற்படுத் தப்பட்டன. வாழும் சூழலுக்கேற்ப வழிபாட்டு முறை வகுக்கப் பட்டது. இவ்வாறான நிலையில் ஏற்பட்ட வணக்கமுறைகளுள் ஒன்றாக, முருக வணக்கம் காணப்படுகின்றது. பதினெண் மேல்கணக்கு நூல்களிலே சேயோன் என்றும், கவின் மிகுந்தவன் என்றும், கந்தர் அலங்காரத்தில் சேந்தன் என்றும், பரிபாடலில் செவ்வேள் என்றும் போற்றப்படும் முருகன், அழகும் ஆற்றலும் பெற்றவன். இவ்வாறான முருக வழிபாடு, ஈழத்திலும் சிறப்புப்பெற்ற வழிபாடாக, புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், வெருகலம்பதி, கதிர்காமம் போன்ற முருக வழிபாட்டுத் தலங்கள் அருள் நிறைந்த தலங்களாகப் போற்றப்படுகின்றன.

ஈழமெங்கும் பரவலாக முருக வழிபாட்டுத் தலங்கள் காணப் படுகின்றன. ஈழத்தின் தீவகப் பிரதேசத்திலும் முருக வழிபாடு பெரிதும் போற்றப்படுகின்றது. இவ்வாறான முருக வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாக சரவணை என்னும் இடத்தில் அமைந்துள்ள தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி கோவில் விளங்குகின்றது. ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தென் மேல்திசையில் தீவகம் அமைந்துள்ளது. சப்ததீவுகளைக் கொண்ட தீவகத்தில், லைடன் தீவில் நடுநாயகமாக விளங்குவது சரவணைக் கிராமம். பழம் பெருமைகளைக் கொண்ட இக்கிராமத்தின் மத்தியில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் காவல்தெய்வமான முருகப்பெருமானின் கையில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

தோன்றும் வேல் வணங்கப்பட்டதால், இக்கோவில் வேலா யுதசுவாமி கோவில் எனக் காரணப்பெயர் பெற்று விளங்குகின்றது.

எட்டுத்திசையிலும் திருக்கோவில்கள் சூழ நடுநாயகமாக தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமிகோவில் அமைந்திருப்பது இக்கோவிலுக்கே உரிய சிறப்பாகக் கருதப்படுகின்றது. இக்கோவிலின் கிழக்கிலே ஐயனார்கோவில், முருகமூர்த்திகோவில், வைரவர்கோவில், வீரபத்திரர் கோவில், நாகபூஷணி அம்மன் கோவில் ஆகியனவும், வடக்கே கொட்டாங்காடு வைரவர், சந்தி வைரவர் ஆகிய கோயில்களும், மேற்கே சரவணை நாரந்தனை கந்தசுவாமி கோயில், ஈனியாக்கை வைரவர் கோயில், செல்லக் கதிர்காமம் ஆகியனவும், தெற்கே தெங்கங்குளம் நாச்சிமார்கோவில், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவில், இந்தன் பிள்ளையார் கோவில் ஆகியனவும் அமைந்து காணப்படுகின்றன.

இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகளோடு, யுத்தம், வாணிபம், தல யாத்திரை என இலங்கை வந்த இந்திய மக்களும், ஆங்காங்கே கலப்புற்றுள்ளனர். இலங்கைக்கும், இந்தியாவிற்கு மிடையிலான தொடர்புகள் தீவுப்பகுதிகளூடாக இடம்பெற்றுள்ளது. இவ்வாறு குடியேறிய மக்கள் நிலவளம், நீர்வளம் உள்ள பிரதேசங்களிலே குடியேறியுள்ளனர்.

நெடுந்தீவிலுள்ள பெரிய துறைமுகம், நயினாதீவு போன்றவற்றினூடாக வாணிபப் போக்குவரத்து நடைபெற்றுள்ளது. இவ்வாறான குடியேற்றங்களின் காரணமாகப் பல கிராமங்கள் தோற்றம்பெற்றன. இவ்வாறான கிராமங்களுள் சரவணைக் கிராமமும் ஒன்றாகக் காணப்பட்டது. நிலவளம், நீர்வளம், கடல்வளம் என வளம்பல கொண்ட பூமியாகச் சரவணைக் கிராமம் விளங்குகின்றது. இக்கிராமத்தின் நிலப்பிரதேசம், ஆரம்பகாலத்தில் முப்பத்தியாறு திட்டுக்களைக் கொண்டதோடு, இத்திட்டுக்களைச் சூழ தாழ்வான தட்டையான நிலப்பரப்பினைக் கொண்டதாகவும் காணப்பட்டது. இத்திட்டுக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு குடியிருப்புக்களாக

விளங்கியுள்ளன. இக்குடியிருப்புக்களைச் சூழ, பனை, தென்னை போன்றவற்றோடு அன்றாட தேவைகளுக்கான பயிர்வகைகளும் பயிரிடப்பட்டது. அதேவேளை திட்டுக்களைச் சூழவிருந்த தாழ்வான நிலப்பரப்புக்கள் நெற்செய்கை வயல்களாகக் காணப்பட்டன.

இக்கிராமத்திலே விவசாயம் பெரிதும் பேணப்படுகின்றது. அதேவேளை பெரியவெளி என்ற நிலப்பரப்பில் மந்தைவளர்ப்பும், மீன்பிடித்தொழிலுக்குரியனவாக வடக்குத் தெற்குக் கடல்களும் காணப்படுகின்றன. சூழைகுண்டான் குளம் என்னும் பகுதியில் மட்பாண்டத்தொழில் நடைபெறுகின்றது. தீவகத்திற்கும், யாழ் குடாநாட்டின் தொடர்புகளுக்கும் நாவாய் வெட்டியவாய்க்கால் துறை (நாய்க்குடியாள்வாய்க்கால்) காணப்பட்டுள்ளது. சரவணையூர்க் கிராமம் புகையிலைக்குப் பெயர்பெற்ற கிராமமாக விளங்குகின்றது. சிங்களப் பிரதேசங்களில் இக்கிராமத்தின் புகையிலைக்குப் பெருமதிப்புண்டு. இவ்வாறான பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட சரவணைக் கிராமம், இந்துசமயப்பேணலிலும் பெரும் ஈடுபாடு கொண்டு விளங்கியதென்பதை, இங்கு காணப்படும் கோவில்கள் மட்டுமன்றி, இவ்வூர் மக்கள் பின்பற்றும் கலாச்சார பாரம்பரியங்களும் சான்றாக விளங்குகின்றது.

ஆரம்பகால ஆலயங்கள், பல்வேறு சூழலில் எழுந்துள்ளன. இவற்றுள் தாம் நினைத்தவை நிறைவேற வேண்டும் என வேண்டுதல் செய்து, அக்கருமம் நிறைவேறிய பின் ஆலயங்களை அமைக்கும் வழக்கும் காணப்பட்டுள்ளது. சரவணையூர்க் கிராமத்திலும் வேண்டுதல் காரணமாக எழுந்த கோயிலாக, தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோவில் காணப்படுகின்றது. அக்காலத்திலே இக்கிராமத்தில் உள்ள குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள், பிறக்கும்போது இறந்தும், தப்பிய குழந்தைகள் நோய்வாய்ப்பட்டும் காணப்பட்டன. இந்நிலையால் இவ்வூர்மக்கள் மனவேதனை யுடையவர்களாக வாழ நேரிட்டுள்ளது. ஆன்றோரின் விளக்கப்படி இம்மனக்குறைதீர, குழந்தை முருகனின் வழிபாடே ஏற்றதென

எண்ணினர். இதற்கேற்ப ஒரு குறிப்பிட்ட இடத்தில் துன்பங்களிலிருந்து காக்கும் ஆயுதமாகிய வேலை வைத்து வழிபட்டனர்.

முருகனின் கைவேல் ஞானத்தைக் குறிக்கும் பண்புடையது. ஞானமாகிய அறிவுக்கு மூன்று பண்புகள் காணப்படுகின்றன. அவை ஆழம், அகலம், கூர்மை எனப் போற்றப்படும். ஞானமாகிய வேலின் அடிப்பகுதி ஆழமாகவுள்ளது. நடுப்பகுதி விசாலமானது. நுனிப்பகுதி கூர்மையானது. ஆழமான, விசாலமான, கூர்மையான அறிவைப் பெற்றோர் ஞானிகள் எனப் போற்றப்பட்டனர். வேலுக்கு மற்றுமொரு தனிச்சிறப்புண்டு. அஞ்ஞானத்தை நீக்கி, மெய்ஞ் ஞானத்தை அருளும் தன்மை கொண்டதாக வேல் விளங்குகின்றது. உலக முதற்பொருளான சிவன், முருகப் பெருமானுடைய பதினொரு கரங்களிலும், படைகளைக் கொடுத்து, படைகளுக்கு நாயகமான வெற்றிவேலைச் சக்தியோடிணைந்து படைத்து அருளிக் கொடுத்தாரென கந்தப்புராணத்திலே கூறப்பட்டுள்ளது. இக்காரணத்தினால் வேலைச் சக்திவேல் எனப் போற்றுவர். வேலினுடைய சிறப்பினைக் கந்தப்புராணவரிகளிலே,

வீரவேல் தாரைவேல் விண்ணோர்கள் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேலுண்டே துணை.

என்று வேலின் சிறப்பு மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒளிமயமான சிவனிடத்திலிருந்து தோற்றம் பெற்றதால், வேலே சக்தி வடிவான முருகன் எனப் போற்றி வணங்குவது வழக்கம்.

இத்தகைய ஆழமான கருத்துக்களைக் கொண்ட வேல் வணக்க முறையோடு, தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் உருப்பெற்றது. அத்தோடு இவ்வூரின் பெயரும் சரவணைப் பொய்கையில் தோன்றியதால் சரவணன் எனப் பெயர் பெற்ற, முருகனின் பெயரைக் கொண்டு சரவணை என அழைக்கப்படுவது,

முருகவணக்கத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. கி.பி 1505 ஆம் ஆண்டின் பின் இலங்கைக்குள் காலடிவைத்த அந்நியர்கள் ஆட்சி இலங்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாகத் தமது மதத்தைப் பரப்புவதில் அக்கறை கொண்ட அந்நியர்கள், பாரம்பரியமாக ஈழத்திருநாட்டில் இருந்து வந்த இந்து ஆலயங்களை அழித்து, மக்களைத் தமது மதத்திற்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். சரவணையில் இருந்த முருக வழிபாட்டுத்தலமும் அந்நியரால் அழிக்கப்பட்டது. இவ்வாலயம் இருந்த இடம் தற்போது கும்பிடுபிட்டி என அழைக்கப்பட்டு வருகின்றது. இவ்விடத்தில் வைரவர் ஆலயம் உள்ளது.

ஆரம்பகாலங்களில் அடையாள வணக்கமுறை தழுவிய ஆலயங்களாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வாறான ஆலயங்களை மடங்கள் என அழைக்கும் வழக்குக் காணப்பட்டுள்ளது. தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி கோயில், ஆரம்பகாலத்தில் சுண்ணாம்புகலந்த கற்களால் கட்டப்பட்டு, பனைஓலையால் வேயப்பட்ட மடமாகவே காணப்பட்டுள்ளது.

அந்நியர் ஆட்சியில் மதமாற்றம் நடைபெற்றபோது, சைவ அறிவை மக்களிடையே தொடர்ந்தும் வளர்ப்பதற்கு இவ்வாறான மடாலயங்கள் பெரிதும் பாடுபட்டன. இம்மடாலயங்களிலே கந்தப்புராணம், பெரியபுராணம் மற்றும் தேவாரம், இதிகாசங்கள் ஆகியன படித்துப் பயன் சொல்லப்பட்டு, இந்துசமயத்தின் பெருமையை மக்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டது.

இப்பிரதேசத்திலே காணப்பட்ட மடாலயங்கள் பல இப்பணியைச் செய்துள்ளன. மேற்குக் கரம்பன் மடம், கிழக்குக் கரம்பன் மடம், சரவணை மடம் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இம்மடாலயங்களிலே, புராணபடனம் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இப்பணியில் பலர் ஈடுபட்டு அரும்பணியாற்றியுள்ளனர். கதிர்வேலாயுதசுவாமி கோவிலில், புலவர் தில்லைநாதன், தம்பு வாத்தியார், திரு.சி மருதையனார்,

பரியாரி சோமசுந்தரம், திரு.வைரமுத்து (மாரிமுத்தர்), திரு.சி.சுப்ரமணியம், திரு.மு.சின்னத்துரை போன்ற பலர் பயன்சொல்லிச் சமயக்கல்வியை வளர்த்தனர்.

தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலனம், விசுவநாதர் மற்றும் சேதுகாவலர் என மாறி மாறிப் பெயர் வைத்துக் கொண்ட விசுவநாதர் குடும்பத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. பேரன் பெயரைக் குடும்பத்தின் வாரிசுகளுக்கு வைப்பது, பண்டைய முறைகளில் ஒன்றாகக் காணப்பட்டுள்ளது. இவ்வரிசையில் இராசையா வாத்தியார் என அழைக்கப்பட்ட சேதுகாவலர் அவர்களால் இக்கோயில் பராமரிக்கப்பட்டது. இவரது பரம்பரையில் வந்தவரான திருமதி கெங்காதரம் நல்லம்மா அவர்கள், தனது பிள்ளைகளின் மூலம் இவ்வாலயத்தைப் பராமரித்து வந்துள்ளார். இவரது காலத்திலும் இவ்வாலயம் மடாலயமாகவே இருந்துள்ளது.

1950 ஆம் ஆண்டளவில், இளைய தலைமுறையினர் இவ்வாலயத்தின்மீது ஈடுபாடுகொள்ள ஆரம்பித்ததும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆலய முகாமையாளராகவிருந்த இராசையா வாத்தியார் என அழைக்கப்பட்ட சேதுகாவலர் அவர்களிடம், தேவபுரம் மடாலயம் பொதுஆலயம் ஆக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனால் 1954 ஆம் ஆண்டு, 18 பேர் கொண்ட பொதுச்சபையிடம் இவ்வாலயம் கையளிக்கப்பட்டது. இதன் பின்னர் ஆலய வளர்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

ஈழத்தில் இந்துசமய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு உழைத்த பெண்கள் மிகச் சிலராகவே பேசப்படுகின்றனர். ஆயினும் இலைமறைகாயாகப் பல பெண்கள் இந்துமத வளர்ச்சிக்காகப் பாடுபட்டுள்ளதைத் தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி கோயில் வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது. திருமதி. அகிலாம்பிகை நமசிவாயம், திருமதி. கண்மணி அப்புத்துரை, திருமதி. விசாலாட்சி

இராமலிங்கம் ஆகிய இம் மூன்று பெண்மணிகளையும், இவ்வாலய வளர்ச்சியின் மும்மணிகள் என்று கூறுவது பொருத்தமுடையது.

அக்கால வழக்கத்திலிருந்த பிடியரிசி சேமிப்பு மூலம், பல சாதனைகளை நிகழ்த்தியவர்களாக இப் பெண்மணிகளைக் குறிப்பிடலாம். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற கிராமியக் கட்டுப்பாடுகளிலிருந்து தம்மை விடுவித்து, சமூக நோக்குடன் இயங்கிய இவர்கள், ஏனைய பெண்களுக்கும் வழி காட்டியாக இருந்துள்ளார்கள். இவர்கள், ஒவ்வொரு வீடுகளுக்கும் பிடியரிசிக் குட்டான்களை வழங்கி, அதன்மூலம் அரிசி நிதி சேகரித்து ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பாடுபட்டுள்ளனர்.

ஆரம்பகாலத்தில், தற்காலத்தில் உள்ளது போன்ற போக்குவரத்து வசதிகள் காணப்படவில்லை. கதிர்காமத் திருவிழாவைக் கண்டுகளிக்க விரும்புவோர் நடைபாதையாகவே கதிர்காமம் செல்வது வழக்கம். அனைவராலும் இந்த நடை முறையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. சரவணைக் கிராமத்தில் வாழ்ந்த இவ்வாறானவர்கள், கதிர்காமக்கந்தனை நினைத்து அங்கு திருவிழா நடக்கும் காலத்தில், பூசை வழிபாடு, திருவிழா ஆகியவற்றை தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் செய்து வந்துள்ளனர்.

பிடியரிசி நிதி சேகரிக்கப்பட்ட இக்காலப்பகுதியில் வேல்முருகனுக்குரிய வள்ளி தெய்வானை சமேதர முத்துக்குமார சுவாமி விக்கிரகங்கள் செய்யப்பட்டு, எழுந்தருளித் திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்விக்கிரகங்களை திருமதி. கண்மணி அப்புத் துரை அவர்கள், தமது சொந்த நிதியிலே செய்து கொடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய காலத்திலே ஆலயத் திற்குச் சுற்றுமதில் கட்டப்பட்டதோடு, கொட்டகையும் அமைக்கப் பட்டது. இவ்வாறான பல வளர்ச்சிப் பணிகள் இக்காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறாக படிப்படியாக இவ்வாலயம் வளர்ச்சிபெற்று வரும்வேளையில், அடுத்தகட்டமாக, சுண்ணாம்பு கலந்த கற்களினாலும், ஓடுகளினாலும் ஆன பழைய மூலஸ்தானம், சீமெந்தினாலான தூபிகொண்ட ஆலயமாக அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் திரு.சி. செல்லத்துரை, திரு.செ.சச்சிதானந்தசிவம் போன்ற பலரின் மனதில் தோற்றம் பெற்றது.

பலரின் உதவியுடன் பழைய ஆலயத்தை மாற்றியமைத்து 1978 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆலய வருடாந்த மகோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொடியேற்றம், தேர், தீர்த்தம், திருக்கல்யாணத் திருவிழாக்கள் என மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. கதிர்காமத்தில் தீர்த்தத்திருவிழா, ஆடித் திருவோண நட்சத்திரத்தில் நடைபெறுவது போன்று, தேவபுரம் கதிர்வேலாயுதசுவாமி கோயிலிலும் நடைபெறுவது வழக்கம்.

இவ்வாறாக 1991 ஆம் ஆண்டுவரை ஆலயம் மிக உன்னத மான நிலையில் வளர்ச்சி கண்டது. இந்நிலையில் 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையாலும், மக்களின் இடப்பெயர்வு காரணமாகவும், இவ்வாலயம் அழிவுக்குட்பட்டு, பூசை வழிபாடுகளின்றிக் காணப்பட்டது.

1997ம் ஆண்டில் நிலைமை சற்றுச் சுமுகம் அடைந்ததும், மக்கள் மீளக்குடியேற ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆலயத்தில் புனராவர்த்தனப் பணிகள் நடைபெற்று, புனராவர்த்தன கும்பாபிஷேகம் இடம்பெற வேண்டுமென்று பலரும் ஈடுபட்டனர்.

அடியார்களின் உபயங்கள், அன்பளிப்புக்கள் காரணமாக, மகாமண்டபம், தரிசன மண்டபம், ஆறுமுகசுவாமி கோவில், மகாவிஷ்ணு கோவில் மற்றும் சமயக்குரவர் நால்வருக்கான

ஆலயம், தண்டேஸ்வரர் ஆலயம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், சுற்றுக்கொட்டகைகள், தளத்திற்குச் சீமெந்திடல், கோபுரவாசல், புதியதேர், தேருக்கான தரிப்பிடம், பூசை செய்வோர்க்கான வதிவிடம் என்பனவற்றோடு சுற்றுமதில்களும் புனரமைக்கப்பட்டன. இப்பணிகள் யாவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு 07-06-2003 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. 1990களின் பின் தடைப்பட்டிருந்த ஆலயத் திருவிழாக்கள் மீண்டும் சிறப்பாக நடைபெறத் தொடங்கின. 22.07-2004 ஆம் ஆண்டு மீண்டும் கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. சித்திரத் தேர்த்திருப்பணியும் நிறைவேற்றப்பட்டு 30-07-2004 இல் வெள்ளோட்டமும், அதனைத் தொடர்ந்து 31-07-2004 ஆம் ஆண்டு தேர்த்திருவிழாவும் மிக விமரிசையாக நடைபெற்றது.

புதிய சித்திரத்தேரில் எழுந்தருளுவதற்காக வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகசுவாமி, இந்தியாவில் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை, கும்பகோணத்திலுள்ள சிற்பாச்சாரிய ஸ்தபதியால் ஆக்கப்பட்டு, 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின்போது பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்குரிய முழுப்பொறுப்பையும் ஏற்று உபயமாக அன்பளிப்புச்செய்தவராக, சரவணைக் கிராமத்தவராகிய சிங்கம் ஓவசியர் என அழைக்கப்பட்ட திரு.பரராசசிங்கம் வரதராசசிங்கம் அவர்கள் விளங்கினார்.


அத்தோடு ஆலயத்தின் தரிசன மண்டபம், புதிய வில்லு மண்டபம், ஆறுமுகசுவாமி எழுந்தருளியிருக்கும் ஆலயம் ஆகியவை அமைய திரு. பரராசசிங்கம் வரதராசசிங்கம் உதவியுள்ளார்.

இவ்வாறே சமயக்குரவர் நால்வரின் விக்கிரகங்களை உருவாக்கும் பொறுப்பை திரு. சிற்றம்பலம் (கந்தையா) அவர்களும்,

சண்டேஸ்வரர் விக்கிரகத்தை திரு.த.தியாகராசா குடும்பத்தினரும் உபயமாகச் செய்து கொடுத்தனர். திரு.தவபாலன் மற்றும் திரு.செ. சச்சிதானந்தசிவம் போன்ற பல அன்பர்கள் இவ்வாலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்துள்ளனர். ஆறுமுகப்பெருமானின் பெருமையை விளக்கும்பொழுது, ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் தமது ஸ்ரீ சுப்ரமணிய புஜங்கம் பாடலில்,

"கவியறியேன் வசனமோ
கண்டறியேன் என்
செவியறியா தொலியெதையும்
செப்பியுமறியேன்
புவிபுகழும் சிதாநந்த ஆறுமுகனே
உன் புனித நோக்கால்
தெவிட்டாத தேன்தமிழ்ச்சொல்
நெஞ்சிருந்து தெளிந்து வரும்"

என்று உரைத்துள்ளார். எதுவுமே தெரியாது வாழும் நான் உன்னுடைய ஆறுமுகங்களையும் உள்ளத்திலே நினைந்து வழிபட்டால், ஆளுமைகள் யாவும் கைகூடும் என்று கூறியுள்ளார். இவ்வாறான பெருமைமிக்க முருகப்பெருமானை, ஈழமக்கள் பெரிதும் போற்றி வணங்கி வருகின்றனர் என்பதற்கு சரவணை, தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலயமும் சான்றாக விளங்குகின்றது.



# சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

## உடுப்பிட்டி

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி வடிவினரான சிவபெருமானை, முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். பழம்பெரும் நாகரீகமாகக் கருதப்படும் சிந்துவெளிநாகரிகக் கண்டுபிடிப்புக்களின் மூலம் சைவத்தின் சின்னங்களையும், வழிபாட்டு முறைகளையும் அறியலாம். இதன்மூலம் சைவத்தின் தொன்மையையும், பெருமையையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் இயற்கையோடிணைந்த வழிபாடாகக் காணப்பட்ட சைவம், காலப்போக்கில் முதிர்ச்சி பெற்ற மதமாக மாறியுள்ளது.

கோவில், கோபுரம், ஆகம, வைதீக கிரியை முறைகள், திருவிழாக்கள், திருமுறை, சைவசித்தாந்தம், கலைகள், சைவத்தின் தத்துவவிளக்க வெளிப்பாடுகள் எனப் பல துறைகளிலும் தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளதோடு, மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற

வாழ்வுநெறிகளையும், தன்னகத்தே கொண்ட நெறியாகவும் விளங்குகின்றது. ஆரம்பத்தில் சைவத்திற்குச் சனாதனதர்மம் என்ற பெயரே காணப்பட்டுள்ளது. இதற்கு நிலையான நீதிநெறிமுறை எனப் பொருள் கோள்வர். மக்களைச் செம்மையான முறையில், சமூக உணர்வோடு, வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுகின்ற நெறியாகவும், படிப்படியாகப் பக்குவப்படுத்தி, மனித நிலையினின்றும் தெய்வீக நிலைக்கு உயர்த்த உதவும் உயர்ந்த நெறியாகவும் சைவம் விளங்குகின்றது.

ஆத்திக, நாத்திகக் கொள்கைகள் மனித மனதிலே காணப்பட்டபோதிலும், கடவுள் ஒருவர் உண்டென்பதை நாள் தோறும் நிகழும் செயல்கள் எமக்கு உணர்த்துகின்றது. மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட நிலையில், இயற்கை நியதி செயற்பட்டு உலக நிகழ்வை ஒருங்குபடுத்தி வருவது கண்கூடு. நம்பிக்கையும், அன்பும் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இயங்க ஆதாரமாயுள்ளது. இவற்றை நமக்கு அளிப்பனவாகக் காணப்படுபவை திருக்கோயில்கள்.

திருக்கோயில்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை அகத்தாலும், புறத்தாலும் கண்டு, மனங்குளிர்ந்து துன்பங்களை மறந்து நலம் பெறுவதற்குத் திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும் ஆதாரமாயுள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. தாம் விரும்பிய வடிவங்களிலே தெய்வங்களைக் கண்டு வழிபடும் மரபினைத் தமிழர்கள் பண்டு தொட்டு இன்றுவரை பேணி வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகீழ்த்திசையில் உள்ள வடமராட்சிப்பகுதியில், சைவமுந் தமிழும் செழித்தோங்கும் ஊராகத் திகழ்வது உடுப்பிட்டி. இங்கு எழுந்தருளி அருளாட்சி புரிந்துவரும் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் அறுநூறாண்டு களுக்கு மேற்பட்ட தொன்மையுடையதாகத் திகழ்கின்றது. அறுவகைச் சமயங்களைத் தழுவிய வழிபாட்டு நெறி ஈழத்திலே

பெரும்பான்மையாகப் பேணப்பட்டபோதிலும், சிவசக்தி அம்சமான பத்திரகாளி சமேத வீரபத்திரக்கடவுளுடைய வழிபாடும் தமிழ் மக்களால் பின்பற்றப்படுகின்றது.

சிவனின் அறுபத்திநான்கு திருக்கோலங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிட்சாடணமூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகளை வணங்குவதே மரபாகக் காணப்படுகின்றது. இவ்வடிவங்களுள் இலிங்க வடிவம் மட்டுமே கருவறைக்குள் நிறுவப்படுவது வழக்கம்.

எனினும் வீரபத்திரர், பைரவர் ஆகியோரின் உருவத் திருமேனிகளையும் கருவறைக்குள் நிறுவி வழிபடுவது, சைவ வழிபாட்டின் முதிர்ச்சி நிலையைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. இந்த வகையிலே இலிங்கம், வீரபத்திரர், பைரவர் ஆகிய மூன்று சிவவடிவங்களும் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன.

மும்மூர்த்திகளாகப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களுள் படைத்தல் தொழிலைப் புரிந்து வரும் பிரம்மதேவனுக்கு அவதாரம் கிடையாது. காத்தற் கடவுளாகிய விஷ்ணுபகவானுக்கு மாத்திரமே அவதாரங்கள் உண்டு. சிவனுக்கு அவருடைய அம்சமாக அவதாரம் கிடையாது. ஆனால், அவருடைய சக்தியினால் சிவ அம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சொரூபங்கள் காணப்படுகின்றன.

இவர்களை அவதாரங்களாகக் கருதாது, சிவகணங்களிலே, சிவமூர்த்தங்களிலே சேர்ப்பதே மரபாகக் காணப்படுகின்றது. இந்த வகையிலே சிவமூர்த்தமாகக் கருதப்படும் வீரபத்திரசுவாமி, சக்தி அம்சமான பத்திரகாளியோடு எழுந்தருளி அருள்பாலிக்கும் சிறப்பு, மிக மிக விசேடமானது. இத்தகைய பெருமை பெற்ற சைவத்தின் அறிவுமுதிர்ச்சியை எடுத்தியம்பும் வீரபத்திரமூர்த்தி வழிபாடு,

உடுப்பிட்டியில் பல்லாண்டு காலமாகப் போற்றப்பட்டு வருகின்றது. சிவன், சக்தி, கணபதி, முருகன், போன்ற தெய்வங்களைப்பற்றிச் சைவமக்கள் அறிந்த அளவிற்கு, வீரபத்திர மூர்த்தியின் தோற்றம் பற்றிப் பெரிதாக அறியவில்லை. வீரபத்திரமூர்த்தியின் சிவாம்சத் தோற்றத்தினைப் புராணக் கதைகள் விளக்கியுள்ளன. புராணவரலாறு என்பது மிகப் பழமையான வரலாறு என்பதைக் குறிக்கும் சொல்லாட்சியாகவே விளங்குகின்றது.

சிவபரத்துவத்தினையும், சிவவேள்வியின் சிறப்பினையும், வேள்வியில் வழங்க வேண்டிய அவிப்பாகத்தின் முக்கியத் துவத்தினையும் உலகிற்கு உணர்த்தி நிற்கும் சிவனின் உக்கிர வடிவமே வீரபத்திர மூர்த்தி என்பதைப் புராணக் கதைகள் வாயிலாக அறியலாம். சிவமகா புராணம், பிரமபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம் ஆகியவற்றிலே வீரபத்திர மூர்த்தியின் தெய்வீக வரலாற்றை விரிவாக அறியலாம்.

நியாய தர்மங்களை நிலைநாட்டித் தீயவற்றைச் சங்காரம் செய்யச் சக்தி கொண்ட பல்வேறு தோற்றங்கள் பற்றிய கதை களைப் புராணங்கள் கூறியுள்ளன. இவற்றுள் தக்கனின் மகளாக அவதரித்து உயிர்களைக் காத்தருளிய தாட்சாயணியின் தோற்றம் சிறப்பானது. ஒரு சந்தர்ப்பத்திலே தாட்சாயணியின் தந்தையாகிய தக்கன், யாகம் ஒன்றை நிகழ்த்தினான். தீயோர் வசப்பட்ட தக் கன், சங்காரனாகிய சிவனுக்கு அவி பாகத்தைக் கொடாது அவ மதிக்கும் முக்கிய நோக்குடனேயே இந்த யாகத்தை நிகழ்த்தினான். சிவனைத் தவிர ஏனைய தேவர்களை அழைத்து யாகம் நிகழ்த்தப்பட்டது. தந்தையாரால் நிகழ்த்தப்படும் யாகத்தைக் காண விரும்பிய தாட்சாயணிதேவி, சிவன் தடுத்ததையும் பொருட்படுத்தாது, யாகம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றார்.

தந்தையாகிய தக்கன் சிவனை நிந்தித்ததை நேரிலே கண்டு, அதனைத் தடுத்துத் தந்தையைக் காப்பாற்ற முயன்றும், பலனளிக்கவில்லை. மகளை அவமதித்துத் துரத்திய தக்கன்,

யாகத்தைத் தொடர்ந்து நடத்தினான். விருப்பு வெறுப்புக்களற்ற இறைவன், ஆணவம் தலைவிரித்தாடும் தக்கனின் யாகத்தைச் சங்காரம் செய்து, அவனைக் காப்பாற்றக் கருணை கொண்டார். இவ்வேளையில், தகாது செய்யும் தக்கனின் மகள் என்ற வடு, தனக்கு ஏற்படாதிருக்கும் பொருட்டு, யோகாக்கினியால் தன்னுடல் நீத்து, தாட்சாயணி என்னும் நிலையினின்றும் நீங்கி, பர்வதராசனின் புதல்வியாக அவதரித்து, பார்வதி என்னும் நாமத்தினை இறைவி பெற்றார்.

இறைவியின் இந்நிலைபற்றி அறிந்த இறைவன், கோபங் கொண்டு தக்கனைச் சங்காரம் செய்யத் திருவுளம் கொண்டார். சங்காரமூர்த்தமான உருத்திர மூர்த்தியினது சொரூபமாய் சிவபிரானது நெற்றிக் கண்ணினின்றும் வீரபத்திரமூர்த்தி தோன்றினார். இவ்வேளையில் உமாதேவியாரது கோபாக்கினியினின்றும், பத்திரகாளி தோற்றம் பெற்றார்.

வீரபத்திரர், பத்திரகாளி என்ற இரு பெயர்களிலும் காணப்படும் பத்திரம் என்ற சொல், நன்மை என்று பொருள்படும். சிவசக்தி அம்சமாகத் தோற்றம் பெற்ற வீரபத்திர மூர்த்தியையும், பத்திர காளியையும் தோற்றம் பெறச் செய்து, ஆணவமயப்பட்ட தக்கனின் யாகசங்காரம் நடைபெற்றது. யாகசங்காரத்தின் பின் தக்கனும், ஏனையோரும் தமது தவறை உணரும் நிலையை ஏற்படுத்தி அருள் புரிந்து காப்பாற்றப்பட்டனர். பரம்பொருளான இறைவனை உள்ளத்திருத்தாது, யாகங்கள் செய்வதன் மூலம் நன்மைகள் ஏற்படாது துன்பமே எஞ்சும் என்பதையே மேலே கூறப்பட்ட கதை விளக்கியுள்ளது.

வீரபத்திர மூர்த்தியை வீரபத்ர எனவும் வழங்குவர். இச்சொல்லிலுள்ள வீர என்பது வீரத்தையும், பத்ர என்பது நன்மையையும் குறிக்கின்றது. எனவே வீரபத்திரமூர்த்தியானவர் வீரத்தினையும், நன்மையையும் பக்தர்களுக்கு நல்கும் அருள்கொண்டவர். வீரபத்திரர் தோன்றும்பொழுது பாதார

விந்தங்களிலே தண்டை வீரகண்டையுடன் தோன்றியமையால், அவருக்கு வீரபத்திரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் பிரபஞ்ச உற்பத்தி என்னும் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

வீரபத்திர கோலத்தில் புரிந்த அருட்செயல்களை அடிப்படையாகக் கொண்டு, வீரபத்திரரை உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், முக்கண்ணன், சடையோன், வில்லி, குரோதன் எனப் பல நாமங்களால் அழைக்கும் வழக்குண்டு. வீரபத்திர மூர்த்திக்கு வேதாகமவழியிலும், வேதாகமத்திற்குப் புறம்பான வழியிலும் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. வேதாகம முறையைப் பின்பற்றும் ஆலயங்களில் மகோற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். மகோற்சவ விழா இடம்பெறாத ஆலயங்களில் அலங்கார உற்சவங்க்ளும், பொங்கல், திருக்குளிர்ச்சி போன்ற வழிபாடுகளும் இடம்பெறும். ஆகமமரபில் வீரபத்திரமூர்த்தியை வழிபடும்போது அவருக்குரிய தியான மந்திரத்தைக் கூறுவது மரபாகக் காணப்படுகின்றது.

வீரபத்திரரது வழிபாட்டிலே தைப்பூசம், சிவராத்திரி, சித்திரைப்பரணி, தை அமாவாசை, ஐப்பசிப்பரணி என்பவற்றோடு மங்கலவாரம் எனப்படும் செவ்வாய்க்கிழமையும் சிறந்த விரத நாட்களாகக் கருதப்படுகின்றது. அறுசுவை அன்ன வகைகளும், பணிகார வகைகளும் இவருக்கு ஏற்புடையது. விரததினங்களிலே பொங்கல் உகந்தது. பொங்கல் சாதத்தோடு பணிகாரங்களையும், பழவகைகளையும் படைத்து மடை என்ற ரீதியில் வழிபடுவது மேன்மையானது. நோயுற்றோர் விபூதியினால் அபிஷேகம் செய்து அவ்விபூதியைப் பெற்று அணிவதனால், துன்பங்கள் நீங்கிச் சுகம் பெறுவர் எனப் பெரியோர் உரைத்துள்ளனர்.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட வீரபத்திரசுவாமி வழிபாடு, ஈழத்தில் பல்வேறிடங்களிலே காணப்படுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்தில் உடுப்பிட்டியிலுள்ள சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் வரலாற்றுச் சிறப்புடையது. மூர்த்தி, தலம்,

தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது. இக்கோயிலின் வரலாறு தமிழகத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

தென்னிந்தியாவிலே காஞ்சிமாநகர் பல்வேறு சிறப்புக்களையும் கொண்டது. இங்குள்ள பண்டாரத்தோட்டம் என்னும் கிராமத்திலே வீரபத்திரரைக் குலதெய்வமாகக் கொண்ட சேதுகாவல சேனாதிராச மாப்பாணமுதலியார் வம்சத்திலே, சந்திரசேகர மாப்பாணமுதலியார் என்பவர் தீராத நோயால் பீடிக்கப்பட்டுத் துன்பமுற்றார். குளக்கோட்டு மகாராசாவின் பரம்பரையைச் சேர்ந்த இளவரசன் ஒருவன் இவரது நண்பராயிருந்தார். இந்த நண்பர் ஈழத்தின் வடபாலுள்ள கீரிமலைப் புனித தீர்த்தத்தைப்பற்றியும், இத்தீர்த்தத் திலே நீராடிக் குன்மநோய் நீங்கப் பெற்றோர் வரலாறுகளையும், தனது நண்பராகிய சந்திரசேகர மாப்பாண முதலியாருக்கு கூறி, கீரிமலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

நோய்நீங்கி நலம்பெறவிரும்பிய சந்திரசேகர மாப்பாண முதலியார், தனது மனைவி பார்வதி மற்றும் புதல்வர்களாகிய தனபாலசிங்கம், குணபாலசிங்கம், பரம்பரைப் புரோகிதர், காசிப்பிராமணர் கோபாலக்குருக்கள் ஆகியோருடன் 1365 ஆம் ஆண்டு நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள வீரமாகாளியம்மன் துறையிலே வந்திறங்கினார். கீரிமலையை நோக்கிப் புறப்பட்ட சந்திரசேகரனும் ஏனையோரும், மேற்கே செல்வதற்குப் பதிலாகத் தென்திசையை நோக்கி நகர்ந்த காரணத்தால், அவர்கள் உடுப்பிட்டியை வந்தடைந்தனர்.

உடுப்பிட்டியில் இவர்கள் தங்கிய இடத்திலே ஒரு குளமும், காய்த்துக் குலுங்கிய மாமரமும் இருப்பதைக் கண்டு அவ்விடத்திலேயே தங்கினர். இவ்விடமே முருகன் பரிவார மூர்த்தியாக இப்பொழுது எழுந்தருளியுள்ள இடமாகும். இக்குளத்திலே சந்திரசேகரமாப்பாண முதலியார் தினமும் நீராடி வந்தார். இதன் பயனாகத் தீராத நோயாக விளங்கிய நோய்

மாறி உடல்நலம் பெற்றார். தனது நோய் மாறியமைக்குத் தான் தங்கியிருந்த தலமே காரணம் என உணர்ந்தார். தான் தங்கியிருந்த இடத்திலே தனது குலதெய்வமான வீரபத்திர சுவாமிக்குக் கோயில் அமைக்க ஆவல் கொண்டார்.

தற்போது வீரபத்திசுவாமி கோயிலுள்ள இடத்திலே கோவிலைக் கட்டி, தான் சுகம் பெறக் காரணமாயிருந்த திருக்குளத்தையும் புனரமைத்துச் சந்திரக்குளம் எனப் பெயரிட்டார். தான் அழைத்து வந்த கோபாலக்குருக்களையும், மூத்தமகன் தனபாலசிங்கத்தையும் உடுப்பிட்டியில் விட்டு, ஏனையோருடன் தாய் நாடு திரும்பினார். இச்சம்பவங்களை உறுதி செய்வது போல வீரபத்திரசுவாமிகோயில் நிறுவப்பட்ட காணி, பண்டாரத் தோட்டம் என அழைக்கப்படுகின்றது.

சந்திரசேகர மாப்பாணமுதலியாரின் சந்ததியினர், இவ்வூரில் பிரபல்யம்பெற்று வாழ்ந்துள்ளனர். இரண்டாவது சந்திரசேகர மாப்பாண முதலியாரின் மகன் வீரகத்தி மணியகாரன். இவரது இரண்டாவது குமாரராகிய கதிர்காம உடையார் என்பவரால் கி.பி 1851 ஆம் ஆண்டு வீரபத்திரசுவாமி கோயில் புனரமைக்கப்பட்டு, கோயிலைச் சுற்றிச் சுற்று மதில் எழுப்பப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்தோடு கதிர்காம உடையார் தனது ஆதனங் களையும் கோயிலுக்குத் தர்மசாசனம் செய்து வைத்தார். இவ்வாண்டிலிருந்து இக் கோயிலில் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. கோவில் பரிபாலனம் சிறப்பாக நடைபெறக் கதிர்காமஉடையாரின் சந்ததியினர், நூற்றுக்குமேற்பட்ட பரப்புடைய ஆதனங்களை இக் கோயிலுக்குத் தர்மசாசனம் செய்துள்ளனர்.

இக்கோயில் காலத்திற்குக் காலம் புனரமைக்கப்பட்டுப் பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. சிவாகமங்கள் கூறும் கிரியைகளிலே கும்பாபிஷேகம் முதன்மை பெறுகின்றது. இத்தகைய மகா கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறுவதால், ஏனைய வழிபாடுகள், மகோற்சவங்களை

விடச் சிறப்பானதாக எண்ணப்படுகின்றது. பழுதடைந்த கோயிலைத் திருப்பணிகள் மூலம் புதுப்பித்து, அக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு நிகழ்வதே புனருத்தாரண கும்பாபிஷேகம் எனப்படும்.

இவ்வூரில் கதிர்காம உடையாரின் சந்ததியினர் மிகச் செல்வாக்குடன் விளங்கியதோடு, சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திருப்பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். கி.பி 1874 ஆம் ஆண்டு கதிர்காம உடையாரின் மகனான குமார் என்பவராலும், கி.பி 1897 இல் கதிர்காம உடையாரின் பேரனாகிய குமார் செல்லப்பா என்பவராலும், மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதன்பின்னர் 1922 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, நிற்சிங்கர் வீரகத்திப்பிள்ளை என்பவராலும், இவரது மகனான சின்னத்துரை என்பவராலும், வெள்ளைக்கல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, 1943 ஆம் ஆண்டு மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சகல விழாக்களும் வீரபத்திர சுவாமி கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மீண்டும் திரு.வீ. சின்னத்துரை என்பவரால் 1957 ஆம் ஆண்டு இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1979 ஆம் ஆண்டு திரு அ.சி. குமாரசாமியாலும், இவரின் சகோதரர்களாலும் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. எனினும், இக்கோயில் 1960, 1970 ஆம் ஆண்டளவில் எவ்வித பராமரிப்புமின்றிச் சீர்குலைந்து காணப்பட்டது. வீரபத்திரசுவாமி மீது ஆறாத பக்தி கொண்ட இவ்வூர்மக்கள், இந்நிலை கண்டு மனம் வருந்தினர். இதன் வெளிப்பாடாக 1970 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், பத்துப்பேர் கொண்ட சபையொன்று அமைக்கப்பட்டு, கோயிலை நல்லநிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, இக்கோயிலை நிர்வகிக்க ஏதுவாகத் தர்மகர்த்தா சபையொன்றை உடுப்பிட்டி மக்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கினர். இத் தர்மகர்த்தா சபை, கோயிலைப் புனர்நிர்மாணம்

செய்ய உரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட்டது. அத்தோடு கோயிலோடு இணைந்த பல பணிகளையும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. இதன் முதற் கட்டமாக 1981 ஆம் ஆண்டு முதல் நவராத்திரிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பண்ணிசை, சமயப்போட்டிகள் ஆகியவற்றை நடத்தி மாணவர்களை ஊக்குவித்தனர். சைவப்பெரியார்களை அழைத்து மகாபாரதம், இராமாயணம் மற்றும் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, இக்கோயில் மூலம் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். அத்தோடு கோயில் விழாக்கள், பூசைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாய்ப்பேற்பட்டது.

இவ்வாறான மாற்றங்களினால் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், இவ்வூர் மக்களும் புதுப்பொலிவு பெற்றனர் என்பது சாலவும் பொருந்தும். இவ்வாறன நிர்வாக மாற்றத்தினைக் கொண்டுவரப் பலரின் பங்களிப்பு உதவியுள்ளது. இவர்களுள் திருவாளர்கள் வே.சின்னத்தம்பி, க.செல்லையா, வே.கந்தசாமி, சி.கந்தசாமி, க.ஆறுமுகம், இ.இராசரத்தினம், வே.செல்வரத்தினம், சி.ஆனந்தசிவம், சி. முத்துக்குமாரு. செல்வி. சீதா வேலுப்பிள்ளை மற்றும் இவர்களோடு சேர்ந்து சேவையாற்றிய சி.அழகையா, இ.பஞ்சநாதன், சி.கார்த்திகேசு, பொ.வேலாயுதம், ந.பாலசிங்கம், செ.சிவகுரு, ஆகியோரின் பணி என்றும் நினைவுகூரத்தக்கது.

ஈழவளநாட்டில் சமய சமூகத்துறையில் கணிசமான பங்களிப்பைப் பல பெண்மணிகள் செய்திருந்தபோதிலும், அப்பணிகள் யாவும் இலைமறைகாயாகவே இருந்துள்ளது. உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அயராது உழைத்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் ஆசிரியையாகவும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்லூரியின் உதவி அதிபராகவும் இருந்து, தான் பிறந்த மண்ணுக்காக

மட்டுமன்றி, தமிழ்ச்சமூகத்தின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர். பல மகளிர் அமைப்புக்களை உருவாக்கி நிர்வகித்து பல சமுதாயப் பணிகளைச் செயற்படுத்தியவர். இவ் அம்மையார் இக்கோயில் வளர்ச்சியின் அச்சாணியாகத் திகழ்ந்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு தமிழ்மக்களுக்கெதிரான இராணுவக் கட்டுப்பாடுகள் அதிகரித்தபோது, வடமராட்சியிலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். உடுப்பிட்டியிலுள்ள மக்களும் வல்லை வெளிக் கப்பால் சென்றுவிட்டபோதிலும், குருக்கள் குடும்பத்தினருடன் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலில் தங்கியிருந்து, வேறிடங்களிலிருந்து நகர்ந்து கொண்டிருந்த மக்களுக்கு உணவளித்து அரும்பணியாற்றிய பெருமை பெற்றவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். தாக்குதல்கள் உச்சக் கட்டமடைந்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும், உடுப் பிட்டி மகளிர் கல்லூரியும் தாக்குதலில் தரைமட்டமானபோதிலும், இறையருளால் இவற்றிற்கண்மையிலிருந்த சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், அங்கு தங்கியிருந்தோரும் எவ்வித அபாயமும் இன்றித் தப்பியதை, வீரபத்திரருடைய அருள் என்று இன்றுவரை போற்றித் துதித்து மகிழ்வர்.

பல்வேறு சூழ்நிலைகளில் சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில், பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி ஆலய குருக் களுக்குரிய வேதனத்தை வழங்கவோ, அன்றி நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வதற்கோ இடையூறு ஏற்பட்ட வேளையில், மக்களுடைய ஆதரவோடு நல்ல பல திட்டங்களை வகுத்து இன்று வரை அத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதற்கும் ஆதாரமாக இருந்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அவர்கள்.

இவ் அம்மையார் செய்த சமய, சமூகப் பணிகளைக் கோடிட்டுக் காட்டுவதென்பது இயலாத காரியம். இவ் அம்மையார் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தபோதிலும், வீரபத்திரசுவாமி

கோயிலின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் அரும்பணியாற்றிக் கொண்டு வருகின்றார். செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்களை விட்டு, வீரபத்திரசுவாமி கோயிலின் வரலாற்றையோ அதன் வளர்ச்சியையோ ஆராய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல அம்மையார் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை வீரபத்திரசுவாமி கோயில் வளர்ச்சியில், திருப்பணியில் ஒரு சிலவற்றை அறிவது அவசியமாயுள்ளது. அம்மையார் அவர்களோடு சேர்ந்து பலரது பங்களிப்பு இக்கோயில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளது.

தர்மகர்த்தா சபை ஏற்படுத்தப்பட்ட பின்னர் வீரபத்திரசுவாமி கோயிலை ஆகமவிதிகளுக்கமைய அமைக்க எண்ணி, தென்னிந்திய பிரபல ஸ்தபதிகளின் ஆலோசனையும் பெறப்பட்டது. இதற்கமைய பாலஸ்தாபன வேலைகள் 1989-1990 இல் நடைபெற்றது. நாட்டுநிலை, நிதிநிலைமை காரணமாகத் திருப்பணி வேலைகள் பல சந்தர்ப்பங்களிலும் தடைப்பட்டபோதிலும், 11.07-1997 ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று அன்பர்களின் உதவியாலும், இறையருளாலும், வீரபத்திரசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம் கோலாகலமாக நிறைவேறியது.

கொடியேற்றத்திருவிழா நடைபெற்றால் ஆகம விதிப்படி சுவாமி தேரிலேறி வலம் வந்து அருள்பாலிக்க வேண்டும் என்பது மரபு. பல்வேறு சூழ்நிலை காரணமாக வீரபத்திர சுவாமி கோயிலில், 1998 ஆம் ஆண்டு வரை அப்பேறு நிகழவில்லை. இக்குறையை சித்திரத்தேர் ஒன்றைச் செய்து வழங்கியதன் மூலம் நிறைவேற்றி வைத்தவர் அறப்பணிச்செல்வர் ஆசிரியர் திரு. பொன்னையா வேலாயுதம் அவர்கள்.

பத்ரகாளியம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திரசுவாமி எழுந்தருளுவதற்குரிய சிற்பத்தேரை உருவாக்கியவர், உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும், சிற்பாச்சாரியார் பணியிலே ஒன்பதாவது தலைமுறையைச் சேர்ந்தவருமான ஸ்தபதி

நாகரத்தினம் மகேந்திரன் அவர்கள். இவரது கன்னிப் படைப்பான இச் சித்திரத்தேரிலே, கதைகூறும் பல சிற்பங்கள் காணப்படுகின்றன.

காஞ்சியிலிருந்து சந்திரசேகர மாப்பாண முதலியார் இவ்வாலயம் இருக்குமிடத்திற்கு வந்ததிலிருந்து, வீரபத்திரசுவாமி வாள், கேடயம், கபாலம் முதலிய ஆயுதங்கள் ஏந்தித் தக்கனை வதம் புரிவது வரை 56க்கும் மேற்பட்ட சிற்ப ஓவியங்கள், இத்தேரிலே செதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்தில் பத்து நாள் திருவிழாவே உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலில் நடைபெற்று வந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு தேரோட்டம் நிகழ்ந்த பின்னர், பதினாறு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக வருடா வருடம் நடைபெற்று வருகின்றது.

இறைவழிபாட்டின்மூலம் வேண்டிய சித்திகளைப் பெறும் பொருட்டு ஆலயங்களிலே உற்சவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுள் மகோற்சவம் முக்கியமானதாகும். மகோற்சவத்தின் ஆரம்பத்தில் நடைபெறும் கொடியேற்றம் படைத்தலையும், வாகன உற்சவம் காத்தலையும், இரதோற்சவம் அழித்தலையும், தீர்த்தம் அருளலையும், மௌன உற்சவம் மறைத்தலையும் குறிக்கின்றது. தேர்த்திருவிழாவின் தத்துவங்களை புராணக்கதைகள் விளக்கி யுள்ளன.

தேர்த்திருவிழா குறிக்கும் சம்ஹாரமானது, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமாகும். இக் காரணத்தினாலேயே தேர் அக்கினிச்சுவாலையைப் போன்ற தோற்றமுடையதாகக் காணப் படுகின்றது. தேரில் எழுந்தருகின்ற மூர்த்தியும் சம்ஹார மூர்த்தி யாகவே தேரில் அமர்ந்தருளுகின்றார். இக் காரணத்தினாலேயே தேரில் எழுந்தருளும் போது சுவாமிக்குச் சிவப்பு நிறமான பட்டு வகைகளையும், மலர் மாலைகளையும் அணிவிக்கும் வழக்கம் காணப்படுகின்றது. தேரில் எழுந்தருளும் மூர்த்தி கோபுரவாசலை அடைந்ததும், விதிமுறைப்படி பூசை செய்து இறைவனுக்கு வெற்றித்திலகமிட்டு வரவேற்பது மரபு.

முப்புரதகனம் என்பது ஆன்மாக்களிடம் குடிகொண்டுள்ள மும்மலங்களை அழித்து ஆன்மாக்களைக் காப்பதையே குறிக்கும். தேரின் மேற்பகுதி கலசத்தை நோக்கிச் செல்லும்போது குவிந்து செல்கின்றது. அதுபோல மனிதனும் பல்வேறு எண்ணக் குவியல் களுக்குள் அடிமைப்பட்டுக் கிடந்தாலும், இறுதியில் இறைவனை நோக்கி ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் வாழவேண்டும் என்பதை தேரின் தத்துவம் உணர்த்துகின்றது. இவ்வாறான எத்தனையோ தத்துவங்களைத் தேரும், ஏனைய உற்சவங்களும் தத்துவார்த்தமாக விளக்கியுள்ளன.

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி, சுந்தர விமானங்கள் பொருந்திய திரிதளத் தூபியைக் கொண்ட மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். காளிகா அம்பிகைக்கு துவிதளத் தூபியைக் கொண்ட தெற்கு வாசல் கோயிலும், 150 வருடங்களுக்கு மேலாக அருள்பாலித்த பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமிக்குத் தனியோர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. விநாயகர், முருகன், மகாலட்சுமி, நடேசர், தெட்சிணாமூர்த்தி, வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாகக் காணப்படுகின்றனர்.

பெரியதும் சிறியதுமான இரு மணிக்கூட்டுக் கோபுரங்கள் இக்கோயிலுக்கு மெருகூட்டுகின்றது. இவற்றுடன் மடப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை, சுற்றுமதில், சுற்றுக்கொட்டகை, வசந்தமண்டபம், யாகசாலை, கொடித்தம்பம் ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கே உள்வீதியில் திருமஞ்சனக் கிணறும், வெளிவீதியில் தீர்த்தக்கேணியும் காணப்படுகின்றது. மகா மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றை அழகிய சிற்பவேலைகள் செய்யப்பட்ட கருங்கல் தூண்கள் தாங்கியுள்ளன. ஈசான மூலையில் அன்னதான மண்டபத்துடன் இணைந்த கல்யாண மண்டபம் உண்டு. கிழக்குத்திசையில் தேர் முட்டி அமைந்து, அருளும் அழகும் நிறைந்த திருக்கோயிலாக உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திகழ்கின்றது. உடுப்பிட்டி

சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலின் முன்வாசலில் வளர்ந்து பரந்த மருதும், வடமேற்கே வாகையும், வடகிழக்கே அரசும் காணப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாயும் மருதமரத்தடியில் பொங்கல் நடைபெறுகின்றது. சந்திரசேகர வீரபத்திரசுவாமி புரிந்த அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. இவை செவிவழிக் கதைகளாக இன்றும் நினைவு கூரப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலத்தில் ஆறுமுகன் என்னும் அடியவர் வாயிலாகவும், பின்னர் இளையபிள்ளை என்று ஊர் மக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட ஆறுமுகம் இளையதம்பி என்ற பக்தரின் வாயிலாகவும், இவ்வூர் மக்களுக்கு சந்திரசேகர வீரபத்திரசுவாமியின் கடாட்சம் அருள் வடிவில் கிடைக்கப்பெற்றதாகக் கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது. கொடிய கொள்ளை நோய் போன்ற பல்வேறு இன்னல்கள் ஏற்பட்ட காலங்களிலும், உடுப்பிட்டி மக்களை சந்திரசேகர வீரபத்திரசுவாமி காப்பாற்றி அருள் புரிந்துள்ளார்.

சிவனின் வீரபராக்கிரமத்தைப் புலப்படுத்தும் சிவ வடிவங்களுள் ஒருவராகிய வீரபத்திரசுவாமியிடம் உள்ளம் உருகி வேண்டினால், தீவினைகள் அழிந்து, ஆயுள், ஆரோக்கியம் மற்றும் சர்வமங்கலமும் உண்டாகும் என அனுபவம் பெற்றோர் கூறியுள்ளனர்.

தமிழகத்திலும், ஈழத்திலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் திருக்கோயில்கள் எண்ணற்றனவாக எழுச்சி பெற்றுள்ளன. அருளாளர்களும், மன்னர்களும், பக்தர்களும் பயபக்தியுடன் இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாக்கும் பண்பாட்டினைக் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர். அவ்வாறே திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் சின்னங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு திருக்கோயில்களையும் அதன்மூலம் தமிழர் பண்பாட்டுக் கூறுகளையும் பேணிக்காப்பது அவசியமாகும்.

☆☆☆

# தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயம்

## கொழும்பு

**நா**கரிகம் மிகுந்து, விஞ்ஞான வளர்ச்சி மேலோங்கியுள்ள இக் கலியுகத்தில் உலக மக்களின் உயர்வுக்காக, ஆலயங்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது. மரவுரி தரித்து, பகுத்தறிவற்ற மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்த மனித இனத்தை நல்வழிப்படுத்தி, நற்சிந்தனையை உருவாக்கி, மனிதனை மனிதனாக வாழ நெறிப்படுத்திய பெருமை உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் பொருந்தும்.

இந்தவகையில் இந்துமதத்தின் கொள்கைகள் மனித மேம்பாட்டிற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியனவாகக் காணப்படுகின்றன. தொன்மைமிகு இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்கள், மனிதவாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்க்க உதவி, நன்நெறியில் வாழவும் வழிகாட்டியுள்ளன. இந்து மதத்திலே காலத்திற்குக் காலம் அவதரித்த மகான்களும், அவதார புருஷர்களும்,

ஞானிகளும், ஆன்மீகப் பெரியோர்களும் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ததோடு, ஆலய வழிபாட்டிலும் மக்களை ஈடுபாடு கொள்ளச் செய்து வாழ வழிகாட்டியுள்ளனர்.

ஈழத்திலே அன்புநெறி, ஆகமநெறி வயப்பட்ட ஆலயங்கள் பலவாகக் காணப்பட்டபோதிலும், ஆஞ்சநேயருக்குரிய தனி ஆலயங்கள் காணப்படவில்லை. சில ஆலயங்களிலே ஆஞ்சநேய ரைப் பரிவாரமூர்த்தியாகவே வழிபட்டு வருகின்றனர். ஆஞ்சநேயர் பிரமச்சரிய விரதம் கொண்டவர். இக்காரணத்தினால் அவரை வீட்டிலே வைத்து வணங்குவது ஏற்புடையதல்ல என்ற எண்ணத் தைப் பலரும் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் ஆஞ்சநேயருடைய புகழை விளக்கி, அவர் புரியும் அற்புதங்களை உலகுக்குணர்த்தி, ஈழத்திலே ஆஞ்ச நேயருக்கெனத் தனி ஆலயம் அமைத்த பெருமை ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளையே சாரும். இவர், ஆஞ்சநேயருடைய அருளை முழுமையாக உள்வாங்கி, அவர் அருளால் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி, உலகெங்கும் ஆஞ்சநேயருடைய புகழைப்பரப்பி, மக்களுடைய எண்ணத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றார்.

ஈழத்தின் தலைநகரான கொழும்பிலுள்ள தெகிவளைப் பிரதேசத்தில், 3/11 போதிருக்காராம வீதியில், ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ளது. சிலகாலத்திற்கு முன்வரை விகாரலேன் என அழைக்கப்பட்ட இவ்வீதி, தற்காலத்தில் எப்படியோ ஸ்ரீராம வள்ளலின் பெயரைத் தன்னகத்தை கொண்டதாகக் காணப்படுவது, கால நியதிப்படி குறிப்பிட்ட இடங்களிலே அருள்மிகு ஆலயங்கள் அமையும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாலயம் அமைக்கப்பட்ட காலம் ஒரு சில ஆண்டுகளாகக் காணப்பட்ட போதிலும், மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பது போல உலகளாவிய ரீதியில் பக்தர்களைக் கொண்டு காணப்படுகின்றது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கும் ஆஞ்சநேயர், இராமபிரான், சீதாபிராட்டி ஆகியோரின் முழு அன்புக்கும் பாத்திரமானவர், அனுமான் என்றழைக்கப்படும் பெருமை பெற்றவர், ஆஞ்சநேயர் என்னும் பிரமச்சாரி.

தமிழ்நாட்டில் இவரை அனுமார் என்றும், கர்நாடகத்தில் அனுமந்தையா என்றும், கேரளாவில் ஆஞ்சநேயர் சுவாமி என்றும், மராட்டியத்தில் மாருதி என்றும், வடமாநிலங்களில் மகாவீர் என்றும் அழைத்துப் பக்தியுடன் பூசை செய்து வருகின்றார்கள். ஸ்ரீ ராகவேந்திர சுவாமியும் பஞ்சமுகி குகையில் அமர்ந்து, ஆஞ்சநேயர் வழிபாடு நடத்தினார்.

மகாபாரத யுத்தத்தின்போது அர்ச்சுனனை ஆயதபாணியாக உட்கார வைத்து, பரந்தாமன் ஓட்டிய இரதத்தில், வீர அனுமான் கொடிதான் பறந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அர்ச்சுனனின் தேர்க்கொடியில் இருந்துகொண்டு கீதோபதேசத்தை நேரில் கேட்டவர் ஆஞ்சநேயர். இராமநாமம் கேட்கும் இடங்களில் ஆனந்தம் நிரம்பிய கண்களுடன், கூப்பிய கரங்களுடன் அருபியாக அருகில் நின்று செவி மடுக்கின்றார் ஆஞ்சநேயர் எனப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. ஞானத்தில், பலத்தில், பக்தியில், வீரத்தில், கீர்த்தியில், சேவையில், வினயத்தில், உச்சநிலை கொண்டவராக, இவையெல்லாம் சேர்ந்திருக்கின்ற ஸ்வரூபம் ஒன்று உண்டென்றால், அது ஆஞ்சநேய சுவாமியையே குறிக்கும்.

ஈழத்திலே ஆஞ்சநேயர் வழிபாட்டினை ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் மேற்கொண்ட காலத்தில், வாடகை வீடொன்றிலே வைத்து வழிபாடியற்றி வந்துள்ளார்.

ஆஞ்சநேயரை வழிபடும் பொழுது மக்களுடைய துன்பத்தை நீக்கக்கோரி ஆஞ்சநேயரிடம் நீண்டநேரம் மன்றாடும் வழக்கத் தைக் கொண்டிருந்தார். அன்றும் இன்றும் மக்களுடைய துயரைப்

போக்கும்படி ஆஞ்சநேயரிடம் மன்றாடும் பண்பு, சுவாமிகளிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

ஆரம்பகாலங்களிலே எண்ணிக்கையில் சிறிதளவான பக்தர்களே, ஆஞ்சநேய வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டிருந்தனர். காலப்போக்கில் ஆஞ்சநேயருடைய மகத்துவம் எங்கும் பரவ, மக்களும், பிரமுகர்களும் தமது வேண்டுதல்களையும், துன்பங்களையும் சுவாமியிடம் கூறி நிவர்த்தி பெற்றனர். பலருடைய வாழ்விலே ஏற்பட்ட அற்புதங்கள் ஆஞ்சநேய வழிபாட்டிலே பெருமளவிலான பக்தர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தது.

இந்நிலையில், வாடகை வீட்டிலே வழிபாட்டைத் தொடர முடியாதநிலையில், தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு 1996 ஆம் ஆண்டு ஆஞ்சநேயர் இரதபவனியாகப் புறப்பட்டுத் தற்போதைய இடமான ஸ்ரீ போதிருக்கராம வீதியில், கோயில் கொண்டார். அன்று தொட்டு பல்வேறுவகையிலும் இவ்வாலயம் வளர்ச்சி பெற்று வருகின்றது. தற்போதுள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கும் ஆஞ்சநேயர், ஐந்தடி நாலு அங்குல உயரமுடையவராகக் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய திருவுருவமாகக் காட்சியளிக்கின்றார்.

மூலமூர்த்தியின் வலது பக்கத்திலே விநாயகப் பெருமானும், இடதுபக்கத்திலே முருகப்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். ஆஞ்சநேயரின் முன்பாக இராமரும் சீதையும், இலக்குமணரும் எழுந்தருளியுள்ளனர். நடுவிலே யாக குண்டம் அமைக்கப் பட்டுள்ளது.

இராமருக்குப் பின்புறமாக நிறுவப்பட்டுள்ள தன்வந்திரி பகவான், ஆயுர்வேதத்தின் தந்தையாகக் கருதப்படுவதோடு, மக்களுக்கு ஆரோக்கியத்தையும் அளிக்கவல்லவர். தன்வந்திரி பகவானை வணங்கிய பின்பே ஆஞ்சநேயரை வணங்கவேண்டும்

என்னும் மரபு இக் கோயிலிலே காணப்படுகின்றது. ஆலயத்துள் வடக்குப் பக்கமாக நாகபூசணி அம்மன் எழுந்தருளியுள்ளார். ஈழத்தில் வேறெந்தக் கோயில்களிலும் காண முடியாத சில சிறப்பம்சங்கள் இக்கோயிலிலே காணப்படுகின்றது.

சீனர்கள் சகல வளங்களையும் அருளும் தெய்வமாக, ஒனியன் என்ற பெண் தெய்வத்தை வணங்குவர். இத் தெய்வம் ஒரு முகமும், முப்பத்திரண்டு கரங்களையும் கொண்டதாக விளங்குகின்ற ஓர் அபூர்வப் படைப்பாகும். இத்தெய்வமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இத் தெய்வத்திற்கு மேல் ஒன்பது முகங் கொண்ட புத்தர்பெருமான் அமர்ந்துள்ளார். இவ்வாலயத் திலே காணப்படுகின்ற நவக்கிரக அமைப்பும் சற்று மாறுபட்ட முறையிலே காணப்படுகின்றது.

இந்து ஆலயங்களில் ஒன்பது கிரங்களும் வேறு வேறு திசையில் அமைக்கப்படுவதே மரபாகக் காணப்படுகின்றது. இதற் குரிய விளக்கங்களும் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. ஆனால், ஆஞ்சநேயர் ஆலயத்தில் நவக்கிரகங்கள் நேர் வரிசையில் அமைக்கப்பட்டு வணங்கப்படுவதோடு, நவக்கிரகங்களைச் சுற்றி வழிபாடு செய்வது தவறு என்ற கருத்தும் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளால் பக்தர்களுக்கு, உரிய விளக்கங்களோடு புரிய வைக்கப்படுகின்றது. இவற்றின் நடுநாயகமாகச் சூரியபகவானை நிறுவியுள்ளனர். சூரியபகவானின் முன்னால் சிறிய ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். இவரைக் கறுப்பர் என பக்தர்கள் அன்பாக அழைப்பதுண்டு. இவ் ஆஞ்சநேயருக்குப் பக்தர்கள் தமது கரங்க ளால் பால் அபிஷேகம் செய்வதோடு, மாலை சூட்டி வணங்குவதும் வழக்கம். ஆலய வாசலுக்கு அண்மையில் கதவுக்கு வலது பக்கமாக வைரவர் எழுந்தருளியுள்ளார்.

ஆஞ்சநேயர் ஆலய வசந்தமண்டபத்தில், பஞ்சலோகங் களாலான எழுந்தருளி மூர்த்தங்கள் காணப்படுகின்றன.

இவர்களுள் சரஸ்வதி, துர்க்கை, லக்குமி ஆகிய தெய்வங்களும் காணப் படுகின்றனர். கோவிலுக்கு முன்னால் மிகப் பெரிய அளவிலான அன்னதான மண்டபம் அமைந்துள்ளது. அத்தோடு ஆஞ்சநேயர் எழுந்தருளும் தேர்முட்டியும் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

தெகிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தின் மற்றொரு சிறப்பாகக் காணப்படுவது, இங்கு மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள புனித தீர்த்தமாகக் கருதப்படும் 53 அடி ஆழம் கொண்ட குழாய்க் கிணறாகும். இக்குழாய்க் கிணற்றிலே 45 அடி வரை தண்ணீர் காணப்படும். இக்குழாய் 6 அங்குல வட்டத்தைக் கொண்டுள்ளது. இக்கிணற்றுள் பல புனித தீர்த்தங்களும், அவற்றின் மண்ணும் சங்கமமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்தியாவிலுள்ள அற்புதம் நிறைந்த கோயில்களின் தீர்த்தங்களும், அயோத்தியில் இராமபிரான் தீர்த்தமாடியதாகக் கருதப்படும் இடத்திலிருந்தும், இந்தியாவின் புண்ணிய நதிகளாகக் கருதப்படும் பஞ்ச நதிகளிலிருந்தும், புனிததீர்த்தங்களையும் கொண்டுவந்து, அவ்விடங்களின் புனிதமான மண்ணையும் கொண்டு வந்து அவற்றைக் கலசத்திலிட்டு, கலசம் நிறையத் தங்கத்தை நிரப்பி மூடி, குழாய்க்கிணறின் அடியில், பூமியைத் தொட்டவாறு 53 அடி ஆழத்தில் இக்கலசம் வைக்கப் பட்டுள்ளது. இக்கலசத்தின் மூடியில் செப்புக் கம்பிகளை ஒட்டி இணைத்து, அக்கம்பிகள் ஆஞ்சநேயர் பாதத்திலும், இராமபிரானின் பாதத்திலும் படும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் ஆலயத்திலும், மூர்த்தங்களிலும் விசேட சக்தி ஏற்பட்டு அவை ஆலயத்தைத் தரிசிப்போர் மீதும் பரவுகின்றது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்குபவர் பஞ்சமுக ஆஞ்சநேயர். பஞ்சமுக ஆஞ்சநேயரை மனதிருத்தி வணங்கும் பொழுது, ஆஞ்சநேயரின் குணஇயல்புகள் வணங்குவோரின்

உடலிலும் உள்ளத்திலும் பதியும் என ஆன்றோர் கூறியுள்ளனர். பஞ்சமுக ஆஞ்சநேயரின் திருவுருவம் ஆழமான கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது.

வடக்குத் திசையிலிருந்து முதலாவதாக இருக்கும் முகத்தைக் கருடமுகம் என்பர். இம்முகம் தன்னை வழிபடுவோரைக் கொடிய விஷங்களிலிருந்து காப்பாற்றும் பெருமையுடையது. இரண்டாவதாகக் காணப்படும் திருமுகம் ஹயக்கிரீவர் முகம் எனப்படும்.

பக்தர்களுடைய அஞ்ஞானத்தை நீக்கி, மெய்ஞ்ஞானத்தை அருளுவதோடு, அரக்கர்களை வதைத்துப் பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்தது இத் திருமுகம். நடுவிலே காணப்படுவது ஆஞ்சனேயர் திருமுகம். தன்னை நாடிவரும் பக்தர்களின் எதிரிகளை நிர்மூலமாக்கி, தீங்குவராமல் இத்திருமுகம் காப்பாற்றுகின்றது. ஐந்தாவது திருமுகம், பாதாளம் சென்று பூமியை மீட்ட வராகமுகம். இத்தகைய உள்ளார்ந்த கருத்துக்களோடு அமைந்த பஞ்சமுக ஆஞ்சநேயர் இவ்வால யத்திலே மூலமூர்த்தியாக எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகின்றார்.

பஞ்சம்படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்ச வேண்டாம் என்று அபயகரத்தோடு காட்சியளிக்கும் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் வழிபாட்டு முறைகள், ஏனைய ஆலயங்களினின்றும் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. கோவிலுக்குள் செல்லும்பொழுது பக்தர்கள் எவ்வாறு உடல், உள சுத்தியோடு ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அருள் வாக்கு வாசலிலே காணப்படுகின்றது.

கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் உடல், உள சுத்தியோடு செல்லவில்லையென்றால், அதனால் பல நேர்மாறான விளைவுகள்

ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டுவதாக, இக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆலயங்களுக்கு ஏன் சுத்தமாகச் செல்ல வேண்டும்? என்பது சிந்தனைக்குரியது. ஆலயங்கள் அமைய வேண்டும் என்ற நியதிக்குரிய இடங்களில், ஒரு காலத்தில் ஞானிகளும், ரிஷிகளும் முனிவர்களும் தியானம் செய்தோ, அன்றி அவர்கள் சமாதி அடைந்த இடமாகவோ அமைந்திருக்கும். இவ்வாறு வாழ்ந்த காலத்தில் இந்த ஞானிகள் நித்திய மந்திர உச்சாடனத்தை மேற் கொள்வது வழக்கம். இதன் மூலம் ஞானிகளது முழு உடம்பிலும், மந்திரசக்தி ஏற்றப்பட்டு, அனைத்து உயிர்களையும் தன்வசப் படுத்தக்கூடிய தன்மையைக் கொண்டு காணப்படும்.

இக்காரணத்தினால் இவர்களது அதிர்வுகள் அவர்கள் வாழ்ந்த இடத்திலே தொடர்ந்தும் நிலைத்திருக்கும். இவ்விடம் தூய்மையான சிந்தனையை ஏற்படுத்த வல்லதாகக் காணப்படுவ தால், மக்கள் இவ்விடத்தை நாடுவதும், பின்னர் அவை ஆலயமாக மாறுவதுமே நியதியாகக் காணப்படுகின்றது. அருளும், அற்புதங்களும் நிகழும் ஆலயங்கள் பல இவ்வாறான நிலையைப் பெற்றிருப்பதை அவற்றின் ஆரம்பகால வரலாறு எடுத்தியம்புகின்றது.

இத்தகைய ஆலயங்களிலே நிறுவப்படும் மூர்த்தங்கள் பல்வேறு நிலையில் அமைக்கப்பட்டு தூய்மையான, உயர் சக்திவாய்ந்த அதிர்வுகளைக் கடத்திக் கொண்டிருக்கும் தெய்வீகப் பண்பு கொண்டனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறான அதிர்வுகள் (vibration) மனித மனங்களையும், சுற்றுப்புறச் சூழலையும் தூய் மைப்படுத்தும் தன்மையுடையவையாக விளங்குகின்றன. ஊனுடம்பு ஆலயம் என்று கருதப்படும் மனிதனிடமும் மிகக் குறைந்த அளவில் அதிர்வலைகள் காணப்படுகின்றது. இவ் வதிர்வலைகள், மனிதனது உடல், உளத் தன்மைகளினால் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறான குறைந்த அதிர்வினைக்

கொண்ட மனிதன், ஆலயத்திற்குச் செல்லும்போது, கோயிலின் உயர் அதிர்வும், மனிதனது அதிர்வும் கலக்கும் நிலை காணப்படும்.

இதன் விளைவாக மிக உயர்ந்த நிலையிலான அதிர் வலைகள் கோயிலுக்குச் செல்வோரைச் சூழ உருவாக்கப்படு கின்றது. இவ்வாறான நிலை, மனிதனது மனநிலையைச் சமப் படுத்தித் தூய்மையாக்கி, உடல், உள துன்பங்களை நீக்க வகை செய்கின்றது. இக்காரணத்தினால், எவர் ஆலயங்களுக்குச் சென்றா லும் உடல், உள ரீதியாகப் பயன்பெறுவர்.

கோயிலுக்குச் செல்பவர்களின் அதிர்வுகள், ஆலயத்திலே காணப்படுகின்ற அதிர்வுகளைச் சிறிதளவு பாதிப்பதால், கோயிலுக்குச் செல்வோர், உடல், உளத் தூய்மையோடு செல்ல வேண்டும் என்பதை இந்து மதம் வலியுறுத்தியுள்ளது.

உடலும், உள்ளமும் தூய்மையாக இல்லாதநிலையில் கோவிலுக்குச் செல்லும்பொழுது, கோயில்கள் பாதிக்கப்பட்டு, சமுதாயமும், நாடும் சீரழிந்து விடும். இக்காரணத்தினாலேயே உடல், உள சுத்தத்தை மக்களுக்குப் பல இலகுவான வழியிலே, வழிபாட்டு முறைகளுடன் இந்து மதம் இணைத்துள்ளது. இவற் றைக் கருத்தில் கொண்டே ஆஞ்சநேயர் ஆலயத்தில் பக்தர்கள் எவ்வாறு ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அறிவுரையை வாசலிலே தெரிவித்துள்ளார்கள்.

ஆஞ்சநேயர் ஆலயத்திற்குள் செல்லும்போது, மஞ்சள் கலந்த நீர் நிறைந்த இரண்டு கிண்ணங்கள் காணப்படும். அந்த மஞ்சள் தண்ணீரைத் தொட்டுத் தலையில் தெளித்துக் கொண்டு பக்தர்கள் உட்செல்வர். மஞ்சள் மங்கலகரமானதும், கிருமிகளைக் கொல்லும் தன்மையுடையதும் என்ற நோக்கில், சமயக் கிரியைகளிலும், மக்கள் பின்பற்றும் சடங்குகளிலும் பயன்படுத்துவதை இந்துமதம்

மரபாக்கியுள்ளது. அத்தோடு மஞ்சள் தண்ணீர் குற்றங் குறைகளையும், தோஷங்களையும் நீக்கவல்லது. இதுவும் இவ் ஆலயத்திலே காணப்படும் விசேடங்களில் ஒன்றாகும்.

பிள்ளையார் முன்பக்கமாக எழுந்தருளியுள்ளார். விக்னங் களைத் தீர்க்கின்ற இவருக்கு முன்பாக அபிஷேக தீர்த்தமும், துளசி இலை தோய்ந்த தீர்த்தமும் எப்போதும் காணப்படும். துளசி மருத்துவத் தன்மை கொண்டது. எர்வின் ஏணஸ்ட் என்பவர் தனது "சிகிச்சை முறைகள்" என்ற நூலில், துளசியின் நோய் தீர்க்கும் தன்மை பற்றி விளக்கியுள்ளார். பெருமாள் கோவிலிலும், ஆஞ்சநேயர் சந்நிதியிலும் துளசித்தளத்தைப் பிரசாத மாகக் கொடுப்பார்கள். அதை வாயில் போட்டு மென்றுவிடுவது வழக்கம். துளசியின் மருத்துவக் குணத்தை அறிந்த இந்து மத ஆன்றோர்கள், அதனைச் சமய வழிபாட்டோடு இணைத்து, தீர்த்தமாகவும், துளசித் தளமாகவும் வழங்கி, நோயில்லா வாழ்வைக் கடைப்பிடிக்க உதவியுள்ளார்கள்.

தெகிவளை பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில், மூலவருக்கும் ஏனைய தெய்வங்களுக்கும், வேறெங்குமில்லாதவாறு அபிஷேகம் சிறப்பாக நடைபெறும். நல்லெண்ணெய், பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் தேன் அபிஷேகக் கூட்டுக்கலவையாலும், விபூதி, சந்தனம், பன்னீராலும், அன்னத்தாலும் அபிஷேகம் நடைபெறும்.

ஞாயிறுதோறும் அபிஷேகம் கலந்த நீர்கொண்டு, வலம்புரிச் சங்கினால் மூலவரது திருமேனி மஞ்சனமாட்டப்படுகின்றது. மக்களும் தங்கள் கையால் பால் இளநீர் கொண்டு அபிஷேகம் செய்வதற்கு ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள் வசதி செய்து கொடுத்துள்ளார். இவ்வாறான சிறப்பான அபிஷேகத்தினால் ஆஞ்சநேயர் எண்ணெய் தவழும் முகத்துடன், மூர்த்திகரம் நிறைந்து அருளாளராகக் காணப்படுகின்றார்.

இவ்வாலயத்தில் விசேடமாகச் சரஸ்வதி வீற்றிருப்பதால் பூரணை நாட்களில், சரஸ்வதிக்கு விசேட பூசை நடைபெறும். இப்பூசையில் பெருந்திரளான மாணவர்கள் கலந்துகொண்டு தமது கைகளால் பாலாபிஷேகம் செய்வர். ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள், ஆஞ்சனேயரிடம் இப்பிள்ளைகளுக்காக மன்றாடி, தேனும், கற்கண்டும் தனது திருக்கரத்தால் ஊட்டிவிடுவார். அத்துடன் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை இச்சிறார் களுக்கு உணர்த்தி, காலையில் எழுந்தவுடன் பெற்றோரை வணங்குமாறு உபதேசித்து, அதனைப் பிள்ளைகள் பின்பற்றவும் வகை செய்துள்ளார். பிள்ளைகளின் சமய அறிவை வளர்க்கும் விதத்தில் கட்டுரை, பேச்சுப்போட்டிகளும் நடைபெற்று, சரஸ்வதி பூசையின்போது மாணவர்களுக்கெல்லாம் பேனையும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி ஊக்கப்படுத்தும் பணியை தெகிவளை ஆஞ்சநேயர்ஆலயம் செய்து வருகின்றது.

இவ்வாலயம் காலை 10 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை திறந்திருக்கும். எந்நேரமும் பக்தர்கள் வந்து வழிபாடு செய்யத்தக்க முறையில் இவ்வாறான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தெய்வேந்திர முகூர்த்தம் என அழைக்கப்படும் பகல் பன்னிரண்டு மணிக்கு, இவ்வாலயத்தில் உச்சிக்காலப்பூசை நடைபெறும். மற்றும், தினசரி பூசைகள், விசேடகாலங்களில் நடைபெறும். அபிஷேகம், அன்னதானம், என்பனவும் சிறப்பாக நடைபெறும்.

ஆங்கில வருடப்பிறப்பு, தைப்பொங்கல், தமிழ், சிங்கள புது வருடப்பிறப்பு, ஆடிப்பூரம், புரட்டாதிச்சனி, சரஸ்வதி பூசை, தீபாவளி, கந்தசஷ்டி, ஆஞ்சநேயர் ஜயந்தி போன்ற விசேட வைபவங்கள் மிகச் சிறப்பாக நடைபெறும். நவராத்திரி காலத்தில் வரும் லக்சுமி பூசை நாட்களில், ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள் தமது திருக்கரங்களால் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்குக் கைவிசேசம் கொடுத்து, வாழ்த்துச் சொல்லும் பாரம்பரியமும் தெகிவளை ஆஞ்சநேயர் கோவிலிலே காணப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் ஆஞ்சநேயர் ஜயந்தி விழா, பத்து நாட்களுக்கு யாகங்கள், பூசைகளுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. உலகத்திலே ஆஞ்சநேயருக்கென எங்குமே தேர் கிடையாது. ஆஞ்சநேயருடைய சொற்படி அழகான, அற்புதமான, அடக்கமான ஒரு தேரைச் செய்வித்து, அத்தேரிலே ஆஞ்சநேயர் ஆரோகணிக்க வைத்து, மக்களை ஆசீர்வசிக்கச் செய்தவர் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள். ஆஞ்சநேயருக்குத் தேர் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபோது சுவாமிகள் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு முகங் கொடுக்கும் நிலை காணப்பட்டது.

குறிப்பாக, இந்தியாவிலுள்ள பல ஆலயங்களும், பெரியோர்களும், ஆஞ்சநேயரைத் தேரிலே வைக்கக் கூடாது என்று வாதாடியுள்ளார்கள். ஆனால் ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள், எனக்கு ஆஞ்சநேயர் அனுமதி தந்துள்ளார், அதனால் அவரைத் தேரில் எழுந்தருளச் செய்யப் போகின்றேன் என்று கூறி, குறுகிய காலத்தில் அழகிய தேரையும் செய்து முடித்தார்.

1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இத்தேரில் ஆஞ்சநேய சுவாமிகள் ஆரோகணித்து, ஒவ்வொரு வருடமும் மூலநட்சத்திரத் தன்று ஜயந்தி விழாவின்போது, வீதிஉலா வருவதைப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கண்டுகளிப்பர். மார்கழி மாதம் மூலநட்சத்திரத்துடன் கூடிய அமாவாசை நாள், ஆஞ்சநேயர் திரு அவதாரம் செய்த திருநாளாகும். இந் நாளிலே ஆஞ்சநேயருக்கு அலங்காரம், அபிஷேகம், ஆராதனை என்பன செய்தால், நினைத்த காரியங்கள் கைகூடும் என்ற நம்பிக்கை ஆஞ்சநேய பக்தர்களிடம் நிலவுகின்றது.

ஆலயத்திலே ஆண்டவனுக்குரிய உபசாரங்களைச் செய்வதோடு அமையாது, ஆண்டவனிடம் எமது வேண்டுதல்களைக் கூற வேண்டும் என்பதை மக்களிடையே ஊன்றச் செய்து, மக்கள்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் நிலையை ஏற்படுத்தி வருகின்றார் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள்.

இதன் முதற் படியாக மக்கள் ஒன்று சேர்ந்து பிரார்த்தனைகள், வழிபாடுகளில் ஈடுபடவும் ஊக்கப்படுத்தியுள்ளார்.

ஆஞ்சநேயர் ஆலயத்தில் காலையும், மாலையும் நடைபெறும் பூசையைத் தொடர்ந்து, பக்தர்கள் கூட்டுப்பிரார்த்தனை செய்வது வழக்கம். இன்பத்தமிழில் 108 போற்றிகளும், பிரார்த்தனைப் பாடல்களும் பாடப்படுவது, கருத்தறிந்து இறைவனைப் பிராத்தனை செய்து வரம்பெற உதவுகின்றது.

பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும்வேளையில் ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள், ஆஞ்சநேயரிடம் மன்றாடும் பாங்கு சொல்லில் அடங்காதது. மக்கள் நலமாக வாழவேண்டும், நாட்டு மக்கள் நலமாக வாழவேண்டும், எனச் சுவாமிகள் வேண்டுவதோடு, கண்களை மூடிக்கொண்டு, ஐம்புலன்களையும் அடக்கித் தியானிக்கும்படி பக்தர்களைக் கேட்டுக்கொள்வார்.

இவ்வேளையில் கையிலிருந்த கோலினால் மளார், மளார் என்று படங்களைப் போட்டு அடிப்பார். மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ஆஞ்சநேயருக்கும் பக்கத்தில், மரத்தாலான கதாயுதங்கள் பூசையில் இருக்கும். அவற்றில் ஒன்றை எடுத்து, தனது நெஞ்சிலும், புறமுதுகிலும் அடித்துக்கொள்வார். பக்தர்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்களைப் போக்க, அவர்களுக்காக வாய்விட்டு உரத்துக் கதறிக் கதறி ஆஞ்சநேயரிடம் மன்றாடுவார்.

அவர் மன்றாடும்பொழுது, "கடலளவு கவலைகள் ஐயா, கண்ணீர்க்கடல் ஐயா, வேதனையோ மலையளவு ஐயா, மக்கள்படும் வேதனையைப் பார் ஐயா, அவர்களின் குறைகளைக் கேள் ஐயா, ஆஞ்சநேயா, சஞ்சீவி மலையைச் சுமந்தவனே,

சீதையைத் தேடிக் கண்டுபிடித்தவனே, சீதையை மீட்டவனே, ஐந்து முகங்களைக் கொண்டவனே, வீரமானவனே, சக்தியானவனே, பத்துச் செவிகளைக் கொண்டவனே, பத்துக் கண்களைக் கொண்டவனே, பத்துக் கரங்களைக் கொண்டவனே, உனக்கென்ன குறை ஐயா, உன்னிடம் மன்றாடும் பிள்ளைகளின் குறையைத் தீரும் ஐயா" என்று தன்னை வருத்தி ஆஞ்சநேயரிடம் கண்ணீர் மல்கி மன்றாடுவார்.

இவ்வாறு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஏனைய தெய்வங்களிடமும் பக்தர்களுடைய குறையை நீக்கும்படி வேண்டி மன்றாடுவது அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகும். சுவாமிகளுடைய மன்றாட்டத்தினால் பலர் நலம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்துமதத்திலே இறைவன் அனைத்தையும் அறிவான் என்ற கொள்கை பின்பற்றப்பட்டபோதிலும், ஆஞ்சநேய வழிபாட்டில் மன்றாடிக் கேட்டு, பயன்பெறும் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப் படுகின்றது. ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்தும் தாம் நினைப் பதை அடைவதென்பது சுலபமல்ல. அதற்குரிய பக்குவத்தை ஒரு சிலரே பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களையே குரு என்றழைக்கின்றோம். எனவேதான் பக்குவப்பட்ட குருவின்மூலம் ஆண்டவனை அடைவது சுலபம் என இந்து மதத்திலே குறிப் பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பிரார்த்தனை முறை, இறைவனிடம் மன்றாடிக் கேட்கும் முறை ஏனைய மதங்களிலும் காணப்படு கின்றது. இவ்வழிபாட்டு முறை மூலம் மக்கள் மனதிலிருக்கும் பாரம் குறைவதோடு, தமக்காக வேண்ட, தமது குறைகளைச் சொல்லி நிவர்த்தி காண ஓரிடம் இருப்பதாக எண்ணி மன ஆறுதல் அடைவர்.

ஆஞ்சநேயர் ஆலயத்தில் பூசைகள் நடைபெற்று, மங்களம் பாடப்பட்ட பின்னர் பூசகரும், சுவாமிகளும் கற்பூரதீபம் காட்டுவதோடு பூசை முற்றுப்பெறும். ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள் எல்லோருக்கும்

ஆஞ்சநேயப் பெருமானின் திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு, அவரவர் கஷ்டங்கள், கவலைகள், தடங்கல்களைத் தீர்க்கும்படி வேண்டி நெற்றியில் விபூதி இட்டுவிடுவார். அத்தோடு அபிஷேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தம், நிவேதிக்கப்பட்ட பழங்கள், வடை மற்றும் பிரசாதம் என்பன அங்குள்ள பக்தர்களுக்கு வழங்கப்படும்.

ஆஞ்சநேயர் ஆல்யத்தில் தொண்டாற்றும் பக்தர்கள், ஆலயத்திற்குள் வீண்பேச்சுப் பேசுவதில்லை. அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்வதும், வெற்றிலைமாலை கட்டுவதும் இவ்வாலயத்தில் சாதாரணமாக நிகழும் காட்சிகளாகும். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வரும் ராகுகாலத்தில் சுமங்கலிப் பெண்களும், கன்னிப்பெண்களும், ராகுகாலப்பூசை செய்வர். ராகு, கேது தோஷங்கள் உள்ளவர்கள் தமது ஜாதகங்களை ஆஞ்சநேயர் கோயிலில் பார்த்து, அங்கு வழங்கப்படும் அறிவுரைக்கமைய, பூசையிலே பங்குபெறுவர்.

தெகிவளை ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள், நாட்டுநிலைமை காரணமாகப் பலவிதமான மனத்தாங்கல்களுக்கு உட்பட்டவர்களாகி, அவற்றிலிருந்து விடுதலை பெறும் நோக்கோடு வருகின்றார்கள். அனைவரது பிரச்சினைகளையும் கேட்கும் ஸ்ரீமத் சந்திரசேகரசுவாமிகள், அவற்றை ஆஞ்சநேயரிடம் ஒப்படைக் கின்றார். பக்தர்களும் பலன் பெறுகின்றனர். இவ்வாறான நிலையில் ஆறுதலும், அமைதியும் தேடுவோருக்கு இவ்வாலயம் சரணாலய மாகவே காட்சி அளிக்கின்றது. தமிழ் மக்கள் மாத்திரமன்றிச் சிங்கள மக்களும் இவ்வாலயத்திற்கு வந்து ஆஞ்சநேயரைத் தரிசிக்கின்றனர். இம் மக்கள் இவ்வாலய பூசை, உபயங்களிலும் பங்கேற்றுத் தொண்டாற்றுகின்றனர்.

தற்காலத்தில் ஆஞ்சநேயர் வழிபாடு மக்களிடையே பிரபல்யம் அடையக் காரணமாகவிருந்தவர் ஸ்ரீமத் சந்திசேகர சுவாமி கள். இவரை மக்கள் அன்புடன் ஆஞ்சநேய சுவாமி என்றும்

அழைப்பர். காவிவேட்டி, ஆஞ்சநேயர் தாடி, மிகப் பெரிய தொப்பை, இவை தான் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளின் தோற்றம்.

பூசைக்கு மத்தியில் அவர்மீது ஆஞ்சநேயர் வந்துவிடுவார். திடீரென அவரது அமைதியான முகபாவம்மாறி வானரத் தோற்றத்தில் காட்சியளிப்பார். துள்ளிக்குதித்துக் குத்துக்கரணம் அடித்து, உர் உர் என்று சத்தமிட்டவாறு பழங்களைச்சாப்பிடுவார். மிகச் சிறிய இடங்களுக்குள்ளும் நுழைந்து செல்வதைப் பார்க்கும்பொழுது ஆச்சரியம் ஏற்படும். இவ்வாறாகத் தன்னை வருத்தி மக்களுக்காக மன்றாடும் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளின் தூய உள்ளமும், பிறர் நலன் குறித்த ஏக்கமும், பிறருக்காகத் தன்னைத் தானே வருத்தி மன்றாடும் தன்மையும் இக்காலத்தில் அபூர்வமானதே.

மறுபிறப்புக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள். புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகி, பல்மிருகமாகி.... என்ற பாடலில் எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் என்று மாணிக்கவாசக சுவாமிகளும் மறுபிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். ஆஞ்சநேயரின் அருள் பெற்ற ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளது முற்பிறப்புத் தொடர்பே இப்பிறப்பிலும் ஆஞ்சநேய வழிபாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்ததென்பதை அறிய முடிகின்றது.

அனந்தமங்கலம் என்பவர் இந்தியாவில் வாழ்ந்து வந்ததாகவும், அவரிடம் நிலைகொண்டிருந்த சக்தியின் காரணமாகத் தீராத நோய்களைத் தீர்த்து பலருக்கு உதவியுள்ளார். இவரை ஆஞ்சநேயர் ஆட்கொண்டு பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

ஆஞ்சநேயரால் ஆட்கொள்ளப்பட்டபின் இவர், பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். செட்டியாரின் காலம் முடிந்து நோய்வாய்ப்பட்டு இறந்து, பின்னர் இவர் நாவலப்பிட்டியிலிருந்த

விசேட சேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



கல்யாணி மாதவன் தம்பதியினருக்குப் புதல்வனாகப் பிறந்தார். இவரே தற்காலத்தில் ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் என அழைக்கப்படுகின்றார்.

ஆஞ்சநேய பக்தனாகக் காணப்பட்ட சிறுவனிடம் சிறுவயதிலேயே அபூர்வ சக்தி காணப்பட்டு, அதன் மூலம் பலருடைய துன்பங்களை நீக்கியுள்ளார். இவர் படித்து, உயர் பதவியில் பணியாற்றியபோதிலும், இவரது புகழ் எங்கும் பரவ, வேலையை விட்டு நீங்கி, பக்தர்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டார்.

இறுதியில் ஆஞ்சநேயருக்கெனக் கோவில் அமைத்து, மக்கள் துயர் துடைத்து வருகின்றார். அத்தோடு உலகெங்கும் பரந்து வாழும் ஆஞ்சநேய பக்தர்களை வருடா வருடம் சந்தித்து ஆசி வழங்குவதோடு, மேலைநாடுகளிலும் ஆஞ்சநேயருக்கு ஆலயம் அமைத்து, ஆஞ்சநேய வழிபாட்டை ஊக்குவித்து வருகின்றார். தாயகத்தில் ஆஞ்சநேயர் ஆலயத்திற்குச் சென்று வணங்கிப் பலன் பெற்ற பலர், கனடாவிலும் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். 11747

கொழும்பிலுள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தில், சகல வைத்தியர்களிடமும் சென்று கைவிடப்பட்ட பலர் பழிகிடக்கின்றார்கள். இவ்வாறானவர்கள், தமது நோய் தீர்ந்து ஆஞ்சநேயருக்குத் தொண்டராகிச் சேவை செய்து வருகின்றனர். இலட்சக்கணக்கில் காசைச் செலவிட்டும் பிள்ளைச் செல்வம் இல்லாத பலர், ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் செய்யும் பிரார்த்தனை மூலம் பலன் கண்டிருக்கின்றார்கள். இவ்வாறானவர்களே வருடா வருடம் சுவாமியை மேலை நாடுகளுக்கு வரவழைத்து ஆஞ்சநேயர் புகழ் பரவ உதவி வருகின்றனர்.

கை, கால் விளங்காமல் இருந்தவர்களைச் சுகப்படுத்தியும், கண்பார்வையற்றுக் காணப்பட்ட சிறுவன், சுவாமிகளின்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
250167

# ஈழத்துத் திருக்கோயில்கள்

- வரலாறும் மரபும்

பாகம்-2



இந்நூலாசிரியை

சந்தா நடராஜன்